இதழ் 56 ஜனவரி 2021

# காலம்

ISBN-1715-4030





“...வாழ்க்கையின் பொருள் என்ன என்ற அநாதி காலக் கேள்விக்குப் பதில் தேட வாழ்வைக் கருவியாக்குவது ஒன்று. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையிலிருந்து அந்தக் கேள்விக்குப் பதிலைக் கண்டடைவது மற்றொன்று...”

- சுகுமாரன்

- அ.முத்துலிங்கம்
- மு.நித்தியானந்தன்
- என்.கே.மகாலிங்கம்
- சச்சிதானந்தம் சுகிர்தராஜா
- எம்.ஏ.நுஃமான்
- மணி வேலுப்பிள்ளை
- மு.புஷ்பராஜன்
- ஜெயமோகன்
- ஷோபாசக்தி
- சுகுமாரன்
- கீதா சுகுமாரன்
- பா.அ.ஜயகரன்
- மல்லியப்புசந்தி திலகர்
- மயூ மனோ
- இசை
- ஆழியாள்
- ஆனந்தப்ரசாத்
- மிஷ்கின்
- மாஜிதா
- கயல் பரதவன்
- பிரியா பாலு
- டி.சே.தமிழன்
- கருணாகரன்
- சாம்ராஜ்

“....சிவகுமாரனுக்கு நிகரான பல்துறைசார்ந்த ஓர் எழுத்தாளனை, ஈழத்து இலக்கியப் பரப்பின் கடந்த அறுபது ஆண்டுகால எல்லையில் காணப்பதற்கில்லை. இந்த அறுபதாண்டு காலத்தில் தொடர்ந்த வாசிப்பே அவரது சுவாசமாக இருந்திருக்கிறது....”

- மு. நித்தியானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம்

இதழ் 56 ஜனவரி 2021

**ஆசிரியர்**

செல்வம் அருளானந்தம்

**ஆலோசனைக் குழு**

என்.கே. மகாலிங்கம்

உஷா மதிவாணன்

**இதழ் மேற்பார்வை**

இ. பத்மநாப ஐயர்

**அட்டை வடிவமைப்பு**

கே.கே. ராஜா

**இதழ் வடிவமைப்பு**

ரமணி பிரிண்ட் சொல்யூசன்

**தொடர்பு முகவரி**

SELVAM ARULANANTHAM
84, COLELUKE LANE
MARKHAM,
ONTARIO L3S 0B7
CANADA
Email: kalam@tamilbook.com
Phone: +1 416 731 1752

M22, Sixth Avenue
Alagapuri Nagar,
Ramapuram, Chennai - 600089.
Phone: +91 91765 49991

**சந்தா** (தபால் செலவு உட்பட)

**இந்தியா**

ஓராண்டுச் சந்தா ரூ.250
இரண்டாண்டுச் சந்தா ரூ.450
ஐந்தாண்டுச் சந்தா ரூ.1,000
ஆயுள் சந்தா ரூ. 4,000

**பிறநாடுகள்**

ஓராண்டுச் சந்தா ரூ. 750
இரண்டாண்டுச் சந்தா ரூ. 1,400
ஐந்தாண்டுச் சந்தா ரூ. 3,600
ஆயுள் சந்தா ரூ. 10,000

சந்தா செலுத்த விரும்புபவர்கள் பின் வரும் மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

Phone: +1 416 731 1752
Email: kalam@tamilbook.com
tamilbook.kalam@gmail.com
www.tamilbook.com




3
**கே.எஸ். சிவகுமாரன்: ஈழத்து இலக்கியத்தின் தனிப்பெரும் விருட்சம்**
மு. நித்தியானந்தன்


8
**இலக்கிய இரசனையும், இருமொழி இலக்கிய ஊடாட்டமும் நிறைந்த கே.எஸ். சிவகுமாரன்**
மல்லியப்புசந்தி திலகர்

**கல்வீட்டுக்காரி**
அ. முத்துலிங்கம்

14


19
**வெண்முரசு வாசகன் ஒருவனின் ஒரு சிறுகுறிப்பு**
என்.கே. மகாலிங்கம்

**அம்மணப் பூங்கா**
ஷோபா சக்தி

22


29
**காலனிய யாழ்ப்பாணம்: ஓர் ஆங்கில ஆண்டகையின் அவதானிப்புகள்**
சச்சிதானந்தன் சுகிர்தராஜா

**இனப்பிரச்சனை வரலாறும் இலக்கியமும் - 14**
மு. புஷ்பராஜன்

32


39
**அனார் கவிதைகள் ஒரு சுருக்கமான அறிமுகம்**
பேரா. எம்.ஏ. நுஃமான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**நனாபுஸ்**

பா.அ. ஜயகரன்




**எமது இனத்துவ முரண்பாட்டின் முழுப்பரிமாணம்**

சுகுமாரன் நேர்காணல்: கீதா சுகுமாரன்




**கொதி**

ஜெயமோகன்






**கவிதைகள்**

மிஷ்கின் 71 இசை 72

ஆழியாள் 73 ஆனந்தப்ரசாத் 75

கருணாகரன் 76




**ஈச்ச மரம்**

மாஜிதா




**தனியாளாட்சிக்குள் அள்ளுண்டு செல்லும் இந்தியா**

அமர்த்தியா சென்




**செல்வம் அருளானந்தத்தின் 'சொற்களில் சுழலும் உலகம்'**

டிசே தமிழன்




**சந்தோசம்**

மயூ மனோ




**சேக்காளி**

சாம்ராஜ்




**கயல்பரதவன்**

நேர்காணல்: ப்ரியாபாலு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கே.எஸ். சிவகுமாரன்: ஈழத்து இலக்கியத்தின் தனிப்பெரும் விருட்சம்

**மு. நித்தியானந்தன்**

ஈழத்து இலக்கியத்தோப்பில் வைரம்பாய்ந்த தனி விருட்சமாக, ஆழ வேரோடி, பரந்தகன்ற கிளை விரித்து, குளிர்நிழல் பரப்பிநிற்கும் தனித்த ஆளுமைதான் கே.எஸ். சிவகுமாரன். இந்த பெரும் இலக்கிய வியக்திக்கு இணைசொல்ல இங்கே யாருமில்லை. நூறு கவிஞர்களைக் காட்ட முடியும்; நூறு நாவலாசிரியர்களைக் காட்ட முடியும்; நூறு கட்டுரையாளர்களைக் காட்ட முடியும். கே.எஸ். சிவகுமாரனுக்கு நிகரான பல்துறைசார்ந்த ஓர் எழுத்தாளனை ஈழத்து இலக்கியப்பரப்பின் கடந்த அறுபது ஆண்டுகால எல்லையில் காண்பதற்கில்லை. இந்த அறுபதாண்டுகாலத்தில் தொடர்ந்த வாசிப்பே அவரது சுவாசமாக இருந்திருக்கிறது. அந்த வாசிப்பின் வியாபகம் அசலானது. அயராத எழுத்துப்பணியே அவரின் மூச்சாக இருந்திருக்கிறது. இவரின் எழுத்துக்கள் 5,000 பக்கங்களில், முப்பத்தேழு நூல்களாக மலர்ந்திருக்கின்றன. ஆங்கிலத்திலும் தமிழிலுமாக இன்னும் நூல் வடிவம் பெறாத இவரின் எழுத்துக்கள், இன்னும் ஓர் ஆயிரம் பக்கங்களை மிக எளிதாகத் தாண்டிவிடும். இந்தளவு பல்துறை சார்ந்து, ஆங்கிலத்திலும் தமிழிலுமாக எழுத்தை ஓர் இயக்கமாக எண்ணிச் செயற்பட்ட வேறு ஒருவரை என்னால் சொல்ல முடியவில்லை. 'ஆராய்ச்சிக் கட்டுரைகள்' எழுதுவது, பல்கலைக்கழகம் சார்ந்த ஆய்வாளர்களுக்கு அது தொழில். பதவி உயர்வுக்குப் புள்ளிகள் தேடித்தரும் பொறி. 1980இல் வெளிவந்த நூலுக்கு 30 ஆண்டுகள் கழித்து வெளியான இரண்டாம் பதிப்புக்கு 'மறுவாசிப்பு' செய்கிறேன் என்று சொல்லி ஒரு பல்கலைக்கழகப் 'புலமையாளர்', அடிக்குறிப்பு சகிதம் அச்சியந்திரம் உருவானதில் ஆரம்பித்து, மேனாட்டார் வருகை, மிஷனரிகளின் செயற்பாடு என்று ஆரத்தி எடுத்து, கூடவே காவடியும் எடுத்து, ஆய்வுப்பரப்பிற்குள் நுழையவே பாதிக்கட்டுரை முடிந்து விடுகிறது. இன்னுமொரு பேராசிரியர் தவில் கலைஞனின் வாழ்க்கையை எழுதப்போனவர், தவில் எப்படி இருக்கும் என்று சொல்லி, தவில் வளர்ந்த கதை சொல்லி, தவில் வாசித்தவன் கதை சொல்ல வருவதற்கிடையில் விடிந்துவிடுகிறது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தமிழில் சிறப்புநெறி பயிலும் மாணவர்களுக்கான பாட போதனையில் பேராசிரியர் க. கைலாசபதியின் 'புனைகதை' பற்றிய சிறப்பு விரிவுரைகளை நான் முழுதும் கேட்டிருக்கிறேன். George Lukacsஇன் The Historical Novel நூலை விரித்துவைத்து, அந்நூலினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்து, கல்கியின் நாவலை விமர்சிக்கும் பேராசிரியர் கைலாசபதி அவர்களின் இலக்கியப் புலமையின் தரம் வேறு. கே.எஸ். சிவகுமாரன் தனது விமர்சனக் கட்டுரை ஒன்றில் Ralph Cohen எழுதிய New Directions in Literary History என்ற நூலில் Robert Weismann என்ற மார்க்சிய அறிஞர் எழுதிய Past Significance and Present Meaning in Literary History என்ற கட்டுரையின் சாரத்தைத் தருகிறார். எத்தகைய வாசிப்பு இது. Walter Sutton and Richard Foster என்போர் இணைந்து எழுதிய Modern Criticism: Theory and Practice என்ற பாரிய நூலைப் பற்றிய தகவல்களைத் தருகிறார் கே.எஸ். சிவகுமாரன். Ceylon Daily News பத்திரிகையில் 1973இல் ஆறு இதழ்களில் எஸ்ரா பவுண்ட் பற்றி மேர்வின் த சில்வா, ரெஜி சிறிவர்தன ஆகிய இரு ஆங்கில விமர்சகர்களுக்கிடையே நடந்த இலக்கிய விவாதத்தைச் சுருக்கமாகத் தமிழ் வாசகர்களின் முன் வைத்த ஆர்வத்தை எப்படிப் பாராட்டுவது? தொடர்ச்சியான அந்த இலக்கிய விவாதத்தைக் கருத்தூன்றிக் கிரகித்து, தமிழ் வாசகர்களை மிரட்டாமல் சுருக்கமாக, எளிமையாக அப்பெரும் இலக்கிய சர்ச்சையை, சாதாரண தமிழ் வாசகனுக்கு எடுத்துச்செல்லும் பணி எத்தகைய பணி! ஆழ்ந்த வாசிப்போடு, அதனை எளிமையாக, சுருக்கமாக தமிழில் வழங்குவதற்கு எத்தகைய ஆளுமை வேண்டும்! கொழும்பில் நடைபெற்ற ஃபூக்கோ நினைவுக் கருத்தரங்கில், ஃபூக்கோவின் பார்வையில் Georg Buchner என்ற ஜெர்மானிய நாடகாசிரியர் எழுதிய Woyzeck என்ற துன்பியல் நாடகத்தை ஆராய்ந்து, அசோகா தி சொய்ஸா என்ற ஆங்கில விமர்சகர் செய்த ஆய்வுரையை கே.எஸ். சிவகுமாரன் தன் குறிப்பிலே எழுதுகிறார். இது தமிழ்ப் புலமையாளர்களில் எத்தனை பேருக்கு அர்த்தமாகும்? ஆங்கிலத்தில் Story of Western Science என்ற தலைப்பில் J.G.Bruton என்ற அறிஞர் எழுதிய நூலினை ஆதாரமாகக் கொண்டு, 'மூன்று நூற்றாண்டின் முன்னேற்றச் சிந்தனைகள்' என்று, 24 பக்க அளவில் அந்நூலின் சாரத்தைத் தமிழுக்குக் கொணர்வது என்பது எத்தகைய உழைப்பை விழுங்கி இருக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இலக்கிய ஆய்வுப்பரப்பில் இந்த மனிதர் எவ்வளவு நுணுக்கமான அவதானத்தோடு செயற்பட்டு, அதனைத் தமிழில் தரப்பார்த்திருக்கிறார் என்பதை நோக்கும்போது அவர்மீது மிகுந்த மரியாதையே ஏற்படுகிறது. மாப்பஸான், அன்டன் செக்கோவ், நிக்கோலா மாக்கியவல்லி, முல்க் ராஜ் ஆனந்த், நியூ வோல்போல், கத்தரின் மன்ஸ்பீல்ட், ஏ. கோனனோவ் ஆகிய பிரெஞ்சு, ருஷ்ய, ஆங்கில எழுத்தாளர்களின் சிறுகதைகளை எளிமையாகத் தமிழ்ப்படுத்தி 'மித்திரன்' வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகிறார் கே.எஸ். சிவகுமாரன். உயர்ரக செவ்வியல் இலக்கியங்களை எளிமைப்படுத்தி, திருப்பி எழுதி, சுருக்கமாகச் சிறுவர்களுக்கும், சாதாரண வாசகர்களுக்கும் எடுத்துச்செல்லும் பணியை மேல்நாட்டில் எவ்வளவு நுட்பமாகச் செய்கிறார்கள். சார்லஸ் டிக்கன்ஸின் அனைத்து நாவல்களுக்குமே abridged version கிடைக்கிறது.

1960/61இல் இளங்கீரன் வெளியிட்ட 'மரகதம்' சஞ்சிகையில், கைலாசபதி அவர்களின் ஆலோசனையில் ஐரோப்பிய நாவலாசிரியர்கள் சிலரை கே.எஸ். சிவகுமாரன் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்திருக்கிறார். அறுபது ஆண்டுகளுக்கு முன் அவர் தொடங்கிய பெரும் இலக்கியப் பணி அது. அந்தப் பணியைத் தளராது, கூர்மையாகத் தொடர்ந்து செய்துவரும் கே.எஸ். சிவகுமாரன் அவர்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது.

கடந்த அறுபது ஆண்டுக்காலத்தில் ஈழத் தமிழிலக்கியத்தில் என்ன நடந்திருக்கிறது என்று அறிய விரும்புபவர்கள் கே.எஸ்.சிவகுமாரனின் நூல்களைத்தான் தேடிப்போக வேண்டும். அத்தகைய மதிப்புவாய்ந்த பதிவு அது. நூற்றுக்கும் அதிகமான ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்புகளை அவர் விமர்சனத்திற்குட்படுத்தியிருக்கிறார். ஈழத்தில் வேறெந்த விமர்சகரும் இவ்வளவு பரந்த தளத்தில் விமர்சனத்தை மேற்கொண்டதில்லை. வஸீம் அக்ரம் எழுதுகிறார்: 'சிங்கள இலக்கியப் பகைப்புலத்திலிருந்து புது வரவாக மலரும், அனுராதபுரம் போன்ற பின்தங்கிய இலக்கியப் பிரதேசமொன்றிலிருந்து இலக்கிய இதழ்களுடன் மிக மூத்த படைப்பாளிகளில் ஒருவரான கே.எஸ். சிவகுமாரன் போன்ற ஒருவர் இலக்கிய உறவு வைத்திருப்பது தனிப்பெருமை தரும் செய்தியாகும்.' கிண்ணியாவில் எழுத்துலகைப் பொறுத்தமட்டில் மூன்று அலிகள் இருக்கிறார்கள். ஏ.எம்.எம். அலி, எம்.வை.எம். அலி, ஏ.ஏ. அமீர் அலி. அதேபோல அன்று கிண்ணியா என்றதும் ஞாபகத்திற்கு வந்தவர் 'அண்ணல்' என்று எழுதுகிறார் கே.எஸ். சிவகுமாரன். எத்தகைய நுட்பமான அவதானக்குறிப்பு!

ஈழத்தமிழ் வாசகப்பரப்பிற்கு அவர் அள்ளிக்குவித்திருக்கும் அரிய நூல்களின் வியாப்தி மிகப்பெரிது.

ஆங்கிலம், தமிழ், மேற்கத்தைய செவ்வியல் கலாசாரம் (Western Classical Culture) என்ற மூன்று பாடங்களைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவராகப் பயின்று, தான் தேடித்தெரிந்து கற்றதைத் தமிழில் வெளிப்படுத்தும் ஆவலின் முகிழ்வுதான் 'பண்டைய கிரேக்க முதன்மையாளர்கள்' என்ற கே.எஸ். சிவகுமாரனின் நூல்.

லண்டனிலிருந்து வெளியான A.J: The Rooted Cosmopolitan என்ற நூலை வாசித்த மறுகணத்திலேயே அதனைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியதை நாங்கள் மனங்குளிர்ந்து வரவேற்ற பொழுதுகள் உண்டு. இதை யார் செய்வர்?

புது டில்லியிலிருந்து 1974இல் வெளியான 'சுடர்மலர்' என்ற ஏட்டில் பேராசிரியர் க. கைலாசபதி எழுதிய 'ஈழத்தில் இலக்கியத் திறனாய்வு' என்ற கட்டுரையை அறிமுகம் செய்கிறார் கே.எஸ். சிவகுமாரன். எனக்கு இது உண்மையில் புதிய செய்தி.

ஜி.சுந்தரமூர்த்தியின் 'பண்டைத் தமிழ் இலக்கியக் கொள்கைகள்' என்று ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட நூலின் சாரத்தை கே.எஸ். சிவகுமாரன் தரும்போது, இந்த நூல் எங்கே கிடைக்கும் என்று ஓர் இலக்கிய மாணவனுக்கு ஆவல் ஏற்படுவது இயல்பு.

'மேலைநாட்டு மெய்ப்பொருள் சோக்கிரட்டீஸ் முதல் சார்த்தர் வரை' என்று பேராசிரியர் க.நாராயணன் புதுச்சேரியிலிருந்து எழுதிய நூலை நம் கவனத்திற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவருகிறார். Bridging Connection என்ற தலைப்பில் இந்தியாவின் நேஷனல் புக் ட்ரஸ்ட் அமைப்பிற்காக ரஜிவ விஜேசிங்க தொகுத்த நூலில் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் கதைகள் இடம்பெற்றிருக்கும் தகவலை நமக்குக் கொண்டுவருகிறார். அல்லாதுபோனால், இந்த மொழிபெயர்ப்பு முயற்சிகளே நமக்கு என்றென்றும் தெரியவராமலே போயிருக்கும். தெ. மதுசூதனனும் கந்தையா சண்முகலிங்கமும் இணைந்து வெளியிட்ட 'சமூக சிந்தனை: விரிபடு எல்லைகள்' என்ற நூலாகட்டும், '3ஆவது கண்' என்று சமகால விவகாரங்களில் பெண்ணியலாளர்களின் கண்ணோட்டத்தில் வெளியான நூலாகட்டும், சி. மௌன குருவின் 'பண்டைத் தமிழர் வரலாறும் இலக்கியமும்' என்ற நூலாகட்டும் வாசகனின் கவனத்திற்கு இட்டுச்செல்லும் பணியை கே.எஸ். சிவகுமாரன் அயராது செய்திருக்கிறார். பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் வெளியான 'இந்து கலைக்களஞ்சியம்' என்ற அரிய நூலினை எல்லாம் சின்னச் சின்னக் குறிப்புகளுடன் நம் கவனத்திற்குக் கொண்டுசேர்க்கிறார்.

'ஆழமான விமர்சனக் கண்ணோட்டம் ஒன்றும் இல்லாது மதிப்புரைகளையும் இலக்கியப்பத்திகளையும் எழுத முடியாது' என்று கே.எஸ். சிவகுமாரனின் விமர்சனப் பாங்கினைப் பாராட்டுகிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

'கே.எஸ். சிவகுமாரன் தமிழ் இலக்கியப் பரப்பை வெறுமனே விவரிப்பதோடு நின்றுவிடுவதில்லை. பல இடங்களில் அவ்விலக்கியக் கூறுகளை உருவாக்குவதில் செயற்படும் காரணிகளை இனங்கண்டு, அவற்றை விளங்கவும் விளக்கவும் முயல்கிறார். அண்மைக்காலத்தில் பிரவகித்தோடும் இலக்கிய வெளிப்பாடுகளின்மீது செல்வாக்குச் செலுத்திய அடிப்படைக் கோட்பாடுகளைத் தெளிவுபடுத்துவதில் அவர் பெருமளவில் வெற்றி கண்டிருக்கிறார் என்றே நான் நம்புகிறேன்' என்று மதிப்பிடுகிறார் பேராசிரியர் க. கைலாசபதி.

'கே.எஸ். சிவகுமாரன் தமிழ்க் கலாசாரத்தில் மட்டுமே தோய்ந்தவர் என்றில்லை; சகல சீரிய விமர்சனங்களினதும் அவசிய அடிப்படைகளாக அமையவல்ல பரந்த அறமும் அழகியலும் சார்ந்த விழுமியங்களிலும் அவர் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுள்ளார்' என்று புகழ்மிக்க ஆங்கிலப் பத்திரிகையாளர் மேர்வின் டி சில்வா கூறுகிறார். 'கே.எஸ். சிவகுமாரன் The Island பத்திரிகையில் பொறுப்பேற்றுச் செய்த Cultural Pages என்ற பகுதியே வாசகர்களால் முதன்மையாக விரும்பி வாசிக்கப்பட்ட பகுதியாக இருந்தது என்பது நாங்கள் நடத்திய வாசகர் விருப்பத் தேர்வு மதிப்பீட்டிலிருந்து தெரியவந்தது' என்கிறார் உப்பாலி நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் மேலாளர் ஜேம்ஸ் எச். லெனரோல்.

'இலங்கையில் இதுவரை வெளியான சிறுகதைத் தொகுப்புக்களுள் பெரும்பாலானவற்றை விமர்சித்திருப்பவர் கே.எஸ். சிவகுமாரன் ஒருவரே. இதனால் சிறந்த தமிழ் இலக்கியப்பரப்பில் சிறந்த கலை இலக்கிய விமர்சகராக மதிக்கப்படுபவர்' என்று புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் கணிக்கிறார்.

Encyclopaedia of 20th Century World Literature என்ற அரும்பெரும் களஞ்சியத் தொகுதிக்கு, ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றிய கட்டுரையை எழுத, பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்களை விடுத்து, கே.எஸ். சிவகுமாரனை நாடி, சர்வதேச அளவில் ஈழத்து இலக்கியம் பற்றி எழுத வல்லவராகத் தன்னை நிலைநிறுத்துகிறார் அவர்.

ஆங்கிலத்தில் அவர் எழுதிய Tamil Writing in Sri Lanka என்ற நூல் 1974இல் வெளியாகி, இன்று 46 ஆண்டுகள் கழிந்துவிட்டன. கொழும்பில் நடைபெற்ற இந்நூலின் வெளியீட்டு விழாவிற்கு நான் சென்றிருக்கிறேன். இந்த 46 ஆண்டுகால எல்லையில் கே.எஸ். சிவகுமாரன் ஆங்கிலத்தில் எழுதிய எழுத்துகளைத் தொகுத்தால் கனதியான மிகப்பெரும் களஞ்சியம் நம் கைவசமாகும்.

Tamil Writing in Sri Lanka என்ற ஆங்கில நூலில் 'சிங்கள தமிழ் சமூகங்களின் புரிதலை நோக்கி...' என்ற முதல் அத்தியாயத்தில், சிங்கள இலக்கிய உலகில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள இளைய தலைமுறைத் தமிழ் எழுத்தாளர்கள் பிரக்ஞைபூர்வமாக முயற்சிகள் செய்யும்போது, சிங்கள வாசகர்கள் தமிழ் இலக்கிய உலகைப் புரிந்துகொள்ள அத்தகைய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனரா? என்று கேள்வியை எழுப்புகிறார் கே.எஸ். சிவகுமாரன்.

'இலக்கிய வரலாறு' என்று 15 பக்கங்களில் அவர் செய்திருக்கும் பதிவு முக்கிய இலக்கிய நிகழ்வுகளை அறிக்கையிடுகிறது. மாத்தறையை அண்டிய திக்வல்லை எனும் சிங்களச் சூழலில் 3,500 குடும்பங்களையே கொண்டு வாழும் முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலிருந்து, திக்வல்லை எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட 'பூ' என்ற இலக்கிய வெளியீட்டிற்கு தனது ஆங்கில நூலில் முக்கியத்துவம் தந்து பேசுகிறார். 'சிங்கள இலக்கியத்திற்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்கு' குறித்து கட்டுரை எழுதியுள்ள மர்ஹூம் எம்.எச்.எம். சம்ஸ் அவர்களிலிருந்து ஹம்சா முஹம்மது, எம்.ஏ. இனாயத்துல்லா, திக்குவல்லை கமால் என்று கவனத்தில்கொள்ள வேண்டிய ஆளுமைகளைப் பட்டியலிடுகிறார்.

அத்துடன் 'மலையக எழுத்துகள்' என்ற தலைப்பின்கீழ் 1960 70 காலப்பகுதியில் மலையகத்திலிருந்து எழுந்த 35 எழுத்தாளர்களை அடையாளம் காண்கிறார். சி.வி, கே. கணேஷ், பி. கிருஷ்ணசாமி, டி.எம். பீர்முகம்மது, பி.ஆர். பெரியசாமி, இரா. சிவலிங்கம், திருச்செந்தூரன், தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம். ராமையா, கார்மேகம், மு. சிவலிங்கம், சாரல்நாடன் என்று மலையக எழுத்தின் வளத்தை விவரிக்கிறார்.

கவிதைப் பிரிவில் எலிக்கூடு, அக்கினிப்பூக்கள், ஹோசிமின் கவிதைகள், வீடும் வெளியும், குறும்பா, காணிக்கை ஆகிய தொகுப்புகளைக் கணக்கில்கொள்ளும் கே.எஸ். சிவகுமாரன் மஹாகவியை நம் காலத்தின் Robert Frost என்று மகுடம்சூட்ட விழைகிறார். பாக்குநீரிணைக்கு அப்பாலிருந்து எழுதுகின்ற கவிஞர்களைவிட மஹாகவி மகத்தான கவி என்று முத்தாய்ப்பு வைக்கிறார்.

ஈழத்தின் மூலைமுடுக்கிலெல்லாம் துளிர்க்கும் இளம் எழுத்தாளர்களை எல்லாம் அவரின் எழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைத்திருக்கிறது. பிராந்திய எல்லைகளை மேவி, சமய வேறுபாடுகளைக் களைந்து, இனங்களின் சௌசன்யத்தை இசைத்து, மொழி வரம்புகளை விரித்துப்போட்டு இலக்கிய யாத்திரை நடத்திய யோகி இவர்.

கே.எஸ். சிவகுமாரனின் தேர்ந்த சில விமர்சனக் கட்டுரைகளைத் தொகுத்து, க்ரியா வெளியீடாக அவரின் ஒரு நூலைக் கொண்டுவரும் நோக்கில், நான் அவருக்குக் கொழும்பு முகவரிக்குக் கடிதம் எழுதியபோது, அவர் வெளிநாடொன்றில் இருந்திருக்கிறார். அது பின்னர் சாத்தியப்படாமலே போய்விட்டது.

'வளரிளம் பருவத்தில் அல்லது முதிரா இளைஞனாக இருந்த காலத்தில்', அறுபதுகளின் முற்பகுதியில் சிறுகதைத்துறையில் கால்பதித்து, பதினைந்திற்கும் மேற்பட்ட கதைகளை எழுதியிருக்கும் கே.எஸ்.சிவகுமாரன் பின்னாளில் விமர்சகராகவே பிரகாசித்திருக்கிறார்.

'இலங்கையின் நவீன புதுக்கவிதையின் முன்னோடியாகவும் அவர் திகழ்ந்திருக்கிறார் என்பதையும் இங்கு பதிவுசெய்வது பொருந்தும். பரீட்சார்த்தமாக கவிதையிலும், புனைகதையிலும் சிவகுமாரன் செயற்பட்ட ஆரம்பகால முயற்சிகள் இவையாகும்'.

இவரின் எழுத்துக்களின் வாசகர்களாக அல்லது பயனாளர்களாகக் கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள், பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவர்களாகக் காணப்படுகின்றனர் என்பது எழுத்தாளர்களுக்கு அப்பால், வாசகப்பரப்பின் எல்லையை விஸ்தரித்திருக்கிறது. கே.எஸ். சிவகுமாரனின் எழுத்திற்கு ஒருவித புலமை அந்தஸ்து வந்துசேர்ந்திருப்பதை இது சுட்டிக்காட்டுகிறது. இது அவரே நிராகரித்துவிட்டிருந்த ஒன்றாக இருந்தது என்பது ஒரு முரண்நகை.

கே.எஸ். சிவகுமாரனின் எழுத்துப்பணியைப் பாராட்டி, அவரது படத்தை அட்டையில் வெளியிட்டு மல்லிகை தனது 215ஆவது இதழில் (செப் 1988) கௌரவம் செய்திருக்கிறது. 'ஜீவநதி' கே.எஸ். சிவகுமாரனின் பவளவிழாச் சிறப்பிதழை ஐப்பசி 2011இல் கனதிமிக்கதாக வெளியிட்டு, அவருக்குப் பெருமை சேர்த்திருக்கிறது.

சிவகுமாரன் இலங்கையின் அனைத்துத்தினசரிகளிலும், வாராந்தரி இதழ்களிலும் தொடர்ச்சியாக எழுதி வந்திருக்கிறார். சில நாளேடுகளில் பத்திரிகாசிரியராகவும் இருந்திருக்கிறார். இவர் தனது எழுத்திற்கு பத்தி எழுத்தினையே முக்கிய வடிவமாகக் கொண்டிருக்கிறார். 'ஒரு பத்தி எழுத்தாளனாக, எந்த விடயம் பற்றி எழுதுவது என்பதை நானே தேர்வு செய்துகொள்ளவும், எனது சொந்தப் பகுப்பாய்வை மேற்கொள்ளவும், நான் எதைச் சொல்லவேண்டுமோ அதைச் சொல்லவும், அதை எனக்காக்கிக் கொள்ளவும் முடிகிறது. இதற்கெல்லாம் அப்பால், எனது சொந்தக் குரலில் என்னால் எழுத முடிகிறது' என்கிறார் பிரபல அமெரிக்கப் பத்தி எழுத்தாளர் அலன் ஸ்லோன்.

சிவகுமாரன் எழுத்து, சரஸ்வதி போன்ற சீரிய சிற்றிதழ்களிலிருந்து, வீரகேசரி வெளியீடான 'மித்திரன்' மாலை ஏடு வரை எல்லா ஏடுகளையும் தனது எழுத்திற்கு



களமாகப் பாவித்திருக்கிறார். 'தனக்குக் கிடைத்த சொற்ப பிரசுரதளத்தைக்கூட, அவர் கடந்தகாலங்களில் வெகு செம்மையாகப் பயன்படுத்திவந்துள்ளார்' என்கிறார் மேமன் கவி. இலங்கையில் வெளியாகும் அனைத்து வார மஞ்சரிகளும் ஓர் இலக்கியக் கட்டுரை இத்தனை சொற்களுக்குள் அமைய வேண்டும் என வரையறை வைத்திருக்கின்றன. தமிழ்நாட்டின் நாளேடுகளும் இத்தகைய கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன. நீண்ட இலக்கியக் கட்டுரைகளை சாதாரண வாசகர்கள் விரும்புவதில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள்.

தான் கண்ட, கேட்ட, வாசித்த, ரசித்த விடயங்கள் பற்றி எழுதுவதற்கு பத்தி எழுத்து வசதியானதாக, உகந்ததாக இருப்பது கண்டு, அந்த வடிவத்தையே அவர் பெரிதும் தேர்ந்திருக்கிறார். அடிக்குறிப்புகள் போட்டு, உசாத்துணை நூல்கள் காட்டி பக்கம்பக்கமாக, ஆழமாக அல்லது அகலமாக கட்டுரை தயாரிக்கும் அவஸ்தை கே.எஸ். சிவகுமாரனுக்கு இல்லை.

'இடவசதியின்மை, ஜனரஞ்சகம், கண்டனத் தவிர்ப்பு, (விமர்சனம் என்றால் கன்னாபின்னா என்று திட்டிக் கண்டிப்பதல்ல) திட்டவட்டமான முடிவுகளை வழங்காமை, பொருளைச் சுருக்கமாகத் தொகுத்துக்கூறல், கவர்ச்சித்தலைப்பு, இடம், பொருள், ஏவலுக்கேற்ப அழுத்தம் மாறுபடல் போன்றவை பத்தி எழுத்துகளுக்கும் பொதுவான அடிப்படை அம்சங்கள்' என்று ஒரு சந்தர்ப்பத்தில் சிவகுமாரன் எழுதுகிறார்.

இலங்கையில் வெளியான பல பத்திரிகைகளில் அக்கரைச்சீமையிலே, சருகுகள், மனத்திரை, சித்திரதர்சினி, கனபரிமாணம், நாற்சாரம், சொன்னாற்போல, எண்திசைக்கோலங்கள், நமக்கிடையே, சாளரக் காட்சிகள் ஆகிய தலைப்புகளில் அவர் தொடர்ச்சியாக பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களைத் தந்துள்ளார். ஆங்கிலத்திலும் Gleanings, As I like it ஆகிய தலைப்புகளில் பத்தி எழுத்துக்களை எழுதியுள்ளார். வானொலி நிகழ்ச்சிகளிலும் இதே வடிவத்தைக் கையாண்டுள்ளார். இந்த எழுத்துகளில்தான் ஈழத்து இலக்கியத்தின் ஒரு அறுபது ஆண்டுகால வளர்ச்சி பதிவாகியிருக்கிறது. நமது கலை, இலக்கிய ஆளுமைகள் இந்தப் பதிவுகளிலேதான் உலா வந்திருக்கிறார்கள். பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் பேராசிரியர்களின் விதப்புரை காரணமாக பழைய சமாச்சாரங்களை தேடித் தன்னிடம் வருவதாகத் தெரிவிப்பது அவருடைய பதிவின் சரித்திர முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

இலக்கியம் மட்டுமன்றி, நாடகம், ஓவியம், இசை பற்றிய இவரின் குறிப்புகளும் ஆய்வாளர்களுக்கு அரிய ஆவணங்களாக அமையவல்லன. கொழும்பில் குறித்த ஒரு ஆண்டில் இலங்கை நாடகப் போட்டிக்காக மேடையேறிய நாடகங்கள் எவை, அந்த நாடகங்களின் மையப்பொருள் எது, பங்குகொண்ட நடிகர்கள், நெறியாளர் போன்ற விபரங்களை ரத்தினச் சுருக்கமாக ஒரு பக்கத்தில் Lanka Guardian இதழில் எழுதியிருந்தார். இந்த விபரங்களை வேறு எங்கும் நீங்கள் தேடிப்பிடிக்க முடியாது. இந்தக் கட்டுரை ஒரு archival materialதான்.

பரந்த வாசிப்பும், ஆழ்ந்த பார்வையும், தெளிவான எழுத்தாற்றலும், அயராத எழுத்துழைப்பும் கொண்ட ஓர் எழுத்தாளன்மீது எத்துணை சேறடிப்பு நம் இலக்கிய வரலாற்றில் நடந்தேறியுள்ளது என்பதையும் இங்கே நோக்குவது பொருந்தும்.

நுனிப்புல் விமர்சகர், மேலோட்டமான எழுத்தாளர் என்று கண்மூடித்தனமான வக்கிரத் தாக்குதல்கள் இவர் மீது நிகழ்த்தப்பட்டன.

'மேலோட்டமான குறிப்புத்தெரிவித்தலே உள்ளது, சரியான நேர்மையான விமர்சனங்களை வைத்தல் செய்யப் படுவதில்லை, அவர் ஒருவகை 'தப்பி ஓடுதல்', 'பொதுமைப் படுத்தல்' போன்ற வாய்பாடுகளுள் அடங்கிவிடுகிறார், இத்தகைய 'நுனிப்புல் மேய்தல்' விமர்சனங்களிலும் பார்க்க ஆங்கிலத்தில் எழுதாமல் இருப்பது புத்திசாலித்தனம் என்று சொல்லத் தோன்றுகிறது, மற்றைய எல்லா 'மேதாவிகளும்' இத்தகைய போலிகளைப் பார்த்துவிட்டு, படித்துவிட்டு சும்மா இருக்கையில் தனக்கு சின்ன கோபம் வந்துவிட்டது' என்று மாரீசத்தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. இந்த மனிதர்கள் போலி முகங்களோடு திரிபவர்கள்.

'சரிநிகர்' பத்திரிகையில் கே.எஸ். சிவகுமாரனின் 'திறனாய்வுப் பார்வைகள்' என்ற நூலுக்கு மாலின் என்ற பெயரில் ஒரு நபர் மதிப்புரை எழுதியுள்ளார்.

'இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் யாவும் ஆழமான விமர்சன நோக்குடையவை அல்ல. அதனை மேற்கொள்வதையும் தனது பணியாக கே.எஸ். புரிந்துகொள்ளவில்லை. ஆனால், தமிழில் பல்வேறு நூல்கள், எழுத்தாளர்கள், கட்டுரைகள் என்பனவற்றை வாசகர்களுக்கு அறிமுகம்செய்துவரும் பணியை நாம் குறைத்து மதிப்பிடவும் முடியாது' என்று ஒரேயடியாக, மேதாவித்தனத்துடன் எனது நூலில் இடம்பெற்ற கட்டுரைகளை (முழுமையாக வாசித்திருப்பாரோ என்று எனக்குச் சந்தேகம். நக்கலாக எழுதுவது 'விமர்சனம்' என்று சிலர் நினைக்கிறார்கள்போலும்) மதிப்புரைக் குறிப்பு எழுதியவர் மட்டந்தட்டியிருக்கிறார். 'நெஞ்சில் ஒரு முள்ளாக இது குத்தியது' என்று திடீர் விமர்சகர் மாலின் எழுதிய குறிப்பு பற்றி கே.எஸ். சிவகுமாரன் விசனிக்கிறார்.

சிவகுமாரனின் இந்தத் 'திறனாய்வுப் பார்வைகள்' என்ற நூலில்தான் விபுலானந்தரின் திறனாய்வு குறித்து 33 பக்கங்களில் எழுதப்பட்ட மிகச் சிறந்த ஆய்வுக்கட்டுரை இடம்பெற்றிருக்கிறது. பாரதியின் புனைகதைகள் பற்றிய கட்டுரை புதியது. மௌனி, அ.ஸ.அப்துல் ஸமது, தெணியான் போன்றோர் பற்றிய பதிவுகள் முக்கியமானவை. எஸ்.பொ.வின் 'தீ' நாவலுக்கு கே.எஸ். எழுதிய விமர்சன வரிகளில் ஒன்றைத் தானும் சொந்தமாக எழுத இயலாதவர்கள் பொய்ப் பெயர்களில் ஆழமில்லை என்று லேசாகத் தீர்ப்பளித்துவிடுகிறார்கள். எத்தனை inch ஆழம் என்று கொஞ்சம் சரியாகச் சொன்னால் வசதியாக இருந்திருக்கும்.

மாலின் மாதிரிப் பேர்வழிகளை சிவகுமாரன் 'தற்காலிக அல்லது திடீர் விமர்சகர்' என்று குறிக்கிறார். தங்களின் பெயரைப் போட்டு எழுதத் திராணியற்றவர்கள் இம்மாதிரி மறைந்துநின்று எழுதுவது ஒன்றும் புதிய விடயம் அல்ல. Fake ID வகையறாக்கள்.

'கே.எஸ். சிவகுமாரன் ஈழத்துக் கலை, இலக்கிய உலகில் தூக்கி எறியப்பட முடியாத ஒருவராக நிலைகொண்டுள்ளார்' என்று பேராசிரியர் சி. மௌனகுரு இலக்கிய உலகில் அவரின் இடநிர்ணயத்தை எடைபோடும் வரிகள் அர்த்தம்மிக்கவை.

கே.எஸ். சிவகுமாரன்மீது எவரும் கைவைக்க முடியாத, கைவைத்திராத ஒரு துறை சினிமாசார்ந்த அவரது எழுத்துகள்தான். ஈழத்தில் சீரிய கலாபூர்வமான சினிமா ரசனையை உருவாக்கி வளர்த்துச்சென்ற முன்னோடி என்ற பெருமை அவரைச் சாரும். சினிமாக் கோட்பாடுகள் பற்றி தன் நூல்களில் சிவகுமாரன் நிறையவே பேசியிருக்கிறார். அவரின் திரைப்பட விமர்சனங்கள் அவரின் நுட்பமான ரசனையை வெளிப்படுத்துவன.

நீண்ட இந்த எழுத்தாக்க முயற்சிகளுக்கப்பால், எங்கேயும் எவரிடத்தும் காணாத தன்னடக்கமும், எந்த எழுத்தாளனையும் பாரபட்சமின்றி மரியாதை செய்யும் பக்குவமும் எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காணும் தெளிவும் கே.எஸ். சிவகுமாரனிடத்தில் நாம் காணும் உயர் பண்புகள்.

⁂

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கிய இரசனையும், இருமொழி இலக்கிய ஊடாட்டமும் நிறைந்த கே.எஸ். சிவகுமாரன்

**மல்லியப்புசந்தி திலகர்**

1980களில்தான் இலங்கையில் தொலைக்காட்சி அறிமுகமானது. அப்போது ஊருக்கு ஒன்று என இருந்த 14 அங்குல கறுப்பு வெள்ளைத் தொலைக்காட்சிப் பெட்டி ஒரு வீட்டில் இருந்தால், அந்த வீட்டுக்காரர்கள் வசதிவாய்ப்பு உள்ளவர்கள் எனக் கருதும் அளவுக்கு தொலைக்காட்சி ஒரு பெறுமதியான பொருளாகவும் இருந்தது.

இலங்கையின், நுவரெலியா மாவட்டத்தில் பீதுருதலா கலை எனும் இலங்கையின் உயர்ந்த மலைத்தொடரின் ஒரு பக்க சரிவில் அமைந்த மடகொம்பரை எனும் தேயிலைத் தோட்டத்தில் பிறந்து வளர்ந்த எங்களுக்கு இந்த தொலைக்காட்சி என்பது வித்தியாசமாகவே அறிமுகமானது. 'தொலைக்காட்சி கோபுரத்தைத் தாக்கிவிட்டார்கள்' என்பதில் இருந்து தொடங்குவதுதான் அந்த வரலாறு.

தொலைக்காட்சியே தெரியாத நிலையில் அதன் 'கோபுரத்தைத் தாக்கிவிட்டார்கள்' என்றால் அதனை எவ்வாறு புரிந்துகொள்வது! அப்படி ஒரு சம்பவம் நடந்ததும், அதற்கும் மலையக அரசியல் தளத்திற்கும் ஒரு தொடர்பு வந்ததும் தனி வரலாறு.

தனி ஈழத்துக்கான விடுதலைப் போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக முன்னெடுத்த பின்னர், வட கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே இலங்கையின் தென் பகுதியில், அதுவும் மத்திய மலைநாட்டில் இலங்கையின் உயரமான மலைத்தொடர் என பெயர் பெற்ற 'பீதுருதலாகலை' மலை உச்சியில் அமைந்த தொலைக்காட்சிக் கோபுரத்தைக் தாக்குவதற்கு இயக்கப் போராளிகள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது எத்தனைப் பெரிய செய்தி!

அந்த மலைத்தொடரின் அடுத்த பக்க சரிவில் அமைந்த எங்கள் மடகொம்பரைத் தோட்ட வைத்திய நிலையத்தில்தான் ஒரு கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி முதலில் வைக்கப்பட்டது. தோட்ட நிர்வாகம்தான் அந்த தொலைக்காட்சிக்கும் பொறுப்பு. அவர்களது ஆளுகையிலேயே அந்த கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி இருந்தது; தோட்ட மக்களைப் போலவே.

ஒவ்வொரு புதன்கிழமையோ அல்லது மாதம் ஒரு புதனோ என தமிழ்த் திரைப்படம் ஒன்று ரூபவாஹினியில் ஒளிபரப்பாகும். அதுவும் இரவு ஆங்கிலச் செய்தி அறிக்கையின் பின்னர். அந்தத் திரைப்படத்தைப் பார்க்க ஊரே வைத்தியசாலையில் திரண்டிருக்கும் என்பதுதான் சுவாரஷ்யமே.

சிறுவர்களான எங்களைத் தோளில் சுமந்துசென்று ஐந்து கிலோமீற்றர் தொலைவில் உள்ள 'தோட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலைக்கு' (Estate Hospital) தூக்கிக்கொண்டுபோன மாமாமார்களை இன்னும் நினைவு வைத்திருக்கிறேன்.

'தவப்புதல்வன்', 'நெஞ்சம்மறப்பதில்லை', நிச்சயதாம்பூலம்' போன்ற தமிழ்த் திரைப்படங்களை இப்படிப் பார்த்த நினைவுகளை என்றும் என் நெஞ்சம் மறப்பதில்லை.

1983 இன வன்முறைகளோடு எங்கள் குடும்பம் வடக்கில் குடியேறிவிட, அங்கே கொக்குவில் பகுதியில் அமைந்த, அப்பா வேலை செய்த அரிசி ஆலையின் முதலாளி வீட்டு முன்னறையில்தான் முதன்முதலாக வண்ணத் தொலைக்காட்சியைப் பார்த்தேன். அதில் எட்டிநின்று கிரிக்கெட் மெட்சும் பார்த்திருக்கிறேன்.

1986ஆம் ஆண்டு மீண்டும் மலையகம், மடகொம்பரை வந்தபோது எனது உறவுவழித் தாத்தா வேலாயுதம் அவர்களது வீட்டில் ஒரு கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி கம்பீரமாக இருந்தது.

தோட்டங்களில் அப்போது மின்சார வசதி இல்லை. கைவிடப்பட்ட கார்களில் கழற்றி எடுத்து விற்கப்படும் 'பெட்டரியை' கொண்டே இந்த தொலைக்காட்சி இயக்கப்படும். அந்தபர பெட்டிகளைக் தோளில் சுமந்துசென்று வட்டகொடை நகரத்தில் 'சார்ஜ்' செய்து, அதில் கிடைக்கும் மின்சாரத்தில்தான் அந்த தொலைக்காட்சியைப் பார்க்க வேண்டும். செய்திகளுக்கும் திரைப்படங்களுக்கும் மாத்திரமே தாத்தா தொலைக்காட்சியை மட்டுப்படுத்தி வைத்திருந்தார். சார்ஜ் குறைந்துவிட்டால் முதலில் படம் சுருங்கும், பின்னர் குரலும் சுருங்கி, காட்சி படுத்துவிடும்.

எங்கள் வீட்டில் நீல நிறத்தில் ஒரு 'ஏசியா' சைக்கிள் இருந்தது. அப்போது அதற்கு லான்சர் காரின் மரியாதை இருந்தது. அதில் ஏற்றிச் சென்று அந்த கார் பெட்டரியைச் சார்ஜ் போட்டுக் கொண்டு வந்து உதவுவதால், என்னை மட்டும் வேறு ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க அனுமதிப்பார் வேலாயுதம் தாத்தா. அதற்காகவே 'மல்லியப்புசந்தி' வெளியீட்டின்போது, அந்த தாத்தாவை மேடையில் உட்காரவைத்து கௌரவித்திருந்தேன். அதற்கு ஒரு காரணம் இருந்தது. செய்தி, சினமா என்பதற்கு அப்பால் நான் அன்று பார்த்த அந்த மேலதிக நிகழ்ச்சி எனக்கு பொது அறிவை வளர்க்க உதவியது; உலகத்தைக் காண உதவியது.

அந்த நிகழ்ச்சியின் பெயர் 'ஊர்கோலம்'. இப்போதைய 'சுற்றிவரும் பூமி'க்கு (வசந்தம் தொலைக் காட்சி) ஒப்பானது. அதனையும் தாண்டி கூகிளுக்கு ஒப்பானது எனலாம். அந்த 'ஊர்கோலம்' நிகழ்ச்சியைத் தொகுத்தளித்தவர் கே.எஸ். சிவகுமாரன்.

குறுகிய நேரத்தில் தெளிவான தகவல்களுடன் உலக விடயங்களைத் தொகுத்துத்தரும் ஒரு ஆசிரியராகவே அவரை எண்ணிக்கொண்டேன். இப்படித் தொலைவே தொலைக்காட்சியில் எனக்கு அறிமுகமானாவர்தான் கே.எஸ். சிவகுமாரன்.

பின்னாளில் 2001ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைகழகத்தில் இதழியல் டிப்ளோமா கற்கைநெறிக்காக வந்து சேர்ந்தபோது, நேர்முகத் தேர்வு மேசையில் அமர்ந்து முதல் ஆச்சரியம் தந்தவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி.




விரிவுரையாளராக வருகைதந்து இரண்டாவதாக ஆச்சரியம் தந்தவர் கே.எஸ்.சிவகுமாரன். இப்போது நேரடியாகவே அவரது மாணவனானேன்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி, கே.எஸ்.சிவகுமாரன் போன்றவர்களை தொலைக்காட்சியில் மாத்திரமே பார்த்த எனக்கு அவர்களிடம் படிக்கும் வாய்ப்பு கிடைத்தால் ஆச்சரியம் வராதா என்ன?

இந்த வரிசையில் 'தினகரன்' ஆசிரியர் இ.சிவகுருநாதன், 'தினக்குரல்' ஆசிரியர் ஆ.சிவநேசச் செல்வன், வானொலி செய்தியாளர் சற்சொரூபவதி நாதன், தொலைக்காட்சி நெறியாளர் எஸ்.விஸ்வநாதன், தினக்குரல் வீ.தனபாலசிங்கம் என வருகைதரு விரிவுரையாளர்களிடம் கற்கும் வாய்ப்பும் கிடைத்தது.

2007ஆம் ஆண்டு எனது 'மல்லியப்புசந்தி'யுடன் காணிக்கையாக கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளையின் In Ceylon's Tea Garden எனும் ஆங்கிலத் தொகுப்பையும், சக்தீ அ.பால அய்யாவின் அதன் தமிழாக்கமான 'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே' நெடுங்கவிதையையும் இணைந்த ஒரே தொகுப்பாக வெளிக்கொணர்ந்தபோது, ஒரு முன்னாய்வு வாசிப்புக்காகவும் ஆலோசனைக்காகவும் தற்காலிக பிரதியொன்றை கே.எஸ்.சிவகுமாரன் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

தொழில் விடயமாக வெளிநாடு சென்று திரும்பிய மூன்று நாள் இடைவெளியில் 'த ஐலன்ட்' பத்திரிகயில் அந்த ஆங்கில/தமிழ் கவிதை நூல் வெளியீட்டு முயற்சி பற்றிய குறிப்பு ஒன்றையே எழுதி இருந்தார் கே.எஸ். சிவகுமாரன். இப்போதும் ஆச்சரியப்படுவதைத் தவிர, என்னால் வேறு என்ன செய்ய முடியும்?

படைப்புகளை வாசிப்பதிலும் படைப்பாளர்களை ஊக்குவிப்பதிலும் கே.எஸ்.சிவகுமாரன் காட்டும் ஆர்வமும் அர்ப்பணிப்பும் அளப்பரியது என்பதற்கு இந்த சம்பவமே பெரும் உதாரணம்.

இவர் சி.வி.வேலுப்பிள்ளையையும் அவரது எழுத்துக் களையும் அறிந்தவர் என்ற வகையில் இவர் எழுதிய அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆங்கிலக் குறிப்பை In Ceylon's Tea Garden இரண்டாம் பதிப்பில் Noteஆக சேர்த்திருந்தேன்.

*2007/09/29* அன்று வெளிவந்த அந்த நூலையும், 'மல்லியப்புசந்தி' கவிதை நூலையும் மரியாதை நிமித்தம் அவரது வீட்டிற்கே சென்று கையளித்தேன்.

என்ன ஆச்சரியம்! அந்த நாட்களில் அவர் ஞாயிறு 'தினக்குரல்' பத்திரிகையில் எழுதிவந்த 'சொன்னாற்போல' பத்தியில் இரண்டு நூல்களைப் பற்றியும் திறனாய்வுக் குறிப்பு எழுதியிருந்தார் கே.எஸ்.எஸ்.

அதன் பின்னர் *13* ஆண்டுகள் கழித்து என்னுடைய இரண்டாவது நூலான 'மலைகளைப் பேச விடுங்கள்' நூலை அவருக்குக் கையளித்து, மூன்றாவது நூலான 'மலைகளை வரைதல்' (ஆங்கில நூல்களின் அறிமுகம்) என உருவாகிக்கொண்டிருந்த நூலையும் முன்னாய்வு வாசிப்புக்காகக் கொடுத்தபோதும், அதே பழைய வேகத்தில் *23/09/2020* 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் ஓர் அறிமுகக் குறிப்பை எழுதி ஆச்சரியப்படுத்தியிருந்தார். அந்தக் குறிப்பையும் 'மலைகளை வரைதல்' நூலுக்கான அறிமுகக் குறிப்பாகச் சேர்த்து அவருக்கு ஆச்சரியம் காட்டியிருந்தேன்.

இப்படி *1986* முதல் இன்றுவரை எனக்கு பரிச்சய மானவராக இருப்பவர் கே.எஸ். சிவகுமாரன். எனது தந்தையைவிட மூத்தவரான போதும் ஒரு நெருக்கமான நண்பராகவே என்னோடு பழகுவார். எல்லோரிடமும்கூட அப்படித்தான்.

*1936*ஆம் ஆண்டு ஒக்டோபர் *1*ஆம் திகதி கிழக் கிலங்கையின் மட்டக்களப்பு, புளியந்தீவு, சிங்களவாடி எனும் ஊரில் பிறந்தவர் கைலாயர் செல்லநய்னார் சிவகுமாரன். தனது பெயர் சிவகுமார் அல்ல சிவகுமாரன் என்பதில் அதிக அக்கறை காட்டுவதை, பல தடவை அவதானித்து இருக்கிறேன்.

ஆரம்பக் கல்வியை ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலை, சென் மேரிஸ் பயிற்சி பாடசாலை, புனித. மைக்கல் கல்லூரி, அரசாங்க கல்லூரி என மட்டக்களப்பு பிரதேசத்திலேயே பல பள்ளிகளில் கற்றவர், *1953*ஆம் ஆண்டு தமது குடும்பம் தலைநகர் கொழும்பு நோக்கி குடிபெயர்ந்ததுடன் கொழும்பு இந்து கல்லூரியிலும், கொழும்பு சென். ஜோசப் கல்லூரியிலும் பல்கலைக்கழக புகுமுக வகுப்புகள் வரை (HSC) கற்றுள்ளார்.

தொடர்ந்து வெளிவாரி மாணவராக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், தமிழ், மேலைத்தேய கலாசாரம் ஆகிய பாடங்களைக் கற்று, கலைப் பட்ட தாரியானார். மேலதிகமாக மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் முதுமாணிப் பட்டமும் பெற்றுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தில் தகவல் உதவியாளராகப் பணி செய்தவாறே சுயாதீன ஊடகவியலாளராகவும் பணியாற்றியுள்ளார். முதன்முதல் இவர் இணைந்தது வணிகத்துறை சார்ந்த இதழ் ஒன்றில் செய்திகளை எழுதவே.

*1953*ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக பத்தி எழுத்துத்துறையில் (Coloumn Writing) ஆங்கிலம் – தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் எழுதிக்கொண்டிருப்பவர் கே.எஸ்.சிவகுமாரன்.

ஓர் எழுத்தாளராக, ஊடகவியலளராக, ஆங்கில ஆசிரியராக அறியப்படும் இவர் ஒலிபரப்பாளரும், ஒளிபரப்பாளரும்கூட.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆங்கில சேவையில் செய்தி ஆசிரியராகவும், செய்தி வாசிப்பாளராகவும், தமிழில் செய்தி வாசிப்பாளராகவும்கூட பணியாற்றியுள்ளார். ஏற்கனவே குறிப்பிட்டதுபோல தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் செயற்பட்டுள்ளார்.

இலங்கையின் பிரதான இரண்டு தமிழ்ப் பத்திரிகைகளான வீரகேசரி (உதவி ஆசிரியர்) , நவமணி (பிரதம ஆசிரியர்) ஆகியவற்றின் ஆசிரிய பீடத்தில் மட்டுமன்றி 'த ஐலன்ட்', 'டெயிலி நியூஸ்' என இரண்டு ஆங்கிலப் பத்திரிகையிலும் கூட பணியாற்றி இருக்கிறார்.

மாலைதீவுகள், ஓமான் போன்ற வெளிநாடுகளிலும், உள்நாட்டில் சர்வதேச பாடசாலைகளிலும் ஆங்கில ஆசிரிய ராகவும் பணிபுரிந்துள்ளார். ஐக்கிய அமெரிக்காவிலும் இரண்டு ஆண்டு காலம் வாழ்ந்துள்ளார்.

இவரது திறனாய்வு பத்தி எழுத்துக்களும், சிறுகதைகளும், சினமா பற்றியதான பார்வைகளுமாக பல நூலாக்கம் பெற்றுள்ளன.

சிவகுமாரன் கதைகள் *1984* (ஜீவா பதிப்பகம்)

கலை இலக்கியத் திறனாய்வு – *1989* (தமிழ் மன்றம் வெளியீடு)

கைலாசபதியும் நானும் *1990* (தமிழ் மன்றம் வெளியீடு)

திறனாய்வுப் பார்வைகள்: பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுக்களும் – *01/1996* (செவ்வந்தி அச்சகம், கொழும்பு *13*)

ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள்: திறனாய்வு பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுகளும் *03/1998* (செவ்வந்தி அச்சகம், கொழும்பு *13*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்கால ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள் பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுக்களும் – 04/ 1998 (யசீன் அச்சகம், கொழும்பு 12)

இருமை (சிறுகதைத் தொகுதி) – 1998 (தேசிய கலை இலக்கியப் பேரவை)

ஈழத்து தமிழ் நாவல்களிற் சில திறனாய்வுக் குறிப்புகள் பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுகளும் 06/1999 (மீரா பதிப்பகம்)

மூன்று நூற்றாண்டுகளின் முன்னோடிச் சிந்தனைகள் பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுக்களும் 05/1999 (கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு வடக்கு கிழக்கு மாகாணம்)

அசையும் படிமங்கள் – 2001 (மீராபதிப்பகம்)

திறனாய்வு என்றால் என்ன? – 2004 (மணிமேகலைப் பிரசுரம்)

இந்திய இலங்கை இலக்கியம்: ஒரு கண்ணோட்டம் 2005 (மணிமேகலைப் பிரசுரம்)

சினமா! சினமா! ஓர் உலக வலம் – 2006 (மீரா பதிப்பகம்)

பிறமொழிச் சிறுகதைகள் சில – 2007 (மீரா பதிப்பகம்)

மரபுவழித் திறனாய்வும் ஈழத்துத் தமிழ் இலக்கியமும் பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுக்களும் 07/2007 (மீரா பதிப்பகம்)

ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும் ஒரு பன்முகப் பார்வை (1962-1979) – 2008 (மணிமேகலைப் பிரசுரம்)

ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும் ஒரு பன்முகப் பார்வை (1980-1998) – 2008 (மணிமேகலைப் பிரசுரம்)

ஒரு திறனாய்வாளரின் இலக்கியப் பார்வை – 2008 (மணிமேகலைப் பிரசுரம்)

ஈழத்து எழுத்தாளர்கள்: ஒரு விரிவான பார்வை – 2009 (மணிமேகலைப் பிரசுரம்)

சொன்னாற்போல – 1 – 2008 (மீரா பதிப்பகம்)

சொன்னாற்போல – 2 – 2008 (மீரா பதிப்பகம்)

சொன்னாற்போல – 3 – 2008 (மணிமேகலைப் பிரசுரம்)

பண்டைய கிரேக்க முதன்மையாளர்கள் – 2009 (மீரா பதிப்பகம்)

கே.எஸ்.சிவகுமாரன் ஏடுகளில் திறனாய்வு மதிப்பீடுகள் சில – 2011 (மீரா பதிப்பகம்)

சுவையான இலக்கிய திறனாய்வுகள் – 2011 (மணி மேகலைப் பிரசுரம்)

ஒரு விமர்சகரின் இலக்கிய பார்வை – 2013 (மணி மேகலைப் பிரசுரம்)

காலக் கண்ணாடியில் ஒரு கலை இலக்கியப் பார்வை – 2013 (மணிமேகலைப் பிரசுரம்)




கே. எஸ். சிவகுமாரன் கண்களூடாக திறனாய்வு – 2013 (மீரா பதிப்பகம்)

பல நாடுகளில் வசிக்கும் வாசகர்களுக்கு பயனுள்ள குறிப்புகள் - 2013 (மணிமேகலைப் பிரசுரம்)

முக்கிய சினிமாக்கள் பற்றிய சுவையான கண்ணோட்டம் – (மணிமேகலைப் பிரசுரம்)

கலை இலக்கியப் பார்வைகள் – 2014 (மீரா பதிப்பகம்)

போன்ற 30 தமிழ் நூல்களை எழுதி உள்ளதுடன்,

Tamil Writing in Sri Lanka – 1974 (Kumaran Publishers)

Aspects of Culture in Sri Lanka - 1992 (Chamara Printers)

Gleanings - A Lankan's Views as a Columnist - 2019 (Anamika Alphabet - Chennai)

ஆகிய மூன்று ஆங்கில நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

சிறுகதைகள் சிலவற்றையும் எழுதியுள்ள இவர் அதனைத் தொகுப்பாக்கியும் உள்ளார். பிறமொழி சிறுகதைகளை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு தந்தும் உள்ளார். சினமா பற்றிய அவரது பார்வை அபூர்வமானது. தமிழ் சினமா எல்லைகளைக் கடந்து ஒரு கலை வடிவமாக சர்வதேச சினமா குறித்த அவரது பார்வையை எழுத்தில் முன்வைத்து வருபவர். சிறுபராயத்தில் மட்டக்களப்பில் பாலு மகேந்திராவுடன் நட்பு கொண்டிருந்தவர் என அறியக்கிடக்கிறது.

இவரது பெருமளவான நூல்களை மீரா பதிப்பகமும், மணிமேகலைப் பிரசுரமும் வெளியீடு செய்துள்ளன. Gleanings (2019) நூலை சென்னை அனாமிக்கா அல்பா பெட்ஸ் எனும் பதிப்பகத்திற்காக லதா ராமகிருஷ்ணன் வெளியீடு செய்துள்ளார்.

தமிழ்மொழி மூலமான ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை மாத்திரம் அன்றி சிங்களமொழி பேசும் ஆங்கில எழுத்தாளர்களின் படைப்புகளையும் இவர் ஆங்கிலத்தில் அறிமுகஞ்செய்தும் இரசனைக் குறிப்புகளை எழுதியும்வருபவர். இந்தச் செயற்பாட்டின் ஊடே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்களுக்கிடையே நிலவும் இடைவெளியைக் குறைக்க முடியும் என தனது Gleanings நூலின் முன்னுரைகள் குறிப்பில் குறித்திருக்கிறார் கே.எஸ்.சிவகுமாரன்.

Gleanings நூலின் பதிப்பாளரான லதா ராமகிருஷ்ணன் தனது பதிப்பாளர் குறிப்பில் இவ்வாறு கூறுகிறார்:

*நிறைந்த அனுபவங்களினதும் உற்சாகத்தினதும் வெளிப்பாடுகளாக ஓர் எழுத்தாளரின் பேனை புனைவு களையோ அபுனைவுகளையோ எழுத, அதனை வெளியிட்டுக்கொள்வதற்கு பொருத்தமான பதிப்பாளரை தேடிக்கொள்வதற்கு கடும் பிரயத்தனங்களைச் செய்ய வேண்டி இருக்கிறது. பல துன்பங்கள், அதிர்ச்சிகளைக் கடந்து எப்படியோ அந்தப் படைப்பு வெளியானதும், எழுத்தாளர்களின் அடுத்த கட்ட எதிர்பார்ப்பாக அமைவது, அந்த படைப்பு குறித்து 'யாராவதொருவர்' ஒரு குறிப்பை, அது நீண்ட விளக்கத்தைக் கொண்டதல்லாதபோதும் சுருக்கமானதாகவேனும் எழுதமாட்டார்களா என்பதுதான்.*

*அந்த 'யாராவதொருவர்' வாசிப்பது மட்டுமன்றி அதனை அடுத்தவர்க்கு அறிமுகஞ்செய்பவராக, அதன் குறைநிறைகளை, திறனாய்வுரீதியாக ஆய்வு செய்ப வராக, அந்த உழைப்பை மதிப்பாய்வு செய்பவராக இருத்தல் வேண்டும். அந்த 'யாரோவொருவர்' அகநிலை சார்ந்தவராகவும் பாரபட்சம் காட்டுபவராகவும் இருந்தால் அதோகதிதான்!*

*லதா ராமகிருஷ்ணனண் கூறும், அந்த 'யாரோவொருவராக' நம்மிடையே கடந்த 65 ஆண்டுகளாக அகநிலை சாராது, பாரபட்சம் பாராது, பக்கம் சாயாது படைப்புகள் மீதான தனது பார்வையை முன்வைத்து வருபவர் கே.எஸ். சிவகுமாரன் எனத் துணிந்து சொல்லலாம்.*

அறுபதாண்டுக்கு மேற்பட்ட அவரது இலக்கியப் பயணத்தில் கே.எஸ் சிவகுமாரன் எந்த அணி சார்ந்தும் செயற்பட்டதாக, அமைப்புகள் சார்ந்தும் இயங்கியதாக எந்தப் பதிவுகளும் இல்லை. அவர் இலக்கியத்தில் இரசனையின் பக்கம் நின்றவர் எனலாம்.

இவ்வாறு அணிசாராது, அத்தகைய அணிகளின் கருத்தியல்களை படைப்புகளில் வற்புறுத்தலாக எதிர்பார்க்காது அல்லது திணிக்காது இயல்பாக குறை நிறைகளைச் சுட்டிக்காட்டிவரும் இவர், படைப்புகள்மீதான 'விமர்சனம்' என்பதைவிட 'திறனாய்வு' என்பதையே அதிகாமாக கடைப்பிடித்து வந்துள்ளார். இதனால் இவரை 'பட்டியல் விமர்சகர்' என விமர்சித்த இலக்கியத் தரப்பினரும் உள்ளனர்.

அதனையெல்லாம் பொருட்படுத்தாது அவரது இரசனைப் பாங்கை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதுவதன் மூலம் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் இலக்கிய மனங் கொண்டவராகவே திகழ்கிறார்.

அந்த இலக்கிய மனம் ஈழத்தில் நிலவும் பிரதேசம்சார், மதம்சார், மொழிசார் இலக்கிய எல்லைகளைக் கடந்த பார்வையைக் கொண்டமைந்தது கே.எஸ்.சிவகுமாரனின் சிறப்பு எனலாம்.

லதா ராமகிருஷ்ணன் கூறுவதுபோல எழுத்தாளர்கள், கலைஞர்களின் அந்த எதிர்ப்பார்ப்பை அமைதியாக




நிறைவேற்றிவரும் 'யாரோவொருவரான' இவர், யாரோ வொருவராக இல்லாமல் 'எம்மவரில் ஒருவராக' உள்ளார், எம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்பது ஈழத்து இலக்கியத்தின் பெருமையே.

ஆனாலும் அவரை 'யாரும்' பெரிதாகக் கண்டு கொள்வதில்லை என்பது போன்ற உணர்வு அவரிடத்தில் அவ்வப்போது வெளிப்படுவதுண்டு. அவர் அப்படி எண்ணம் கொள்ள வேண்டியதில்லை என்றபோதும், அவரை அப்படி எண்ணும்படியாக 'எங்கேயோ', 'எப்போதோ' நடந்து கொள்கிறோம் என்பதையும் இலக்கிய காரர்கள் மறுபரிசீலனை செய்துகொள்வது நல்லது.

ஏனெனில், எனது எழுத்துக்களுக்கு யாராவதொருவர் குறிப்பு ஒன்றை பத்திரிகையில் எழுத மாட்டார்களா என எதிர்பார்ப்புக்கொள்ளும் எழுத்தாளர்கள் போன்றே, தான் எழுதிய குறிப்பை குறித்த எழுத்தாளர் வாசித்தாரா? என அந்த அறிமுகத்தை / விமர்சனத்தை / திறனாய்வை / குறிப்பை எழுதியவர் எதிர்ப்பார்ப்பதும் நியாயம்தானே.

அத்தகைய ஒரு குறிப்பை எழுதியதற்கு நன்றியாக / ஏற்பாக அல்லது மறுப்பாகவேனும் ஒரு பின்னூட்டத்தை ஒரு தொலைபேசி அழைப்பெடுத்து அல்லது நேரில் காணும்போது கூறுவதில் நமக்கு உள்ள தயக்கம்தான் என்ன?

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் பொதுவாக எல்லா விழாக்களிலும், நூல் வெளியீடுகளிலும் முதல் வரிசையில் அமர்ந்து உரைகளை ரசிப்பவர் கே.எஸ்.சிவகுமாரன். அவருக்கான ஆசனம் என்பதாகவே கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இயல்பாக ஏற்படுத்தியவர் அவர்.

பணம் கொடுத்து புத்தகங்களை வாங்குபவர். மனம் திறந்து படைப்பாளர்களைப் பாராட்டுபவர். வாங்கிய புத்தகத்தை வாசிப்பவர். வாசித்ததன் பதிற்குறியாக அது பற்றிய குறிப்பை அடுத்துவரும் நாட்களில் ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ எழுதி, பத்திரிகைகளுக்கு அனுப்பிவிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன – மத பிரதேச எல்லைகளைக் கடந்த இலக்கிய இரசனைமிக்க இவரை, வெள்ளவத்தை பெண்கள் கல்வி ஆய்வு மையம், கொழும்பு நூலக கேட்போர் கூடம், மகாவலி கேந்திர நிலையம், இலங்கை மன்றக் கல்லூரி என இலக்கிய கூட்டங்கள் நடைபெறும் பொது இடங்களில் எளிமையாக அமர்ந்து இருப்பதைக் காணலாம்.

இப்படி ஒருவரை எமது சமகாலத்தில் பெற்றுக் கொண்டது எமதுபேறல்லவா? அவரது அறிவும் ஆற்றலும் போற்றுதலுக்குரியவை.

'கொடகே இலக்கிய நிறுவனம்' ஒரு புத்தகசாலை என்பதற்கு அப்பால் பதிப்பகமாகவும் இலக்கிய நிகழ்ச்சி களை ஒழுங்கு செய்யும் அமைப்பாகவும் இலங்கையில் செயற்படுகிறது. சிங்கள மொழியில் மாத்திரமல்லாது தமிழ் மொழியில் எழுதுபவர்களது நூல்களையும் வெளியிட்டு ஊக்குவித்து வருகிறது.

ஆண்டுதோறும் தேசிய அரச சாகித்திய விழாவுக்கு நிகரான தேசிய மட்ட இலக்கிய விழாவை நடாத்திவரும் கொடகே நிறுவனம், கே. எஸ். சிவகுமாரனுக்கு வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் விருது வழங்கி, கௌரவம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் வடகிழக்கு மாகாண ஆளுநர் விருது, தமிழ்நாடு அரச விருது, இலக்கிய நூற்சுவை விருது, ஆய்வு இலக்கிய விருது, மக்கள் சமாதான இலக்கிய மன்ற விருது என பல விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளபோதும் ஓமான் நாட்டில் ஆசிரியராக பணியாற்றியபோது, தனது மாணவர் ஒருவர் அளித்த நல்லாசிரியர் விருதில் அதிகம் பெருமிதம் அடைகிறார்.

டொமினிக் ஜீவா ஆசிரியராக இருந்து வெளியிட்ட 'மல்லிகை' இதழ் *1988*ஆம் ஆண்டு கே.எஸ். சிவகுமாரனின் படத்தை அட்டைப்படத்தில் பிரசுரித்து கௌரவம் செய்துள்ளது.

இலங்கையில் தமிழ்மொழி பேசும் எழுத்தாளர்கள் ஆங்கிலத்தில் ஆக்க இலக்கியங்களை எழுதுவது குறைவாக உள்ளது என Drum of A Herald (Third Eye Publication - 2008) எனும் நூலில் 'Challenges and Importance of Identifying and Establishing a Tradition for Writing English by Thamils என்று ஒரு அத்தியாயத்தையே எழுதி உள்ளார் அதன் ஆசிரியரும் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சி.ஜெயசங்கர்.

அந்த கட்டுரையில் ஆங்கிலத்தில் எழுதிய/எழுதும் தமிழர்களின் பட்டியல் ஒன்றையும் தர முயன்றுள்ளார். சி.வி.வேலுப்பிள்ளை, தம்பிமுத்து, அழகு சுப்பிரமணியம், ஷியிரி கிரவுதர், டி. ராமநாதன், ராஜா புரக்டர், ஹீதர் லொயலா, சரஸ்வதி ரொக்வுட், கய் அமிர்தநாயகம், டி.சோமசுந்தரம், வி. அரியநாயகம், சியாம் செல்வதுரை, பாமினி செல்வதுரை, வளன், இந்திரன் அமிர்தநாயகம், ரோகிணி ஹேன்ஸ்மன், இ.சி.டீ. கந்தப்பா, ஐ.சாந்தன், ஜீன் அரசநாயகம், சோ.பத்மநாதன், எஸ். தில்லைநாதன், பொன். கணேசன் என நீளும் வரிசை அது.

அதே நேரம் புலமையாளர்கள் தமது பல்கலைக்கழக கல்வித் தேவை நிமித்தம் சமர்ப்பித்த ஆக்கங்கள் நூலுருப் பெற்றிருந்தாலும் அவர்களின் எழுத்துப் பணி அவர்களின் கல்வித் தேவைக்கு வெளியே நீளாததன் காரணமாக இந்தப் பட்டியலுக்குள் உள்வாங்காமலும் விடுகிறார்.

மேலும், தமிழர்கள் ஆங்கிலத்தில் எழுதுவதை ஊக்கு விக்கும் முகமாக பேராசிரியர்கள் எஸ். கனகநாயகம், சுரேஷ் கனகராஜா, திருவாளர்கள் ஏ.ஜே. கனகரட்னா, எஸ். ராஜசிங்கம், டி. சோமசுந்தரம் ஆகியோரின் ஆலோசனை, வழிகாட்டலின் பேரில் இலங்கையில் தமிழர்களை ஆங்கிலத்தில் எழுத ஊக்குவிக்கும் மரபைத் தொடரச் செய்வதற்கு எடுக்கும் முயற்சியாக English Forum என்ற அமைப்பின் செயற்பாடுகள் குறித்தும் எழுதுகிறார்.

கலாநிதி சி. ஜெயசங்கர் தரும் பட்டியலில் முதலாமவராக ஏற்கனவே இந்த கட்டுரையில் வரும் பீதுருதலாகலை மலைச்சரிவில் அமைந்த எங்கள் மடகொம்பரைத் தேயிலைத் தோட்ட மைந்தன், மக்கள் கவிமணி சி. வி. வேலுப்பிள்ளையின் பெயர் வருவது எனக்கு பெருமிதமாக உள்ளது. அந்த வகையில் இந்த வரிசையில் வராத போதும் முல்க்ராஜ் ஆனந்தின் Two Leaves and a Bud போன்ற ஆக்கத்தை தமிழாக்கம் செய்த மலையக ஆளுமை தலாத்து ஓயா கே. கணேஷ், சி.வி. வேலுப்பிள்ளையின் ஆங்கில ஆக்கங்கள் பலவற்றைத் தமிழுக்குக் தந்த எழுத்தாளரும் ஊடகவியலாளருமான ஹட்டனைச் சேர்ந்த பொன். கிருஷ்ணசாமி (இவர் ஆங்கிலத்தில் சிறுகதைகள் எழுதியுள்ளார்), சி.வியின் மைத்துனரான கவிஞரும் ஊடகவியலாளருமான சி.எஸ். காந்தி (இவரது ஆங்கில கவிதை நூலை *2020*ஆம் ஆண்டு பாக்யா பதிப்பகம் பதிப்பித்துள்ளது) போன்றவர்களையும் இணைத்துப்பார்க்க மனம் விரும்புகிறது.

ஆக்க இலக்கியமாக இல்லாதபோதும், ஆக்க இலக்கியங்களாகவும் வேறு வகை எழுத்துக்களாகவும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்த பலஎழுத்தாளர்களின் படைப்புகள் குறித்து, தமிழிலும் ஆங்கிலத்திலும் அறிமுக, விமர்சன, திறனாய்வுக் குறிப்புகளாக தினசரிகளிலும், வார ஏடுகளிலும் இதழ்களிலும் எழுதிவரும் அதேவேளை அதனை தமிழிலும் ஆங்கிலத்திலும் முப்பதுக்கு மேற்பட்ட நூல்வடிவில் தந்திருக்கும் கே.எஸ்.சிவகுமாரன் பெயரும் இந்தப் பட்டியலில் இடம்பெறும் தகுதியினைப் பெறுகின்றது.

Challenges and Importance of Identifying and Establishing a Tradition for Writing English by Tamils எனும் கலாநிதி சி.ஜெய்சங்கரின் தலைப்பில் கூறியுள்ளது போல ஆங்கிலத்தில் எழுதும் தமிழர்களை அடையாளம் காணும் அந்த மரபை ஊக்குவிக்கும் மரபில் உள்ள சவால்களை எண்ணிப்பார்க்கையில் ஈழத்து இலக்கிய பரப்பில் எழுத்து, அச்சு ஊடகம், ஒலி ஊடகம், ஒளி ஊடகம் என பல பரிமாணங்களில் ஆக்க இலக்கியமாகவும் ஆய்வு இலக்கியமாகவும் இரு மொழியில் பணியாற்றியவரும் கே.எஸ். சிவகுமாரனின் ஆளுமை வரலாற்றுப் பதிவாகும் என்பது திண்ணம்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வீட்டுக்காரி

அ. முத்துலிங்கம்

தன்னிலும் பார்க்க தன் மனைவி பல மடங்கு சாப்பிடுவார் என்பதை கண்டுபிடிக்க அவருக்கு 20 வருடங்கள் எடுத்தன. அவர் ஒன்றும் சொந்த மனைவி சாப்பிடுவதற்கு எதிரியல்ல. நல்ல மனுசர். எதற்காக அவரிடமிருந்து மனைவி மறைத்தார்? பசிக்கு சாப்பிடுவதும் ஒரு குற்றமா? 'நான் உம்முடைய புருசன்தானே. இதிலே என்ன ஒளிவுமறைவு' என்றார். ஒரு வருடமா? இரண்டு வருடமா? 20 வருடங்களாக அவரிடமிருந்து மரகதசவுந்தரி ஒளித்திருக்கிறார். ஒரு நாளைக்கு மனைவியிடம் காரணத்தை கேட்கவேண்டும் என்று நினைத்தார். அந்த நாள் வரவே இல்லை. அவர் சிலநாட்களிலேயே இறந்துபோனார்.

மரகதசவுந்தரி அன்று சமையல்காரி சமைத்த உணவை இரண்டு பிள்ளைகளுக்கும் கொடுத்தார். கணவனுக்கும் மேசையில் பரிமாறினார். பிறகு வழக்கம்போல தனக்கு பசிக்கவில்லை, பின்னர் சாப்பிடுவதாகச் சொன்னார். கணவரும் சரி என்று சொல்லிவிட்டு புறப்பட்டார். மரகதசவுந்தரி வாழையிலையிலோ பிளேட்டிலோ உண்பதில்லை. ஒரு குண்டானில் சோறு, கூட்டு, குழம்பு, பாரைக் கருவாட்டுப் பொரியல் என்று நிறைத்து, மணிக்கட்டுவரைக்கும் கை சோற்றுக்குள் புதைந்துபோக குழைத்தார். அந்த நேரம் பார்த்து ஏதோ காரியமாக சமையலறைக்குள் கணவர் நுழைந்தார். மரகதசவுந்தரி ஒரு காலை மடித்து, ஒரு காலை நீட்டி தரையிலே குண்டானுக்கு முன் உருட்டிய சாதத்துடன் அமர்ந்திருந்தார். கணவர் அதிர்ச்சியில் உறைந்துபோனார்.

அரசரத்தினம் பரம்பரை பணக்காரர். அவருக்கு வன்னியில் நெல் வயல்கள், பளையில் தென்னந் தோப்புகள், நீர்வேலியில் வாழைத் தோட்டங்கள் எனப் பலதும் இருந்தன. வேலைக்காரர்களுக்கும், எடுபிடிகளுக்கும் குறைவில்லை. பணக்காரர்கள் நல்லவர்களாக இருப்பதில்லை. இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர். பல வருடங்களுக்கு முன்னர் மரகதசவுந்தரியை ஒருநாள் கோயில் கூட்டத்திலே பார்த்தார். கும்பலிலே அந்தப் பெண் உட்கார்ந்திருந்தபோது சாதாரணமாகத்தான் தென்பட்டாள். அவள் கண்கள் மயிலிறகில் இருக்கும் கண்கள் போல அகலமாக இருந்தன. எழுந்து நடக்கத் தொடங்கியவுடன், அவளுடைய சின்ன இடை அப்படியும் இப்படியுமாக ஆடியது. அது விநோதமாக இருந்தது. அவளைத்தான் மணமுடிப்பேன் என்று வீட்டில் சொல்லிவிட்டார். மரகதசவுந்தரி வசதியில்லாத குடும்பத்தில் இருந்து வந்தவளாதலால் ஒருவிதத் தடங்கலும் இன்றி திருமணம் சிறப்பாக நடந்தது.

திருமண நாள் இரவு தம்பதிகளை உட்காரவைத்து உணவு பரிமாறினார்கள். மரகதசவுந்தரிக்கு காதுகளில் பசி ஆணை ஒலித்தபடியே இருக்கும். அம்மா அவளை அடிக்கடி திட்டுவார். 'உனக்கு இரண்டு சகோதரங்கள். நீயே எல்லாத்தையும் விழுங்கிவிடுகிறாய். குண்டோதரன் வயிற்றில் புகுந்த வடவைத்தீபோல உன் வயிற்றிலும் பசி அணைக்கமுடியாமல் எரிகிறது. மணமுடித்தால் உன் கணவன் உன்னை நாலு நாளில் துரத்திவிடுவான்.' தாயாரின் எச்சரிக்கையை மரகதசவுந்தரி நினைத்துக் கொண்டாள். தம்பதிகளுக்கு இலை படைத்து ஒரே அளவு பதார்த்தங்களை வைத்தார்கள். இருவரும் சாப்பிடுவதை உன்னிப்பாகக் கவனித்தபடியே சுற்றத்தார் சுற்றி நின்றனர். கணவர் இலையில் படைத்த அத்தனை உணவையும் தின்று தீர்த்தார். மரகதசவுந்தரி நாலு மடங்கு சாப்பிடக் கூடியவள். ஆனாலும் பசியை அடக்கிக்கொண்டு தன் உயிரை விடுவதுபோல பாதி உணவை இலையில் விட்டாள். சுற்றத்தாருக்கு மிக்க மகிழ்ச்சி. அம்மா அடிக்கடி சொல்லும் வடவைத்தீயை அவள் வென்றுவிட்டாள்.

முதல் இரவுக்கு அவர்களைஅறையின் உள்ளே தள்ளிப் பூட்டினார்கள். பிரமிப்பூட்டும் பெரிய வீடு. வீட்டைச் சுற்றியுள்ள தோட்டத்தின் ஒரு கரையில் நின்று பார்த்தால் எதிர்க்கரையில் மனிதர்கள் சின்னதாகத் தெரிவார்களாம். என்ன அலங்காரமான அறை. ஆனால் பசி அவளை ஒன்றையும் அனுபவிக்க விடவில்லை. கணவர் அவள் இடுப்பை சுற்றி வளைத்தபோது காதல் மூளவில்லை, அங்கே பசிக்கனல்தான் மூண்டது. இடது கையால் கன்னத்தை அசையாமல் பிடித்து, இடம் தேர்வு செய்து முத்தம் கொடுத்தார் கணவர். ஒரு மாதிரி முதல் இரவு கழிந்து கணவர் தூங்கியதும் தட்டிலே மீந்து கிடந்த பலகாரங்களை அள்ளி வாயில் திணித்து பசியை ஓர் அளவுக்குத் தணித்துக்கொண்டாள்.

மரகதசவுந்தரிக்கு இரண்டு மகள்கள். ஒருத்திக்கு 16 வயது, பெயர் இளவரசி; குந்தவைக்கு 14 வயது. மகள்களைக் கண்டிப்புடன் வளர்த்தார். கணவருடைய மரணப்படுக்கை ஆணைப்படி இளவரசியை அமெரிக்க மிஷன் உடுவில் மகளிர் கல்லூரியில் படிப்பித்து அங்கேயே ஓர் ஆசிரியை ஆக்கவேண்டும் என்பது அவர் லட்சியம். தெற்காசியாவிலேயே முதல் இடத்தில் இருக்கும் வதிவிட வசதி கொண்ட கல்லூரியில் படிப்பதென்பது எத்தனை மதிப்பான காரியம்.

வழுவழுப்பான இரண்டு பெரும் தூண்களுக்கு மத்தியில் அமைந்த விறாந்தையில் தேக்கு மரத்தில் செய்து மெத்தை போட்ட ஒரு சாய்வு நாற்காலி இருந்தது. அதிலே வீற்றிருந்து மரகதசவுந்தரி வீட்டுத் தோட்டத்தை ரசிப்பார். கேட்டின் இரு பக்கமும் போகன்வில்லா பூத்துக் குலுங்கும். மாமரங்களும், பலா மரங்களும், வேப்ப மரங்களும் இலுப்பை மரமும் நீண்டு வளர்ந்திருக்கும். இலுப்பை பூ பட்டுப்போல விழுந்து தரையை மறைக்கும். இலுப்பை பூ தாகத்துக்கும் சாப்பிடலாம்; பசிக்கும் சாப்பிடலாம். சிறுவயதில் தான் பசிதாங்காமல் இலுப்பைப் பழங்களாகத் தின்றது நினைவுக்கு வந்தது. 100 இலுப்பைக் கொட்டைகளைச் சேகரித்துத் தந்தால் அம்மா ஒருசதம் கொடுப்பார். அதற்கு கடையில் சீனிபிஸ்கட் வாங்கி சாப்பிட்டது எத்தனை மகிழ்ச்சியான நினைவு. சிறிது காலம் வீட்டில் அம்மா காய்ச்சிய இலுப்பெண்ணெய் மணமாகவே இருக்கும்.

எல்லையற்ற அதிகாரம் போல் மகிழ்வளிக்கக்கூடியது இந்த உலகத்தில் ஒன்றுமே இல்லை. பாவாடை நாடாவைத் தளர்த்திவிட்டு, தரையில் உட்கார்ந்து, குண்டான் சட்டிக்குள் கையை நுழைத்து, சோற்றுடன் பாரைக் கருவாட்டை சுட்டோ, பொரித்தோ, பொடிப்பொடியாக்கியோ குழைத்துக் குழைத்து உண்பதன் இன்பத்துக்கு ஈடு இந்த உலகில் வேறு உள்ளதா என யோசிப்பார். தன் தாயாரை நினைத்து மெலிதாகச் சிரிப்பார்.

ஒருநாள் காலை பத்து மணியிருக்கும். தோட்டக் காரர்கள் தங்கள் தங்கள் வேலைகளில் மூழ்கியிருந்தார்கள். கணக்கப்பிள்ளை குனிந்த தலை நிமிராமல் எழுதிக் கொண்டிருந்தார். மரகதசவுந்தரி அசைந்து வெளியே வந்தார். இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்ததுபோலவே கம்பீரமாகக் காணப்பட்டார். இரண்டு பிள்ளைகளின் தாய் என்றாலும், குண்டான் குண்டானாகச் சாப்பிட்டாலும், அவருடைய இடையின் அளவு ஓர் இஞ்சுகூட அதிகரிக்கவில்லை. கறுப்பு கரை வைத்த வெண்பச்சை பருத்திப் புடவையில் மிகையில்லாத அலங்காரம். 38 வயது என்று சொல்லவே முடியாது. இடுப்பிலே கையை வைத்து அடியெடுத்தவர் ஒரு காட்சியைக் கண்டு அப்படியே நின்றார். 100, 200 தேங்காய்கள் குவிந்திருக்க, அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து அலவாங்கில் குத்தி உரித்தான் வேலைக்காரன். ஒரே கதியில் வேலை நடந்தபோது ஓர் இசை கூடி வருவதுபோல அந்த நேரம் ரம்மியமானது. ஓர் அணில் குடுகுடுவென்று ஓடிவந்து நின்று இரண்டு கால்களையும் தூக்கி இப்படியும் அப்படியும் பார்த்தது. வேலைக்காரன் எதிர்பாராத ஒரு காரியம் செய்தான். கையிலே வைத்திருந்த தேங்காயை தலைக்குமேல் தூக்கி அப்படியே அணில்மேல் போட்டான். அது சத்தம் காட்டாமல் இறந்துபோனது.

மரகதசவுந்தரி அதிர்ந்துபோய்விட்டார். கோபத்தில் முகம் சிவக்க கோழிபோலக் கத்தினார். 'அந்த அணில் உனக்கு என்ன பாவம் செய்தது. உன்னை தின்ன வந்ததா? பயமுறுத்தியதா? அல்லது உன் வேலைக்கு இடைஞ்சலாக இருந்ததா? அது தன்பாட்டுக்கு இந்த உலகத்தின் அழகை கொஞ்சம் கூட்டியது. இது குற்றமா? படுபாவி, உனக்கு இங்கே வேலை இல்லை, போ' என்று துரத்திவிட்டார். அவர் வாழ்க்கையையே மாற்றிப்போட்ட தருணம் அது. அவர் கணவர் சாந்தமானவர். ஒருவரையும் வேலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு நீக்கியதில்லை. மரகதசவுந்தரியை கல்வீட்டுக்காரி என்று சனங்கள் அழைக்கத் தொடங்கியது அதன் பின்னர்தான். கண்டிப்பானவர் என்ற செய்தி பரவிவிட்டது. நெல் வயல்காரர்களும், தென்னந்தோப்புக்காரர்களும், வாழைத் தோட்டக்காரர்களும் கேள்வி கேட்காமலே பதில்களுடன் காத்திருந்தனர். கணக்கப்பிள்ளையும் ஓர் அதிசயத்தைக் கண்டார். சென்ற இரண்டு வருடங்கள் ஈட்டிய லாபத்திலும் பார்க்க கடந்த ஆறுமாதங்களில் அதிகமான லாபம் கிடைத்தது.

கதையின் நடுவுக்கு வந்தபின்னரும் முக்கியமான ஒருத்தரை இன்னும் அறிமுகம் செய்யவில்லை. கல்வீட்டில் இருந்து அரைமைல் தூரத்தில் ஒரு பலசரக்கு கடை இருந்தது. அந்தக் கிராம மக்களும் அதைச் சுற்றியுள்ள கிராமத்துச் சனமும் சாமான்கள் வாங்க வருவார்கள். எந்த நேரமும் சனக் கூட்டத்துக்கு குறைவில்லை. முதலாளி சாமான்களை விற்கும்போது வாடிக்கையாளர்களின் பெயர்களைச் சொல்லி காசை வாங்குவார். பெயரைச் சொன்னால் அவருக்கு முகம் தெரியும். இது பெரிய கலை. அவருடைய விலைகள் கொஞ்சம் அப்படி இப்படி இருந்தாலும் சனங்களிடையே அவருக்கு மதிப்பு இருந்தது.

இவருக்கு ஒரு மகன் இருந்தான். பெயர் செல்வகுமரன். வயது 19, 20 என்று வைத்துக் கொள்வோம். எஸ்.எஸ்.சி சோதனை இரண்டு தடவை பெயில் என்பதால் தகப்பனுடன் கடையைப் பார்த்தான். 'நீ சும்மா வந்து கடையில் என்னோடு நின்றால் போதும். வியாபாரம் என்பது என்ன? வாடிக்கையாளர்களைத் தெரிந்து வைத்திருப்பதுதானே' என்பார். நீளக் கால்சட்டையும், பச்சை கலரில் கோடுபோட்ட சட்டையும் அணிந்து ஸ்டைலாகக் காட்சியளிப்பான். சுருள் சுருளான கேசம். வைலர் கைக்கடிகாரம் தெரிவதுபோல கையை சுருட்டியிருப்பான். முடியை கைகளால் அடிக்கடி கலைப்பான். சும்மா இருக்கும்போதே அவனுக்கு சிரிப்பதுபோல முகம். அவன் சிரித்தால் எதிரில் நிற்பவர் மயங்கிவிடுவார். அப்படி ஒரு வசீகரம்.

தகப்பன் பார்த்தார், செல்வகுமரன் நிற்கும் நேரங்களில் எல்லாம் வியாபாரம் கூடியது. அவன் ஆட்கள் பெயர்களை மனனம் செய்வதில்லை. அவன் செய்வதெல்லாம் ஒரு சிரிப்புத்தான், அதில் ஏதோ மாயசக்தி இருந்தது. கல்வீட்டுக்காரர்கள் மட்டும் பலசரக்கு வாங்குவதற்கு வருவது கிடையாது. வாரத்துக்கு என்ன தேவை என்று கல்வீட்டிலிருந்து டெலிபோனில் செய்தி வரும். கடைப்பையன் ஒருவன் சாமான்களை கொண்டுபோய் இறக்கி வைப்பான். மாதமுடிவில் கணக்கப்பிள்ளை பணம் அனுப்புவார்.

அப்படித்தான் ஒருநாள் கடைப்பையன் இல்லாதபடியால் செல்வகுமரன் சாமான்களை சைக்கிளில் ஏற்றிக் கல்வீட்டுக்குச் சென்றபோது வீட்டில் இளவரசி இருந்தாள். சைக்கிள் ஓட்டிவந்த வாலிபனைக் கண்டதும் அவள் இதயம் நின்றது. இத்தனை அழகான ஒருத்தன் இந்தக் கிராமத்தில் இருக்கிறானா? அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவனையே வைத்த கண் எடுக்காமல் பார்த்தாள். அவனுடைய கண்கள் முதலில் சிரித்தன. பின் வாய் மெல்லத் திறந்து சிரித்தது. ஒருவித திட்டமிடாமல் இயல்பாகவே



இவையெல்லாம் நடந்தன. ஒரு முழுநிமிடம் சைக்கிளை விட்டு இறங்காமல் காலை நிலத்தில் ஊன்றியபடி கண்களை எடுக்கமுடியாமல் நின்றான். இளவரசி ஏதோ பெயர் சொல்லி கத்தியபடியே உள்ளே ஓடினாள். இதுவரை காலமும் கடைப்பையன்தான் இந்த வீட்டுக்கு சாமான்கள் விநியோகித்தான். 'இனிமேல் நான்தான்' என்று செல்வகுமரன் தீர்மானித்தான்.

அன்று முழுக்க இளவரசி பேய் அறைந்தவள் போல நடமாடினாள். தன் அறையில் போய் படுத்துக் கொண்டாள். அவளுக்கு தனிமை தேவையாக இருந்தது. அவன் சைக்கிளில் வந்து சறுக்கியபடி திரும்பியவிதம், கீழே இறங்காமல் சைக்கிள் கைப்பிடியைப் பிடித்து நிலத்தில் கால் ஊன்றி நின்றது, அவளைப் பார்த்து மெல்லிய புன்னகை செய்தது, எல்லாம் திருப்பித் திருப்பி படம்போல மனதில் ஓடியது. ஒரு சாதாரண பலசரக்குக்கடை வேலைக்காரன் இத்தனை அழகானவனா? என்ன ஸ்டைலாகத் தோற்றமளித்தான். அவளால் நம்பமுடியவில்லை.

இரண்டு நாட்கள் ஓடின. மனசு பதற்றம் ஓயவே இல்லை. தங்கை குந்தவையிடம் கெஞ்சினாள், 'வா, அந்தக் கடை மட்டும் போய் வருவோம். எனக்கு ஒற்றை ரூல் கொப்பி ஒன்று வீட்டுப்பாடம் எழுத அவசரமாக வேணும்.' 'ஐயோ, நான் வரமாட்டேன். அம்மா தோலை உரிச்சுப் போடுவா.' 'சீ போ. உன்னை தங்கச்சி என்று சொல்ல வெட்கமாயிருக்கு.' 'வேலைக்காரனிடம் சொன்னால் அவன் வாங்கி வருவான்.' 'அவனுக்குத் தெரியாது. நான்தான் கொப்பியில் ரூல் சரியாய் அடித்திருக்கா என்று பார்த்து வாங்கவேணும்.' 'அக்கா, அந்தக் கடைக்கு கிட்டவே போக ஏலாது. ஒருநாள் ஒருத்தன் 'கல்வீட்டுக்காரியின் மகளும் கல்நெஞ்சுக்காரி' என்று என் காதுபடவே பேசினான். 'சரி, நீ வராவிட்டால் போ. நான் போறன்.' 'நுள்ளாதே, நுள்ளாதே வாறன். அம்மாட்ட பிடிபட்டால் நீதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்.ஜி.ஆரின் 'அடிமைப்பெண்' முதல் காட்சி பார்த்துவிட்டு அதிலே 'ஆயிரம் நிலவே வா' என்று வரும் பாடலில் ஒரு வரியைத் திருடி எழுதியிருந்தான். 'நள்ளிரவு துணையிருக்க, நாமிருவர் தனியிருக்க.' இந்த வரிதான் பிடிபட்டது.*

காப்பாற்ற வேணும்.' 'சரி சரி வா. என்ன சிரச்சேதம் செய்யப் போறாவா?'

கடையிலே அவன் மட்டும் இருந்தான். அவன் நாலைந்து கொப்பிகளை எடுத்துக் காட்டினான். இவள் ஏதோ புடவை வாங்க வந்ததுபோல ஆற அமர ஒவ்வொன்றாக வெய்யிலில் பிடித்து ஆராய்ந்தாள். கோடுகள் சரியாக ஓடுகின்றனவா எனச் சோதித்தாள். ஒற்றையை இரண்டு விரலாலும் பிடித்து உரசிப் பரிசோதித்தாள். அவன் தலையை மட்டும் கிட்ட நீட்டி 'எந்த ஸ்கூல்?' என்றான். பின்னர் 'என்ன படிக்கிறீர்?' என்றான். அவள் சொன்ன பதில் வார்த்தைகள் அவனை நோக்கிப் போய் பாதி வழியிலேயே முடிந்துவிட்டன. ஒரு கொப்பி வாங்கி முடிய பத்து நிமிடம் ஆனது. பின்னர் ஒரு பேனை வேண்டுமென்றாள். அவன் பல பேனைகளை எடுத்து வைத்தான். அவள் கடுதாசியில் தன் பெயரை எழுதிப் பார்த்தாள். பின்னர் தன்வீட்டு டெலிபோன் நம்பரை எழுதிப் பரிசோதித்தாள். பிறகு பேனை சரியில்லை என்று திருப்பிக் கொடுத்துவிட்டு சடாரென்று புறப்பட்டாள். குந்தவைக்கு எரிச்சல். ஒரு எழவு பிடித்த கொப்பிக்கு இவ்வளவு நேரமா?

செல்வகுமரனிடமிருந்து முதல் தொலைபேசி இரண்டு நாள் கழித்து சிலோன் ரேடியோவில் அவள் 'இசைச் சித்திரம்' கேட்டுக் கொண்டிருந்தபோது வந்தது. டெலிபோன் எப்பொழுதும் பூட்டியிருப்பதால் இளவரசி அழைக்க முடியாது, ஆனால் வரும் அழைப்புகளை ஏற்றுப் பேசலாம். அம்மா தோட்டத்தை மேற்பார்வை செய்யப் போயிருந்தார். இளவரசி 'ஹலோ' என்றதும் அவனுக்கு தெரிந்துவிட்டது. தன் பெயரைச் சொன்னான். இவள் 'தெரியும்' என்றாள். 'ரூல் கொப்பி சரியா?' என்றான். 'ஓம்' என்றாள். 'வீட்டுப் பாடம் செய்தீர்களா?' என்றாள். 'ஓம்.' 'உங்கள் வகுப்பில் எத்தனை மாணவிகள்?' 'என்ன என்ன பாடம் எடுக்கிறீர்கள்?' 'நானும் தபால்மூலம் படிக்கிறேன். என்னிடம் நல்ல வேதியியல் நோட்ஸ் இருக்கு, உங்களுக்கு வேணுமா?' என்றான். திடீரென்று கோட்டைத் தாண்டினான். 'எனக்கு உங்கள் நினைப்பாகவே இருக்கு.' அவள் சொன்னாள் 'எனக்கும்தான்.'

அடிக்கடி பேசிக்கொண்டார்கள். அவர்களுக்காகவே சங்கேத வார்த்தைகள் உருவாகின. கடிதங்கள் பறந்தன. ஒருநாள் இரவு உணவு நேரத்தின்போது மரகதசவுந்தரி ஓர் அறிவித்தல் செய்தார். 'இன்றுதான் கடிதம் வந்தது. இனிமேல் இளவரசி உடுவில் பெண்கள் கல்லூரி விடுதியில் தங்கிப் படிப்பாள்.' எத்தனை அழுது கூத்தாடியும் இளவரசியின் எதிர்ப்பு பலனளிக்கவில்லை. உடுவில் கல்லூரியில் படிக்க இடம் கிடைத்தாலே அது தனி மதிப்புத்தான். பைத்தியம் பிடித்ததுபோல இளவரசி முதல் ஒரு மாதத்தை விடுதியில் கழித்தாள். மாத முடிவில் அம்மா வந்து வீட்டுக்கு அழைத்துப்போனார். சனி, ஞாயிறு தங்கிவிட்டு திங்கள் காலை திரும்பவேண்டும். சனிக்கிழமை போனது. அவன் அழைக்கவில்லை. சரி, ஞாயிறு அழைப்பான் என நினைத்தாள். அது எப்படி முடியும்? அம்மா வீட்டிலே இருந்தார். ஏமாற்றமாகிவிட்டது. அடுத்தநாள் அதிகாலை புறப்பட வேண்டும்.

படுக்கையில் உருண்டு கொண்டிருந்தாள். தூக்கமே வரவில்லை. நடுச்சாமம் எழும்பி யன்னலில் போய் நின்றாள். நீலநிற இருட்டு. தொழுவத்தில் மாடுகள் நின்றன. உற்றுப் பார்த்தபோது ஏதோ அசைந்தது. ஓர் உருவம் கைகாட்டியது. இதயம் படபடவென்று எலும்பை உடைத்து வெளியே வரத் துடித்தது. மெதுவாக இறங்கி பின்கதவு வழியாக வெளியே வந்தாள். செல்வகுமரன் நின்றான். இடது கன்னத்தில் சந்திர ஒளிபட்டு தகதகவென்று அவன் மின்னினான். அழுகை பீறிட்டுவர அப்படியே கட்டி அணைத்தாள். இரவு ஒன்பதிலிருந்து அங்கே காத்து நின்றதாக அவன் சொன்னான்.

இப்படியே சந்திப்பு தொடர்ந்தது. உலகத்துக் காதலர்கள் பெற்றோரிடம் பிடிபடுவதுபோல இவர்களும் ஒருநாள் அகப்பட்டார்கள். செல்வகுமரன் எழுதிய கடிதம்தான் காரணம். முதல்நாள் யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில் எம்.ஜி.ஆரின் 'அடிமைப்பெண்' முதல் காட்சி பார்த்துவிட்டு அதிலே 'ஆயிரம் நிலவே வா' என்று வரும் பாடலில் ஒரு வரியைத் திருடி எழுதியிருந்தான். 'நள்ளிரவு துணையிருக்க, நாமிருவர் தனியிருக்க.' இந்த வரிதான் பிடிபட்டது. மரகதசவுந்தரி கோபம் வந்தால் கணவர் வைத்திருந்த அலங்காரப் பிரம்பை வெளியே எடுப்பார். சும்மா ஒரு வெருட்டுத்தான். அவர் பிரம்பை உருவி எடுத்ததும் வேலைக்காரர்கள் வெளியே ஓடிவிட்டார்கள். குந்தவை பாய்ந்து வந்து தாயாரை கட்டிப்பிடித்தாள். மூன்று நாட்கள் பேச்சு வார்த்தை இல்லை. இளவரசி சாப்பிட மறுத்தாள். அவள் சொல்லிவிட்டாள் 'எனக்கு கல்யாணம் என ஒன்று நடந்தால் அது செல்வகுமரனுடன்தான்.'

செல்வகுமரனும் பெற்றோரும் ஒரு நல்ல நாள் வெற்றிலை, பாக்கு, பழம் வைத்த தட்டுடன் பெண் பார்க்க வந்தார்கள். மரகதசவுந்தரி நினைத்ததற்கு மாறாக அவர்கள் நல்ல பண்பாடு உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். மாப்பிள்ளை திடமான உடல்கட்டுடன் மரியாதை தெரிந்தவனாக இருந்தான். இப்படி ஓர் அழகன் இந்த ஊரில் இருக்கிறானா என இளவரசி அதிசயித்ததுபோல தாயாரும் வியந்தார். உடனேயே மனதில் சம்மதம் தோன்றிவிட்டது. அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணம், ஆனால் ஒரு நிபந்தனை. மகள் படிப்பைத் தொடர்ந்து கணவர் ஆசைப்பட்டதுபோல உடுவில் மகளிர் கல்லூரியில் ஆசிரியையாக அமரவேண்டும். எல்லோருக்கும் அதில் சம்மதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் முடிந்த பின்னர் இளவரசி விடுதியில் போய் தங்கினாள். இரண்டு வாரத்துக்கு ஒருமுறை மரகதசவுந்தரியின் ஏ30 கார் போய் அவளை அழைத்து வரும். இரண்டு நாட்கள் செல்வகுமரன் அவர்களுடன் வந்து தங்குவான். இது தொடர்ந்தது. சிலசமயங்களில் தாயார் கார் அனுப்பாமல், 'படிப்பு முக்கியம்' என்பார். இளவரசியை ஓர் அடிமையாகவே மரகதசவுந்தரி நடத்தினார்.

ஒருநாள் குந்தவையிடமிருந்து இளவரசிக்கு கடிதம் வந்தது. குந்தவை கடிதம் எழுதுவதே இல்லையாததால் அதனை அவசரமாகப் பிரித்தாள்.

'எடி அக்கா,

நீ போய் விடுதியில் உட்கார்ந்து கொள். உனக்கு என்ன? நான் இங்கே இடிபட்டுக் கொண்டிருக்கிறேன். என்னை படிக்கவேண்டாம் என்று சீமாட்டி நிறுத்திவிட்டார். உன்னுடைய பழைய பூப்போட்ட கிமோனாவை எனக்குத் தந்து அதை வீட்டு வேலைக்குப் போடச் சொல்கிறார். அட்டூழியம் என்றால் தாங்க முடியவில்லை. இந்த ஊருக்கு அவர்தான் ராணி என்ற நினைப்பு. அவவின் மண்டை முழுக்க பாரைக் கருவாடுதான். நான் துணியிலே பூக்கள் செய்து வீணாகிறேன். என்னுடைய முறைப்பாடுகளைக் கேட்க ஒருவருமில்லை. அடிக்கடி அப்பாவின் பிரம்பை வெளியே எடுக்கிறார். குத்துச்சண்டை வீரர் தலையை கைகளால் மூடிக்கொண்டு சுற்றிச்சுற்றி ஓடுவதுபோல நான் ஓடுகிறேன். நான்தான் இங்கே நிரந்தர வேலைக்காரி. எத்தனை கிள்ளும் உன்னிடம் வாங்குவன். ரூல் கொப்பி வாங்க உன்னுடன் நூறு தடவையும் நான் வரத் தயார். எனக்கு மீசை முளைத்துவிட்டது. அதைப் பார்ப்பதற்காவது உடனே வா.'

இளவரசிக்கு ஒன்றுமே புரியவில்லை. அன்றே தாயாரை வந்து தன்னைக் கூட்டிப்போகும்படி அழைத்தாள். தாயார் வந்தார், ஆனால் கூட்டிப்போகவில்லை. 'என்னுடைய பிரம்புக்கு வேலை வைக்காதே. உனக்கு ஒரு நிபந்தனை போட்டு உன் திருமணத்தை முடித்துவைத்தேன். அப்பாவின் கடைசி ஆசையை நிறைவேற்றுவது உன் கடமை. உனக்கு என்ன அவசரம், 19 வயதுதானே ஆகிறது. படிப்பை நிறுத்தலாம் என்று கனவிலும் நினைக்காதே.' 'என்னை இப்படி படி படி என்று வதைக்கிறாய். குந்தவையை படிக்கவேண்டாம் என்று நிறுத்திவிட்டாயே.' 'அதை விடு. அந்த மூதேவிக்கு படிப்பு ஏறாது.'

அம்மாவின் பிடியிலிருந்து விலக ஒரேயொரு வழிதான் இருந்தது. படிப்பை முடித்துவிட்டு குமரனுடன் எங்கேயாவது தூரதேசத்துக்கு ஓடிவிடுவது. அப்பா சொன்னாராம்; நான் அந்தக் கனவை நிறைவேற்ற வேண்டுமாம். பாவம் குந்தவை, அவள் தனித்துவிட்டாள்.குதிரைக்குட்டி போல துள்ளித் துள்ளி திரிவாள். அவள் மகிழ்ச்சியை தேடிப் போவதில்லை. உயிர் வாழ்வதே அவளுக்கு மகிழ்ச்சிதான்.

குந்தவையின் இரண்டாவது கடிதத்தை பதைபதைப்புடன் திறந்தாள்.

'எடி அக்கா,

உனக்கு மூளையே கிடையாது. நிலைமை மோசமாய் போகிறது. சீமாட்டி காலை மாற்றிப் போடுவதுபோல ஆட்களை மாற்றுகிறார். துப்பல் பணிக்கத்தை உடைத்ததற்காக நேற்று வேலைக்காரியை வீட்டுக்கு அனுப்பிவிட்டார். அணிலைக் கொன்றதற்காக ஒரு வேலைக்காரனைத் துரத்திய அம்மா இல்லை இது. அவருடைய தோலுக்குள் இன்னொரு அம்மா இருப்பது உனக்குத் தெரியாது. நான் சொல்லச் சொல்ல நீ கேட்பதே இல்லை. உன்ரை ஆசைப் புருசன் இப்ப இலுப்பைப் பழம் தின்ன வரும் வௌவால்களை இரவில் வலைவைத்து பிடிக்கிறார். அவற்றின் நரி மூஞ்சி பார்க்கச் சகிக்காது. சமையல்காரி அதை சமைத்துக் கொடுக்கிறாள். உனக்குத் தெரியும், அது வாயால்தான் கக்கா செய்யும். அதன் இறைச்சி சமைத்தால் மூன்றுநாள் வீடு மணக்கும். நீ அங்கே படிச்சுக் கிழி. சீமாட்டியின் ராச்சியம் உச்சத்துக்கு போய்க் கொண்டிருக்கிறது. இதுதான் கடைசி. இனியும் நான் செத்த பிணமாகிய உனக்கு கடிதம் எழுதப்போவதில்லை.'

இளவரசிக்கு கைகள் நடுங்கின. அம்மா கார் அனுப்பப் போவதில்லை. விடுதியில் அனுமதி வாங்கிப் புறப்பட முடியாது. இரவு உணவு சமயம் ஒருவரும் அறியாமல் கேட் ஏறிக் குதித்தாள். எந்த பஸ், எங்கே எடுப்பது என ஒன்றுமே தெரியாது. சிநேகிதி சொன்னதுபோல ஆவுரஞ்சிக் கல்லுக்கு பக்கத்தில் நின்றாள். இரண்டு பஸ் பிடித்து வீடு வந்துசேர்ந்தபோது ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் அணைந்துவிட்டன. தாயார் புயல்போல சீறிக்கொண்டு பிரம்பை எடுத்தாலும் எடுப்பார். சமையல்காரியின் பின்கதவு வழியாக மெல்ல சமையல் அறைக்குள் நுழைந்தாள். அம்மா சாப்பிடும் குண்டான் வழித்து துடைத்து கழுவாமல் கிடந்தது. இந்த வயதிலும் ஒரு குண்டான் பசியா? வீடு முழுக்க பிரேதம் அழுகிய மணம்.

தங்கையின் அறைக்கதவு பூட்டாமல் கிடந்தது. எட்டிப் பார்த்து எழுப்புவோமா என்று யோசித்தாள். பின்னர் நேரே போய் அம்மாவின் கதவை தட்டினாள். மறுபடியும் தட்டினாள். 'ஆர்' என்ற அதட்டல் குரல் வந்தது. பதில் பேசாமல் நின்றாள். ஆவேசமாகக் கதவைத் திறந்த மரகதசவுந்தரி வாய்பிளக்க அப்படியே நின்றார். குலைந்த ஆடை. கலைந்த கேசம். முகத்திலே கோபம் கொதிக்க 'என்ன இழவு இந்த நேரம்?' என்றார். இவள் பதில் பேசுமுன்னர் இன்னொரு காட்சியைக் கண்டாள். தபால்மூலம் படிப்பவனும், வௌவால் இறைச்சி தின்பவனுமான இவளுடைய புருசன் மெதுவாக வெளியே வந்து குனிந்த தலையுடன் நின்றான். எந்த நேரமும் வசீகரமாகக் காணப்படும் அவன் வதனம் அத்தனை கோரமாக மாறியிருந்தது. இளவரசியின் தேகம் அனலாக எரிந்தது. தொண்டைக்குள் ஒரேசமயத்தில் பல வார்த்தைகள் உண்டாகி சிக்குப்பட்டன.

'நீ ஒரு தாயா? உன் சொந்த மகளை நடுத்தெருவுக்குத் துரத்திவிட்டாயே. நீ பேய். நீ பிசாசு. வஞ்சகி, என் புருசனைப் பறித்த நீ நல்லாயிருப்பாயா? உனக்கு வெட்கமே இல்லையா?'

மரகதசவுந்தரி கோழிக்குரலில் கூவினார்.

'வாயை பொத்தடி. என்னடி வெட்கம். நான் என்ன வீதி வீதியாய் அலைஞ்சு வேசை ஆடினேனா? இது என் சொந்த மருமகன். சொந்த மருமகன்.'

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெண்முரசு வாசகன் ஒருவனின் ஒரு சிறுகுறிப்பு

என்.கே. மகாலிங்கம்

**ப**க்ரீத் ராஜாஜியின் இலக்கியப் பங்களிப்புப் பற்றி விமர்சகர்களின் கணிப்பு எப்படி இருந்தாலும் அவரின் வியாசர் விருந்தும், சக்கரவர்த்தி திருமகனும் தமிழ் வாசகர்களின் மனதில் நீங்காமல் நிலைபெற்றவை. அவை கல்கியில் தொடர்கதையாக வந்தபோது நான் பள்ளிச் சிறுவன். அவற்றைத் தொடராகவே தொடர்ந்து வாசித்திருக்கிறேன். என்னைப் போன்று பல்லாயிரம் பேராவது அவற்றை வாசித்து மகாபாரதத்தையும் இராமாயணத்தையும் அறிந்திருப்பார்கள். அவை இரண்டும் பின்னர் மகாபாரதம், இராமாயணம் என்று நூல்களாக வந்து மேலும் பல லட்சம் பேர் வாசித்திருக்கிறார்கள். பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' உயர்தர வகுப்பு தமிழ் இலக்கிய மாணவர்களுக்கு பாடமாகவும் அமைந்திருந்தது. பாரதச் சுருக்கம் என்ற நூல் தமிழ் மாணவர்களுக்கு பாட நூலாக இருந்திருக்கிறது. தமிழில் இரு இதிகாசங்களையும் பலர் எழுதியிருக்கிறார்கள். அவற்றில் கிருபானந்த வாரியாரும் ஒருவர். சோ மற்றவர். அவர்களைவிட புனைவிலக்கியங்களாக எழுதிய எஸ்.ராமகிருஷ்ணனின் உபபாண்டவம் நாவல், அரவான் நாடகம், தேவகாந்தனின் கதாகாலம் நாவல் வரை குறிப்பிடலாம். அவற்றைவிட, பல மொழிகளில் பாரதக் கதைகளை புனைவுகளாகவும் நாடகங்களாகவும் ஆக்கி இருக்கிறார்கள். இந்தியா முழுவதும் அல்லாமல் கம்போடியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் தீவுகள் போன்ற கிழக்காசியப் பகுதிகளில்கூட அவை நாடகங்களாக மேடை ஏறுகின்றன. இலங்கை மக்களின் பண்பாட்டிலும் வரலாற்றிலும் மகாபாரதமும் இராமாயணமும் ஆழ வேரூன்றி உள்ளன. எனது சிங்கள பௌத்த நண்பர் ஒருவர் தன்னை குரு வம்சத்தைச் சேர்ந்தவர் என்றே சொல்வார். குருகுலசரிய, மனுகுலசரிய, வர்ணகுலசரிய போன்றவை இலங்கையின் தென் மாகாணங்களில் உள்ள பலருடைய பெயர்கள்.

மகாபாரதத்தை ஆங்கிலத்தில் கிசாரி மோகன் கங்குலி மொழியாக்கம் செய்திருக்கிறார். அது சிறந்த மொழியாக்கம் என்பது பலரின் கருத்து. அதை அருட்செல்வப் பேரரசன் தமிழில் மொழியாக்கம் செய்திருக்கிறார். மகாபாரதமும் இராமாயணமும் பெரும் திரைப்படங்களாகவும் வெளிவந்திருக்கின்றன.

ஜெயமோகன் மகாபாரதத்தை 'வெண்முரசு' என்ற பொதுத் தலைப்பில் பிரமாண்டமான இருபத்தாறு தனித்தனி நாவல்களாக எழுதியிருக்கிறார். அது தமிழுக்குக் கிடைத்த மிகப்பெருங் கொடை. அதைப் பலர் மிக ஆழமாகவும் செறிவாகவும் வாசித்திருக்கிறார்கள், அதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். விவாதித்திருக்கிறார்கள். குறிப்பாக வெண்முரசு விவாதங்கள். அவர்கள் சொன்னவற்றைவிட நான் எதையும் சொல்லிவிடப் போவதில்லை. இருந்தாலும் நானும் தொடர்ந்து அது துவங்கிய நாளிலிருந்து முடியும்வரை வாசித்து இன்புற்றேன் என்று பதிவு செய்யவே இதை எழுதுகிறேன். அதைப்பற்றி எழுதுவது என்பது கம்பரின் பூனை கடலை நாக்கால் நக்க முயன்ற முயற்சிதான். நான் அப்படி எழுதப் போவதில்லை. உண்மையில் செல்வம் கேட்டதால்தான் இந்தச் சிறுகுறிப்பைக்கூட எழுதுகிறேன். அதைப்பற்றி எழுதுவது கூறியதைக் கூறலே.

ஜனவரி 2014 ஆண்டு துவங்கி தினமும் ஒரு அத்தியாயமாக ஏழு வருடங்கள் 26 நாவல்களாக 25000 பக்கங்களில் ஜெயமோகன் அதை எழுதியுள்ளார். வேத வியாசர் இரண்டு வரி கொண்ட ஒரு இலட்சம் சுலோகங்களில் எழுதினார். அதாவது, இரண்டு இலட்சம் வரிகள். அதுவே உலக இதிகாசங்களில் ஆக நீளமானது என்று சொல்கிறார்கள். ஒரு மனிதனால் ஏழு வருடங்கள் தினமும் ஒரு அத்தியாயம் எழுத முடியுமா என்ற வியப்புக்கள் பலருக்கும்போல எனக்கும் இருந்தது. அது ஓர் அசுர சாதனை. அதைவிட, அந்த நாவல் சாதாரணமான ஒரு படைப்பல்ல. தமிழில் எழுதப்பட்ட இலக்கிய உச்சங்களில் ஒன்று. கம்பராமாயணத்திற்கு பிறகு எழுதபட்ட ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதப் படைப்பு. பேரிலக்கியம். தமிழர்களுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்ப்பது. அவரைவிட இப்படியான பிரமாண்டமான படைப்பை வேறு யாரால் எழுதியிருக்க முடியும்? அப்படிச் சொல்வது வெறும் புகழ்ச்சி அல்ல.

வெண்முரசு ஒரு நாவலா? உண்மையில் அதை நாவலாக எண்ணி நான் வாசிக்கவில்லை. அதை ஒரு காவியமாகவே, காவியப் படைப்பாகவே என் மனம் எடுத்துக் கொண்டிருந்தது. அப்படித்தான் அதை வாசித்துக் கொண்டிருந்தேன். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. நாவலுக்கும் காவியத்துக்கும் உள்ள ஒப்பீடுகளை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டுத்தான் அதைக் காவியமாக வாசித்தேன். தினமும் அதற்குள் புகுந்து அதிலிருந்து வெளிவரும்வரை காவிய உலகில்தான் சஞ்சரித்தேன். அதன் மொழியும் பரப்பும் ஆழமும் உள் மடிப்புக்களும் செவ்வியல் காவியத்திற்கான அனைத்துப் பண்புகளும் கொண்டவை.

படைப்புக்குள் ஒன்றித்துப் போய் நான் வாசித்த இலக்கியங்களில் இதுவும் ஒன்று. சேக்ஸ்பியரின் ஒதெல்லோ, யூலியஸ் சீசர், கிங் லியர் போன்ற துன்பியல் நாடகங்களைப் பலமுறை பாடநூல்களாகவும் இலக்கிய இன்பத்திற்காகவும் வாசித்திருக்கிறேன். அப்போதும் அவற்றில் இந்த உள்ளிழுத்து அதனுடன் ஒன்றித்து நிற்கும் இயல்பு இருந்துள்ளது. உண்மையான இலக்கிய வாசிப்பு அப்படித்தான் முதலில் நிகழும். நிகழ வேண்டும். விமர்சனப் பார்வை இரண்டாவது வாசிப்பிலோ பின்னரோ நிகழ வேண்டியது. உண்மையான இலக்கிய இன்பம் என்பது அதுவே.

வெண்முரசின் ஈர்ப்புக்கு அதன் மொழி அழகு மிக முக்கியமானதொரு காரணம். அணிகள், படிமங்கள், உவமைகள் காவியப் பண்புகள் நிறைந்தவை. இருந்தும் அதன் மொழி நவீன காவிய உரைநடை மொழி. ஒவ்வொரு நாவலின் பெயர்களும் மட்டுமல்ல, அத்தியாயங்களின் பெயர்களும் தனித்தமிழில் கவித்துவமானவை. உதாரணமாக, மழைப்பாடல், வண்ணக்கடல், வெண்முகில் நகரம், வெய்யோன், சொல்வளர்காடு, மாமலர், நீர்க்கோலம், செந்நா வேங்கை, இமைக்கணம், தீயின் எடை முதலானவை. நீலம் நாவல் காதல் காவியம். பித்தேறிய மொழியில் எழுதப்பட்டுள்ளது. விஷ்ணுபுரத்தில் ஆரம்பித்து, கொற்றவையில் வளர்ச்சி பெற்று வெண்முரசில் அவருடைய மொழி உச்சம் பெற்றிருக்கிறது என்பேன்.

மாபெரும் கதை மாந்தர்களான பீஷ்மர், திருதராஷ்டிரன், கிருஷ்ணன், துரியோதனன், கர்ணன், அர்ச்சுனன், திரௌபதை, குந்தி, காந்தாரி போன்றவர்கள் காவிய நாயகர்களுக்குரிய வகையில் எழுதப்பட்டுள்ளார்கள். அவர்களைவிட, வியாச பாரதத்தில் வரும் சிறுசிறு பாத்திரங்கள், இவரின் படைப்பில் விரிவாகவும் ஆழமாகவும் படைக்கப்பட்டிருக்கின்றன. அம்பை, சிகண்டி, அசுவத்தாமன், கிருதவர்மன், அரவான் முதலானோர் அப்படிப்பட்டவர்கள். அவர்களின் எழுச்சிகள், வீழ்ச்சிகள், அறம், நீதி, தத்துவம், அதிமானுடத்தன்மை, நிரந்தரம் முதலானவை நாவல்களின் அடிப்படையாக இருக்கின்றன. மகாபாரத காலத்தில் பாரதத்தில் எழுந்து கொண்டிருந்த பல தத்துவங்கள், சமயங்கள், சமய எதிர்ப்பு அவர்களிடையே இருந்த வாதப் பிரதிவாதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வடக்கிலிருந்து தென்னகம் வரையுள்ள நிலப்பரப்பு இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இளநாகன் தென்னகத்திலிருந்து சென்ற பாணன். பல நூறு இனக்குழுக்கள் வளர்ந்து அரசுகளாக நிலைபெற ஆரம்பித்த வரலாறும் உள்ளது. வணிகர்கள் பாரதம் முழுவதும் தங்கள் வணிகத்தை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். வணிகப் பாதைகளை கண்டடைந்திருக்கிறார்கள். ஆனால் போர்களில் பங்குபெறவில்லை. அவர்களுடன் சதர்களும் அலைந்து திரிந்து பண்பாட்டையும் கலையையும் வளர்த்திருக்கிறார்கள்.

ஒரு படைப்பிற்கு வாழும் மொழி ஒன்று தன்னை இத்தனை தூரம் வளைந்து கொடுக்கும் உண்மையையும் எல்லைகளை விரிக்கும் தன்மையையும் வெண்முரசில்தான் கண்டேன். ஆழ்வார்கள், கம்பன் ஆகியவர்களின் கவிதைகளில் காணும் அற்புதமான தமிழின் மொழியின் அழகை வெண்முரசில் கண்டேன். அது வெண்முரசின் சிறப்பின் இன்னொரு பரிமாணம். தமிழ் இத்தனை அழகானதா? நீலம் நாவலில் காதல் மொழியாக ஆகி கவிதையின் உச்ச சாத்தியங்களை அடைந்துள்ளது. இத்தனை ஆழமாக, செறிவாக, கற்பனையாகப் படைப்பதற்கான மொழியா தமிழ்? எமது மொழி எங்கள் எண்ணங்களை, உணர்ச்சிகளைச் சொல்லப் போதாதவை என்று சொல்பவர்கள் வெண்முரசை வாசித்து அதிலுள்ள புதிய சொல்லாக்கங்களை கருத்தில் கொள்ளவேண்டும் என்று சொல்வேன்.

வெண்முரசை வாசித்தபின் யுக முடிவில் ஏற்படும் வெறுமையும் ஆழ்ந்த துக்கமும் எனக்கு ஏற்பட்டது. ஏழு ஆண்டுகளாக ஏறக்குறைய தினமும் வாசித்த வெண்முரசு முதலாவிண் என்ற பகுதியுடன் நிறைவுறப் போகின்றது என்ற ஆதங்கம் ஒருபுறம் இருந்தது. அது இறுதியில் திடீரென முடிந்துபோனது போலவும் முடிவை எதிர்பார்க்காத தருணத்தில் நிறுத்தியது போலவும் உணர்ந்தேன். அதனால் அதிலிருந்து வெளிவந்ததும் இனி என்ன என்ற ஒருவகை ஏக்கம் இருந்து கொண்டிருந்தது. அதை அவர் எழுதிய நூறு சிறுகதைகள் சற்று நிவர்த்தி செய்தன என்பது உண்மை.

இரண்டாவது, வெண்முரசில் வந்த பெரும் நாயகர்கள் அத்தனை பேருமே இறுதியில் வெறும் சாதாரண மனிதர்களாகவே மறைகிறார்கள். பாரதப்போரையே நிகழ்த்திய கிருஷ்ணன்கூட. கிருஷ்ணன் உருவாக்கிய யாதவப் பேரரசுகூட. பாரதப்போரினால் இறுதியில் விளைந்தது என்ன? ஒன்றுமே இல்லை. எல்லாப் போர்களைப் போலவே அதுவும் வெறுமையிலும் அர்த்தமின்மையிலும் முடிந்தது.

இந்த நாவல் தொடரை திரும்பவும் என்னால் வாசிக்க இயலுமா என்றால் இயலாது என்றே சொல்லுவேன். அது வெளிவந்தபோது அதைத் தொடர்ந்து வாசித்ததால் அதை வாசித்து முடித்தேன். என்னிடம் அவர் கையெழுத்துப் போட்டு அனுப்பிய முதல் ஐந்து நாவல்களான முதற்கனல், மழைப்பாடல், வண்ணக்கடல், நீலம், பிரயாகை என் புத்தக அடுக்கில் உள்ளன. இன்று அவற்றின் மொத்தத்தைப் பார்க்கவே பயமாக இருக்கிறது. அவற்றை இனிமேல் வாசிக்க முடியுமா? இடைக்கிடை பார்க்கலாம். அவ்வளவுதான்.

⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Protection For You & Your Family



Our services

Life Insurance «

Critical Illness Protection «

Mortgage Protection «

Travel/Super Visa Insurance «

Dental & Medical Benefits «

Disability Benefits «

Long Term Care «

Employee Benefits «

RESP, RRSP & TFSA «

## Are You Getting Million Dollar Advice?



Life100

INSURANCE & INVESTMENTS INC.

**416-918-9771 | 416-321-2500**

info@life100.ca www.life100.ca

10 Milner Business Court, Suite 208,

Scarborough, ON M1B 3C6

**Sritharan Thuralrajah** CLU, CHS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மணப் பூங்கா

ஷோபா சக்தி

**த**வபாலன் என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட அந்த மனிதரின் முகத்தைப் பார்த்தபோது, எனது கண்கள் தாமாகவே திடுமென இறுக மூடிக்கொண்டன. ஏதோவொரு கிரேக்கப் புராணக் கதையில் வரும் உருவமொன்றுதான் என் ஞாபகத்தில் மின்னலாயிற்று. நான் அச்சத்துடனோ அல்லது தயக்கத்துடனோ கண்களைத் திறந்தபோது, தவபாலன் முன்போலவே தனது தலையையும் முகத்தையும் மறைத்திருந்தார். அவரது விழிகள் மட்டும் தணல்போலத் தகித்துக்கொண்டிருந்தன. அப்போது அந்தப் பூங்காவின் மேற்குப் பகுதியிலிருந்த இடிந்த கோபுரத்திலிருந்து மூன்று தடவைகள் மணியொலித்தது.

எனக்கு இந்த நகரம் முற்றிலும் புதிது. பிரான்ஸின் எல்லை நாடான இந்த நாட்டிற்கு நான் பல தடவைகள் வந்திருக்கிறேன் என்றாலும், இன்று அதிகாலையில்தான் முதற்தடவையாக இந்தப் பழமை வாய்ந்த நகரத்துக்கு வந்தேன். நெடுந்தீவில் பிறந்து, தன்னுடைய எழுபத்தைந்தாவது வயதில் இங்கே வந்து, எண்பத்தாறாவது வயதில் காலமாகிவிட்ட, பெரியப்பாவின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காக வந்திருக்கிறேன்.

பெரியப்பாவின் சாவு நிறைவான சாவு. அவருக்கு ஆறு பிள்ளைகள். எல்லோருமே இந்த நாட்டில்தான் வாழ்கிறார்கள். பதினேழு பேரக் குழந்தைகளும், ஆறேழு பூட்டக் குழந்தைகளும் தீப்பந்தம் பிடித்துச் சூழ நிற்க, 'ஒருமடமாது' பாடல் முழங்க, கிரியை செய்வதற்காக இலண்டனிலிருந்து ஸ்பெசல் குருக்கள் வந்து, சகல மரியாதைகளுடனும்தான் பெரியப்பா எரிக்கும் மின் இயந்திரத்துக்குள் அனுப்பப்பட்டார். மொட்டை போட்டிருந்த பெரியப்பாவின் நான்கு ஆண்மக்களும் மண்டபத்தின் நான்கு வாசல்களிலும் ஆளுக்கொருவராக நின்றுகொண்டு, வந்தவர்களுக்குக் கை கொடுத்து வரவேற்பதாகவும், உடனேயே கைகளைத் திரவத்தால் சுத்திகரிப்பதாகவுமிருந்தார்கள்

இந்தக் கொரோனா காலத்தில் அல்லாமல் வேறொரு காலத்தில் பெரியப்பா இறந்திருந்தால், இதைவிடப் பத்து மடங்கு ஆரவாரமாக இந்தச் சடங்கைப் பிள்ளைகள் நடத்தியிருப்பார்கள். இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில்கூட முந்நூறுக்கும் குறையாத சனங்கள் மயானத்துக்கு வந்திருந்தார்கள். அந்த நகரத்தில் தமிழ்ச் சனங்கள் பத்தாயிரத்துக்கும் அதிகமாகவே இருப்பதாகப் பேசிக்கொண்டார்கள். பிற்பகல் இரண்டு மணியளவில் சடங்குகள் முடிந்ததும், நெருங்கியவர்களிடம் சொல்லிக்கொண்டு நான் புறப்பட்டேன். அன்றிரவு எனக்குப் பாரிஸ் திரும்புவதற்கான இரயில் இருந்தது. நடுவிலிருக்கும் நேரத்தை 'அலக்ஸாண்ட்ரா பூங்கா'வில் செலவிட நான் தீர்மானித்திருந்தேன். அந்தப் பூங்கா இரயில் நிலையத்திலிருந்து, பத்து நிமிட நடை தூரத்திலேயேயிருந்தது.

நான் மயானத்திலிருந்து புறப்பட்டபோது, எனது மைத்துனர் முறையானவர் ஏற்பாடு செய்துவிட்ட இளைஞனொருவன் என்னைத் தனது வண்டியில் அழைத்துச் சென்றான். அவன் என்னிடம் "எத்தனை மணிக்கு இரயில்?" எனக் கேட்டபோது, "அதற்கு நிறைய நேரமிருக்கிறது, நீங்கள் என்னை அலக்ஸாண்ட்ரா பூங்காவில் இறக்கிவிட்டால் போதுமானது" என்றேன். அந்த இளைஞனோ, "அப்படியொரு பூங்காவே இந்த நகரத்தில் கிடையாது" என்று சொல்லிவிட்டான். நான் எனது அலைபேசியில் தேடி, பூங்காவின் படங்களை இளைஞனிடம் காண்பித்தேன்.

"ஓ! அம்மணப் பூங்காவா!" என்று சொல்லிவிட்டு, அவன் வண்டியின் வேகத்தை அதிகரித்தான். இங்குள்ள தமிழர்கள் அந்தப் பூங்காவை 'அம்மணப் பூங்கா' என்றுதான் அழைப்பார்களாம். பதினைந்து நிமிடங்களுக்குள் பூங்காவின் முன்னால் என்னை அந்த இளைஞன் இறக்கிவிட்டான். அவனுக்கு நன்றி சொல்லிவிட்டு, எனது பையைத் தூக்கிக்கொண்டு பூங்காவை நோக்கிச் சென்றேன். அந்தப் பைக்குள் எனது புகைப்படக் கருவியும், சிறிய ஸ்டாண்டும், லென்ஸுகளுமிருந்தன. இந்தப் பூங்காவைப் பார்க்க வேண்டுமென்பது என்னுடைய பலநாள் ஆசையாகயிருந்தது. பெரியப்பாவால் அது இப்போது நிறைவேறிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலநூறு வருடங்களுக்கு முன்பு, இந்த நகரமும் சுற்றியுள்ள கிராமங்களும் சேர்ந்து தனி நாடாயிருந்தது. அய்ரோப்பாவின் மிகப் பழமையான நாடுகளில் இதுவுமொன்று. பதினேழாம் நூற்றாண்டில் ராணி அலக்ஸாண்ட்ராவால் இந்தப் பூங்கா அமைக்கப்பட்டது. அந்த ராணி சிற்பக்கலையில் தீராக் காதலுடையவர். ராணியே ஒரு சிற்பிதான். இந்தப் பூங்காவில் அவர் முப்பது சிலைகளை அமைத்திருந்தார். இரண்டு உலகப் போர்களுக்குப் பின்பு பன்னிரண்டு முழுமையான சிலைகளும், பதினைந்து சிதைந்துபோன சிலைகளும் எஞ்சியுள்ளன. மூன்று சிலைகள் விமானக் குண்டுவீச்சில் முற்றாக அழிந்துவிட்டன. பூங்காவின் மேற்கு மூலையிலுள்ள மணிக்கூண்டுக் கோபுரமும் இரண்டாம் உலகப் போரில் குண்டுவீச்சுக்கு உள்ளாகிப் பாதி சிதைந்துபோயிருக்கிறது. இந்தப் பூங்கா கலைக்கோயிலாக மட்டுமல்லாமல், போர் நினைவுச் சின்னமாகவும் பராமரிக்கப்படுகிறது.



பூங்காவின் நுழைவாசலில் யாருமில்லை. அறிவிப்புப் பலகையில் பூங்கா மூடப்படும் நேரம் மாலை ஆறுமணி என்றிருந்தது. எனக்குப் போதிய நேரமிருக்கிறது. செப்ரம்பர் மாதம் என்பதால் சூரிய வெளிச்சம் ஆறு மணிவரையிருக்கும்.

உண்மையில் அந்தப் பூங்கா நான் எதிர்பார்த்ததைவிட மிகப் பெரிதாயிருந்தது. ஆனால் ஆள் நடமாட்டம் சற்றுக் குறைவாயிருந்தது. சிலைகளிருந்த பகுதி பூங்காவின் மையத்திலிருந்தது. நுழைவாயிலில் இருந்து பார்த்தபோதே, சிலைகள் பூஞ்செடிகளுக்கு மேலால் தெரிந்தன. நறுமணம் ஒவ்வொரு புல்லிலும் நுரைத்துக்கொண்டிருந்தது. முகக் கவசத்தைத் தாடைக்கு இறக்கிவிட்டு, நறுமணத்தை நெஞ் சுக்குள் நிறைத்துக்கொண்டேன்.

அந்தச் சிலைகளுக்கு நடுவில் நான் நின்றபோது, ஏதோ புராண காலத்தில் நிற்பதுபோலவே உணர்ந்தேன். ஆறடி உயரமுள்ள பீடத்திலிருந்த ஒவ்வொரு சிலையும், பத்தடி உயரத்துக்குக் குறையாமலிருந்தது. ஆண், பெண், குழந்தைகள் எனக் கற்களில் சித்திரிக்கப்பட்டிருந்தார்கள். எல்லாச் சிலைகளும் நிர்வாணத்தின் பல்வேறு நிலைகளில் வடிவமைக்கப்பட்டிருந்தன. மனித உடலின் அழகுக்கு ஒப்பாக வேறொரு உயிரினத்தின் அழகு இருக்கவே முடியாது என்பதை அந்தச் சிலைகள் சொல்லின. ஒவ்வொரு சிலையும் என்னையே பார்ப்பது போலவும், அழைப்பது போலவுமே உணர்ந்தேன்.

ஒரு பெண் குந்தியிருந்தவாறே குழந்தையைப் பெற்றெடுப்பதாக ஓர் உயரச் சிலையிருந்தது. அந்தச் சிலைக்கு வலது பக்கமாக, பத்துப் பதினைந்தடிகள் தூரத்தில் அமைக்கப்பட்டிருந்த கல்லாலான நீண்ட இருக்கையில், உயிருடன் ஒருவர் உட்கார்ந்திருப்பதைக் கவனித்தேன். அந்த உருவம் முழுவதுமாக ஆடைகளால் மூடப்பட்டிருந்தது. தலையிலிருந்த தொப்பி கவிழ்ந்திருந்து நெற்றியையும் மறைத்தது. முகத்திலிருந்த கறுப்புநிறத் துணி கண்கள் வரை ஏறியிருந்தது. அந்தக் கண்கள் என்னையே பார்த்துக்கொண்டிருந்தன. நான் எனது தாடையில் கிடந்த முகக் கவசத்தை மூக்குக்கு மேலாக ஏற்றிவிட்டுக்கொண்டு, ஒவ்வொரு சிலையையும் படம் பிடிப்பதில் மூழ்கிவிட்டேன். நடுவில் சில பார்வையாளர்கள் வருவதாகவும், சிலைகளைப் பார்த்துப் பரவசமாகிக் கூச்சலிடுவதாகவும், படம் பிடித்துக்கொள்வதாகவும், போவதாகவுமிருந்தார்கள். ஆனால் கல்லிருக்கையில் அமர்ந்திருந்தவர் மட்டும் அப்படியே சிலைகளோடு சிலைபோல அசையாமலிருந்தார். அந்தக் கல்லிருக்கையை நான் கடந்தபோது, அதில் அமர்ந்திருந்தவரை ஓரக்கண்ணால் பார்த்து "குட் ஈவினிங்" என்றேன். பதிலுக்கு அந்த மனிதர் "நான்தான் தவபாலன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அந்த மனிதரை நோக்கித் திரும்பி "தவபாலனா? எனக்கு யாரென்று தெரியவில்லையே" என்றேன். அந்த மனிதர் தனது தலையிலிருந்த தொப்பியை இடது கையால் மெதுவாக எடுத்துத் தனது மடியில் வைத்துக்கொண்டார். அவரது கை மிக மெதுவாகவே தடுமாற்றத்துடன் இயங்கியது. பின்பு அதே கையால் மெதுவாக முகத்திலிருந்த துணியையும் விலக்கினார். எனது கண்கள் சடுதியில் மூடிக்கொண்டன. நெஞ்சுக்குள்ளிருந்த நறுமணம் தீய்ந்து புகையாக என் வாயால் வெளியேற, 'ஈங்' என்ற ஏங்கல் என் தொண்டைக்குழியில் எழுந்து வீழ்ந்தது.

அந்த மனிதரின் தலையில் முடியே இல்லை. உச்சந்தலையில் தோல்கள் சுருண்டு சிறிய கொம்புகள் போலத் தோற்றமளித்தன. காதுகள் இருக்கவேண்டிய இடத்தில் தசைக்கோளங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. நெற்றியில் கறுப்புத் தோலின் நடுவே சிலந்திவலை போல வெள்ளை படர்ந்திருந்தது. அந்த மனிதரின் முகத்தில் மூக்கே இல்லை. துவாரங்கள் மட்டுமே இரண்டு புளியங்கொட்டைகள் போலிருந்தன. கன்னச் சதைகள் பாசி போல எலும்பில் ஒட்டிக் கிடந்தன. வாய்க்குக் கீழே அவரின் முகம் முடிந்துவிடுகிறது. தாடையே இல்லை.

"என்னைத் தெரியாதா?" என்று அந்த மனிதர் மீண்டும் கேட்டார்.

"இல்லை, நான் பிரான்ஸிலிருந்து வந்திருக்கிறேன்."

"அப்படியா! நல்லது. நான் இந்தப் பூங்காவுக்கு ஒவ்வொருநாளும் வருவேன். இங்கிருக்கும் ஒவ்வொரு சிலைக்கும் என்னைத் தெரியும். இந்தப் பூங்காவைப் பற்றி நீங்கள் அறியாத விஷயமொன்றை நான் சொல்லட்டுமா?" என்று கேட்டார் தவபாலன்.

அந்த நீண்ட கல்லிருக்கையின் நடுவில் அமர்ந்திருந்த தவபாலன், மெதுவாக வலது மூலைக்கு நகர்ந்தார். நான் போய் இடது மூலையில் உட்கார்ந்துகொண்டேன்.

## 2

**நீ**ங்கள் ஒரு சிலையைச் சுற்றிப் படம் பிடிக்கும் நேரத்திற்குள் என்னைப் பற்றிச் சொல்லிவிடலாம். இந்த நகரத்தில் என்னைத் தெரியாதவர்களே இல்லை. தமிழர்களைப் பற்றி மட்டும் நான் சொல்லவில்லை. வெள்ளையர்களுக்கும் என்னைத் தெரியும்.

1984ம் ஆண்டு எந்த விசயத்தால் முக்கியத்துவம் பெறுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. அந்த வருடத்தின் பெயரால் ஒரு புத்தகம் இருப்பது மட்டுமே எனக்குத் தெரியும். என்னுடைய நண்பன் கபிலன் அந்தப் புத்தகத்தை வைத்திருந்தான். அவன் நீண்டகாலமாக வெலிக்கடைச் சிறையிலிருக்கிறான்.

அந்த வருடம்தான் நான் பிறந்தேன். அடுத்த வருடமே கொழும்புக்கு மிளகாய் மூட்டைகள் கொண்டு சென்ற அப்பா காணாமல் போய்விட்டார். கைக்குழந்தையான என்னையும் தூக்கிக்கொண்டு, அம்மா இராணுவ முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் அப்பாவைத் தேடியலைந்தார். அப்பா என்னவானார் என யாருக்கும் தெரியவில்லை. அப்பா திரும்பி வரவேயில்லை.

எங்களுக்கு வட்டக்கச்சியில் பெரிய விவசாய நிலமிருந்தது. அம்மாவே விவசாயத்தைக் கவனிக்கத் தொடங்கினார். சாரம் கட்டி, சேர்ட் போட்டிருக்கும் பெண்ணை நீங்கள் கண்டிருப்பீர்களோ தெரியாது. எனது அம்மாவுக்கு உழவு இயந்திரம் ஓட்டக்கூடத் தெரியும். கூலியாட்களை வைத்து விவசாய வேலைகளை அம்மா கவனித்தாலும், அவரும் சாரத்தை கட்டிக்கொண்டு நிலத்தில் இறங்கி எல்லா வேலைகளையும் பார்ப்பார். அவரது கையாலேயே கூலியாட்களுக்கு உணவும் தேநீரும் தயாரித்துக் கொடுப்பார். ஆனால் அவர் ஒருபோதும் என்னைத் தோட்டத்திற்குள் இறங்க விட்டதேயில்லை. "படிப்பது மட்டுமே உன்னுடைய வேலை" என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுவார். நானும் அம்மா சொல்வதைக் கேட்டு நடக்கக்கூடிய பிள்ளைதான். அப்படிச் சொல்வதைக் காட்டிலும், எனக்குச் சுயமாக ஒன்றுமே செய்யத் தெரியாது என்று சொல்வதே சரியாயிருக்கும். அன்றன்றைக்கு என்ன உடையணிய வேண்டும் என்பதைக்கூட நான் அம்மாவிடம்தான் கேட்பேன். பள்ளிக்கூடத்தைத் தவிர வேறெங்குமே அம்மா இல்லாமல் நான் தனியாகச் சென்றதேயில்லை. "சுமதி... நீ தவபாலனை சுயபுத்தியில்லாத பிள்ளையாக வளர்த்திருக்கிறாய்" என்று மாமா கூட, அம்மாவிடம் அடிக்கடி சொல்வார்.

பஞ்சாட்சரம் மாமா, அம்மாவின் மூத்த அண்ணன். கொழும்பில் ஆட்டுப்பட்டித் தெருவில் கிட்டங்கி வைத்து மொத்த வியாபாரம் செய்துகொண்டிருந்தார். எங்களது நிலத்தில் விளையும் பொருட்களை அவர்தான் வாங்கிக்கொள்வார். அவரது குடும்பம் கொழும்பிலேயே இருந்தது. எனக்குப் பதினாறு வயதானபோது, என்னை அதற்குமேலும் வன்னியில் வைத்திருக்க அம்மா விரும்பவில்லை. மாமாவின் பொறுப்பில் என்னைக் கொழும்புக்கு அனுப்பிவிட்டார். அதற்குப் பின்பு, இன்றைக்குவரை நான் வட்டக்கச்சிக்குத் திரும்பவேயில்லை. மாமாவின் வீட்டிலிருந்து படித்துத்தான், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தேன். அங்கிருந்துதான் பல்கலைக்கழகத்துக்குப் போய்வந்தேன்.

யுத்தம் ஓரளவு தணிந்திருந்த காலங்களில், மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அம்மா கொழும்புக்கு வந்து என்னைப் பார்த்துப் போவார். யுத்தம் உக்கிரமாக நடந்த காலங்களில்கூட ஆண்டுக்கு ஒருமுறையாவது அம்மா எப்படியும் கொழும்புக்கு வந்துவிடுவார். ஆனால் இரண்டே நாட்களில் திரும்பவும் வன்னிக்குப் போய்விடுவார். "அங்கே தோட்ட வேலைகள் நடுவில் நிற்கின்றன தவம்" எனச் சொல்லி, என்னை முத்தமிட்டு விடைபெறுவார்.

பல்கலைக்கழகத்தில் இரண்டாமாண்டில் நான் படித்துக்கொண்டிருந்தபோதுதான், என்னுடன் படித்துக்கொண்டிருந்த கபிலனை புலனாய்வுத்துறையினர் கைது செய்தார்கள். கொழும்பில் கார்க் குண்டுவெடிப்பு நடத்தி, விமானப்படைத் தளபதியைக் கொலை செய்தவர்களது குழுவில் கபிலனும் இருக்கிறான் எனக் காவற்துறை சொன்னது. இதை நீங்கள் நம்புவீர்களா என்று தெரியவில்லை... கபிலனிடம் எனது தொலைபேசி எண்ணும் முகவரியும் இருந்ததாலேயே நானும் கைது செய்யப்பட்டேன். அவற்றை 1984 என்ற புத்தகத்தின் முதற் பக்கத்தில் அவன் எழுதி வைத்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"1984 என்ற புத்தகத்தை என்னை முழுவதுமாகச் சாப்பிட வைத்தார்கள்" என்றேன். "அந்தப் புத்தகம் எத்தனை பக்கங்கள் இருக்கும்?" என அதிகாரி கேட்டபோது "ஆயிரம் பக்கங்கள் இருக்கும்" என்றேன். அந்த அதிகாரி என்னைப் பார்த்து "எனக்கு மிகவும் பிடித்தமானது அந்தப் புத்தகம். ஆனால் அந்தப் புத்தகம் 328 பக்கங்கள்தானே..." என்று சொல்லிவிட்டு என் கண்களையே பார்த்தார்.

என்னை விசாரணை செய்தபோது, அந்தப் புத்தகம் புலனாய்வு அதிகாரியின் மேசையிலிருந்தது. அந்தப் புத்தகத்தைப் பற்றித்தான் அதிகாரி நிறையக் கேட்டார். எனக்குத்தான் அதைப்பற்றி எதுவும் தெரியாதே. என்னைக் கொஞ்சநேரம் விசாரித்தவுடனேயே, அந்த அதிகாரிக்கு நானொரு 'சோத்து மாடு' என்பது புரிந்திருக்கும். "குண்டு வைக்கும் வேலையையெல்லாம், உன்னை நம்பி யாருமே கொடுக்கமாட்டார்கள்" என்று அந்த அதிகாரி சொல்லிவிட்டு, என் கன்னத்தில் ஓங்கி ஓர் அறைவிட்டார். இருபத்தியிரண்டாவது வயதில்தான் நான் முதன்முதலாக, என் தேகத்தில் ஒரு அடியைப் பெற்றுக்கொள்கிறேன். அந்த அதிகாரியின் கை மரக்கட்டை மாதிரியானது. கொஞ்ச நேரத்திற்கு எனது கண்கள் இருண்டேயிருந்தன.

என்னிடமிருந்து எந்தத் துப்பும் தேறப் போவதில்லை என்பது அந்த அதிகாரிக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. அவர் தேவையில்லாமல் தன்னுடைய நேரத்தையும் சக்தியையும் வீணாக்கி என்னைக் கைது செய்திருக்கிறார். தன்னுடைய தவறுக்கு, அந்த அதிகாரி என்மீதுதான் கோபப்பட்டார். 1984 என்ற அந்தப் புத்தகத்தை என் வாய்க்குள் திணித்து, அந்தப் புத்தகத்தை முழுவதுமாகச் சாப்பிட வேண்டுமென எனக்குக் கட்டளையிட்டார். எனக்குப் பக்கத்தில் ஒரு வாளியில் தண்ணீர் வைக்கப்பட்டது. ஒவ்வொரு பக்கமாகக் கிழித்துத் தண்ணீரில் நனைத்து, முழுப் புத்தகத்தையும் நான் சாப்பிட்டு முடித்தேன். அருமந்த நேரத்தைச் செலவு செய்து பிடித்துவந்த என்னை வெளியே விட்டுவிட அந்த அதிகாரிக்கு மனமில்லை. என்னைப் பார்த்துத் தலையை இடமும் வலமுமாக அசைத்து, கால்களால் நிலத்தில் தாளமிட்டவாறே, "எதிர்காலத்தில் நீ குண்டு வைக்கலாம்" என்றார். ஒரு பத்து வருடங்களுக்காவது என்னைச் சிறையில் வைத்துவிட அவர் திட்டம் போட்டார்.

பஞ்சாட்சரம் மாமா சும்மாயிருக்கவில்லை. தன்னுடைய எல்லா வியாபாரத் தொடர்புகளையும் உபயோகித்தும், பணத்தை வாரியிறைத்தும், புலனாய்வுத்துறையினரிடமிருந்து என்னை ஒருவாறு மீட்டுவிட்டார். அதற்குப் பின்பு ஒரு நிமிடம்கூட என்னைத் தன்னுடைய வீட்டில் வைத்திருக்க மாமா தயாராயில்லை. யுத்தம் உக்கிரமாக நடந்துகொண்டிருந்ததால், அம்மாவோ கொழும்புக்கு வரமுடியாமல் வன்னிக்குள் அடைபட்டிருந்தார். மாமா தொலைபேசியில் அம்மாவிடம் பேசியபோது, அம்மா எங்களது விவசாய நிலத்தை, மாமாவின் பெயரில் எழுதி வைப்பதாக வாக்குறுதி கொடுத்தார். மாமா இருபத்தைந்து இலட்சம் ரூபாய்களுக்கு மேல் செலவுசெய்து, என்னை இந்த நாட்டுக்கு அனுப்பிவைத்தார்.

பஞ்சாட்சரம் மாமியின் தம்பி முறையான, மாயவரின் தொலைபேசி எண்ணை நான் மனப்பாடம் செய்து வைத்திருந்தேன். அவரைத் தொடர்புகொண்டு, இந்த நகரத்துக்கு வந்து சேர்ந்தேன். மாயவரின் வீட்டில் எனக்கொரு அறை கொடுத்தார்கள். வாடகை, அது இதுவென்ற பேச்செல்லாம் இருக்கவில்லை. என்னுடைய அம்மாமீது மாயவருக்கு நல்ல மதிப்பிருந்தது. மாயவரின் மனைவியும், அவர்களது பதினேழு வயதுப் பெண்ணான நதிராவும் என்மீது மிகவும் கரிசனையாக இருந்தார்கள்.

இந்த நாட்டுக்கு வந்தும் நான் மாறவில்லை. ஒவ்வொரு சின்ன விசயத்துக்கும், அம்மாவுக்குத் தொலைபேசி செய்து ஆலோசனை கேட்பேன். ஒவ்வொரு நாளும் அம்மாவிடம் பேசுவேன். "தவம்... உனக்கு இருபத்துமூன்று வயதாகிறது, நீ சுயமாக முடிவு எடுத்துப் பழகவேண்டும் அப்பன்" என்று அம்மா சொல்லாத நாளில்லை.

இங்கே என்னுடைய அகதி விண்ணப்பத்தைச் சீக்கிரமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டுவிட்டார்கள். 'இலங்கையில் இப்போதும் யுத்தம் நடக்கிறதா என்ன?' என்ற தோரணையிலேயே விசாரணை அதிகாரி கேள்விகளைக் கேட்டார். "இராணுவம் உங்களை எப்படியெல்லாம் சித்திரவதை செய்தார்கள்?" என விசாரணை அதிகாரி கேட்டபோது, "1984 என்ற புத்தகத்தை என்னை முழுவதுமாகச் சாப்பிட வைத்தார்கள்" என்றேன். "அந்தப் புத்தகம் எத்தனை பக்கங்கள் இருக்கும்?" என அதிகாரி கேட்டபோது "ஆயிரம் பக்கங்கள் இருக்கும்" என்றேன். அந்த அதிகாரி என்னைப் பார்த்து "எனக்கு மிகவும் பிடித்தமானது அந்தப் புத்தகம். ஆனால் அந்தப் புத்தகம் 328 பக்கங்கள்தானே..." என்று சொல்லிவிட்டு என் கண்களையே பார்த்தார். "ஒவ்வொரு நாட்டைப் பொறுத்துப் பக்கங்கள் கூடிக் குறையலாம்" என்று பதிலளித்தேன். அந்தப் பதில் அதிகாரிக்கு ஏற்புடையது என்றுதான் நினைக்கிறேன். அவர் என்னை அகதியாக அங்கீகரித்துவிட்டார்.

மாயவரின் உதவியால், ஒரு வாரப் பத்திரிகை நிறுவனத்தின் இயந்திரப் பகுதியில் எனக்கு வேலை கிடைத்தது. அது இரவு வேலை என்பதால், பகலில் மொழி படிக்கும் வகுப்புக்குச் சென்றேன். சீக்கிரத்திலேயே மொழி எனக்குப் பிடிபட்டது. ஆங்கிலத்தைச் சற்றுப் பிழையாகப் பேசினால், அதுதான் இந்த மொழி. அம்மாவுக்கு நான் ஒருபோதுமே பணம் அனுப்பியதில்லை. கேட்டபோதெல்லாம் "எனக்குப் பணம் காசு வேண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவம்... நீ பத்திரமாக இருந்தால் போதும். மாயவர் குடும்பத்தை அனுசரித்து நட. அவர்களுடனேயே இரு" என்றார் அம்மா. அவர் சொன்னபடியே இரண்டு வருடங்கள் இருந்தேன். எனக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டும் என்ற ஆசை அம்மாவைப் பிடித்துக்கொண்டது. அதைப் பற்றி என்னிடம் சாடைமாடையாகக் கதைத்தார். மாயவரின் பெண்ணான நதிராவும் இருபது வயதை நெருங்கியிருந்தாள். அவளையே எனக்குப் பேசி முடிக்க வேண்டுமென்பது அம்மாவின் விருப்பம்.

2009ம் ஆண்டு தொடக்கத்தில் வன்னியில் சண்டை கடுமையாகியபோது, அம்மாவுடனான என்னுடைய தொடர்புகள் அறுந்துபோயின. தொலைபேசியில் அம்மாவைத் தொடர்புகொள்ள முடியாமலிருந்தது. ஒவ்வொரு நாளும் பஞ்சாட்சரம் மாமாவைத் தொலைபேசியில் அழைத்து, அம்மாவைப் பற்றி விசாரிப்பேன். அம்மா இப்போது இராமநாதபுரத்தில் இருக்கிறார், இப்போது விசுவமடுவில் இருக்கிறார் என அவ்வப்போது மாமாவிடமிருந்து தகவல்கள் கிடைத்தன. ஆனால் அம்மாவுடன் பேச முடியவில்லை. கடைசியில் ஏப்ரல் மாதத்தில் மாயவரின் வீட்டுக்கு மாமா தொலைபேசியில் அழைத்தார். மாயவர் குழறி அழுதவாறே என்னிடம் தகவல் சொன்னார்.

அம்மா, உழவு இயந்திரத்தில் வீட்டுப் பொருட்களையும், சில அயலவர்களையும் ஏற்றிக்கொண்டு, சில மாதங்களாகத் தொடர்ச்சியாக இடம் பெயர்ந்தவாறே இருந்திருக்கிறார். மூன்று நாட்களுக்கு முன்பு, வீதியில் சென்றுகொண்டிருந்த உழவு இயந்திரத்தின்மீது விமானக் குண்டுவீச்சு நடந்திருக்கிறது. உழவு இயந்திரத்தைச் செலுத்திக்கொண்டிருந்த அம்மா, சாரதி இருக்கையில் இருந்தவாறே ஒரே விநாடியில் முழுவதுமாக எரிந்து போயிருக்கிறார்.

நதிரா என்னருகே வந்து, எனது தோளை அணைத்துக் கொண்டாள். நீங்கள் நம்புவீர்களோ தெரியாது... எனது கண்களிலிருந்து ஒரு சொட்டு நீர்கூட விழவில்லை. 'அம்மா

> நாளுக்கு நாள் போராட்டம் வலுத்துக்கொண்டே வந்தது. ஏழாயிரம், எட்டாயிரம் என்ற எண்ணிக்கையில் தமிழ்ச் சனங்கள் தெருவில் இறங்கியபோது, இந்தச் சிறிய நகரம் சற்றுத் தடுமாறியது. இந்த நாட்டின் பல்வேறு நகரங்களிலும் தமிழர்கள் தெருவில் இறங்கினார்கள்.

இனி இல்லை! இனி நான்தான் சுயமாக முடிவுகளை எடுக்கவேண்டும்' என்ற சிந்தனைதான் எனக்குத் திரும்பத் திரும்ப வந்து என் மண்டையை அடைத்துப்போட்டது. நான்கு நாட்கள் நான் எனது அறையிலிருந்து வெளியே வரவேயில்லை. மாயவர் குடும்பம் என்னைத் தேற்றுவதற்கு வழி தெரியாமல் தவித்தார்கள். பலர் மாயவர் வீட்டுக்கு வந்து துக்கம் விசாரித்துப் போனார்கள். நான் அறையைவிட்டு வெளியே வரவேயில்லை.

ஒரு வாரத்திற்குப் பிறகு வேலைக்குப் போனேன். பத்திரிகையின் முதன்மை ஆசிரியரான அண்ட்ரியாஸ் ஸ்வாட், இயந்திரப் பிரிவுக்கு வந்து என்னிடம் துக்கம் விசாரித்தார். ஆனால் அவருக்கும் இலங்கையில் ஒரு யுத்தம் நடந்துகொண்டிருப்பதே தெரியாமலிருந்தது. அதற்காக அவர் வருந்தத்தான் செய்தார் என்றாலும், எனக்குள் எழுந்த கோபத்தை என்னால் அடக்க முடியவில்லை. "உங்களது நாட்டில் நடப்பவை குறித்துச் சரியான செய்திகள் எங்களுக்குக் கிடைப்பதில்லை" என்றார் அண்ட்ரியாஸ் ஸ்வாட்.

மே மாதம் தொடங்கியபோது, வன்னியில் யுத்தம் உச்சமடைந்தது. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கொல்லப்படுவதாக அய்க்கிய நாடுகள் சபை ஒருவழியாக ஒப்புக்கொண்டது. அய்ரோப்பிய ஊடகங்களும் போனால் போகிறதென்று, இலங்கைக்காகச் சில விநாடிகளைச் செலவழித்தார்கள். நான் வேலைக்குப் போவதை நிறுத்தியிருந்தேன்.

இந்த நகரத்தில், ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் கூடி ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். அய்ரோப்பிய யூனியனும், அய்.நா.சபையும் முன்வந்து இலங்கையில் நடக்கும் இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனக் கோரிக்கை வைத்துப் பல போராட்டங்கள் நடந்தன. மாயவர் இந்தப் போராட்டங்களை ஒருங்கிணைப்பதில் முக்கியமானவராயிருந்தார். அவரது குடும்பத்துடன் ஒவ்வொரு நாளும் புறப்பட்டுச் சென்று, நானும் போராட்டங்களில் கலந்துகொள்வேன்.

நாளுக்கு நாள் போராட்டம் வலுத்துக்கொண்டே வந்தது. ஏழாயிரம், எட்டாயிரம் என்ற எண்ணிக்கையில் தமிழ்ச் சனங்கள் தெருவில் இறங்கியபோது, இந்தச் சிறிய நகரம் சற்றுத் தடுமாறியது. இந்த நாட்டின் பல்வேறு நகரங்களிலும் தமிழர்கள் தெருவில் இறங்கினார்கள். எங்களுடைய குரல் கேட்கப்படும் என்றுதான் நினைத்தேன். ஆனால் எங்களது கோரிக்கையை இந்த நாடோ, இந்த நகரத்தின் முதல்வரோ காதுகொடுத்துக் கேட்பதாயில்லை. மாறாக அவர்கள் போராட்டக்காரர்கள்மீது கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தார்கள். போராட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்க மறுத்தார்கள். வன்னியிலோ சாவு அதிகரித்துக்கொண்டேயிருந்தது.

இதற்குள் போராட்டம் செய்தவர்களுக்குள்ளும் சில பிளவுகள் ஏற்பட்டன. போராட்டத்தில் அந்தக் கொடியை ஏற்றவேண்டும், கூடாது, இந்தத் தலைவரின் படம் வைக்க வேண்டும், வேண்டாம் என்றெல்லாம் பிரச்சினைகள் வலுத்தன. போராட்டத்துக்கு வருபவர்களின் தொகையும் மெல்ல மெல்லக் குறைந்துகொண்டே வந்தது. ஆனால், நானும் மாயவர் குடும்பமும் தொடர்ந்தும் போராட்டத்துக்குப் போய்க்கொண்டிருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்குத் தெருக்களிலும் சதுக்கங்களிலும் போராட்டத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டபோது, நாங்கள் இந்தப் பூங்காவில் கூடி ஆர்ப்பாட்டங்களை நடத்தினோம். பூங்காவில் நாங்கள் கூடுவதை அரசாங்கத்தால் உடனடியாகத் தடுக்க முடியவில்லை. ஆனால் பூங்கா முழுவதும் காவற்துறையினர் குவிக்கப்பட்டனர். இரண்டு போராட்டக்காரர்களுக்கு நடுவே ஒரு பொலிஸ்காரன் நின்றான். கண்ணீர் புகைக் குண்டுகள், தண்ணீர் பீச்சிக் கூட்டத்தைக் கலைக்கும் வண்டிகள் எல்லாம் பூங்காவுக்குள் கொண்டுவரப்பட்டன. வரும் சனிக்கிழமை தொடக்கம் ஒரு மாதத்திற்கு பூங்கா மூடப்படும் என்று நகரசபை அறிவித்தது.

இப்போது நான் செய்யப் போவதைக் குறித்து ஆலோசனை கேட்க அம்மா இல்லை. என் வாழ்க்கையில் நானாகச் சிந்தித்து, சுயமாக முதற்தடவையாக ஒரு முடிவடுத்தேன். அன்று மே மாதம் பதினான்காம் தேதி வியாழக்கிழமை. காலை பத்தரை மணியளவில் பூங்காவில் முப்பது போராட்டக்காரர்கள் கூடியிருந்தோம். மதியத்திற்கு மேல்தான் நிறையப்பேர் வருவார்கள். மாலை வேளையில் எப்படியும் ஆயிரத்துக்கும் குறையாத மக்களிருப்பார்கள். இந்தச் சிலைகளின் கீழே கூடிநின்று இருவர் மூவராகப் பேசிக்கொண்டிருந்தார்கள். மாயவர் குடும்பம், இங்கே... குழந்தை பெறும் பெண்ணின் சிலையருகே நின்றுகொண்டிருந்தது. நான், இதோ நீங்கள் உட்கார்ந்திருக்கும் இடத்தில் அமர்ந்திருந்தேன். ஒவ்வொரு சிலையைச் சுற்றியும் பத்துப் பொலிஸ்காரர்கள் நின்றிருந்தார்கள்.

சரியாகப் பதினொரு மணிக்கு, நான் அதோ... அந்த மையத்தில் போய் நின்றுகொண்டேன். எனது கையில் கறுப்புநிறத்தில் வெந்நீர் குடுவையிருந்தது. அந்தக் குடுவைக்குள் ஒரு லீட்டர் பெட்ரோலை நான் நிறைத்து வைத்திருந்தேன். கையில் லைட்டரைத் தயாராக மறைத்து வைத்துக்கொண்டே, குடுவையைத் திறந்து எனது தலையிலிருந்து இடுப்புவரை பெட்ரோலை வேகமாக விசிறிவிட்டு, எனது தலையில் தீ வைத்துக்கொண்டேன். அம்மாவை நினைத்துக் கண்களை மூடிக்கொண்டு அசையாமல் நின்றேன்.

சனங்கள் கூக்குரலிடுவதும், காவற்துறையினர் சத்தமெழுப்புவதும் காதில் கேட்டது. சில விநாடிகளிலியே அந்தக் குரல்கள் தேய்ந்தன. அப்போது எனது உடல் வேதனைப்பட்டது எனச் சொல்லமுடியாது. உறைபனி நிலைக்குள் நான் போவதாகத்தான் உணர்ந்தேன். ஆனால் என்னையறியாமலேயே எனது கால்கள் ஓடத் தொடங்கின. என்மீது தண்ணீர் பாய்ச்சப்படுவதை என் கால்கள்தான் முதலில் உணர்ந்தன.

இரண்டு மாதங்கள் நான் மருத்துவமனையில் இருந்தேன். இந்த நகரத்திலிருக்கும் தமிழ் மக்களில் முக்கால்வாசிப் பேர்களாவது மருத்துவமனைக்கு வந்து என்னைப் பார்த்துச் சென்றார்கள். வெள்ளைக்காரர்கள் கைகளில் பூங்கொத்துகளோடு வந்து என்னைப் பார்த்தார்கள். மருத்துவமனை அறை எப்போதும் பூக்களால் நிரம்பியேயிருந்தது. நான் வேலை செய்த பத்திரிகை நிறுவனத்தின் முதன்மை ஆசிரியர் அண்ட்ரியாஸ் ஸ்வாட் என்னை வந்து பார்த்தார். அந்த வாரம் வெளியான

*எனது உடம்பில் பெரும்பகுதி தீயால் கருகிவிட்டது. வலது கையில் எலும்பே எரிந்து, இந்தக் கை செயலற்றுப் போய்விட்டது. என்னை முதன்முதலாகக் கண்ணாடியில் பார்த்தபோது, அம்மாவைத்தான் நினைத்துக்கொண்டேன். அம்மாவும் இப்படித்தானே எரிந்திருப்பார்.*

இதழை என்னிடம் காட்டினார். அட்டையில், நான் எரிந்துகொண்டிருக்கும் படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. உள்ளே நான்கு பக்கங்களில் 'இலங்கை எரிகிறது' என்ற தலைப்பில் விரிவாக எழுதப்பட்டிருந்தது. ஆசிரியர் அந்த இதழை எனது தலைமாட்டில் வைத்துவிட்டு, எனது கண்களையே பார்த்துக்கொண்டு நின்றார். "இப்போதுதான் எங்களுக்குச் சரியான செய்தி கிடைத்திருக்கிறது" என்று அண்ட்ரியாஸ் ஸ்வாட் சொன்னபோது, அவரது சதுர வடிவ முகம் கோணிக்கொண்டு, அவரது கன்ன மடிப்புகளுக்குள் நீர் வழிந்தது.

எனது உடம்பில் பெரும்பகுதி தீயால் கருகிவிட்டது. வலது கையில் எலும்பே எரிந்து, இந்தக் கை செயலற்றுப் போய்விட்டது. என்னை முதன்முதலாகக் கண்ணாடியில் பார்த்தபோது, அம்மாவைத்தான் நினைத்துக்கொண்டேன். அம்மாவும் இப்படித்தானே எரிந்திருப்பார்.

முதலில் சில வாரங்கள் சக்கர நாற்காலியில்தான் நடமாடினேன். ஒருநாள் மாயவர் என்னிடம் தயங்கித் தயங்கிப் பேச்சை ஆரம்பித்தார். சக்கர நாற்காலியோடு நடமாடுவதற்குத் தனது வீடு வசதியாக இருக்காது என்றும், நல்லதொரு இடத்தை எனக்குத் தேடித் தருவதாகவும் சொன்னார். அம்மா, மாயவர் குடும்பத்தைவிட்டுப் போகக்கூடாது என எனக்குச் சொல்லியிருந்தார். ஆனால் கரிக்கட்டையாக மாறியிருக்கும் என்னை வைத்திருப்பது அவர்களுக்கும் துன்பம்தானே. மாயவரின் உதவியுடன் ஊனமுற்றவர்களுக்கான அரசாங்க விடுதியில் இடம் பிடித்துக்கொண்டேன். அதுவும் வசதியான இடம்தான். ஊனமுற்றவர்களுக்கான உதவிப் பணமும் மாதாமாதம் எனக்குக் கிடைக்கிறது.

சில மாதங்களிலேயே நதிராவுக்குக் கல்யாணம் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். எனக்கு அழைப்புக்கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கொடுக்கவில்லை. மெல்ல மெல்ல எல்லோரும் என்னை மறந்துவிட்டார்கள். சனங்களுக்கு என்மேல் அன்போ, அனுதாபமோ இல்லையென்று சொல்ல மாட்டேன். ஆனால் அவர்கள் எப்போதுமே என்னையே கவனித்துக்கொண்டிருக்க முடியுமா என்ன! மருத்துவ மனைக்கு வந்தார்கள், பூக்கள் கொடுத்தார்கள், போய் விட்டார்கள். அதுவே பெரிய விசயமில்லையா.

ஆனால், சிலர் வேறுவிதமாகப் பேசிக்கொள்கிறார்கள் எனவும் கேள்விப்பட்டேன். நதிராவை எனக்குக் கட்டித் தரமாட்டேனென்று மாயவர் சொல்லிவிட்டதாலேயே நான் என்னைக் கொளுத்திக்கொண்டேன் எனச் சிலர் பேசினார்கள். கடன் தொல்லை, மனநிலை சரியில்லாதவன் என்றுகூடச் சிலர் பேசிக்கொள்வதாக அறிந்தேன். ஏதோவொரு அமைப்பு எனது மூளையைக் கழுவிக் கொளுத்திக்கொள்ள வைத்தது என்று சில இணையத் தளங்களில் எழுதினார்கள். என்னால் என்ன செய்யமுடியும் சொல்லுங்கள்! உடம்பு வலுவாக இருந்தால்கூட இவர்களோடு சண்டைக்குப் போக முடியும். நானோ கரிக்கட்டை.

அம்மா உயிரோடு இருக்கும்போது எனக்குக் கல்யாணம் செய்துவைக்க ஆசைப்பட்டார். எனக்கு இப்போது முப்பத்தாறு வயதாகிறது. அருகிலிருந்து பேசவாவது ஒருவர் வேண்டும்தானே. சிலநேரங்களில் ஊருக்குத் திரும்பிப் போய்விடலாமா என்றும் நினைப்பேன். அங்கே எனக்கென யாராவது இருப்பார்களல்லவா! ஆனால், நான் என்னைக் கொளுத்திக்கொண்ட செய்தி, அப்போது பத்திரிகைகளில் வந்திருந்ததால், இலங்கை அரசாங்கத்திடம் என்னைப் பற்றிய விபரங்கள் இருக்கும் என்கிறார் பஞ்சாட்சரம் மாமா. அதுதான் அச்சமாயிருக்கிறது. என்னால் பேச முடிகிறதே தவிர, தாடை எலும்புகள் சிதைந்திருப்பதால் ஒரு துண்டு பாணுக்கு அதிகமாக மென்று சாப்பிட என்னால் முடியாது. ஆயிரம் பக்கப் புத்தகத்தை நான் எப்படிச் சாப்பிட முடியும்!

என்னுடைய முகத்தைப் பார்த்துப் பேசுவது எவருக்குமே சிரமமானது என்பது எனக்கு நன்றாகவே தெரியும். நீங்கள்கூட எனது முகத்தைப் பார்த்தவுடனேயே உங்களது கண்களை மூடிக்கொண்டீர்களல்லவா! ஒவ்வொரு நாளும் இந்தப் பூங்காவில் வந்து உட்கார்ந்துகொள்கிறேன். உங்களைப் போலவே எவ்வளவோ தூரங்களிலிருந்து, எத்தனையோ நாடுகளிலிருந்து விதவிதமான மக்கள் வந்து இந்தச் சிலைகளைப் பார்த்துச் செல்கிறார்கள். நான் அவர்களைப் பார்த்துக்கொண்டிருப்பேன். அவர்களில் சிலர் என்னுடைய அம்மாவைப் போல இருக்கிறார்கள், சிலர் நதிராவைப் போல இருக்கிறார்கள், சிலர் கபிலனைப் போல இருக்கிறார்கள். என்னுடைய அதிர்ஷ்டம், இன்று பேசுவதற்கு நீங்கள் கிடைத்தீர்கள்.

### 3

தவபாலன் அதிகமாகப் பேசிவிட்டதால், அவருக்கு மூச்சிரைத்தது. அவர் பேசும்போது கீழ் வாயை அசைக்காமலேயே பேச வேண்டுமாம். அதை அசைத்தால் பேச்சுக் குழம்பி ஒலிக்குமாம். தவபாலன் தனது காலடியில் வைத்திருந்த வெந்நீர் குடுவையை எடுத்து, முகத்தை மூடியிருந்த துணிக்குள் நுழைத்து, தலையை மெதுவாகப் பின்னே சாய்த்து நீண்ட நேரமாக மெதுமெதுவாக வெந்நீர் குடித்தார். நான் அங்கிருந்த நிர்வாணச் சிலைகளின்மீது பார்வையை அலையவிட்டுக் கொண்டிருந்தேன்.

இந்த மனிதர், அன்று இங்கேயே எரிந்து சாம்பலாகியிருந்தால், தமிழ் மக்கள் இந்தப் பூங்காவை ‘அம்மணப் பூங்கா’ என அழைக்கும் பழக்கம் அப்போதே ஒழிந்திருக்கும் என்று நினைத்துக்கொண்டேன்.

⁂

## வாழும் தமிழ்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலனிய யாழ்ப்பாணம்: ஓர் ஆங்கில ஆண்டகையின் அவதானிப்புகள்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**

முதலில் முதலில் யார் இந்த ஆங்கில ஆண்டகை என்று சொல்லிவிடுகிறேன். அவரின் பெயர் லேனார்ட் வூல்ஃப் (Leonard Woolf). ஒரு பிரபல பெண்ணுக்குப் பின் ஒரு ஆண் பதுங்கிக்கொண்டிருப்பார். ஆங்கில இலக்கியம் படிப்பவர்களுக்குக் கட்டாயமாக வேர்ஜினியா வூல்ஃப் (Virginia Woolf) இன் ஆக்கங்கள் தெரிந்திருக்கலாம். அவரின் கணவர்தான் இந்த லேனார்ட் வூல்ஃப். இவர் ஆங்கில குடிமுறை அரசுப் பணியாளர் (English Civil Servant). இவர் யாழ்ப்பாணத்தில் இரண்டரை ஆண்டுகள் பணிபுரிந்தார். மற்றைய நாட்கள் அம்பாந்தோட்டையிலும், கண்டியிலும் கழிந்தன. அந்த நாளைய நினைவுகளை Growing (1961) என்ற தன்வரலாற்றில் பதிவு செய்திருக்கிறார். இவரின் எழுத்துக்களைப் படித்தால் யாழ்ப்பாணத்தில் இவர் இருந்த அந்த நாட்கள் இவருக்கும் இவரின் கண்காணிப்புக்குள் காலனியப்படுத்தப்பட்டவர்களுக்கும் அன்பு நிறைந்த நாட்கள் அல்ல. வேற்றுமையும் வெறுப்பும் இருதரப்பிலும் காணப்பட்டது. இதுபற்றிப் பிறகு.

24 வயதுப் பொடியனாக ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாக அதிகாரம் செலுத்த இன்னும் சிறீலங்கா என்று பெயர் மாற்றம் செய்யாத இலங்கைக்கு 1904 இல் வூல்ஃப் போனார். இவருடன் சென்றவை: இவரது ஓர் உடுப்புப் பெட்டி, வால்டயரின் 90 தொகுப்புக்கள், மற்றும் சார்ல்ஸ் என்ற அவரின் செல்ல நாய்க்குட்டி. ஆறு வருடம் கழித்து அவர் இலங்கை சேவை முடித்து இங்கிலாந்து வந்தபோது இந்த நாய்க்குட்டி திரும்பி வரவில்லை. ஆனால் வால்டயரின் நூல்கள் பத்திரமாக வந்தடைந்தன.

யாழ்ப்பாணத்திற்கு புகையிரத வண்டி (ஆம், அந்த நாட்களில் புகையிரத வண்டிதான்) 1905 இல் வந்தது என்று பாடப்புத்தகங்களில் படித்தாலும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வரை முழுமையாக பாதை வூல்ஃப் போன சமயத்தில் அமைக்கப்படவில்லை. ஜனவரி 1, 1905 அன்று கொழும்பிலிருந்து புறப்பட்டு அனுராதபுரம் வந்தார். அங்கே ஆங்கில ஆட்சியாளரின் மனையில் தங்கிவிட்டு, மறுபடியும் செவ்வாய் 3 ஆம் திகதி இரவு 9 மணிக்கு மாட்டுவண்டியில் பயணம் செய்து, வியாழன் 5 ஆம் திகதி காலை 9 மனிக்கு ஆனையிறவுக்கு வந்தார். இன்று இரண்டரை மணியில் செய்யும் பிரயாணம் அவருக்கு 40 மணித்தியாலங்கள் எடுத்தது என்று எழுதியிருக்கிறார். இந்த மாட்டுவண்டியில்தான் தபாலும் வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த பிரயாணங்களுடன் ஒப்பிடும்போது வூல்ஃப் பயணம் ஏதோ யப்பானிய புல்லட் ரயில் வேகத்தில் போனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் தெரிகிறது. புகையிரதம் யாழ்ப்பாணம் வர முன் மத பரப்பாளத் தம்பதிகளான Miron and Harriet Winslow இன் நினைவேட்டில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போக 13 நாட்கள் எடுத்தன என்று அறியவருகிறது.

வூல்ஃப் பார்த்த யாழ்ப்பாணம் இன்னும் ராஜபக்ச குடும்பத்தினரால் சிங்களமயமாக்கப்படாத பூமி. மிக முக்கியமாக இராணுவமே இல்லாத தேசம். இராணுவத்தினர் கொழும்பிலும், கண்டியிலுந்தான் இருந்தார்கள் என்று எழுதுகிறார். அந்த நாட்களில் தமிழரின் தொகை கிட்டத்தட்ட 296,805. இவர்களில் சிங்களவர்கள் 266. இன்றைய மக்கள்தொகையைத் தரவிரும்பவில்லை. உங்களுக்கு கவலை தரும். அத்துடன் உங்கள் இரத்த அழுத்தமும் அதிகரிக்கும். இவரின் குறிப்புகளின்படி அந்த நாட்களில் யாழ்ப்பாணத்திலிருந்த ஆங்கில ஆட்சியாளரின் தொகை கிட்டத்தட்ட பன்னிரண்டு. கிறிஸ்தவ மத பரப்பாளர்களின் எண்ணிக்கை பத்து. வூல்ஃபின் விவரிப்புப்படி இவர்கள் யாழ்ப்பாணத்தவர்களை ஏளனத்துடனும் எரிச்சலுடனும் பார்த்தார்கள்.

இவர் பார்வையில் இலங்கையர்கள் தாமஸ் ஹார்டியின் நாவல்களில் வரும் பாத்திரங்கள் போல் காணப்பட்டார்கள். தியக்கமும் மயக்கமுமானவர்கள். விட்ட வழி என்றிருக்கும் மனப்பான்மை உள்ளவர்கள். கீழைத்தேய எண்ணத்தைப் பிரதிபலிப்பதுபோல் இவருக்குப் பிடித்தது இலங்கையினரின் மண்தன்மையான வாழ்க்கை.

இவருக்கு யாழ்ப்பாணம் ஒரு மகிமைப்படுத்தப்பட்ட கிராமமாகவே தென்பட்டது. கிடுகு வேலிகள். மிக ஒடுக்கமான ஒழுங்கைகள். அந்த நாட்களில் சில வீடுகளைவிட பெரும்பான்மையாவை குடிசைகள்தான். இவருடைய நாட்களில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் இரண்டு அறைகள் மட்டுந்தான். அப்போதைய சிற்ப சாஸ்திர சூழ்நிலையில் இது தாஜ்மகாலுக்குச் சமன். சுத்தமான கட்டிடம் அல்ல. ஊத்தையும், இரத்தமும் காணப்பட்ட இடமாகத்தான் இவருக்குப் பட்டது. இவருக்கு மலேரியாக் காய்ச்சல் வந்தபோது இவர் இங்கே சிகிச்சை பெறவில்லை. மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் வைத்தியசாலையில்தான் சேர்க்கப்பட்டார். இவருக்கு வைத்தியம் பார்த்த தாதிப்பெண் ஆறு அடி தள்ளியே மிகக் கூச்சத்துடன் தன் பணிகளைப் பார்த்தார் என்று எழுதியிருந்தார். கடற்புலிகள் இவரின் கனாவில்கூட தோன்றியிருக்கமாட்டார்கள்.

யாழ்ப்பாணத் தமிழர் பற்றி இவர் பெரிதாகக் கருதவில்லை. தமிழர்கள் எப்போதுமே சண்டைக்காரர்கள், சும்மா குற்றம் சாட்டுகிறவர்கள். தனிக்குழுக்களாகச் செயற்படுகிறவர்கள். தமிழருடன் ஒப்பிடும்போது அராபிய முத்து வியாபாரிகள் முதல்தரமானவர்கள். முகாமைத்துவமானவர்கள் என்றார். சிங்களவரின் எண்ணம் தொய்வானதும் நொய்வானதும் என்று சொன்னார். ஆனால் தமிழர்கள் எப்படிச் சிந்திக்கிறார்கள் என்று சொல்லவில்லை.

அத்துடன் ஈழ சமுதாயத்தின் அசைவியக்கமான சைவம் இவருக்கு முற்றாகவே பிடிக்கவில்லை. பொதுமக்களின் ஆன்மிக சுவையின் வெளிப்பாடுகளான காவடி எடுத்தல், தேரோட்டம், சூலம் குத்துதல் இவரின் நவீனத்துவ கடுந்தூய்மைப் பார்வையில் அருவருப்பாயிருந்தன. தமிழர் வாழ்வின் மெய்யியல் தளமான சைவ சித்தாந்தத்தை இவருக்கு சேர் கந்தையா வைத்தியநாதன் பொறுமையாக விளக்கிக் கூறியபோதும் இது வறட்டுக் கோட்பாடு என்று ஒதுக்கிவிட்டார்.

யாழ்ப்பாண அடையாளங்களில் ஒன்றான நல்லூர் கந்தசாமி கோயில் பற்றி குறிப்புகள் இல்லை. ஆனால் கண்டி தலதா மளிகையில் பௌத்த சடங்குகளில் மணிகணக்கில் லயித்துப்போய் இருந்திருக்கிறார். இவருக்கு பௌத்த மதம் சாதுவான, சாந்தமான ஒன்றாகப் பட்டது. இவர் கொண்டுபோன வால்டயரின் தொகுப்புகளை வாசிக்காமல், நாவலரின் சமகாலத்தவரான அநகாரிக தர்மபாலாவின் எழுத்துக்களை வாசித்திருந்தால் பௌத்தத்தின் உக்கிர சிங்கள தேசியவாதத்தின் இருண்மையான போக்குத் தெரிந்திருக்கும். துட்ட கைமுனு எல்லாளன் தொன்மத்தை தமிழ்சிங்கள இன மோதலாக மீட்டுருவாக்கம் செய்த பெருந்தகை இந்த தர்மபாலா. இன்னும் ஒன்று. ஞானசார தேரர் இன்னும் பிறக்கவில்லை.

இரண்டு தடவைகள் யாழ்ப்பாணவாசிகள் வூல்ஃப் பற்றி மேலிடத்துக்கு முறைப்பாடு கொடுத்திருந்தார்கள். இதைச் செய்தது யாழ்ப்பாணத் தமிழ் சங்கம். கச்சேரி விறாந்தையில் துப்பாதீர்கள் என்று ஒரு பலகையில் எழுதிவைத்தார். உங்களுக்கே தெரியும் துப்பாதீர் என்று அறிவித்திருந்தால் மானமுள்ள எந்த யாழ்ப்பாணத்தானும் கட்டாயம் துப்பத்தான் செய்வான். இது தமிழரின் மரபணுவிலிருக்கிறது. துப்பியவரைத் துடைக்கும்படி சொன்னார். துப்பியவர் வூல்ஃப் பற்றி புகார் கொடுத்தார். மற்றது சந்திரசேகரம் என்ற அப்புக்காத்தின் முகத்தில் சவுக்கினால் அடித்தது. இரண்டு தடவையும் ஆங்கில ஆட்சியாளர் வூல்ஃபின் விளக்கமே சரியானது என்று ஏற்றுக்கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் இரண்டு காரியங்களுக்குப் பிரபலமானது. ஒன்று பனங்கள்ளு, மற்றது அதன் பாடசாலைகள். மேற்கத்தைய வைன் அருந்தியது பற்றி எழுதியிருந்தார். இவர் பனங்கள்ளு குடித்ததாகத் தகவல் இல்லை. இவரின் வசிப்பிடம் யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டையில் இருந்தது. இவர் வேலை பார்த்த கச்சேரி பழைய பூங்காவிலிருந்தது. துவிசக்கர வண்டியில்தான் போய்வந்தார். எப்படி அவர் போகும் வழியிலிருந்த மத்தியக் கல்லூரியும், தூய யோவான் கல்லூரியும் இவரின் பார்வைக்குத் தென்படவில்லை. துடுப்பாட்டப் பிரியர்களுக்கு மட்டும்: வடக்கின் மோதல் என்று அழைக்கப்படும் மத்தியக் கல்லூரி, பரிசுத்த யோவன் கிரிக்கட் போட்டி 1904 ல்தான் தொடக்கப்பட்டது.

பேரரசுகளின் ஆட்சி என்றால் யாணை ஊர்வலங்களும், அரண்மனை தர்பார்களும், இராணுவ அணிவகுப்புகளும் என்று வளர்ந்தவர்களுக்கு வூல்ஃப் விவரிக்கும் இலங்கை சுத்தமாக வித்தியாசமானது. ஒரு மெல்லிய ஆனால் அறிவுரையான எடுத்துக்காட்டு. பருத்தித்துறை போனது பற்றி எழுதியிருந்தார். ஆட்சியாளருக்குரிய அட்டகாசமான அறிகுறிகளுடன் போகவில்லை. அந்த நாட்களில் தார் தெருக்களே இல்லை. மண்தெருவில் இவரே துவிசக்கர வண்டியில் போனார். உச்சிபிளக்கும் வடமாராட்சி வெயிலை எப்படித் தாங்கினார் என்று எழுதவில்லை. சில இடங்களில் வண்டியைத் தள்ளிக்கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவேண்டியிருந்தது. எனக்கு ஒரு வருத்தம். அந்த ஊரின் அடையாளச் சின்னமான தட்டை வடையை அவர் சாப்பிட்டதாகத் தெரியவில்லை. இங்கே தேவையில்லாத ஒரு விசயத்தைச் சொல்லிவிடுகிறேன். கொமடோர் அஜித் போயகொட பணயக்கைதியாக புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தபோது இவருக்கு பருத்தித்துறை வடையை அறிமுகப்படுத்தியிருந்தார்கள். இவருக்கு அதன் ருசி பிடித்துவிட்டது. விடுலையாகி சில வருடங்களுக்குப் பிறகு யாழ்ப்பாணம் போனபோது அவர் கேட்டது: "பருத்தித்துறை வடை கிடைக்குமா?"

அந்த நாட்களில் வரிப்பந்தாட்டம் (Tennis), குழிப்பந்தாட்டம் (Golf) இருந்திருக்கிறது. இவற்றை ஆங்கிலேயர்களே விளையாடினார்கள். ஆங்கிலேயர்களின் இந்த விளையாட்டுச் சங்கங்களில் ஒரு யாழ்வாசியும் அனுமதிக்கப்படவில்லை. பரிசாரகராக மட்டும் வேலை செய்தார்கள். அவர்களில் ஒருவரின் பெயர் சின்னத்தம்பி. அதுசரி குழிப்பந்தாட்டம் விளையாட பசுந்தரை வேண்டும். வறண்ட நாடான யாழ்ப்பாணத்தில் இது எப்படி முடிந்தது என்று தெரியவில்லை.

காலனிய யாழ்ப்பாணச் சாதி அமைப்புகள் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள் இடச்சு (ஒல்லாந்த) ஆட்சியாவணங்களைப் படிப்பது நல்லது. வூல்ஃப் எழுத்திலிருந்து அதிகம் அறியமுடியாது. ஆனால் இலங்கையிலிருந்த ஆங்கிலேயரைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். இது ஆங்கிலேயருக்குச் சுகம் தரும் வாசிப்பல்ல. தமிழர் சமுதாயத்தைப் பதனபடுத்தும் நான்கு சாதிகளுக்கு ஒப்ப இலங்கைவாழ் ஆங்கிலேயர்களிடையே ஒரு மேலிட வரிசை இருந்தது என்கிறார். உச்சியில் குடிமுறை ஆட்சியாளர்கள், அடுத்து இராணுவத்தினர். பிறகு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள். கடைசியாக வணிகர்கள். சமூகவிலகல் என்ற வார்த்தைகள் வருமுன்னமே இந்த நான்கு பிரிவினரும் ஒருவருக்கொருவர் தொடர்பில்லாமல் ஒதுங்கியே வாழ்ந்தார்கள். வூல்ஃப்க்கு ஓயாத சந்தேகம் ஒன்று: இந்த ஆங்கிலேயர்கள் தங்களை கிப்ளிங்கின் கதைகளில் வரும் பாத்திரங்களாக நினைத்து நடந்து கொள்ளுகிறார்களா அல்லது இவர்களைப் பார்த்துத்தான் கிப்ளிங் தன் கதைமாந்தர்களை உருவாக்கினாரா? இங்கிலாந்தில் வைத்து தமக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதியைவிட மிக அதிகமாகவே காலனிய ஆங்கிலேயர்கள் இங்குவந்து தங்களைக் காட்டிக்கொள்ளுகிறார்கள் என்பது இவரது கணிப்பு.

இதையும் சொல்லியாக வேண்டும்: வூல்ஃபுடைய தன்வரலாற்றில் வில்லியம் துவைனம் துறைபற்றிய குறிப்பு ஒன்று உண்டு. இந்த துவைனம் நாவலருக்குக் கரைச்சல் கொடுத்தவர். வடக்கின் ராஜாபோல் நடந்து கொண்டவர். யாழ் தீவகத்தில் பஞ்சமும், நோயும் வந்தபோது நிவாரண முயற்சிகளில் இவர் ஆர்வம் காட்டவில்லை. அத்துடன் தடையாகவுமிருந்தார். அதுமட்டுமல்ல இலங்கையின் ஆளுநர் யாழ்ப்பாணம் வந்தபோது தந்திரமாக நாவலரை அவர் சந்திக்கமுடியாமல் செய்தார். நாவலர் இயல்பாகவே சண்டைக்காரர். துவைனம்மீது புகார் கொடுத்தார். இவர் யாழ்ப்பாணத்துக்கு புகையிரதம் வர தடையாக இருந்தவர். யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதம் விடுவது சந்திரனுக்குப் புகையிரதம் விடுவதுபோல் என்றார். அவரது கடைசி நாட்களை யாழ்ப்பாணத்திலேயே கழித்தார். வூல்ஃப்க்கும் துவைனத்தைப் பிடிக்கவில்லை. அவரின் அபிப்பிராயம்: இவர் ஆணவம் பிடித்தவர்!

வூல்ஃப் இலங்கையைப் பின்புலமாகக்கொண்டு ஒரு நாவல் எழுதியிருக்கிறார். அதன் தலைப்பு: The Village in the Jungle. ஆண்டையர்கள், ஆளப்பட்டவர்கள் பற்றி எழுதப்பட்ட அந்த நாளைய நாவல்களில் இது வித்தியாசமானது. இந்த நாவல்கள் ஆங்கிலேயரைப் பற்றித்தான் இருக்கும். இந்திய பாத்திரங்கள்கூட மத்தியதர வர்க்கத்தினராய் இருப்பார்கள். இப்படியான எழுத்துகளுக்கு ஒரு தெளிவான உதாரணம் E. M. Forster எழுதிய A Passage to India. வூல்ஃப் புத்தகம் வாகை சூடிய வெள்ளை வெற்றிச் சூரர்களைப் போற்றும் பிரதான கதாபாத்திரங்களைக் கொண்ட நாவல் அல்ல. காலனிய அடித்தள மக்கள் பற்றியது. காலனியமயமாக்கப்பட்டவர்கள் பற்றி George Orwell எழுதிய கதையான Burmese Days வர இன்னமும் இருபது வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. வூல்ஃப் இன் கதை முழுக்க முழுக்க வத்தேகம என்ற கிராமத்தில் வாழும் சிங்களவர்களைப் பற்றியது. இவர்கள் வணங்கும் தெய்வங்கள் தமிழ்க் கடவுள்கள். ஆங்கில ஏகாதிபத்திய கொள்கைகள் இவர்களின் வாழ்வாதாரத்தை எப்படி உலுக்கிவிடுகிறதென்பதை உணராத பேதைத்தனமானவர்கள்.

வூல்ஃப் பற்றி அதிகம் தெரியாத ஒரு சம்பவம்: தமிழர் சிங்களவர் பிரச்சனையைத் தீர்க்க கூட்டாட்சி முறை சார்ந்த அரசியல் அமைப்பை எடுத்துரைத்தவர். இவர் ஐக்கிய இராச்சிய தொழிலாளர் கட்சிக்கு எழுதிய குறிப்பாணையில் (memorandum) சிறுபான்மையோரான தமிழர்களின் உரிமையைப் பாதுகாக்க, சுவிச்சர்லாந்தில் இருப்பதுபோல் வடகிழக்கில் மாகாண ஆட்சியை அமைக்கவேண்டும் என்று சிபாரிசு செய்தார். இது இவர் எழுதியது *1938* இல். அப்பொழுது கூட்டாட்சி கேட்ட தமிழரசுக் கட்சி இன்னும் உருவாகவில்லை! சா.ஜே.வே. செல்வநாயகம் "தந்தை செல்வா" ஆகவில்லை!

தான் இலங்கையில் இருந்த நாட்கள், பிரித்தானியப் பேரரசு, தன் ஆங்கில இனம் பற்றி இவரால் ஒரு மறு பரிசிலனை செய்யமுடிந்தது. இங்கிலாந்து திரும்பியபோது இடதுசாரி அரசியலில் ஈடுபடலானார். வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தில் வரும் ஜாக்சன் துரையாக இருந்தவர் காந்தியின் நண்பரான சி.எஃப். அன்ரு போலானார். காலனியத்தைக் கடுமையாக விமர்சித்து இரண்டு கடுகடுத்த நூல்களை எழுதினார்: Economic Imperialism (1921). Imperialism and Civilization (1928). இவை இரண்டுமே பேரரசுகள் பற்றிய கடும் கடிந்துரைகள். களங்கமில்லாத, தன்னுணர்வற்ற ஏகாதிபத்திய ஆதரவாளராய் அவதரித்தவரின் அடுத்த இந்த வரிகளை நீங்கள் படிக்கும்போது ஒரு மனந்திருந்திய மைந்தனாக வூல்ஃப் எழுந்தருளியிருப்பதைக் காணலாம்: "என்னுடைய நேர்மை முறையற்றது என்று எண்ணியவர்களுக்கு நியாயம் கிடைக்க என் வாழ்நாளை கழிக்க முயல்வேன்." இவரது இந்த வார்த்தைகளை ஒரு முன்னாள் காலனியவாதியின் ஈடற்ற வார்த்தைகளாக எடுத்துக்கொள்ளலாம்.

⁂

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனப்பிரச்சனை வரலாறும் இலக்கியமும் – 14

மு. புஷ்பராஜன்

**வி**டுதலைப்புலிகள் மூன்றாவது ஈழப்போரை அறிவித்த மறுநாளே அரசின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஊடகவியலாளர் சந்திப்பை நிகழ்த்தி, "விடுதலைப்புலிகளே பேச்சுவார்த்தையை முறியடித்தனர்" என்று பிரசாரப் போரைத் தோடங்கினார். அத்துடன் அதுவரை அனுமதிக்கப்பட்ட பொருட்களுக்கான தடையை அரசு மீண்டும் அறிவித்தது. விடுதலைப்புலிகள் ஏப்ரல் 28ஆம் 29ஆம் திகதிகளில் பலாலிமீது மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு 'அவ்ரோ' விமானங்களைச் சுட்டு வீழ்த்தினர். அரசின் போருக்கான ஆயத்தங்களைப் பற்றிச் 'சரிநிகர்' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் பின்வருமாறு கூறுகிறது.

"ஜனாதிபதி பரீசிலிருந்து திரும்பியபின் நடைபெற்ற இலங்கை முப்படைகளின் உயரதிகாரிகள் கிட்டத்தட்ட பன்னிரண்டு மணிநேரம் நடைபெற்ற முக்கிய கூட்டமொன்றின்போது இராணுவம் சம்மந்தப்பட்ட முடிவுகள் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்தக் கூட்டத்திலேயே வெளிநாட்டின் உதவியின் அவசியம் பற்றி இராணுவ அதிகாரிகள் வலியுறுத்தியதாகவும் தெரியவருகிறது. இதன் ஒரு கட்டமாக இந்தியாவிலிருந்து பெறக்கூடிய ஆயுத, படை மற்றும் இராணுவ ஆலோசனைகளைப் பெறுவது பற்றிய பேச்சுக்களை நடாத்த ஏற்கனவே உயர் இராணுவ அதிகாரிகள் குழுவொன்று ஜனாதிபதியின் இந்தியப் பயணத்திற்கு முன்பாகவே புதுடில்லி சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

புதிதாகத் தோன்றியுள்ள இந்த நிலைமை காரணமாக பிற நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதற்காக ஏற்கனவே அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களுடன் தொடர்புகொண்டு உதவி குறித்துப் பேசப்பட்டதாகவும் இந்த வரிசையில் அமெரிக்கா, கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளுடனும் பேசப்பட்டதாகவும் தெரியவருகிறது. கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி இந்தியப் படையினரில் சுமார் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட துருப்புக்கள் தெற்கு நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. ஆயினும் இந்தத் துருப்புகள் இலங்கை ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கைக்கு அனுப்பப்படுவதற்காக நகர்த்தப்படுகின்றனவா என்பது குறித்து எத்தகைய ஊர்ஜிதமான செய்திகளும் கிடைக்கவில்லை. (சரிநிகர் இதழ் 71, மே5 மே17 1995)

யுத்தம் சிங்கள அரசுகளின், பௌத்த பீடங்களின் பேரவாவாக இருந்தது. ஏனெனில் புலிகள் யாழ்ப்பாணத்தில் ஒரு தனியாட்சி நடத்துவது சிங்கள அரசின் இறையாண்மைக்கு பேரவமானமாக இருந்தது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிட்டால் தமிழ் இராச்சியத்தை வெற்றிகொண்ட வீர மாதாவாக சிங்களம் கொண்டாடும் எனக் கருதிய சமாதானத்தின் தேவதை ஜனாதிபதி சந்திரிகா, 'சமாதானத்திற்கான போருக்கு' நவீன ஆயுத தளவாடங்களை வாங்கிக் குவித்து, அவற்றைப் பலாலிப் பெரும்தளத்திற்கு ஆகாயம், கடல் வழியாக அனுப்பிக்கொண்டிருந்தார். "கிழக்கு மாகாணத்திலிருந்தும் தென்னிலங்கையில் இருந்தும் முப்பதினாயிரத்திற்கும் நாற்பதினாயிரத்திற்கும் மத்தியில் துருப்புக்கள் அங்கு குவிக்கப்பட்டதாக அறிந்தேன்." (சு.வே. பக்:409) மறு பக்கமாக விடுதலைப்புலிகள் சமாதானத்திற்கு எதிரானவர்கள். நிரந்தரமாக சமாதானத்திற்கு யுத்தம் அவசியம் என்பதை உலக நாடுகளுக்கு எடுத்துரைத்து அதில் வெற்றியும் அடைந்தார்.

இந்த நிலையில் 28 ஜுன் 1995இல் யாழ்ப்பாணம் மண்டைதீவிலுள்ள கூட்டுப்படைத் தளத்தின்மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப்புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர். முகாமைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த புலிகள், அங்கு கைப்பற்றிய ஆயுதங்களுடன் தளத்தை விட்டுச் சென்றனர். இதில் 110 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பல இராணுவத்தினர் காணாமல் போயுள்ளனர். புலிகள் தரப்பில் மேஜர் சூட்டி உட்பட 10 போராளிகள் காணாமல் போயுள்ளனர். இத்தாக்குதல் பற்றி 'த ஐலன்ட்' பத்திரிகை 'மண்டைதீவு படுவீழ்ச்சி: செயலின்மையின் பேரழிவு' என்ற தலைப்பில் "இராணுவப் படைமுகாம்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நிகழ்த்தவிருப்பது பாதுகாப்புப் பிரிவின் உயர் அதிகாரிகளுக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தும் எவ்வாறு மிக இலகுவாக புலிகளால் இதை நிகழ்த்த முடிந்தது என்பதுபற்றிப் பாதுகாப்பு வட்டாரங்களில் கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன. மேலும் இத்தாக்குதல்மூலம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை வைத்து, 250 புலிகள் குறைந்தது மூன்று மாதங்களிற்கு, அரச படை களுக்கு எதிராகப் போராடப் போதுமானதாக இருக்கும் என்று இப்பத்திரிகையின் பாதுகாப்பு சம்பந்தமான நிருபர் குறிப்பிட்டார்." (S.LW.T.H-482)

9 ஜுலை 1995 அன்று 'முன்னோக்கிய பாய்ச்சல்' என்ற குறியீட்டுப் பெயருடன், யாழ்ப்பாணம் மீதான தாக்குதலை அரசு ஆரம்பித்தது. வழமைபோலவே விமானத் தாக்குதல், பீரங்கி எறிகணைத் தாக்குதல் ஆகியவற்றுடன் பத்தாயிரம் வரையிலான தரைப்படையினர் "யாழ் நகரை நோக்கி இருமுனைத் தாக்குதலை மேற்கொண்டனர். ஒரு பிரிவு பலாலியிலிருந்து தெல்லிப்பளையூடாக அளவெட்டி, சண்டிலிப்பாய் நோக்கியும் மற்றைய படைப்பிரிவு, மாதகலில் இருந்து பொன்னாலைக் கடலோரமாக வட்டுக்கோட்டை நோக்கியும் நகர்ந்தனர்". (சு.வே. பக்:410) தாக்குதலின் முதல்நாளே மக்கள் பாதுகாப்பிற்காக அடைக்கலம் புகுந்திருந்த நவாலி புனிதர் பீற்றர் ஆலயத்தின்மீது புக்காரா விமானம் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட நூறு பேர்வரை கொல்லப்பட்டனர். அதேயளவு ஆட்கள் காயமடைந்தனர். அரசாங்கம் இதை மறைக்க முயன்றபோதும் செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலம் இந்தப் படுகொலை வெளிவந்தது.

இந்தத் தாக்குதல் சம்பந்தமாக 15 ஜுலை 1995 டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் "கோவில் அமைந்திருக்கும் பகுதியில் படையினர் இல்லாது இருக்கும்போது, அவர்கள்மீது பழியினைச் சுமத்த சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் அவசரமாகச் செயற்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகள் ஒரு ஈவிரக்கமற்ற இயக்கம் என்பதனைத் தமது கருத்தை உறுதிப்படுத்துவதற்கு முன்னர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் கவனமாகப் பரிசீலித்திருக்கவேண்டும்". எனக் கூறியதாக குறிப்பிட்டிருந்தது. (S.L.W.T.H.-483) இத்தாக்குதல் பற்றி வடக்கு கிழக்கு மனித உரிமைச் செயலகம் குறிப்பிடுகையில் "இத்தாக்குதலின் பின்னர் கத்தோலிக்க புனித திருத்தந்தை பெருமதிப்புக்குரிய அருளப்பர் சின்னப்பர் அவரது அதிர்ச்சியையும் தெரிவித்ததோடு ஆலயத்தில் நடந்த அனர்த்தத்திற்கு வருத்தமும் தெரிவித்தார். அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க



குமாரதுங்க கொழும்பு அதிமேற்றானியாரிடம் தேவாலயம் மீதான தாக்குதலுக்கு கவலையைத் தெரிவித்ததுடன், மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும்படி படையணிகளுக்கு உத்தரவும் பிறப்பித்தார்" (த.ப. பக்: 125)

இதனைத் தொடர்ந்து 14 ஜுலை 1995இல் 'புலிப் பாய்ச்சல்' என்ற பெயரில் விடுதலைப் புலிகள் இயக்கம் எதிர்தாக்குதல் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். அளவெட்டியிலும் சண்டிலிப்பாயிலும் ஊடுருவி நின்ற சிங்கள இராணுவத்தினர்மீது, விடுதலைப் புலிகளின் கொமான்டோ படையணிகள் தாக்குதலை நிகழ்த்தி பெரும் உயிர் சேதத்தினை ஏற்படுத்தின. இரு தினங்களாக கடும் சமர் நடைபெற்றது. இச்சண்டைகளின்போது சிங்கள விமானப் படையின் 'புக்காரா' குண்டுவீச்சு விமானம் ஒன்று ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதேசமயம் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு சமீபமாக 'எடித்தேரா' என்ற போர்க்கப்பலும் கடற் கரும்புலிகளால் தகர்த்து கடலில் மூழ்கடிக்கப்பட்டது." (சு.வே: 411) இறுதியில் அரச படையினர் தமது இராணுவ நடவடிக்கையைக் கைவிட்டு தமது தளத்திற்கு பின்வாங்கினர். இதனைத் தொடர்ந்து சிறீலங்கா ஆயுதப்படையினர் யாழ்ப்பாணத்தின்மீது தொடர்ச்சியாக பீரங்கித் தாக்குதலையும் விமானக் குண்டுவீச்சுக்களையும் இரவு பகலாக நடத்தினர். யாழ்ப்பாண மக்கள் பதுங்கு குழிகளையே நம்பி வாழும் காலங்களாக அமைந்தன.

29 ஜுலை 1995இல் விடுதலைப் புலிகள் 'வெலி ஓயா' படைத்தளங்களின்மீது ஒரு தாக்குதலை மேற்கொண்டனர். படுதோல்வியில் முடிந்த இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 63 போராளிகள் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டபோதும் இத்தாக்குதல் சார்ந்து 'லொஸ் ஏஞ் சல்ஸ் ரைம்ஸ்' பத்திரிகை 'ரொய்ற்ரரை' ஆதாரம் காட்டி வெளியிட்ட செய்தியில் "தாக்குதல் ஒன்று நிகழ்வதற்கான சாத்தியம் உள்ளதாக எமக்குக் கிடைத்த உளவுத் தகவல் காரணமாக, நாம் அதனை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகளைச் செய்திருந்தோம். அவர்களின் நகர்வுகளை அதி முன்னதாகவே அறிந்துகொண்டோம் என வெலி ஓயா தளத்தின் மூத்த அதிகாரி நிருபர்களுக்குக் கூறினார்." (Los Angles Times –July 29 1995) இதே காலத்தில் கிழக்கு மாகாணத்தின் வாழைச்சேனைப் பகுதியில் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் பிரிகேடியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நளின் அகம்மான கொல்லப்பட்டதுடன் 13 அதிகாரிகளும் கொல்லப்பட்டனர்.

இரு தரப்பினரின் தாக்குதல், எதிர்த்தாக்குதல்களுக்கு இடையில் 3 ஓகஸ்ட் 1995 இல் ஜனாதிபதி திடீரென்று ஒரு புதிய அரசியல் ஆலோசனைகளை அறிவித்தார். அவை "சிறீலங்காவானது ஒன்றுபட்ட பிராந்திய அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒரு பிராந்தியத்தின் ஆளுநரை ஜனாதிபதி அப்பிராந்தியத்தின் முதலமைச்சருடன் கலந்தாலோசித்து நியமிப்பார். மத்திய அரசு பிராந்திய சபையைக் கலைக்கமுடியாது. கூடவே அதன் முதலமைச்சரையும் நீக்கமுடியாது. பிராந்தியம் மற்றும் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டவை எவைகள் என இருவேறு உள்ளடக்கப் பட்டியல்கள் அமையும். சட்டமும் ஒழுங்கும் காணியும் அதன் பகிர்வும் பிராந்தியப் பட்டியலில் அடங்கும். மத்திய அரசு ஒரு காணியைப் பாவிக்கவேண்டுமானால் அதற்கு பிராந்திய அரசின் சம்மதத்தைப் பெறவேண்டும். பிராந்திய சபைகள் அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட பட்டியலின்மீது சட்டபூர்வமான தனிப்பட்ட அதிகாரத்தைக் கொண்டிருக்கும் (நிருபமா சுப்பரமணியம். Indiatoday.in/magazine, 2013)இதற்கு வழமைபோலவே கொழும்பிலுள்ள ஆங்கில சிங்களப் பத்திரிகைகளும் இனவாத சக்திகளும் பௌத்த பீடங்களும் கடுமையாக எதிர்த்தன.

அரசாங்கம் தனது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முயற்சியின் ஒரு பகுதியாக 1 ஒக்ரோபர் 1995 இல் 'இடிமுழக்கம்' என்ற படை நகர்வை ஆரம்பித்தது. விடுதலைப்புலிகளின் பாதுகாப்பு நிலைகளின்மீது பீரங்கித் தாக்குதலையும் விமானத் தாக்குதலையும் நிகழ்த்த பல்லாயிரக்கணக்கான படையினர் அந்தப் பாதுகாப்பில் முன்னகர்ந்தனர். விடுதலைப் புலிகளும் எதிர்த்தாக்குதலை நிகழ்த்தினர். பலாலி படைத் தளத்திலிருந்து இடைவிடாது பீரங்கிகள் முழங்கியபடி இருந்தன. இரு தரப்பினருக்கும் பெரும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதுடன்; பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறினர். "இடிமுழக்கம் போர் நடவடிக்கைகள் இரு வாரங்கள் வரை தொடர்ந்தது. தனக்கு ஏற்பட்ட பெரும் இழப்புக்களையும் பொருட்படுத்தாது சிங்கள இராணுவம், புலிகளின் நிலைகளை அழித்து, அச்சுவேலி ஆவரங்கால் புத்தூர் போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பட்டினங்களைக் கைப்பற்றியது.." (சு.வே. பக்:413) புலிகளிடம் இருந்து கைப்பற்றிய பகுதிகளை, இராணுவம் பலப்படுத்திக்கொண்டு தனது அடுத்தகட்ட நடவடிக்கைக்குத் தயாரானது.

விடுதலைப்புலிகளின் பலம்பொருந்திய "நீர்வேலியும் கோப்பாயும் கைப்பற்றப்பட்டால் உடனடியாகவே சிங்களப் படையணி, செம்மணி வெளியூடாக விரைந்து முன்னேறி நாவற்குழிப் பாலத்தைக் கைப்பற்றி விடுவார்கள். என நாம் ஊகித்தோம். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாவற்குழிப்பாலம் வலிகாமத்தையும் தென்மராட்சிப் பிரதேசத்தையும் இணைக்கிறது. இந்தப் பாலத்தை இராணுவம் கைப்பற்றுமாயின் யாழ்ப்பாண நகரம் உட்பட வலிகாமத்தில் வசிக்கும் ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் இராணுவத்தின் பொறிக்குள் சிக்கிவிடுவார்கள்". (சு.வே: 414) 'சூரியக் கதிர்' என்ற பெயரில் 17 ஒக்ரேபர் 1995இல் ஆரம்பித்தது. "பலத்த காவலரண்கள் கட்டி, புலிப்படைப் பேரணிகள் நிலைகொண்டிருந்த நீர்வேலிப் பிரதேசத்தில் கடும் சமர் மூண்டது. பாதுகாப்பு நிலைகளில் நின்றபடி புலி வீரர்கள் உக்கிரமாகத் தாக்குதல் நடத்தினர். சினமடைந்த சிங்களப் படையினர் யாழ்நகர் மீதும் அதன் சுற்றுப் புறங்கள் மீதும் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்களைத் தொடுத்தனர். 'சுப்பர் சோனிக்' குண்டுவீச்சு விமானங்கள் குடிசனப் பகுதிகள்மீது குருட்டுத்தனமான தாக்குதல்களை நடத்தியது".(சு.வே.: பக்: 414)

29 ஒக்ரேபர் 1995இல் நீர்வேலியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரண்களை உடைத்துக்கொண்டு இராணுவம் முன்னேறியது. "அடுத்தநாள் காலை விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த போராளிகள் நிலைமையை மக்களுக்கு அறிவித்தார்கள். சிங்கள ஆக்கிரமிப்புப் படைகள் யாழ்ப்பாண நகரை அண்மித்து வருவதாக ஒலிபெருக்கிகளில் நகரத்திலும் மற்றும் வலிகாமம் அடங்கிலும் அறிவித்தார்கள். எதிரியின் கண்மூடித்தனமான தாக்குதல்களில் சிக்குப்படாமல் தப்புவதாயின் வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சியில் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்கள்." (சு.வே.பக்: 417) விடுதலைப்புலிகள் எப்படியும் தம்மைப் பாதுகாப்பார்கள் என்றிருந்த மக்களுக்கு இந்த அறிவுப்பானது அதிர்ச்சியாகவும் ஏமாற்றமாகவும் இருந்தது. இராணுவத்தினர் யாழை நெருங்கி வருகிறார்கள் என்ற செய்தியே பேரச்சமாக இருந்தது. இந்த அச்சத்தின் பின்னணியில் இராணுவத்தினரின் கடந்தகால அனுபவங்கள் அடித்தளமாக இருந்தன. எனவே வெளியேறுவதைத் தவிர வேறு வழி ஏதும் அவர்களுக்கு இருக்கவில்லை.

"ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தமது கைகளில் அகப்பட்ட பொருட்களை எடுத்துக்கொண்டு, பிள்ளைகளையும் வயோதிகர்களையும் நோய்வாய்ப்பட்டவர்களையும் இழுத்துக்கொண்டு, வீதிகளில் இறங்கினார்கள், நாவற்குழிப் பாலத்தைக் கடந்து தென்மராட்சிப் பகுதியிலுள்ள கைதடிக்குள் கால்வைத்துவிட வேண்டும் என்பதே எல்லோரது ஏக்கமாகும். இந்த அவசரமும் அங்கலாய்ப்பும் காரணமாக எல்லோருமே முண்டியடித்துக்கொண்டு வீதிகளில் இறங்கினார்கள். சாவகச்சேரி செல்லும் வீதிகள் எங்கும் சன சமுத்திரம். பயந்த, பதட்டமடைந்த சனத்திரளால் வீதிகள் நிறைந்தன. மூச்சுத் திணறடிக்கும் நெரிசல். மக்கள் திரள் வீதிகளில் அடர்த்தியாக இறங்கியதால், நகர்வு இயக்கம் திடீரென்று நின்றது. மக்களின் ஒரேயொரு போக்குவரத்து சாதனமான சைக்கிள்களும் சன நெருக்கடிக்குள் சிக்கி அசைவற்று நின்றன. நெரிசல்பட்ட பெருங்கூட்டமாக மனித ஊர்வலங்கள் பல மைல்கள் தூரத்திற்கு நீண்டு சென்றன. ஒரு சில யார்கள் தூரம் செல்வதற்கு பல மணிநேரம் பிடித்தது.

இந்தப் பேரவலத்துள் மேலும் அவலம் சேர்ப்பதுபோல திடீரென்று மழை கொட்டியது. வானம் அழுது வடித்த கண்ணீர், தாகத்தால் தவித்த நாக்குகளை நனைத்தது.. அதுமட்டுமே அல்லல்பட்ட மக்களுக்கு அன்று கிடைத்த ஒரு துளி ஆறுதல். பசியால் குழந்தைகள் கதறி அழுதன. செய்வதறியாத பெற்றோர் பதைபதைத்தனர். வயோதிகர்கள் வீதியோரம் குந்தியிருந்து மூச்சிழுத்தனர். பசியும் தாகமும் வருத்த, மழையால் தெப்பமாக நனைந்ததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நோய்வாய் பட்டோர் மேலும் நோயுற்றனர். இந்த அவல நிகழ்வின் உணர்வு அழுத்தத்தால் ஒரு கர்ப்பிணிப் பெண், வீதியோரமாக திறந்த வெளியில் குழந்தை ஈன்றார். இத்தனை இன்னல்களுக்கும் மத்தியில் மக்களிடையே ஒரு உறுதிப்பாடு மட்டும் மேலோங்கி நின்றது. இனவெறி கொண்ட பகைவன் கையில் சிக்கிவிடாது தப்பிவிட வேண்டும் என்பதுதான் அந்த உறுதிப்பாடாகும்." (சு.வே. பக்: 417418)

"யாழ்ப்பாண மக்களுக்கு இழைக்கப்பட்ட இக்கொடுமை பற்றி எதுவுமே தெரியாததுபோல் கொழும்பு ஊடகங்கள் மௌனம் சாதித்தன. 'பயங்கரவாதிகளான' விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ்ப்பாண மக்களை 'விடுதலை' செய்வதற்காக, 'வீரம் படைத்த' சிங்கள இராணுவம் நிலைநாட்டிவரும் வீர சாதனை பற்றியே கொழும்புப் பத்திரிகைகள் புகழ்பாடின. யாழ்ப்பாண மக்களின் இடப்பெயர்வு பற்றி, ஆழ்ந்த கவலை தெரிவித்து ஒரு தனி நபர் மட்டும் குரலெழுப்பினார். சொந்த மண்ணிலிருந்து வேரறுந்து புலம்பெயர்ந்துள்ள யாழ்ப்பாண மக்களுக்கு உலக அரசுகள் உதவவேண்டுமென முன்னாள் ஐ.நா. பொதுச் செயலர் திரு பூட்ரோஸ் காலி ஒரு பகிரங்க அழைப்பு விடுத்திருந்தார். யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த மனித அவலம் சர்வதேசமயமாகிவிடுமோ எனப் பயந்த சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் திரு கதிர்காமர், இலங்கையில் எவ்விதமான மனித அவலமும் நிகழவில்லை என மறுத்தார். ஒரு சிறிய இடப்பெயர்வுச் சம்பவத்தை பெரிதுபடுத்தவேண்டாமென ஐ.நா. செயலாளர் நாயகத்தை கண்டித்த 'தமிழரான' இந்த அமைச்சர், ஒரு இறைமையுள்ள நாட்டின் 'உள்விவகாரத்தில்' தலையிடவேண்டாமெனவும் எச்சரித்தார். யாழ்ப்பாணத்துத் தமிழருக்காக கவலை தெரிவித்த ஒரேயொரு குரலையும் திரு கதிர்காமர் நசுக்கிவிட்டார்". (சு.வே. பக்: 420) யாழ்ப்பாணத்தின் முழுச் சனத்தொகையுமே வெளியேறிவிட்ட நிலையில் ஆட்களற்ற வெறும் நிலப்பரப்பை இலங்கை இராணுவம் கைப்பற்றி, தமது சிங்கக் கொடியை ஏற்றிக்கொண்டனர்.

இந்த வரலாற்றுப் பின்புலமாகக் கொண்டு 'பெயர்வு' சிறுகதை ஒன்றை குந்தவை என்பவர் எழுதியுள்ளார். அவை அவரது யோகம் இருக்கிறது தொகுப்பில் உள்ளது.

பெயர்வு; அவர்கள் கிளாலியிலிருந்து கிளிநொச்சிக்கு செல்லுகின்ற படகில் இருக்கிறார்கள். அவர்கள் என்பது சிவரஞ்சனியும் கணவன் மனோகரனும் குழந்தை அமுதனும்தான். அவர்களுடன் அவர்களைப் போலவே மரணம் துரத்த, கடல்வழியாகவேனும் கிளிநொச்சியை அடையும் முனைப்புடன் வந்தவர்களும். அவர்களிடையே மௌனம் இறுகியிருந்தது... 'தங்கள் எல்லோரையும் இம்சைப்படுத்துவது ஒரேமாதிரியான கவலைதான். விட்டுவிட்டு வந்த வீடு, வாசல், தோட்டம் துரவு'. சிவரஞ்சனிக்கு கூடவே பரணில் கட்டியிருந்த இருபத்தி ஐந்து தறை வெங்காயம் வீணாகிப் போய்விட்டன என்பதுதான். சரியாக வரவில்லை என்று கொடுக்காமல் இருந்தது. கொடுத்திருந்தால் செலவுசெய்த காசாவது மிஞ்சியிருக்கும்.

படகின் மறுமுனையிலிருந்து குழந்தையின் அழுகுரலும் தாயின் சமாதானப்படுத்தும் குரலும். சிவரஞ்சனி தன் மடியில் இருந்த அமுதனைத் தடவிக் கொடுத்தாள். அவனின் ஈரம் வழியும் உடல்நீரை வழித்துவிடும்போதெல்லாம் அவனுக்குக் காய்ச்சல் வந்துவிடக்கூடாதே என்ற அங்கலாய்ப்பாய் இருந்தது. கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். அலையடிக்கும்போதெல்லாம் சந்தோசமாக இருந்த அமுதன் இப்போது சோர்ந்து போயிருந்தான். பசிக்களை வேறு. மூடிய தோள் பைக்குள் அரை இறாத்தலுக்கும் குறைவான பாண் இருந்தது. அதுநேற்று சாவகச்சேரிக் கடையில் அருமையாகக் கிடைத்தது. அவனுக்கு ஊட்ட முயன்றபோழுது மறுத்துவிட்டான். கடைசியாக கிளாலியில் படகிற்குக் காத்திருந்தபோதும் மறுத்துவிட்டான். இருமுறையும் அங்கர் பால்மாவைத் தவிர வேறெதுவும் சாப்பிடவில்லை. காலையில் இடியப்பமும் சொதியும் என்றால்தான் நாலு வாய் சாப்பிடுவான். கொண்டுவந்த பிஸ்கற்றும் மூன்றாம் நாள் மாலை, நடந்தோய்ந்து சாலையோர மரத்தடியில் ஈரமில்லா இடம் பார்த்து, காய்ந்த சருகு கூட்டி தேனீருக்காய் அடுப்பு மூட்டியவேளை தீர்ந்துவிட்டது.

'ஆமி நெருங்கிவிட்டது எல்லோரும் ஊரை விட்டு வெளியேறுங்கள்' என்று ஒலிபெருக்கியின் அறிவிப்பைக் கேட்டு நிராசையும் குமைச்சலும் போட்டியிட இடம் பெயர்தலை ஒப்பவில்லை. ஆனால், மகேந்திரன் அவசரமாக வெளியே போய், பூட்டப்பட்டுக்கொண்டிருந்த கடையில் தேயிலை, சீனி, பால்மாவுடன் பிஸ்கட் ஆகியவற்றை வாங்கிவந்தான். 'அக்கம்பக்கம் எல்லாம் வீடுகளைப் பூட்டி வீதியில் இறங்கிவிட்டார்கள்' என்றபிறகுதான் ஒரு பருப்புக் குழம்பு வைத்துச் சாப்பிட்டு, மிகுதியை தூக்குச்சட்டியில் எடுத்துக்கொண்டார்கள். அந்த உணவு அடுத்தநாள் மதியம்வரை வந்தது. அப்போதும் அமுதன் சோற்றைச் சாப்பிடவில்லை. மறுநாள் 'தோசை' என்ற பெயரில் கிழவி விற்றுக்கொண்டிருந்த கோதுமை மாக்கரைசலை ஐம்பது ரூபாய் கொடுத்து வாங்கியபோதும், அதில் இரண்டு விள்ளல்தான் அமுதன் தின்றான். இப்போது அங்கர் மா முடிந்து, பிஸ்கற்றும் முடிந்து, பாண் மட்டுமே மிஞ்சியுள்ளது.'

எஞ்சின் உறுமல் சத்தம் கேட்டதுபோல் இருந்தது. இருபுறமும் திரண்டு மோதும் அலைகளின் கொதிப்பு தளதளப்பாய் கேட்டுக்கொண்டு இருந்தது. கடற்காற்றின் வீச்சில் அவள் கண்களை ஆயாசத்துடன் மூடிக்கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மூடிய கண் திரைக்குள் மனிதர்கள் ஊர்ந்தனர். தெருவை அடைத்துக்கொண்டு, மூட்டை முடிச்சுக்களோடு குழந்தை குட்டிகளை இழந்தோ சுமந்தோ குடும்பம் குடும்பமாக நகரும் மக்கள், மழைக் கம்பிகளுக்கு ஊடாக மங்கலாகத் தெரிந்தனர். சேற்றையும் சகதிகளையும் தாண்டி நடந்தனர். பாளம் பாளமாய் பிளந்துகொண்ட கால் விரல் இடுக்குகளில் சேறும் சகதியும் அப்பி தாங்கமுடியாத எரிவைத் தர ஒரு கையில் அமுதனைத் தூக்கி மறுகையில் பாரமேத்திய சைக்கிள் ஹாண்டிலைப் பிடித்து நடக்கும் கணவன் பின்னால் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் உயிர் போய்வரும் வேதனையைத் தர தன் உடம்பையே தான் இழுத்துக்கொண்டு நடந்தாள்." *(32)*

அன்றிரவு ஒரு மரத்தடியின்கீழ் தங்கியிருந்தபொழுது ஹெலியோ வேறெதுவோ சீறிக்கொண்டு கங்குகளைக் கொட்டித் தீர்த்தது. பின்னர் மரத்தடியில் இருக்கப் பயந்து பின்னால் இருந்த வீட்டிற்குப் போனார்கள். அங்கு நிறையச் சனங்கள். படுக்க இடமில்லை வெளி முற்றத்தில் பெட்ஷீட் விரித்துப் படுத்தார்கள். ஆனாலும் விமானச் சத்தம் நெருங்கக் கேட்ட ஒவ்வொரு முறையும் அமுதனைத் தூக்கிக்கொண்டு பெட்ஷீட்டை உருவிக்கொண்டு வீட்டுச் சுவரோடு மறைவாய் ஒண்டவேண்டியிருந்தது. மறுநாள் கோவில் மண்டபத்தில் படுத்தபோது கோவில் மேல் குண்டு போடமாட்டார்கள் என்ற நினைவு பாதுகாப்புத்தர படுத்தவள்தான் செவிப்பறையில் ஏதோ மோதியது. திடுக்கிட்டுக் கண்விழித்தபோது கூப்பாடு போட்டுக்கொண்டிருந்தார்கள். அமுதனை எடுத்துக்கொண்டு ஓட முற்பட்டபோதுதான் பக்கத்து வீட்டில்தான் ஷெல் விழுந்திருந்தது என்று தெரியவந்தது.

மறுநாள் ஒரு பூட்டிய வீட்டின் போர்ட்டிக்கோ வசதியாக

இனி என்ன செய்யப் போகிறோம் என்பது தெரியாமல் இருந்தது. எழுந்து மரத்தின் பின்னால் உள்ள பற்றைக்குப் போய் திரும்புகையில் கால் மடிந்து விழுந்தாள். எழுந்து உட்காந்து முகத்தை முழந்தாளில் புதைத்தபொழுது ஆற்றாமை பொங்கி அழுதாள்.



இருந்தது. நடு இரவில் நல்ல மழை பிடித்து அடித்த சாரலில் படுத்திருந்த படுக்கை தொப்பலாகிவிட்டது. பிள்ளையை தோளில் போட்டுக்கொண்டு நிற்க வேண்டியதாகிவிட்டது. வந்ததிலிருந்து ஒரு இரவுகூட ஒழுங்காக நித்திரை இல்லை. புறப்பட்டு வரும்போது கைதடிப் பாலத்தைக் கடக்கையில் பாலத்தின் கீழ் நிறைந்திருந்த நீரில் மிதந்த உடல் சிற்றலைகளால் அலைப்புற்றுப் புரண்டதுபோல் அவள் நினைவிலும் அலைப்புற்றது. அத்தோடு கைப்பிடிச் சுவரோடு நாலு பேரின் கைத்தாங்கலுக்குள் திமிறிக்கொண்டு அரற்றிய அந்தத் தாயின் கதறல் பாவி ஏன் இடுப்புக் குழந்தையைத் தவறவிட்டாள் பாலத்தின்மேல் நடக்கையில் களைத்து விழுந்தாளோ? நெரிசலில் சிக்குண்டு தவற விட்டாளோ? அமுதனைக் கொண்டு எங்கும் ஓடிக்கொண்டிருக்க முடியாது. யாழ் குடாவை விட்டு கடலேரியைக் கடந்து, போய்விடுவது உசிதமெனப் பட்டது. அதனால்தான் கடல் வழி பெருநிலப்பரப்பை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மூன்று மணித்தியாலக் கடற்பயணம். எதிரே ஒளிப் புள்ளிகள் தோன்றின. படகு கரையை அண்மித்ததும் ஒவ்வொருவரும் இறங்கத் தொடங்கினார்கள். மகேந்திரன் சிவரஞ்சினியின் மடியில் இருந்த பிள்ளையைத் தூக்கிக்கொண்டதும் அவளும் எழுந்தாள். தலை கிறுகிறுத்தது. படகு விளிம்பைப் பிடித்துக்கொண்டு சிறிது நின்றாள். பசிக் களைப்புத்தான். கரையில் இறங்கியவர்கள் உட்புறப் பகுதிக்கு நடக்கத் தொடங்கி ஒவ்வொரு மரமாக இடம் தேடி அலைந்தார்கள். எல்லா மரத்தடியிலும் ஆட்கள் இருந்தனர். விலகி விலகி நடந்து ஒரு மரத்தடியில் இடம் பிடித்தனர். பெட்ஷீட்டை விரித்து அமுதனைக் கிடத்தி தாமும் அருகே படுத்தனர். கண் விழித்தபோது நன்றாக விடிந்திருந்தது. கணவனும் பிள்ளையும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். இனி என்ன செய்யப் போகிறோம் என்பது தெரியாமல் இருந்தது. எழுந்து மரத்தின் பின்னால் உள்ள பற்றைக்குப் போய் திரும்புகையில் கால் மடிந்து விழுந்தாள். எழுந்து உட்காந்து முகத்தை முழந்தாளில் புதைத்தபொழுது ஆற்றாமை பொங்கி அழுதாள்.

விழித்த அமுதன் அம்மா என்று கை நீட்டினான். அவனைத் தூக்கி இறுகத் தழுவியபொழுது அவள் தோளில் முகம் உராய்ந்து 'அம்மா பாண் தாங்கோ' எனச் சிணுங்கினான். அவசரமாக அவனைப் பக்கத்தில் இருத்தி பாணில் ஒரு துண்டைப் பிய்த்து லேசாக சீனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூவி ஒரு விள்ளலை வாயருகே கொண்டு சென்றாள். அவன் வாய் திறந்து வாங்கிக்கொண்டான். அவன் ஆவலாகச் சாப்பிடுவதைக் காண இன்னொருமுறை அழுதுவிடுவோமோ எனத் தோன்றியது. இன்னொரு துண்டைப் பிய்த்து எடுத்தாள். யாரோ பார்ப்பதுபோல் இருந்தது. மரத்தடியைப் பகிர்ந்துள்ள மற்றக் குடும்பத்துச் சிறுவன் அவள் கையிலிருந்த பாணைப் பார்த்து நின்றான். அமுதன் வயதுதான் இருக்கும். பாணில் இரு துண்டங்களைப் பிய்த்து நீட்டி அருகில் வரும்படி கண்ணால் கூப்பிட்டாள். சிறுவன் தயக்கமின்றி வந்து வாங்கிக்கொண்டான்.

அப்போதுதான் அவன் தாய் பார்த்திருக்கவேண்டும். 'என்னத்திற்கு இதெல்லாம்' என அவள் சொல்ல விரும்பியதுபோல் இருந்தது சொல்லவில்லை. மீதியிருந்த இரண்டு துண்டும் அமுதனுக்குக் காணும் என நினைத்துக்கொண்டாள். கையில் இருந்த துண்டும் முடிந்துவிட்டது. மற்றதை எடுத்துக்கொண்டபோது முதுகில் ஏதோ குறுகுறுத்ததுபோல் இருந்தது திரும்பினாள். பக்கத்து மரத்தடியில் இருந்து வேறொரு குழந்தை தன் தாயின் முதுகுக்குப் பின்னால் இருந்து அவள் கையில் இருந்த துண்டையே பார்த்துக்கொண்டிருந்தது. கதை முடிகிறது.

யாழ் மக்கள் உயிரைக் காத்துக் கொள்வதற்காக கொட்டும் மழையில் நனைந்தபடி, நாவற்குழிப் பாலத்தை நெரிசலுடன் கடந்துவிட முனைந்த அந்த வரலாற்றின் பெரும் புலப்பெயர்வை குந்தவை தனது 'பெயர்வு' சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார். மகேந்திரன் அவன் மனைவி, அவர்களின் குழந்தை ஆகிய சிறு குடும்பத்தின் நகர்வின் பின்னணியில் அந்த அவலம் சொல்லப்படுகிறது. அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் புலப்பெயர்வின் பல்வேறு புறநிலைகளையும் அவர் வெளிப்படுத்துகிறார். மருந்து, உணவுத் தட்டுப்பாடுகள், தங்குமிட நிரந்தரமின்மை, தேனீர் தயாரிக்க சருகுகளில் தீ மூட்டுதல் போன்ற நிலைகளும் பெண்கள், குழந்தைகள் கொள்ளும் நெருக்கடிகளை, குறிப்பாக இத்தகைய எதிர்பாராத சூழ்நிலைகளில் ஒரு தாய் மனம் கொள்ளும் உணர்வுகளை படைப்பியல் கூறுகளும் இணைந்து முன்வைக்கிறார். 'கடல் தன் உடம்பை, படகு கிழித்துச் செல்வதை பொறுக்காததுபோல் வாரித் தூற்றி இரைந்துகொண்டிருந்தது.' ஆம் எதிர்கொண்ட எல்லாத் துயர்களுக்கும் வானமும் வெள்ளிகளும் நிலவின் ஒளியும் மழையின் பொழிவும் காற்றின் சீற்றமும் சாட்சியாகத்தானே இருந்தன. அவற்றை எப்படித்தான் தவிர்க்க முடியும்?

'ஹெலியோ வேறெதுவோ சீறிக்கொண்டு தீக்கங்குகளாகக் கொட்டுவதையும் அது சுற்றிவந்து மீளச் சுடுவதையும் பார்த்துக்கொண்டிருக்கையில் ஒருவித அழகுணர்வு கலந்த அச்சம்' மற்றும் 'கரையே வரக்கூடாது நீள்கடலில் போய்கொண்டிருந்தால் போதும்' உயிர் தப்பும் நிலையில் இத்தகைய அழகுணர்ச்சி எழுவது அபூர்வமானதுதான். 'பிய்த்துக்கொண்டுபோன காற்றில் உப்பு நீரில் நனைந்திருந்த ஆடைகள் யாவும் நொடியில் காய்ந்தன.' இரவு வேளையில் இதெல்லாம் சாத்தியம்தானா?

இக்கதையில் 'மாசி முடிய (வெங்காயத்தின்) விலை ஏறுமெனக் காத்திருந்தது. ஆனால் மாசி முடியுமுன்பாகவே சண்டை வந்துவிட்டது'. (பக்:28) உண்மையில் மூன்றாவது ஈழப் போர் ஏப்ரல் 1995இல் ஆரம்பமாகியது. இதனைத் தொடர்ந்து இடி முழக்கம் 1 ஒக்ரோபரிலும் சூரியக்கதிர் 17 ஒக்ரோபரிலும் இடம்பெற்றது. எனவே மாசி முடியுமுன்பாகவே சண்டை வந்துவிட்டது என்பது தவறான தகவலாகும். அத்துடன் 'கோவில்மேல் குண்டு போடமாட்டார்கள் என்ற நினைவு பாதுகாப்புத் தருமெனப்படுத்தவள்'. உண்மையில் யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒருவர் இவ்வாறு கருதுவது வியப்பளிக்கிறது. இலங்கை அரசு கோவில்கள்மீது குண்டுகள் போட்டமைக்கு நீண்ட வரலாறே உண்டு. இந்த இடப்பெயர்வுக்கு முன்னர்கூட ஜூலையில்தான் நவாலி தேவாலயத்தில் குண்டுவீசி பலர் கொல்லப்பட்டுள்ளனர். வரலாற்றுச் சம்பவங்களைப் பின்னணியாகக் கொள்கையில் அவற்றை யூகங்களின் ஆதாரத்தில் எழுதிவிட முடியாது என நினைக்கிறேன். இக்கதையில் பாண் என்ற சொல்லிற்கு அடைப்புக் குறிக்குள் 'ப்ரெட்' என்று எழுதுவது அவசியம்தானா?

**உதவிய நூல்கள்:**


1. சுதந்திர வேட்கை: அடேல் பாலசிங்கம், வெளியீடு: பெயர்மக்ஸ் பதிப்பகம்: ஓகஸ்ட் 2002.

2. SRI LANKA: WITNESS TO HISTORY: S.SIVANAYAGAM, Published; Sivayogam. 180-186,Upper Tooting Road, London SW17 7EJ

3. தமிழினப் படுகொலைகள்: பாகம் 1, (இரண்டாம் பதிப்பு) 1956-2001, வடகிழக்கு மனித உரிமைச் செயலகம், கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.


***



» Residential » Commercial » Investment

CALL TODAY!

**Sutha Balasubramaniam**, B.Eng

Real Estate Broker

**416-271-5420**

suthab@gmail.com

905-201-9977

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/Future Realty Inc., Brokerage

SUTHAHOMES.ca

Ph: 416-271-5420



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOR ALL YOUR REAL ESTATE NEEDS

## "WE PROVIDE

ONLY THE BEST SERVICES!"



Market Evaluation
Flexible Commission
Professional Photography & Virtual Tour
Home Staging
Install Sale & Direction Signs
Attractive Advertising of Your Property
Open House Until SOLD

## Are you thinking of Buying or Selling your house?

**Call Me Today For Your FREE Home Evaluation!**



**Anton Emmanuel**
Sales Representative

**Dir: 647 852 8975**

Info@antonemmanuel.com
**www.realtoranton.com**

**HomeLife/Future Realty Inc.**, Brokerage*
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229

*Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனார் கவிதைகள் ஒரு சுருக்கமான அறிமுகம்

**பேரா. எம்.ஏ. நுஃமான்**

'அனார் 1990 களின் நடுப்பகுதியில் கவிதை எழுதத் தொடங்கினார் என்று நினைக்கிறேன். எனினும் அவருடைய ஆரம்ப காலத்திலேயே, 2004ல் வெளிவந்த அவருடைய முதலாவது கவிதைத் தொகுதி 'ஓவியம் வரையாத தூரிகை' இலங்கை சாகித்திய விருதும், மாகாண இலக்கிய விருதும் பெற்றது.

கடந்த சுமார் பதினைந்து ஆண்டுகளில் ஓவியம் வரையாத தூரிகை உட்பட அவரது ஐந்து கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. எனக்குக் கவிதை முகம் (2007), உடல் பச்சை வானம் (2009), பெருங்கடல் போடுகிறேன் (2013), ஜின்னின் இரு தோகை (2017) என்பன அவை. இந்த ஐந்து தொகுதிகளிலும் மொத்தம் 151 கவிதைகள்தான் உள்ளன.

அவர் எழுதத் தொடங்கி கடந்த சுமார் இருபத்தைந்து ஆண்டுகளில் அவர் எழுதியவை அதிகம் இல்லை. ஆயினும், இன்று அவர் இலங்கையில் மட்டுமன்றி "தமிழ் கூறும் நல்லுலகு" எங்கும் நன்கு அறியப்பட்டவராக, ஈழத்து முன்னணிக் கவிஞர்களுள் ஒருவராக அங்கீகாரம் பெற்றிருக்கிறார்.

கவிதைக்கான கனேடிய இயல்விருது, விஜய் தொலைக்காட்சியின் இலக்கியத் துறைக்கான சாதனைப் பெண் விருது, கவிஞர் ஆத்மாநாம் விருது, ஸ்பரோ இலக்கிய விருது என பல விருதுகள் பெற்றிருக்கிறார்.

அவருடைய கவிதைகளைப் பற்றி பல கட்டுரைகளும், மதிப்புரைகளும், ரசனைக் குறிப்புகளும் வெளிவந்துள்ளன. சேரன், சுகுமாரன் ஆகிய இன்றைய முக்கியமான கவிஞர்கள் அவரைப் பற்றி சிலாகித்து எழுதியிருக்கிறார்கள்.

இப்பின்னணியில், அனாரின் கவிதைகள் பற்றிய ஒரு விரிவான விமர்சன மதிப்பீட்டுக்கான தேவை உள்ளது. இந்தக் கருத்தரங்கில் பேச உள்ளவர்கள் அதைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

எனினும் ஒரு அறிமுக உரை என்ற வகையில் அவரின் கவிதைகளில் நான் காணும் சில அம்சங்களை மிகச் சுருக்கமாக முன்வைக்க முயல்கின்றேன்.

அனாரின் கவிதைகள் பெரும்பாலும் தன்னுணர்ச்சி வெளிப்பாடுகளாகவே உள்ளன. அவரைப் பொதுவாக ஒரு தன்னுணர்ச்சிக் கவிஞர் (lyrical poet) என்று சொல்வதில் தவறில்லை. சமூகம் தன்மீது சுமத்தியுள்ள பெண் என்ற வரையறையை மீறும் குரல் அவருடைய கவிதைகளில் ஒலிக்கின்றது. இது கோபம், விரக்தி, பெருமிதம், சோகம், காதல், வேட்கை, தனிமை என பல வகைகளில் வெளிப்படுகின்றது.

ஒருவகையில் இதை பெண் அல்லது பெண்ணிய அரசியல் எனலாம். அவ்வகையில் பெண் உடலும், பெண் மனமும் இவரது கவிதைகளின் மையம் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனாரின் கவிதைகளைப் பொருள் அடிப்படையில் வகைப்படுத்திப் பேசுவது சாத்தியம் அல்ல. அவரது பெரும்பாலான கவிதைகள் நான் முன்சொன்னதுபோல் ஒரே மையத்தின் வெவ்வேறு முகங்களாக, வெவ்வேறு வடிவங்களாக இருப்பதே அதற்குக் காரணம். ஏனைய சமூக அரசியல் பிரச்சினைகளுக்கு இவரது கவிதையில் இடம் இல்லை என்பது இதன் பொருளல்ல.

அத்தகைய கவிதைகள் எண்ணிக்கையில் குறைவே. அதிகம் பேசப்பட்ட அவருடைய "மேலும்சில இரத்தக் குறிப்புகள்" இத்தகையது. "நிருபரின் அறிக்கை", "முந்திரிமரத்தில் மழைத்துளிகள்" போன்ற வேறு சில கவிதைகளையும் இவ்வகையில் சேர்க்கலாம். எனினும், பொதுவாக அனாரின் பெரும்பாலான கவிதைகள் பெண் என்ற தன்னிலை பற்றியவை என்றே கூறலாம். இவ்வகையில் "சுலைஹா" அவருடைய மிகச்சிறந்த கவிதைகளுள் ஒன்று என்பது என் கருத்து.

கவிதையின் மொழியைப் பொறுத்தவரை அனார் எளிமையில் இருந்த இருண்மையை நோக்கி நகர்ந்திருக்கிறார் என்று சொல்லலாம். எளிமை என்பதன்மூலம் கவிதையின் பொருளும் உணர்வும் வாசகருக்கு எளிதில் எட்டக்கூடியதாக இருப்பதையும், இருண்மை என்பதன்மூலம் அவ்வாறு எளிதில் எட்ட முடியாதிருப்பதையும் நான் குறிப்பிடுகின்றேன். இதில் ஒன்று உயர்ந்தது மற்றது தாழ்ந்தது என்ற கருத்தில் அல்ல. இரண்டும் கவிதையின் வெவ்வேறு வகைகள், வெவ்வேறு முகங்கள், கவிதையின் வெவ்வேறு அழகியல் போக்குகள் என்றே கொள்ளவேண்டும்.

அனாரின் ஓவியம் வரையாத தூரிகை தொகுப்பில் உள்ள பெரும்பாலான கவிதைகளை முதல் வகைக்கும் ஏனைய தொகுப்பிலுள்ள பெரும்பாலான கவிதைகளை இரண்டாம் வகைக்கும் உதாரணமாகக் காட்டலாம்.

வனாந்தரத்து
விருட்சமொன்றில் குந்தி
வீரிட்டுப் பாடும்
தனித்த பறவையின்
பாட்டினில் கசியும் என் உணர்வு

என்ற வரிகளை எளிமையின் அழகியலுக்கும்

மெழுகுக் கனாத் தூண்களில் சாய்ந்திருக்கிறேன்
கண்களே தியான மண்டபம்
இமைகள் சுமந்தாடுகிற கடலின்
நீர் ஊஞ்சல்களில் தாவிஆடுகிறோம்

என்ற வரிகளை இருண்மையின் அழகியலுக்கும் எடுத்துக்காட்டாகத் தரலாம்.

இயற்கை உலகிலிருந்து நமக்குப் பரிச்சயமான படிமங்களைப் பயன்படுத்தும்போது எளிமையும், இயற்கை உலகில் நமக்குப் பரிசயமில்லாத இல்பொருட் படிமங்களைப் பயன்படுத்தும்போது ஒருவகை இருண்மையும் கிடைக்கின்றது.

புதிய தலைமுறையைச் சேர்ந்த சில கவிஞர்கள் இருண்மையின் அழகியலைக் கவிதையின் அடுத்தகட்ட வளர்ச்சி என்றும் கருதுகிறார்கள். இது விவாதிக்கப்பட வேண்டியது என்றாலும் கவிதையில் இருண்மையின் அழகியலுக்கும் முக்கிய இடம் உண்டு என்பதை மறுக்கமுடியாது.

கவிதையில் எளிமை, இருண்மை ஆகிய எண்ணக் கருக்கள் சிக்கலானவை. அதுபற்றித் தனியாகப் பேசவேண்டும். இந்த அறிமுகக் குறிப்பில் அது அவசியம் இல்லை.

என்னுடைய அனுபவத்தைப் பொறுத்தவரை, அனாரின் பெரும்பாலான கவிதைகள் இருண்மையின் மயக்கும் வசீகரம் உடையவை என்பதைமட்டும் நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். உடல் பச்சை வானம், பெருங்கடல் போடுகிறேன், ஜின்னின் இரு தோகை முதலிய தலைப்புகளே இத்தகையவைதான்.

அனார் தன் கவிதையில் வெளிப்படுத்தும் உணர்வுகளை, "காலை வெயிலின் வெம்மைக்குள் இசையில் நீர் உறிஞ்சும் வண்ணத்துப் பூச்சி, அவள் கண்களில் நீல விஷத்தின் கனவுகள்" போன்ற புதிய புதிய இல்பொருட் படிமங்களால் ஆன இருண்மைத் திரைகளால் போர்த்திவிடுகிறார். அது அவரது கவிதைகளுக்கு ஒரு வசீகரத்தைத் தருவதோடு என்போன்ற வாசகர்களுக்கு ஒரு சவாலாகவும் அமைந்து விடுகின்றது.

இந்தக் கருத்தரங்கு அனாரின் கவிதைகளைப் புரிந்துகொள்வதற்கான வாயில்களைத் திறந்துவிடும் என்று நம்புகின்றேன். இக்கருத்தரங்கில் அனாரின் கவிதைகளைப் பற்றிப் பேச இருப்பவர்கள் முக்கியமான படைப்பாளுமைகள். அவ்வகையில் இக்கருத்தரங்கு பயனுடையதாக அமையும் என்று நம்புகின்றேன்.

அனாருக்கு எப்போதும்போல் என் வாழ்த்துகளும் பாராட்டுகளும்.

*(அவுஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச்சங்கம் 04.12.2020 இல் நடாத்திய அனார் கவிதைகள் பற்றிய கலந்துரையாடலைத் தொடக்கிவைத்து, அனாரை அறிமுகப்படுத்தி வாசிக்கப்பட்ட சிறு குறிப்பு)*

⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AVANI

Premium Quality

# AGR IMPORTS & EXPORTS







## பூனகரி மண்ணின் பூரிப்பு
## அவானி பிராண்டின் தயாரிப்பு






**NEW TRANSFORMATION OF AGR**

**S. Arumugam, B.A**

President

**Cell: 416-832-9467 Tel: 416-613-1999**

**agr@avanibrand.com**

41 Denny Street, Ajax ON L1Z 0S3

For More Info at www.avanibrand.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நனாபுஸ்

பா.அ. ஜயகரன்

"ஜே! நீ 'போன் எக்கோ' இற்கு போ. நிட்சயமாக அது உன்னை ஏமாற்றாது" என்றார் பீற்.

நண்பர் பீற் "போன் எக்கோ" வனப்பூங்காவை அறிமுகப்படுத்தியிருந்தார். காலை. ஏரியைப் போர்த்திருந்த பனிப்புகாரின் ஊடே சூரிய ஒளி ஆங்காங்கே மெல்லென கசிந்தபடியிருந்தது. சலனமற்ற நீரின் மேற்பரப்பில் பாறையும், கரையோடு ஒட்டியிருக்கும் மரங்களின் விம்பமும் பதிந்திருந்தது. கோடை நாளில் இதமான மெல்லிய காலைக் குளிரும், இயற்கையின் வனப்பும் மனதை ஆட்கொண்டிருந்தது. மிசனோ ஏரியின் கரையே செங்குத்தாக குற்றி வைத்ததுபோல் இருக்கிறது மிசனோ பாறை. 330 அடி உயரமான பாறை. ஒன்றரை கிலோ மீற்றர் நீட்சி அதற்கு இருந்தது. பாறையும் நீரும் சேரும் பகுதி ஆழம் மிக்கது. ஆழத்தின் நிறத்தை ஏரியின் அந்தப் பகுதி காட்டியபடியிருக்கும். பாறையின் அடிவாரத்தில் தீட்டப்பட்டிருக்கும் முன்னோரின் கோட்டோவியங்களைப் பார்ப்பதற்காக 'கனு' வள்ளத்தை வலித்துக்கொண்டு பாறையின் அடிவாரத்தை எட்டியிருந்தேன். ஏரி சலனமற்று கிடந்தாற்தான் பாறையின் அருகே இருந்து அந்த ஓவியங்களை தரிசிக்க முடியும். அலையெழுந்தால் பாறையருகே கனுவள்ளத்தை கொண்டுசெல்ல முடியாது. பாறையோடு சேர்த்து அறைந்துவிடும். ஏரியின் உறக்கம்பற்றி நான் நன்கறிவேன். முன்பொரு சந்தர்ப்பத்தில் ஏரியின் கொந்தளிப்பால் அலைகளுக்குள் அடிபட்டு ஏதோவொரு கரையில் வந்தடைந்திருந்த என்னை வனக் காவலர்கள் மீட்டெடுத்தார்கள். ஏரியின் அமைதியை முன்னோர்கள் அறிந்திருப்பார்கள். அந்த அமைதியின் பொழுதில்தான் இந்த ஓவியங்களை வரைய முடிந்திருக்கும். ஆயிரம் ஆண்டுகளா..? அவற்றில் சில இன்னமும் பழமை வாய்ந்ததாக இருக்கக்கூடும்.

முயலைப் போன்ற நீண்ட செவிகளை உடைய "நனாபுஸ்" என்கிற உலகைப் படைத்தவனின் கோட்டோவியத்தின் அருகே வந்தடைந்திருந்தேன். அவன் கையில் கோல் ஒன்றை வைத்திருந்தான். அவன் மந்திர சக்தி நிறைந்தவன். அவனால்தான் தீமைகளை அழிக்க முடியும். அகங்காரத்தின் கோரத்தை எதிர்கொள்ள முடியும். அவனால் ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும். நீரை, காற்றை, தீயை, மண்ணை, வானத்தை, உயிர்களை அவன்தான் படைத்தான். அவனது கனவால்தான் இவ்வுலகே உருக்கொண்டது. அவன் தனது கனவை நனவாக்கினான். அவனது படைப்புகள் குறித்து அவனுக்கு அதிருப்தி இருந்தது. இந்தப் படைப்புகளிடையே இருக்கும் அறிவை, ஆற்றலை, மகிழ்வை, துக்கத்தை, கோபத்தை, எரிச்சலை, பொறாமையை, பகையை, எதிர்ப்பை, அறியாமை, சண்டையை, ஆடலை, பாடலை, இசையை எல்லாம் அவன் உயிர்களை செழுமைப்படுத்தவே உருவாக்கினான். அவனது படைப்புகளில் எப்போதுமே அவனுக்கு திருப்தி இருப்பதில்லைப்போலும். அதனால் அவனால் காற்றை ஏவமுடிகிறது. இடி, மின்னலை உருவாக்க முடிகிறது. மழையைப் பொழிவிக்க முடிகிறது. பேரலைகளை உருவாக்க முடிகிறது. தீயை ஆட்டுவிக்க முடிகிறது. பூமியை குலுக்க முடிகிறது.

"அவனால்தான் ஏரி இன்று உறங்கிக் கிடக்கிறது" குரல் கேட்டு

"ஆம்" என்றவாறு திரும்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் அங்கு இருக்கவில்லை. தூரத்தில் சில 'கனு' வள்ளங்கள் தெரிந்தன. குத்தென நிற்கும் பாறையில் ஏறும் சாகசக்காரர்கள் எவருமே அங்கிருக்கவில்லை. இங்கு வாழும் மக்களுடன் இந்த ஏரியையும், பாறைகளையும், மரங்களையும் படைத்த "நனாபுஸ்" பேசிக்கொண்டுதான் இருக்கிறான். அவனிடமிருந்து வரம் பெறுவது இலகுவானதில்லை. அவனுக்கு பெரும் சடங்கு தேவைப்படும். அதை அவன் ஏற்று அங்கு எழுந்தருளி உங்கள் தேவைகளை உவந்தளிக்கவேண்டும். இந்தப் பாறை அவனுக்குப் பிடித்தமானது என்கிறார்கள். அதனால் பாறையில் கீறுவதை அவன் அறிந்து கொள்கிறான்.

நனாபுஸ்சை பார்த்தவாறு இருந்தேன். கோட்டோவியங்களின் ஒவ்வொரு நுண்துகளிலும் ஒவ்வொரு கணம் நிலைகொண்டிருக்கிறது. அதன் அதிர்வு ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் யாரோ ஒரு மனிதரோடு நெருங்கி ஊடாடிக்கொண்டுதான் இருக்கிறது. அவனைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது ஏன் அந்தக் கேள்வி மீண்டது. அந்தக் கேள்வி தொடுக்கப்பட்ட கணங்கள் கடந்து வருடங்கள் ஆகின்றன. ஆனாலும் அதன் அதிர்வு அருட்டியபடியேயிருக்கிறது.

"புது உலகு படைக்கப்படும்" என்ற குரல்கேட்டு திரும்பினேன்.

லூன் பறவை ஏரிக்குள் வந்திறங்கியிருந்தது. ஏரியின் உறக்கத்தை குலைக்காது அதன் மீதில் மெருதுவாகக் குந்தி கூவியது. "நனாபுஸ்" பற்றி பீற் சொல்லுகிற புராணக்கதைகளில் லூன் பறவை அடிக்கடி வந்துபோகும். புது உலகைப் படைப்பதற்கு தன் உயிரையே ஈந்திருக்கிறது லூன்.



....

இந்தவாரம் நோமன்டி மாவீரர்களுக்கான வாரம். முன்னாள் படைவீரர்கள் அணிவகுத்து வந்துகொண்டிருந்தனர். சக்கர நாற்காலியில் இருப்போரும், முதிய வீரர்களும் முன்னால் வந்தனர். அவர்களைத் தொடர்ந்து போரில் அங்கயீனர்களான வீரர்கள் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களோடுதான் பீற் இராணுவத்திற்கே உரிய இறுகிய நிமிர்ந்த மார்போடு காலை சற்று இழுத்தவாறு வந்துகொண்டிருந்தார். போர் சாதனையாளர்களுக்கு வழங்கும் பதக்கங்கள் அவர் மார்பை அலங்கரித்திருந்தன. அவர் அறுவது வயதைக் கடந்திருந்தார். இரண்டாவது மகா யுத்தத்தின்போது வலது காலை இழந்ததால் பொய்க்கால் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. பிரான்சை மீட்பதற்காக நோமன்டியில் தரையிறங்கிய இளம் கனேடியப் படைகளில் இவரும் ஒருவர். அணிவகுப்பு மரியாதை, அஞ்சலியென வழமையான சடங்குகள் நடந்து முடிந்திருந்தன. இப்போது அனைவரும் மண்டபத்துக்குள் வருகை தந்திருந்தார்கள். அனைவருக்கும் சிற்றுண்டிகளும், பானங்களும் வழங்கப்பட்டன. அங்கு வருகைதந்த மாணவர்களோடு படைவீரர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டிருந்தார்கள். பீற் தனது அனுபவத்தைக் கூறத் தொடங்கியிருந்தார்.

"கரையை நோக்கி எமது டிங்கி வள்ளங்களில் செல்லும்போதே சரமாரியாக எங்கள்மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. எமக்கு எந்தவொரு முன்னனுபவங்களும் இருக்கவில்லை. பயிற்சியும் சில மாதங்கள்தான். ஜேர்மனியர்கள் தகுந்த இடத்தில் இருந்தார்கள். பிரித்தானியர்கள் எம்மை பகடைக்காய்போல் நகர்த்தினார்கள். கொத்துக்கொத்தாய் மடிந்தோம். எதிரிகளுக்கு ஏதாவது பாதிப்பை ஏற்படுத்த முடிந்ததாய் எமக்குத் தெரியவில்லை. கரையில் காலடி வைப்பதற்கே நாம் 359பேரை பலிகொடுக்க வேண்டியிருந்தது. நோமன்டியை மீட்கும் எண்ணத்தை பிரித்தானியர்கள் விட்டுவிடவில்லை. எம்மை நகர்த்திக்கொண்டேயிருந்தார்கள். கொலைக்களம். பிய்ந்த உடல்களும், நிணமும், குருதிச் சகதியும், இளம்குருதி வாசனையும், காயப்பட்டோரின் ஓலங்களும், கேட்டபடியேயிருக்கும் கட்டளைகளும். இரண்டரை மாதங்கள் அந்தக் கொலைக்களத்தில் நின்றோம். இறுதி நாளில்தான் எனது வலது காலை இழந்தேன். என்னோடு வந்திருந்த 5000ற்கும் மேற்பட்ட கனேடியத் துருப்புகள் தங்கள் வாழ்வை அர்ப்பணித்திருந்தார்கள். நோமன்டியின் ஒவ்வோர் அங்குலத்திலும் ஒரு கனேடியன் இறந்திருந்தான். 'போர் ஓய்ந்தது நாம் நோமன்டியை மீட்டுவிட்டோம்' என்று களிகொண்ட தருணத்தில்கூட வெடிக்காமல் கிடந்த குண்டொன்று எமது வாகனத்தில் சிக்குண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடித்தது. நான் வைத்தியசாலையில் கண்விழித்தபோது எனது வலது கால் துண்டிக்கப்பட்டிருந்தது. கண்கள் பார்வையிழந்திருந்தன. செவிவழி எதுவுமே வந்து சேரவில்லை. பார்வையும், கேள்வியும் வருவதற்கு மாதங்கள் ஆகின.

கனேடியச் சமூகத்தில் பழங்குடியினருக்கெதிரான அடக்குமுறையிலிருந்து வெளியேறுதற்கு வாய்ப்பாகவே போரைத் தேர்ந்தெடுத்தேன். எம்மில் பலர் காலால் படையின் சமையல்காரர்களாவே சேர்க்கப்பட்டோம். விமானப்படை, கடற்படை எம்மைச் சேர்க்கவில்லை. இராணுவத்திற்குள் நாம் இரண்டாந்தரமாகவே நடத்தப்பட்டோம். போர்க்களம் எங்களுக்கு பலவற்றைக் கற்றுக்கொடுத்தது. எதிரியின் துப்பாக்கிக்கு வேற்றுமைகள் தெரிவதில்லை என்பதை எமது தளபதிகள் புரிந்துகொண்டார்கள். எமது படைகளுக்கு இழப்புகள் அதிகரித்தபோது எங்களில் பலர் படைவீரர்களாக மாற்றப்பட்டோம். காலால்படையிலும் பதவி உயர்வுக்குரிய தகுதி எமக்கு இருந்தும் தவிர்க்கப்பட்டோம்.

கனடா மீண்டபோது மீண்டும் போராடவேண்டியிருந்தது. நோமன்டியில் போராடியபோது நான் கனேடியன். கனடாவுக்கு மீண்டபோது நான் பழங்குடி. எமது உரிமைகளுக்காக போராட வேண்டியிருந்தது. வெள்ளை கனேடிய வீரர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் எமக்கு கிடைக்கவில்லை. பழங்குடி அடையாளத்தை நான் இழக்கவேண்டுமென்றார்கள். எனது அடையாளத்தை இழந்து சலுகைகளைப் பெற்றுக்கொள்ள எனக்கு உடன்பாடில்லை. மானிட சுதந்திரம், விடுதலைக்காகப் போராடிய நாம் கனடாவில் எதிர்கொண்டதெல்லாம் இனவாதம். அதுவும் எமது நிலத்தில். எனது ஓய்வூதியத்திற்காக 21 ஆண்டுகள் போராடினேன்."

அவரது குரல் தளதளத்தது. சற்று மௌனமாக விருந்தார். கண்களைத் துடைத்தவாறு தொடர்ந்தார்.

"இந்த சந்திப்புகளில் இளையவர்களை சந்திக்கும்போது நான் கண்கலங்குவது வழமை. உங்களைப்போன்ற இளம் பருவம் எமக்கிருந்தது. அது இனிமையானது. எமது வாழ்வு எவ்வளவு எளிமையானது. இயற்கையோடு ஒட்டியது. எவ்வளவு புராணக்கதைகள். புராணக்கதை மாந்தர்கள். எல்லைகள் அற்ற இந்த இயற்கை உருண்டையை, இந்த அண்டத்தை ஏதோவொரு கதையால் தரிசிக்க முடிந்தது. மானிடத்தும், பிற உயிர்களிடத்தும் அன்புகாட்ட முடிந்தது. அதனால்தான் நாம் ஏமாற்றப்பட்டோமோ தெரியாது. எம்மில் பலருக்கு போரின் வடுக்களை சுமக்க முடியவில்லை. மனவுளைச்சல். அதைப் போக்க ஆதரவோ, ஆதாரமோ இருக்கவில்லை. போருக்குள்ளால் வெளியேற முடியாத நிலை. போரின் பின்னரான வலி போரைவிட வலியது. போருக்குப் பின்னாலும் காவவேண்டியுள்ளது. கனேடிய சமூகத்தால் நிராகரிக்கப்பட்டோர் ஆனோம். எம்மில் பலர் போதைகளுக்கு அடிமையானோம். தெருக்களில் கையேந்திக் கிடந்தோம். போரின் சாகசங்களை மட்டுமே கதைப்பது ஒரு சாராருக்கு உகந்தது. அதனால்தான் போரின் வடுக்களைச் சுமப்பவர்கள் எளிதாகக் கைவிடப்படுகிறார்கள்." அமைதியாய் இருந்தார் பீற்.

எல்லோரும் மௌனத்தில் உறைந்திருந்தோம். எம் கண்கள் கலங்கியிருந்தன. ஒரு குவளை நீரை கொண்டுபோய் அவரிடத்தில் கொடுத்தேன். அதை வாங்கி அருந்திவிட்டு வெற்று பேளையை என்னிடம் நீட்டியவாறு "நன்றி ஜே" என்றார். இந்தச் சங்க கட்டிடத்தின் பராமரிப்பாளராக ஆறு வருடங்களாக வேலை செய்கிறேன். சங்க அங்கத்தினர்களான முன்னாள் போர்வீரர்கள் அனைவரையும் நன்கு அறிவேன். அவர்களில் பலர் விசேட தேவையுடையவர்கள். பலரும் நோமன்டி போரில் பங்குகொண்டவர்கள்தாம்.

பீற் தனது கோட் பையிலிருந்து தட்டை வடிவான இரண்டு அங்குல விட்டமுள்ள கல்லொன்றை வெளியில் எடுத்தார். அதை தனது உள்ளங்கைக்குள் வைத்து அனைவருக்கும் காண்பித்தார்.

"இது 'நனாபுஸ்'. இந்த நனாபுஸ்சைத்தான் எனக்குத் துணையாக கிராமத்திலிருந்து கொண்டு சென்றிருந்தேன். எனது இதயத்திற்கு அருகில் இவன் எப்போதும் இருந்தான். அந்தக் கொடிய யுத்தத்துக்குள் எனது இதயம் கனக்கும்போதெல்லாம் இவன்தான் இதயத்தை இலகுவாக்கினான். வானில் புதிய நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாக அதிகரிக்கத் தொடங்கின. இனியும் அண்டத்தால் நட்சத்திரங்களை தாங்கமுடியாது என்று அவன் அறிந்திருக்கவேண்டும். நனாபுஸ் போரைக் கொன்றான். போரைக் கொன்றபொழுது எனது கால் போன கணமாய்க்கூட இருக்கலாம். நான் நட்சத்திரமாவதை அவன் தடுத்துவிட்டான்"

என்றவாறு மெல்லிய புன்னகையை உதிர்த்தார் பீற்.

...

பதுங்கு குழியொன்றுக்குள்ளிருந்து பீற் சென்று கொண்டிருந்த குழுவின்மீது தாக்குதல் தொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அந்தக் குழியைக் கைப்பற்றினால் நகருக்குள் செல்லும் பாதையொன்று திறக்கப்பட்டுவிடும். பதினாறு கனேடியப் படையினர் பதுங்குழிக்குள்ளிருந்து தாக்கும் ஜேர்மன் படையை எதிர்கொண்டார்கள். பீற்றும் சாமும் குழுவிலிருந்து பிரிந்து பதுங்குகுழியிருக்கும் இடத்துக்குப் பின்னால் செல்வதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பதுங்கி தரையில் தவழத்தொடங்கினார்கள். அவர்களைக் காக்க மிகுதியினர் பதுங்குகுழிமீது தாக்குதல் தொடுத்தபடியிருந்தார்கள். பதுங்குகுழியை அண்மித்ததும். 'மில்ஸ்' கைக்குண்டுகளை பதுங்குகுழிக்குள் எறியத்தொடங்கினார் பீற். பதுங்குகுழிக்குள்ளிருந்து மீள்தாக்குதல்கள் எதுவும் தொடுக்கப்படவில்லை. சாமைப் பார்த்தார். அவன் அவரைத் தொடரவில்லை. நூறு அடி தொலைவில் அவனது கைகளை அசைத்தவாறு இருந்தான். மீளவும் அவன் இருக்குமிடத்திற்கு செல்லமுடியாது. அதற்கு முன்னர் பதுங்குகுழியிலிருந்து தாக்குதல் தொடுக்க எவரும் இல்லை என்பதை உறுதிப்படுத்தியாக வேண்டும். பதுங்குகுழி பத்தடி தொலைவிலேயேயிருந்தது. ஆயினும் அதை அண்மிப்பதற்கு கூடுதல் அவதானமும் பொறுமையும் தேவைப்பட்டது. பதுங்கு குழியிலிருந்து சிறு துளைக்குள்ளால் உள்ளிருப்போரை அவதானித்தார். ஒருவன் மட்டுமே உயிரோடு இருப்பது தெரிந்தது. அவனும் காயமடைந்திருந்தான். பதுங்குகுழிக்குள் இறங்கி "கையை உயர்த்து" எனப் பலமாகக் கத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளை உயர்த்தும் நிலையில் அவன் இருக்கவில்லை. அதற்குள் ஆறு சடலங்கள் இருந்தன. ஆயுதங்களை மெதுவாக அகற்றினார். அவர்களது பைகளை மெதுவாகத் திறந்து அதற்குள்ளிருக்கும் பொருட்களை மெதுவாக அகற்றினார். காயப்பட்டுக் கிடந்தவன் அவனது முகத்தால் தனது சட்டைப் பையைக் காண்பித்தான். அவனது சட்டைப் பைக்குளிருந்த முடிச்சை எடுத்துப் பிரித்தார். குளிசைகள். தனது வாயை ஆவென்று காட்டினான். அந்தக் குளிசையில் இரண்டையெடுத்து அவன் வாய்க்குள் இட்டு தண்ணீரை ஊற்றிவிட்டார் பீற். பதுங்குகுழிக்குள் கிடந்த துப்பாக்கிகளின் சன்னங்களை அகற்றி வெளியே எறிந்தார். ஜேர்மன் படைகள் சோர்வையும், வலியையும் போக்க 'மெத்' என்ற போதை மருந்தைப் பாவிப்பதை பீற் அறிந்திருந்தார். சடலங்களின் உடைப் பைகளைத் துலாவி 'மெத்' குளிசைகளை எடுத்தார். வெளியில் நின்று

"இந்த இடம் இப்போ பாதுகாப்பானது" எனக் கத்தினார்.

ஆயினும் அவரது குழுவிலிருந்து எவரும் வெளி வருவதாகத் தெரியவில்லை. சாமின் கை மட்டும் சைகை செய்தபடியிருந்தது. சாமுக்கு வயிற்றில் சன்னம் பாய்ந்து வயிறு கிழிந்திருந்தது. அவன் குடலை அமுக்கி பிடித்திருந்தான். பீற் உடைகளைக் கிழித்து அவன் வயிற்றுக்கு கட்டுப்போட்டார். அவனைப் பதுங்குகுழிக்கு இழுத்து வந்து சேர்த்தார். வெடிச்சத்தங்கள் தொடர்ந்தவண்ணமே இருந்தன. சாம் காயத்தில் முனகிக்கொண்டிருந்தான். அவனைவிட்டு விலகமுடியாத நிலையில் பீற் இருந்தார். அவனது காயங்கள் அவனைக் கொன்றுவிடும். அதுவரையில் அவனுக்கு ஆதரவாக இருப்பதற்கு முடிவெடுத்திருந்தார். அவன் ஒருவன்தான் அவனது குழுவில் எஞ்சியிருப்பவன். 'மெத்' குளிசையை எடுத்து சாமின் வாய்க்குள் திணித்தார். தானும் ஒன்றை போட்டுக்கொண்டார். வலியை துறக்கக்கூடிய மென் உணர்வொன்று அவருக்குள் மெல்லக் குடிகொண்டது. குழிக்குள்ளிருந்த பிணங்களைப் பார்த்தார். ஜேர்மன்காரனின் ஒற்றைக்கண் திறந்தபடியிருந்தது. அவனும் அனுங்கிக்கொண்டிருந்தான். சாமை அரவணைத்து வைத்திருந்தார். சாம் வலியைத் துறந்திருந்தான். அவனது அலறல் அணுக்கமானது. தாயை அழைத்தவாறு இருந்தான். பீற் அவனைத் தடவியபடியிருந்தார்.

இரவு கூடியிருந்தது. பிய்ந்திருந்த குழியின் கூரைக்குள்ளால் ஒளிரும் நட்சத்திரங்கள் தெரியத் தொடங்கின. நோமன்டியின் வானம் அவருக்காய் விரியத்தொடங்கியது. போர்ச் சன்னதத்திலிருந்து அவர் மீளத் தொடங்கியிருந்தார். பதுங்குகுழி அவரது உடைகளைப் பற்றி இழுப்பதாய் உணரத்தொடங்கினார். உடைகளைக் களைந்தார். அம்மணமாய் வெளியே வந்தார். ஆங்காங்கே ஏதேதோ பற்றி எரிந்தவண்ணமிருந்தன. அவர் பாதங்களில் தடக்குப்பட்ட பிணங்களைக் கடந்தவாறு நடந்தார்.

தீ நடனமாடுவதைப் பார்த்தார். அதன் கரங்கள் அண்டம் நோக்கி நீண்டு அபிநயித்துக் கொண்டிருந்தன. அதை நோக்கி நடந்தார். அகவல் ஒலி வெளியில் அதிர்ந்தது. வானைப் பார்த்தார். நாலு சுளகு நீளத்தில் சிறகுகளை அகல விரித்தபடி கழுகொன்று சுற்றியது. படைத்தவனின் வருகையை அது உணர்த்திற்று. பறையை வாசித்தபடி அண்டத்திலிருந்து நனாபுஸ் இறங்கி வந்தான். அவன் தாளத்தின் அதிர்வுப் பிடிக்குள் அண்டம் கட்டுண்டது. தாளத்திற்கு இசைவாய் கழுகின் அகவல் ஒலி எழுந்தது. பீற்றின் பாதங்கள் அவன் தாளத்தின் நடை கொண்டன. அது தீயின் நடை. பீற் ஆடத்தொடங்கினார். வானின் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாக வந்திறங்கியபடியிருந்தன. ஆயிரமாயிரம்.

"தோழர்களே ஆடுங்கள்! தோழர்களே ஆடுங்கள்!!" பீற் அழைத்தவாறு இருந்தார்.

அண்டம் விட்டிறங்கி நட்சத்திரங்கள் தீயை மையம் கொண்டு ஆட ஆரம்பித்தன. தீயின் களி நடனத்துள் அனைவரும் ஈர்க்கப்பட்டார்கள். அந்த ஈர்ப்பில் தொலைந்த கணங்கள் அவர்களுக்காய் மீண்டன.

"வாழ்வைப் பாடுங்கள் வாழ்வைப் பாடுங்கள்" எனத் தோழர்கள் கூச்சலிட்டார்கள்.

வாழ்வின் பாடலை நனாபுஸ் பாடத் தொடங்கினான். தோழர்களின் தொலைந்த காலங்கள் மேலும் மேலும் சேர்ந்த வண்ணமிருந்தன. அவற்றின் வண்ணங்கள் ஒளிர்ந்தும், தெறித்தும், மின்னியும் தீயைச் சுற்றின. பாதங்களின் உதைப்பிலிருந்து துகள்கள் பிறந்து நட்சத்திரப் புகாராய் தீயின் மையத்தை சுற்றத் தொடங்கிற்று. பேரண்டம் உருக்கொண்டது.

"இதோ வாழ்வு என்னும் புது உலகு" என்று பேரண்டத்தில் சிறு புள்ளியை காண்பித்தான் நனாபுஸ். அதை வாழ்த்திப் பாடி ஆடியபடியே புது உலகு நோக்கிப் போனார்கள் தோழர்கள்.

பீற்றின் தொண்டை கட்டத் தொடங்கிற்று. கால்கள் தாளத்திலிருந்து இடறின. தீ மெல்லென சுருங்கத் தொடங்கிற்று. நட்சத்திரங்கள் வானில் மீண்டும் உலவத் தொடங்கின. பீற் பிணங்களோடு தீயின் அண்டை வீழ்ந்து கிடந்தார். துப்பாக்கி ஓசைகளும், குண்டுச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன. அசதி கலைந்து எழுந்தார். தான் எங்கிருக்கிறேன் என்பதை நினைவுக்குக் கொண்டு வந்தார். தீயின் ஒளியில் தெரிந்த பிணங்களின் முகங்களைத் தடவினார். தோழர்கள். வலியில் கத்தினார். சாமின் நினைவு மீண்டது. பதுங்குகுழிக்குள் வந்தார். எவரும் உயிருடன் இல்லை.

"நண்பா மன்னித்து விடு. நாங்கள் எல்லோரும் தோற்றவர்கள்தான்"

உடைகளை அணிந்தார். சாமைப் பதுங்குகுழியால் வெளியே கொணர்ந்து அருகிலிருந்த கட்டிடமொன்றில் கிடத்தினார். வெளியில் வந்து ஏனைய தோழர்களின் உடல்களையும் கட்டிடத்துக்குள் கொண்டுவந்து சேர்த்தார். மனம் களைக்கத் தொடங்கியது. தோழர்களின் பிணங்களிடை குந்தி வானை வெறித்துப் பார்த்தபடியிருந்தார். 'மெத்' குளிசையொன்றை கையில் எடுத்தார்.

"நனாபுஸ்! இந்த இரத்த சகதிக்குள்ளிருந்து என்னை வெளியே எடுத்துவிடு" என்று கத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத் குளிசை அவர் தொண்டைக்குள்ளால் இறங்கத் தொடங்கியது. இன்னம் சிறிதுநேரத்தில் வானில் கழுகு தோன்றி படைத்தவனின் செய்தியொன்றை பீற்றுக்கு கூறக்கூடும்.

....

பீற் விசேட நாட்களைத் தவிர்க்கத் தொடங்கியிருந்தார். அவ்வாறு அவர் சமூகமளித்தாலும் பதக்கங்களை இப்போது அணிவதை நிறுத்தியிருந்தார். பழங்குடியினர் விசேட நாட்களில் அணியும் கழுகு இறகுகள் கொண்ட தலை அணி, தோல் மேலாடைகள், தோல் பாதணிகள், மணிகளைக்கொண்ட அணிகலன்களை அணிந்து அவர் வரத்தொடங்கியிருந்தார். ஆரம்பத்தில் சில எதிர்ப்புகள் கிளம்பியிருந்தன. பீற் அவற்றையெல்லாம் கடக்கும் வல்லமை கொண்டவர். தோழர்களுக்கு செலுத்தும் அன்பும், மரியாதையுமே அவரை அங்கு வரவழைக்கிறது. முதுமையின் அனுபவ அறிவால் செப்பனிடப்பட்ட ஆன்மாவாக அவர் உருக்கொண்டிருந்தார். சூழலை ஆட்கொள்ளக்கூடிய பிரசன்னம் அவரிடமிருந்தது. அவரின் கதைசொல்லும் ஆற்றல் யாவரையும் ஒற்றி இழுக்கக்கூடியது. பழங்குடியினரின் கதைசொல்லும் பாங்கு, மரபின் தொடர்ச்சி அவரிடமிருந்தது. அவரால் கதைமாந்தர்களாய் மாறிவிட முடிகிறது. கதைகளைப் புனைய முடிகிறது. சிறுவர்களுக்கு இவரின் கதைகள் பிடித்துப் போகிறது. போரை அவர் மறக்க விரும்புகிறார். குழந்தைகளிடத்து பேசுவது அவருக்கு பிடித்தமானதாகவிருக்கிறது. அது போரின் வலிகளை ஆற்றிவிடுகிறது. பழங்குடியினரின் புராணக் கதைகளைக் கேட்க குழந்தைகள் பெரியவர்கள் எல்லோரும் கூடுகிறார்கள். குழந்தைகளுக்கு கதை கூறுவதற்காக பாடசாலைகள், நூலகங்களுக்கும் அழைக்கப்படுகிறார். அவருடன் புராணக் கதை நாயகர்களின் பொம்மைகளும் வந்துவிடுகின்றன. "நனாபுஸ்" இன் கதைகளைக் கூறும்போது அவர் நனாபுஸ்சாகவே மாறிவிடுகிறார். அப்போது தந்திரத்தால் சிறார்களுக்கு பரிசுகளை வரவழைத்துக் கொடுக்கிறார். போரின் குரூரங்களைவிட குழந்தைகளின் புன்னகை அவருக்குப் பிடித்திருக்கிறது. இப்போது அவர் சங்கத்திற்கு வருவதைக் குறைத்திருந்தார். ஆனாலும் அவருக்காக 'குழந்தைகள் கதைநேரம்' சங்க மண்டபத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இப்போ அவரது இடது கால் தனது சக்தியை இழந்திருக்கிறது. அவரின் இடது காலின் வலியால் இயந்திர நாற்காலியில்தான் வந்து போகிறார். ஒவ்வொரு கிழமையும் குழந்தைகளுக்காக தன்னை தயார்ப்படுத்துகிறார். அவரது கதைகள் எல்லோரையும் கட்டிப்போடும் வல்லமை கொண்டவை. அவர் வந்ததுமே 'நனாபுஸ்' எனக் குழந்தைகள் சந்தோசத்தில் ஆர்ப்பரிக்கின்றனர். அந்த ஆர்ப்பரிப்பு அவரது காலுக்கு வலுவைக் கொடுக்கிறது.

"நனாபுஸ் உங்களுக்கு ஏன் ஒரு கால் இல்லை" என ஒரு குழந்தை கேட்டது.

சிறிதுநேரம் மௌனித்திருந்தார். தனது இருக்கையிலிருந்து ஒற்றைக் காலில் எழுந்து நின்றார். அவரது வலது கையில் "நனாபுஸ்" இன் கோல் இருந்தது. கைகளை வானம் நோக்கி விரித்து அண்ணாந்து வானத்தைப் பார்த்தார். ஓநாய் போன்று ஊளையிட்டார். பின்னர் குழந்தைகளை

"ஆமாம் ஓநாய்தான். ஓநாய் மிகுந்த களைப்புடன் என்னிடம் வந்தது. நீண்ட நாட்களாக நீர் இன்றி வந்திருக்கிறது. என்னிடம் நீர் வாங்கிப் பருகியது. களைப்பு அடங்கியவுடன் ஓநாய் பேசத்தொடங்கியது."

நோக்கி "நனாபுஸ்" உங்களிடம் ஒரு கேள்வி கேட்கப் போகிறார்.

"எந்த விலங்கு இப்படியாகக் கத்தும்?"

எல்லாக் குழந்தைகளும் தங்கள் கைகளை உயர்த்தினர்.

"எல்லோருக்கும் விடை தெரிந்திருக்கிறது அருமை. சரி எல்லோருமே சொல்லுங்கள்"

"ஓநாய்" என்றார்கள் எல்லோரும்.

"என்ன சொல்லுகிறீர்கள் நனாபுஸ்சுக்கு கேட்கவே யில்லை. எங்கே உரக்கக் கூறுங்கள்"

அனைத்துக் குழந்தைகளும் ஒற்றைக் குரலில் "ஓநாய்" என்று பலம் கொண்டு கத்தினார்கள். மண்டபத்துள் எதிரொலித்தது அவர்களது குரல்.

"ஆமாம் ஓநாய்தான். ஓநாய் மிகுந்த களைப்புடன் என்னிடம் வந்தது. நீண்ட நாட்களாக நீர் இன்றி வந்திருக்கிறது. என்னிடம் நீர் வாங்கிப் பருகியது. களைப்பு அடங்கியவுடன் ஓநாய் பேசத்தொடங்கியது."

"நனாபுஸ், நாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம். நீர்ப்பூதம் மீண்டும் வந்துவிட்டது. அதனது மாயக் கதைகளால் பீவர்களும், மாஸ்கி எலிகளும் ஏமாற்றப்பட்டுவிட்டன. தண்ணீரில் வாழ்பவர்களும் ,ஈருடக உயிர்களுமே மேலானவர்கள் என்றும் படைப்புகளில் நீர்தான் முதலில் படைக்கப்பட்டதாயும், அங்கே உயிர்கள் முதலில் தோன்றியதாயும் தாமே முதன்மையானவர்கள் என்றும் நீர்ப்பூதம் கூறுகிறது. பீவர்களும், மாஸ்கி எலிகளும், ஆமைகளும், லூன் பறவைகளும் அவனது கூற்றுக்கு மயங்கி அங்கே சென்றுவிட்டனர். அவனது கட்டளையை ஏற்று எமக்கு நீர் கொண்டுவரும் ஆற்றை அணையிட்டு மறித்துவிட்டார்கள். இப்போ நீர் இல்லை. நாங்கள் கொல்லப்பட்டு விடுவோம். நீங்கள்தான் எம்மைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றவேண்டும் நனாபுஸ்" என ஓநாயாக பேசி முடித்தார் பீற். பின்னர் நனாபுஸ்சாக மாறினார்.

"ஓநாயாரே நீங்கள் இளைப்பாறுங்கள். என்னை சற்று யோசிக்க விடுங்கள். இவ்வுலகு எல்லோருக்குமானது. பெரியோர் சிறியோர் என்று ஏதுமில்லை. இயற்கையின் துடிப்பு எங்கெல்லாம் உண்டோ அவை அனைத்தும் சமானம். ஒன்றுடன் ஒன்று கலந்ததுதான் வாழ்வு" தனது கைத்தடியை ஊன்றியவாறு ஒற்றைக் காலால் நடந்து திரிந்தார் பீற். தனது ஜிப்வே மொழியில் வானம் நோக்கி கதைத்தார்.

"நான் கழுகோடு கதைத்தேன். அது எனது செய்தியை படைத்தவனுக்கும் முன்னோர்களுக்கும் எடுத்துச் செல்லும். அவர்களின் செய்தியை எனக்கு எடுத்து வரும். அவர்கள் செய்திதான் என்னை வழிநடத்துகிறது. ஓநாய்களை அழைத்துக்கொண்டு நீர்ப்பூதத்தை சந்திக்கச் சென்றேன். நீர்ப்பூதம் பல சக்திகள் கொண்டது. பெரும் அலையாக எழும்பி அனைத்தையும் தூக்கியெறியும் பலம் கொண்டது. பெரும் சுழியாக எல்லாவற்றையும் வளைத்து தன்னுள் இழுத்துக்கொள்ளும் வல்லமை கொண்டது. அந்தப் பூதத்திற்கு ஒற்றைக் காலேயிருந்தது. செல்லும் வழியெல்லாம் நீர் இன்றி உயிர்கள் காய்ந்தும், களைத்தும், மடிந்தும் இருந்தன. நீர்ப்பூதம் கட்டிய அணைக்கு முன்னால் 'நனாபுஸ்' போய் நின்றேன். எனது நா காய்ந்து போயிருந்தது. குடுவைக்குள் கொண்டுவந்த நீர் அனைத்தும் தீர்ந்திருந்தது. நீர்ப்பூதத்தை அழைப்பதற்கு நாவுக்கு வலுவில்லாமல் இருந்தது. எனினும் எனது பலம்கொண்டு அதை அழைத்தேன். அது சிரித்தவாறு வந்தது.

"எனது பலம் உனக்கு புரிகிறதா..? சண்டை போடுவதற்கு உன்னாலும் உன் தோழர்களாலும் முடியாது என்பது எனக்குத் தெரியும்." என்றது பூதம்.

"நான் சண்டையிடுவதற்கு வரவில்லை. எனது தோழர்களை மயக்கி அடிமையாக்கி வைத்திருக்கிறாய். அவர்களோடு நான் போராட முடியாது. அணையைத் திறந்து விடு, தோழர்களையும் விடுவித்து விடு."

நான் சொன்னவுடன் பெரிய அலையொன்று வந்து எனது முகத்தில் அறைந்து என்னைத் தூக்கி தூரே வீசியது. என்னுடன் வந்த தோழர்களையும் அவ்வாறே செய்தது. அந்த அலை தோழர்களை திசை மாற்றிவிட்டது. நான் உடனே எழுந்து நின்றேன். எனது முன்னோர் கற்றுத்தந்த மந்திரத்தை முணுமுணுத்தேன். சற்றுக்கெல்லாம் என் கால்கள் வளர்ந்தன. பூதத்தின் உயரத்தை மீறி நான் வளர்ந்து நின்றேன். எனது கைகள் நீண்டன. எனது உடல் பருத்தது. பூதத்தின் அச்சம் அதன் கண்களில் தெரிந்தது.

"பூதமே இப்போது சொல்... சண்டைக்கு நீ தயார். நீ மாயம் அறிந்தவன். ஏய்க்கத் தெரிந்தவன். எனது தோழர்களை எனக்கு எதிராக ஏவிவிட்டு பலிவாங்குவாய். உனது மாயத்தால் அவர்கள் தோழமை இழந்து நிற்கிறார்கள். உனது மாயச் சேட்டைகளுக்குள் நான் இறங்கப்போவதில்லை. உனக்கு என்ன வேண்டும் என்பதைக் கேள். அதை நான் தருகிறேன். அணையை எடுத்துவிடு. என் தோழர்களை விடுவித்துவிடு" என்று நான் கேட்டேன்.

'தனக்கும் இரண்டு கால்கள் இருந்தால் நனாபுஸ் போன்று பல மாயங்கள் செய்ய முடியும்' என்று எண்ணியபடி பூதம் சொன்னது,

"உனது கால்களில் ஒன்றை எனக்குத் தா, நான் அணையை உடைத்து விடுகிறேன்... உனது தோழர்களையும் தந்துவிடுகிறேன்."

நான் சம்மதித்தேன்.

ஆனாலும் அதனிடம் சத்தியத்தை வேண்டினேன்.

"உயிர்களிடத்து வேற்றுமைகளை, ஏற்றத் தாழ்வுகளை தூண்டிவிட மாட்டேன் என்று சத்தியம் தா. போர்களை மூட்டமாட்டேன் என்று சத்தியம் தா" என்று கேட்டுக் கொண்டேன். 'சத்தியம்' என்றுவிட்டு பாய்ந்து எனது வலது காலைப் பிய்த்தெடுத்துக்கொண்டு,

"நான் சத்தியத்தை மீறாதவன் அல்லன்" என்று மாயமாய் மறைந்து போனது.

அணை திறக்கப்பட்டது. எல்லோருக்கும் நீர் கிடைத்தது. தோழர்கள் மீண்டார்கள், தோழமை பிறந்தது. சமாதானமாகவும், அன்புடனும் மீளவும் வாழப் பழகிக்கொண்டார்கள். இந்த உலகில் போர் இல்லாமல் சமாதானமாய் வாழ்வதற்காகவே நனாபுஸ் தனது காலை இழந்தார்.

என்று சொல்லி முடித்தபோது குழந்தைகள் அவரது ஒற்றைக் காலைப் பார்த்தவாறு இருந்தார்கள். சிறு கண அமைதியின் பின்னர் அங்கிருந்த பெரியோர்கள் தங்கள் கைகளைத் தட்டிக்கொண்டேயிருந்தார்கள். அவரது ஒற்றைக் காலில் வலியேறியிருந்தது. கைத்தடியை அருகே வைத்துவிட்டு இருக்கையில் அமர்ந்தார். ஒரு சிறுமி கையை உயர்த்தியவாறே இருந்தாள். அவளின் தாய் கையைக் கீழேவிடும்படி சைகை காட்டியவாறு நின்றார். பீற் அதை அவதானித்துவிட்டு குழந்தையை அருகில் அழைத்து,

"என்ன குழந்தாய்?" என்றார்.

"நனாபுஸ்! எனது அம்மா, அப்பா, தம்பி, நான் எல்லோரும் போரிலிருந்து தப்பி இங்கு வந்தோம். எனது தோழர், உறவினர்பலர் போரில் இறந்து போனார்கள். இப்போதும் போர் நடக்கிறது.

நனாபுஸ்! அந்தப் போரை உங்களால் நிறுத்த முடியுமா..?"

அண்மையில் அகதியாக வந்த குழந்தையின் அந்தக் கேள்வி அவரை நிலைகுலைய வைத்தது. நாம் எப்போதுமே குழந்தைகளிடம் தோற்று விடுகிறோம். மண்டபம் அமைதியுள் அமிழ்ந்துபோய் இருந்தது. மானிடத்தின் மனச்சாட்சியை உலுப்பியபடி சிறுமியின் கேள்வி அங்கு தரித்திருந்தது. அவர் அந்தக் குழந்தையைத் தூக்கி தனது மடியில் அமர்த்தினார். அவளை அணைத்தவாறு சற்றுநேரம் இருந்தார். இந்தக் குழந்தைகளுக்காகத்தானே போராடினோம். இன்னுமொரு குழந்தை கையை உயர்த்தி,

"நனாபுஸ் நான் ஒன்றை உங்களுக்கு சொல்லலாமா..?"

குழந்தைகளிடம் கேள்விக்குக் குறைவில்லை என்பதை அவர் அறிவார். நம்மிடம்தான் பதில்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதில்லை. அதற்குப் பதிலாக ஒவ்வொரு கதையை படைக்கவேண்டியிருக்கிறது. அப்படிப் பதில் இருந்தாலும் அதன் பொய்மை அவர்களைத் துருத்திக்கொண்டேயிருக்கும். அது இன்னுமொரு கேள்வியை எழுப்பும்.

"என்ன கேள்வி என்ன சொல்லப் போகிறீர்கள்?" என்றார் பீற்

"நீர்ப்பூதத்திற்கு உங்கள் காலைக் கொடுத்திருக்கக் கூடாது. சாமியின் ஊரில் போய் அது போர் செய்கிறது" என்றாள் சிறுமி.

பூதத்தை உயிர்ப்புடன் வைத்திருப்பது சங்கடமென்பதை பீற் அறிவார். அவர்களின் அறம் அது. அறம் பிழைத்தோருக்கு இவ் உலகு இல்லையென்று அந்தக் குழந்தை மனம் கூறுகிறது. அவர்கள் போரை வெறுக்கிறார்கள். அதனால்தான் நீர்ப்பூதத்தை வெறுக்கிறார்கள். பூதம் இல்லாவிட்டால் சாமியின் தோழர்கள் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள் இல்லையா..? பீற் தொடர்ந்தார்.

"எனது காலைப் பிடுங்கிய பூதம் எனக்குத் தந்த சத்தியத்தை மீறிவிட்டது. அது மீண்டும் நீரை தடுத்து வறட்சியை ஏற்படுத்தியது. பூதத்திடமிருந்து தப்பியவர்களுக்கு அடைக்கலம் தருவதற்கு சில விலங்குகள் மறுத்தன. அந்த விலங்குகளின் மனங்களை பூதம் மாற்றியிருந்தது. அடைக்கலம் கொடுக்கும் விலங்குகளோடு மற்றைய விலங்குகள் முரண்பட்டன. பூதம் விலங்குகளிடையே பிரிவினையைத் தூவிவிட்டது.

'ஆபத்திலிருப்போருக்கு அடைக்கலம் தருவது எல்லோரினதும் பொறுப்பு. அது எங்கள் மரபு'

என்று நான் சொல்லிப் பார்த்தேன். பூதத்தின் மாயச் சக்தி வன்மத்தை அவர்கள் மனதுக்குள் ஊட்டிவிட்டிருந்தது. பூதத்திடமிருந்து தப்பிய பலர் ஆதரவில்லாமல் கடும் துன்பங்களை அனுபவிக்கத் தொடங்கினர். நான் பூதத்திடம் போனேன். பூதம் நீரை ஏவிவிட்டது. நீரின் அலைகள் வானை நோக்கி நீண்டன. சூரியனை மூடி இருளை உண்டாக்கிற்று. அலைகள் என்னை வளைத்துப் பிடித்து சுழிக்குள் முக்கிவிட்டன. சுழி என்னை இழுத்துச் சென்றது. அது ஏழு அண்ட ஆழம். இருளின் இருள். மூச்செடுக்க முடியாது தடுமாறி நீரின் சுழிக்குள் சுழன்றேன். எனது ஒற்றைக் காலால் நீந்த முடியாமல் திண்டாடினேன். ஒளியின் கீற்றை அறிவதற்கு முடியவில்லை. அப்போது ஆமை உதவிக்கு வந்தது.

"நனாபுஸ் என் முதுகில் ஏறுங்கள்" என்றவாறு என்னருகே வந்தது.

முதுகில் ஏறி ஆமையாரை இறுகப் பற்றிக்கொண்டேன். சுழியை வெல்லும் வல்லமை ஆமைக்கு இருந்தது. ஒளியின் திசையை அது அறிந்துகொண்டது. ஏழு அண்ட ஆழத்தை சொற்ப நேரத்துள் கடந்து என்னை மேலே கொண்டுவந்தது. ஆமை உலகத்தைத் தாங்கும் சக்தி கொண்டது. அதன் முதுகு எனக்கு உரத்தைத் தந்தது. சக்திகளை ஒன்றுதிரட்டி பூதத்தின்மேல் காற்றை ஏவிவிட்டேன். காற்று சுழன்று ஒரு குழல் கூம்பாய் மாறி வேகம்கொண்டு சுற்றியது. நீரைத் தூக்கி வீசியது. சுழிகளைப் பொருதவிட்டது. சுழிகள் அழிந்து போயின. நீரைத் தூக்கி வீசி பூதத்திற்கு அண்மையாகச் சென்று அதைப் பிடித்துச் சுற்றியது. ஆனாலும் காற்றின் பிடியிலிருந்து பூதம் விலகியது. மின்னலை அதன்மீது ஏவிவிட்டேன். மின்னலை அது ஏய்த்தது. தீயை ஏவிவிட்டேன். நீரை அது சுட்டது. வெப்பத்தில் நிலை மாறியது நீர். வெம்மை தாங்கமுடியாமல் அதுவொரு மரப்பொந்தில் ஒளிந்துகொண்டது. மரப்பொந்தில் புகுந்து பூதத்தை கருக்கத் தொடங்கிற்று. அதனால் தீயிலிருந்து மீள முடியவில்லை.

"என்னை மன்னியுங்கள்.வன்மத்தையும், போரையும் உருவாக்கியதற்கு மன்னிப்புக் கோருகிறேன்" என்றது பூதம்.

ஆயினும் தீ நம்பவில்லை. பொய்மை தீயை தீவிரப்படுத்தியது. அது பொய்மையை கருக்கத் தொடங்கியது. பூதம் கருகியபடி அலையத் தொடங்கியது. பூதத்திடமிருந்து நீர் மீண்டது. பூதம் சாம்பலாகியது. காற்று சாம்பலைத் தாங்கி நிலமெங்கும் தூவிவிட்டது. அதிலிருந்து பழச் செடிகள், பழக் கொடிகள், பழ மரங்கள் முளைத்தன. அதன் கனிகள் அன்பால் நிறைந்து சுவைத்தன. கனிகளை அனைவரும் உண்டார்கள். அன்புடையோர் ஆனார்கள். எல்லோரையும் ஆதரித்து வாழ்ந்தார்கள்."

என்றவாறு அந்தக் குழந்தையின் உச்சியை முகர்ந்து முத்தமிட்டு அவளை மடியிலிருந்து இறக்கிவிட்டார். எல்லாக் குழந்தைகளின் கைகளிலும் திராட்சையும், ஸ்ரோபெரியும் இருந்தது. குழந்தைகள் நனாபுஸ்சை அணைத்து அன்பை வெளிப்படுத்தி

"அடுத்த வாரம் சந்திப்போம்" என்று நகர்ந்தார்கள்.

கதைக்காக கொண்டுவந்த பொருட்களைப் பெட்டிக்குள் திரும்பவும் அடுக்கி பக்குவப்படுத்தினேன். நானும் பூதங்களிடமிருந்து தப்பியவன் என்பதை பீற் அறிவார்.

"பீற்! நனாபுஸ் ஒரு மாயக்காரன். அவனால்தான் இப்படியான கதைகளைப் புனைய முடிகிறது." என்றேன்.

"குழந்தைகளின் கேள்விகளுக்கு எங்களிடம் பதில் இருப்பதில்லை. அவர்கள் எமது குழந்தைகள் என்பதால் அவர்களது கேள்விகளை அக்கறையோடு அணுகுவதில்லை அசட்டை செய்கிறோம். அவர்களது மனது புதிது. அவர்களது வெளி புதிது. அதில் எல்லா மாயங்களுக்கும் இடமிருக்கிறது. அவர்களது கற்பனை புதிது. அதனால்தான் மாற்றங்களை எதிர்கொள்ள முடிகிறது. அவர்களது கேள்விகளுக்கு பதில் கதைகள்தான். அவர்கள் வளர்ந்தபின் இந்தக் கதைகளை மறக்கக்கூடும். ஆனாலும் கதையின் அறம் அவர்களைத் தொடரும் அல்லவா."

பீற்றை கடந்த 30 வருடங்களாக அறிந்திருக்கிறேன். பல முன்னாள் இராணுவத்தினர் தற்போது உயிரோடு இல்லை. அவர் தற்போது 90 வயதைத் தாண்டிவிட்டார். அவரை உற்றுப்பார்த்தேன். பீற் என்ற அந்தப் போர்வீரனை நான் எங்கும் காணவில்லை. அவரது மனமும் உடலும் சோர்வடையாமலே இருக்கின்றன. முதிர்ந்த ஆன்மாவுக்கு உண்டான வார்த்தைச் சுருக்கமும், வார்த்தையின் ஆழமும் அவருடன் கூடி நிற்கிறது. கவிதை என்றும் சொல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜே! நனாபுஸ்சால் பேரரைக் கொல்ல முடியாதல்லவா..?" என்றவாறு என்னைப் பார்த்தார்.

பீற்றைப் பார்த்தேன். முதுமையின் சுருக்கத்துக்குள் ஒழிந்திருக்கும் அவரது கண்களின் வீச்சு மின்னல் வெட்டின் கூர்மையைக் கொண்டிருக்கும். இன்று முகில் மூடிய வானத்தின் இருண்மையை கண்கள் காட்டின. குழந்தையின் கேள்வி அவரை குடைந்தபடியே இருக்கிறது. உள்ளங்கைக்குள் கிடந்த வட்டக்கல்லில் பொழியப்பட்டிருந்த நனாபுஸ்சைத் தடவியவாறு இருந்தார் பீற்.

"எந்தக் கதைகளும் குழந்தையின் கேள்விக்கு பதில் கொடுக்கப் போவதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்." என்றேன்.

"நம்பிக்கையை கொல்ல முடியாது. அல்லவா?" என்று என்னைப் பார்த்துவிட்டு நனாபுஸ்சைத் தடவியவாறு இருந்தார் மிகசீ (கழுகு) என்கிற பீற்.

...

நனாபுஸ் கோட்டோவியத்திலிருந்து கண்களை விலக்கி பாறையின் நெடுகே அண்டையாக கனு வள்ளத்தை வலிக்கத் தொடங்கினேன். மிசனோ பாறையில் பொழியப்பட்டிருந்த வோல்ட் விற்மனின் கவிதை வரிகள் கண்களுக்கு எட்டியது.

"இந்தப் பாறையில்
பிணைந்தும் இணைந்தும் கிடக்கிறது
எனது காலடி
இன்மை பற்றிய உங்கள் எண்ணங்களுக்காக
என்னால் சிரிக்கத்தான் முடிகிறது
காலம்
அதன் அதிர்வை நான் நன்கே அறிவேன்."

My foothold is Tenon'd and mortised in granite
I laugh at what you call dissolution
And I know the amplitude of time

-Walt Whitman

லூன் பறவையின் கூவல் எதிரொலி மிசனோ பாறையின் உயிர்ப்பை கூறியபடியிருந்தது.

**யூன், 2020.**

⁂






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது இனத்துவ முரண்பாட்டின் முழுப்பரிமாணம்

## சுகுமாரனுடான நேர்காணல்

**நேர்காணல் காண்பவர்: கீதா சுகுமாரன்**

*கவிஞர், கட்டுரையாளர், நாவலாசிரியர், மொழிபெயர்ப்பாளர், காலச்சுவடு இதழின் பொறுப்பாசிரியர் எனப் பன்முகம் கொண்ட சுகுமாரனுக்கு அறிமுகம் தேவையில்லைதான். அச்சிதழ், தொலைக்காட்சி, நூல் வெளியீட்டுத் துறைகளிலும் பணியாற்றிய இவர் கோவையில் பிறந்தார். தற்போது திருவனந்தபுரத்தில் மனைவியுடன் வசிக்கிறார். அவரது பல தொகுப்புகளிலும் வெளியான கவிதைகள் அனைத்தும் ஒருசேர "சுகுமாரன் கவிதைகள்" என்ற தலைப்பில் 2019 ஆம் ஆண்டு வெளிவந்தது. "வாழிய நிலனே!" (2011) உட்படப் பல கட்டுரைத் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. "பெண்வழிகள்" (2005), "மதில்கள்" (2008), "தனிமையின் நூறு ஆண்டுகள்" (2013) உள்ளிட்டப் பல மொழிபெயர்ப்புகளைச் செய்துள்ளார். "வெல்லிங்டன்" (2013), "பெருவலி" (2017) ஆகிய இரு நாவல்களை எழுதியுள்ளார். கனடா தமிழ் இலக்கியத்தோட்டத்தின் வாழ்நாள் சாதனையாளருக்கான விருதை 2016 ஆம் ஆண்டு பெற்றார். அப்போது அவருடன் நிகழ்ந்த சந்திப்பும் பல மணி நேரங்கள் நீண்ட உரையாடலின் விளைவாகப் பிறந்த கேள்விகளும் அதற்கு அவரளித்த பதில்களும் இத்தனை ஆண்டுகள் கிடப்பில் கிடந்து இப்போதுதான் வெளிவருகின்றது.*

**தெள்ளிய மொழியும் படிமங்களும் தொடர்ந்து உங்கள் கவிதையின் பலமாக இயங்குகின்றன. கவிதையின் மொழியை எது தீர்மானிக்கிறது? வாழ்வின் துயரும் தனிமையும் உங்கள் முதல் கவிதைத் தொகுதியின் மொழியைத் தீர்மானித்தது என்று வைத்துக்கொண்டால் இப்போது அந்தத் துயரும் தனிமையும் மாறிய நிலையில் அந்த மொழி உங்கள் கவிதைப் பயணத்தில் பெற்றுள்ள உருமாற்றத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

உங்கள் அவதானிப்புகளை முன்வைத்து அதையொட்டிக் கேள்விகளை எழுப்புகிறீர்கள். நீங்கள் எடுத்துச்சொன்ன பின்புதான் என் கவிதையின் அடிப்படை அலகுகளைப் பற்றி யோசிக்க நேர்ந்திருக்கிறது. இந்தத் தூண்டுதலுக்காக முதலில் மிக்க நன்றி.

கவிதை முதன்மையாக மொழியைச் சார்ந்தது என்றும் கவிஞன் மொழிக்குக் கட்டுப்பட்டவன் என்றும் நம்புகிறேன். மொழியின் வலுவில்தான் கவிதையும் வலிமை பெறுகிறது. கவிஞன் மொழியின் வாயிலாகவே தன்னை உணர்கிறான்; தனது உலகை வெளிப்படுத்தவும் முனைகிறான். மொழியின் சாத்தியங்களை அறிந்துகொள்வதன்மூலமே புழக்கத்திலிருக்கும் மொழியை மீறிய மொழியை உருவாக்க முடியும். இந்த எண்ணங்களின் விளைவாகவே என்னுடைய கவிதை மொழியை உருவாக்கிக் கொண்டிருக்கக்கூடும். என் வரையில் இந்த உருவாக்கத்தின் தொடக்கம் பிரக்ஞை பூர்வமானது; பின்னர் தன்னிச்சையானதாக ஆகியிருக்கிறது.

இரண்டாவது, படிமங்கள் பற்றி. படிமங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற உந்துதலாலோ அல்லது படிமங்கள் கவிதையின் அணியாக இருக்க வேண்டும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவையாலோ அவற்றைப் பயன்படுத்தவில்லை. நீங்கள் குறிப்பிடுவது போன்ற படிமங்கள் ஏதுமற்ற கவிதைகளையும் எழுதியிருக்கிறேன். நான் ஒரு கவிதையை முழுமையாக யோசிப்பவன்; வரிகளாகவோ படிமங்களாகவோ பிரித்துப் பார்ப்பதில்லை. நான் முன்வைக்க விரும்பும் அனுபவத்தைச் செறிவாகச் சொல்ல உதவும் ஒன்றாகவே படிமத்தைக் காண்கிறேன். அனுபவம் நிகழ்கிற புழங்குமொழியிலிருந்து அதைக் கவிதையனுபவமாக மேலெடுக்கப் படிமம் துணை செய்திருக்கிறது. 'கையில் அள்ளிய நீர்' என்பது அன்றாட மொழியில் இருப்பது. அதுவே, 'அள்ளி/ கைப்பள்ளத்தில் தேக்கிய நீர்' என்று கவிதை மொழியாக மாறும்போது எளிய அனுபவம், பிரத்தியேக அனுபவமாக உணரப்படத் தயாராகிறது. வெறும் மொழியில் சொல்லப்பட்டதைக் காட்டிலும் கவிதை மொழியில் சொல்லப்பட்டதற்கு இயக்கம் கூடுகிறது. இந்த இயக்கத்தால் படிமம் கவிதையின் உள்ளார்ந்த கூறு ஆகிறது. அதைப் பிரித்துப் பார்க்க முடியுமென்று தோன்றவில்லை. இந்த முழுமைக்கும் இயக்கத்துக்குமாகத்தான் படிமங்களைப் பயன்படுத்துகிறேனோ என்னவோ? ஆனால் இது எனக்கே பொதுவிதியல்ல.

கவிதையின் மொழியை கவிதைக்கான அனுபவம்தான் தீர்மானிக்கிறது. அனுபவம் என்ற சொல்லுக்குள் மொழி, வாழ்நிலை, காலம், மனம் எல்லாவற்றையும் உட்படுத்தியே சொல்கிறேன். முதல் தொகுதிக் கவிதைகளின் மொழியை மட்டுமல்ல; இன்று எழுதும் கவிதைகளின் மொழியையும் இந்த 'அனுபவம்'தான் தீர்மானிக்கிறது. என்னைச் சாராத ஒன்றையோ, நான் சார்ந்திருக்க முடியாத ஒன்றையோ என் மொழிக்குள் கொண்டுவர இயலாது என்பது என் பட்டறிவு. முதல் தொகுதிக் கவிதைகளை எழுதியபோது இருந்த ஆதார மனநிலையிலிருந்து இன்று விலகியிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அன்று என் வாழ்நிலையிலும் துயரும் தனிமையும் இருந்தன. அவையே கவிதையிலும் வெளிப்பட்டன. இன்று அவை முற்றிலும் மாறிவிட்டதாக நினைக்கவில்லை. அந்தக் கவிதைகளில் தனி வாழ்க்கையின் துயரத்தையும் சொந்தத் தனிமையையும் பேசியிருக்கிறேன். என் தனிப்பட்ட அனுபவத்தைப் பொது அனுபவமாக முன்வைத்திருந்தேன். இன்று பொது அனுபவத்தை என்னுடையதுமான அனுபவமாக உணருகிறேன். அவை எப்படி உருமாறி இருக்கின்றன என்பதை உங்களைப் போன்ற நண்பர்கள்தான் சொல்லவேண்டும்.

**உங்கள் குடும்பப் பின்புலமும் இலக்கியத்தில் நீங்கள் அடைக்கலமான சூழலையும் விளக்கமாகச் சொல்லுங்கள்?**

ஓர் எளிய குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறந்தவன்; அப்பா நாராயணன்; அம்மா தங்கமணி; இருவரும் படித்தவர்கள் அல்லர்; அப்பாவுக்குப் படிக்கவும் எழுதவும் தெரிந்திருந்தது; ஆங்கிலத்தில் கையெழுத்துப் போடத் தெரிந்திருந்தது; மின்சாரத் துறையில் பணியாற்றினார். ஆரம்ப காலங்களில் கம்யூனிஸ்ட் கட்சி அனுதாபி. கோயமுத்தூரில் முதலாவது மின் தொழிலாளர் சம்மேளனத்தின் அமைப்பாளர்களில் ஒருவராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின் தொழிலாளர் போராட்டத்தில் கலந்துகொண்ட முதன்மையான நபர்களில் ஒருவராகவும் இருந்திருக்கிறார். வீட்டுக்கு வந்துபோன சில இடதுசாரித் தோழர்கள் இப்போதும் நினைவில் இருக்கிறார்கள். பிற்காலத்தில் எனது மனநிலையில் இடதுசாரிச் சாய்வு ஏற்படக் காரணம் இதுவாக இருக்கலாம். பின்னர் அப்பா கட்சிகளின்மீதோ அரசியல்மீதோ நம்பிக்கை இழந்தவராக மாறினார். அம்மா, ஆறு சகோதரர்களின் ஒரே தங்கையாகப் பிறந்தவர். பள்ளிக்கூடம் போனதில்லை. ஆனால் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நாலு மொழிகளிலும் சரளமாகப் பேசக் கற்றிருந்தார். மூத்ததாக என்னையும் கடைசியாகத் தம்பியையும் தவிர இடையில் மூன்று பெண்கள். இது எங்கள் குடும்பச் சித்திரம். எங்கள் குடும்பத்தில் அப்பா வகையிலும் அம்மா வகையிலும் கல்லூரிக்குப் போன முதல் ஆள் நான். அப்பாவின் மூத்த சகோதரி ஒருவர், அவர்தான் அப்பாவை வளர்த்தவர், நீலகிரி மாவட்டம் வெல்லிங்டனில் வசித்தார். அத்தையின் கணவர் மாமா அங்கே பணியாற்றிக் கொண்டிருந்தார். எனக்கு ஒரு வயது நிறையும் முன்பே அவர்கள் என்னை வெல்லிங்டனுக்குக் கொண்டுபோய் வளர்த்தார்கள். பத்து வயதுவரை அங்கேயே வளர்ந்தேன். அத்தைக்கு வாசிப்பில் ருசியும் பழக்கமும் இருந்தன. தமிழ், மலையாளம் இரண்டு மொழிகளிலும் வாசிப்பார். அவரிடமிருந்துதான் வாசிப்பு ஆர்வம் எனக்கும் தொற்றியிருக்க வேண்டும். அதுமட்டுமல்ல, பெற்றோரைப் பிரிந்து வளர்ந்த சூழல் தனிமையைக் கொடுத்தது. பெற்றோரிடம் வளர்ந்திருந்தால் கிடைத்திருக்கக் கூடியவை என்று சில உரிமைகளையும் சுதந்திரத்தையும் நம்புகிறோம் இல்லையா, அவை இங்கே கிடைக்காது என்ற தீரா வருத்தம் அந்தத் தனிமையைத் துயரமானதாக்கியது. தனித் துயரைப் போக்க எனக்குக் கிடைத்த வழியே வாசிப்பு. மிக இளம் வயதிலேயே புத்தகங்களுடனான உறவு ஏற்பட்டு விட்டது. பிறரிடமிருந்து என்னைத் தனித்துக் காட்டிக் கொள்ளவும் அந்த உறவு உதவியது. தொடர்ச்சியான வாசிப்பு வெவ்வேறு உலகங்களைத் திறந்து காட்டியது. நான் நடமாடும் உலகைப் புரிந்துகொள்ளச் செய்தது. வாசிப்பின் ஏதோ ஒரு புள்ளியில் எனக்கும் இந்த உலகத்திடம், சக மனிதர்களிடம் சொல்ல இருக்கிறது என்று தோன்றியது. எழுத முனைந்தேன். என்னை மிகவும் ஈர்த்த இலக்கிய வடிவமாகக் கவிதை இருந்தது. அதைப் பற்றிக்கொண்டேன். கவிதையின் விரிவாகவே பிற இலக்கிய வடிவங்களுக்கும் ஈர்க்கப்பட்டேன். அப்புறம் ஒன்று, நான் இலக்கியத்தில் அடைக்கலமாகவில்லை. அதன் பகுதியாக விரும்பினேன் என்று சொல்லிக்கொள்ளவே தோன்றுகிறது. அப்படி ஆகிவிட்டேனா என்று தெரியவில்லை, இன்றுவரை.

**கருத்தும் அனுபவமும் சேர்ந்த படிமமே கவிதை என்று கூறி வாசகர் ஒரு கவிதையிலிருந்து கருத்தை மட்டுமே எடுத்துக் கொள்கிறார் என்றும் அனுபவமே கருத்து; கருத்தே அனுபவம் என்றும் விளக்குகிறீர்கள். அப்படி கருத்தை/அனுபவத்தை மட்டுமே எடுத்துக்கொள்ள கட்டுரைகள் போதுமே? கவிதை எனும் வடிவம் உணர்வுகள் கொதிக்கும் உலை இல்லையா?**

நான் அப்படித்தான் நம்புகிறேன். கருத்து என்று நான் சொல்வது நீதியையோ செய்தியையோ அல்ல. அனுபவம் என்று குறிப்பிடுவதும் லௌகீக அனுபவங்களை அல்ல. கவிதைக்கான கருத்தையும் கவிதைக்கான அனுபவத்தையும்தான். அவற்றைத் தனித்தனியாகப் பிரிக்க முடியாது என்றும் நினைக்கிறேன். 'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்பது கருத்தும் அனுபவமும் இணைந்த படிமம். படிமம் என்பதை பருப்பொருளாகவும் சொல்லவில்லை. அது ஓர் இயக்கம். 'பசியில்லாத ஒருவன் இருக்கக்கூடாது' என்ற கருத்தும் பசி என்ற பட்டறிந்த உணர்வும் சேர்ந்தே இந்த வரியை உருவாக்குகிறது; ஒரு படிமத்தை உருவாக்குகிறது. அது வாசகனிடம் சென்று சேரும்போது ஒரு கருத்தாகத்தான் நிலைக்கிறது. அந்தக் கருத்தை உணரும்போதுதான் அனுபவத்தை மீட்கிறான். அவன் தன்னுடைய அனுபவத்தைச் சார்ந்து அதைப் புரிந்துகொள்கிறான். அதனால்தான் ஒரே கவிதை வெவ்வேறு வாசகனுக்கு வெவ்வேறு பொருள்களைத் தரும் சாத்தியம் கொள்கிறது. கருத்தை/அனுபவத்தை மட்டுமே எடுத்துக்கொள்ளக் கட்டுரைகள் போதுமே? என்று கேட்கிறீர்கள்? இல்லை, ஆழ்ந்திருக்கும் கவிதையைக் காண அது போதாது. போதாது என்பது மட்டுமல்ல. அதுவல்லவே கவிதை அனுபவம். கவிதை அனுபவம் என்பது கருத்தை அல்லது தகவலை அறிந்து கொள்வது மட்டுமல்ல; வெறும் உணர்வுகளை ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல. இரண்டும் இணைந்ததுதானே?

**இசைப் படிமங்கள் என்ற வரிசையில் நீங்கள் எழுதிய கவிதைகள் என்னை மிகவும் கவர்ந்தவை. இசை அல்லது அதன் அனுபவம் உங்கள் கவிதையில் எப்படி உருவாக்கம் பெறுகிறது?**

இசைத் துறையில் ஏதோ ஒருவனாக ஆகிவிட வேண்டும் என்பது என் ஆசையாக இருந்தது. பாடுகிறவனாகவோ, கருவி இசைப்பவனாகவோ ஆவது திட்டமாக இருந்தது. சில ஆண்டுகள் முறையாக இசை கற்கவும் முயற்சி செய்தேன். அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. ஆனால் இசைமீதான ஈடுபாடு நீங்கவில்லை. இசை இலக்கணங்களில் பெரிய அறிமுகம் இல்லை. அப்படி இசையை அணுகுவதும் இல்லை. அது தரும் உணர்வை, மன இளக்கத்தைச் சார்ந்தே என் இசை கேட்பு அமைந்திருக்கிறது. அது தரும் பரவசம், நெகிழ்வு ஆகியவைதாம் தொடர்ந்து கேட்கவும் தூண்டுகிறது. இசை தந்த அல்லது தரும் அனுபவத்தை வார்த்தைகளில் சொல்லமுடியாது என்பதுதான் என் அனுபவம். ஒரு பிஞ்சுக் குழந்தையின் ஸ்பரிசம் தரும் உணர்வை, சமுத்திரத்தின் முன்னால் நிற்கும்போது மனம் அடையும் முடிவின்மை சார்ந்த தன்னழிவை, ஒரு பெரும் மனித ஊர்வலம் ஏற்படுத்தும் ஒற்றுமை ஏக்கத்தை எப்படிச் சொல்ல? இசை தரும் அனுபவமும் அப்படியானதுதான். உணரலாம். ஆனால் அந்த அனுபவத்தின் எதிர்வினையை உணர்த்தலாம். இசை அனுபவஞ் சார்ந்த கவிதைகளில் இதைத்தான் செய்ய எத்தனித்திருக்கிறேன்.

வேறு எந்தக் கலையையும்விட இசையே மனச் சித்திரங்களை உருவாக்குவதில் முதன்மையானது என்று நினைக்கிறேன். இசை கேட்கும் தருணங்களில் மனதில் வெவ்வேறு சித்திரங்கள், காட்சி ரூபங்கள் தொடர்ந்து செல்வதை அறிந்திருக்கிறேன். அதைத் தொடர்ந்து பெறுவதற்காகவும் இசையைக் கேட்கிறேன். அதிலிருந்து பெறும் காட்சிகளையே வார்த்தைகளில் கொண்டுவரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து இதழ் மரபில் தொடர்ந்த கவிஞர்கள் அகவயமான கவிதைகளை எழுதியவர்கள்; இடதுசாரி அனுதாபத்துடனும் சமூக நிகழ்வுகளைப் பார்க்கும் பார்வையுடன் எழுதியவர்கள்; புறவயமான கவிதைகளை எழுதியவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டார்கள்.

பார்த்திருக்கிறேன். நவீன கவிதை சப்த ஒழுங்கைவிடக் காட்சி ஒழுங்கையே அதிகம் கொண்டது. இல்லையா?

**நீங்கள் இசையில் மிகுந்த ஈடுபாடுடையவர் என்பதால் இந்தக் கேள்வி தோன்றுகிறது. வாலஸ் ஸீவென்ஸ் கவிதை என்பது அறிவுத்திறத்தைப் பெரும்பாலும் பயனிறைவுடன் எதிர்க்க வேண்டும் என்று ஒருமுறை கூறினார். இசை அப்படியொன்றைச் சாத்தியப்படுத்தும் நிலையில் கவிதையின் ஓசையைப் பற்றிய உங்கள் எண்ணங்கள்... குறிப்பாக சமகாலக் கவிதை மௌன வாசிப்புக்கான களமாக மாறியபின்....**

இசையில் என் ஈடுபாடு அது தரும் உணர்வைச் சார்ந்தது. கூடவே அறிவார்ந்ததும்தான். ஓசையைச் செம்மைப்படுத்தும்போது அங்கே அறிவார்ந்த வினையும் நடைபெறுகிறது என்ற அளவில். கவிதையின் ஓசை சொற்களால் மட்டும் உருவாவது அல்ல. கவிதைப் பொருளின் தொனி சார்ந்தும் உருவாவது. ஒரு சௌகரியத்துக்காக சொற்களால் உருவாகும் ஓசை கொண்டவற்றைக் கூற்று என்றும் தொனி சார்ந்து எழுவதைக் கவிதை என்றும் வகைப்படுத்தத் தோன்றுகிறது. இந்த இரண்டும் தனித்தும் இணைந்தும் செயல்படுகின்றன. 'பரந்து கெடுக உலகியற்றியான்', 'எவ்வழி நல்லை ஆடவர்; அவ்வழி நல்லை வாழிய நிலனே', 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' , 'ஓய்ந்தேன் என மகிழாதே, உறக்கமல்ல தியானம், பின் வாங்கல் அல்ல பதுங்கல்', 'நீரற்றது கடல் நிலமற்றது தமிழ் பேரற்றது உறவு' இவையெல்லாம் உடன் நினைவுக்கு வரும் வரிகள். இவற்றை கவிதைக் கூற்று என்று சொல்வேன். 'அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்', 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்', 'சின்னக் கதைகளெல்லாம் உன்னைப்போல் ஏடுகள் சொல்வதுண்டோ?', 'இனி ஆயத்தங்களைத் தின்று சாகும் என் முதுமை; பின்னும் உயிர் வாழும் கானல்', 'இருப்பு அழிந்தாலும் உயிர் எரியும் உன் குரலின் எதிரொலியைத் திருப்பித் தருவேன் என்றா?' இந்த வரிகளைத் தொனி சார்ந்த கவிதை என்பேன். இந்த இரண்டு வகையும் தனித்தும் சேர்ந்தும்தான் கவிதையின் ஓசையை உருவாக்குகின்றன என்று எண்ணுகிறேன். கவிதைக்குரிய சொல்லையும் அதற்கான ஓசையையும் பாடுபொருளே தீர்மானிக்கிறது என்று படுகிறது. எல்லாக் கவிதைகளும் மௌன வாசிப்புகுரியவை அல்ல. பிரமிளின் பிரசித்தி பெற்ற கவிதையான 'காவிய'த்தை உரக்கச் சொல்லமுடியாது. அது அடங்கிய தொனியில் வாசிக்கப்பட்டால்தான் அதன் பொருளுக்கு இசைவாக இருக்கும். ந. பிச்சமூர்த்தியின் 'காலண்டர்' கவிதையை 'கடிகாரம் சிலந்தி; காலண்டர் வலை' என்ற வரிகளை உரக்க வாசிப்பது அந்தக் கவிதைக்குச் செய்யும் அநியாயம். பிரமிளின் 'அறைகூவல்' கவிதையை மௌனமாக வாசிப்பது பொருத்தமற்றது. சுகிர்தராணியின் 'பறைச்சி' என்ற கவிதையை மௌன வாசிப்பில் விளங்கிக்கொள்ள முடியாது. அவருடைய இன்னொரு கவிதையான 'பதாகை'யை மௌன வாசிப்பில்தான் நெருக்கமாக உணரமுடியும். நான் ஓசை என்று நம்புவது பொருள்சார்ந்த ஒன்றைத்தான்.

**வாழ்வதற்கான மனித இச்சையின் உருவகமாக கிளியை உருவாக்கிச் சொன்னீர்கள். இத்தனை ஆண்டு கால கவிதைப் பயணத்தில் அந்தக் கிளி பெற்றுள்ள மாற்றங்களைப் பற்றி...**

கவிதைக்குள் எதுவும் சாத்தியம்தானே? கிளி மனிதராக மாறுவதும் கழுதையின் புலம்பலாவதும் யானையின் பிளிறலாவதும் பசியின் குரலாக இறைஞ்சுவதுமாக கிளி என்ற உருவகம் மாற்றமடைந்திருக்கிறது. அது எப்படியெல்லாம் மாறியிருக்கிறது என்பதை என் கவிதைகளைத் தொடரும் வாசகர் அப்படி எவரேனும் இருந்தால் சொல்லக்கூடும். நானே சொல்ல எனக்கு மனத்தடை இருக்கிறது.

**இருப்பியலும் தனிமனிதத் துயரும் சமூகத் துயரும் உங்கள் படைப்புகளின் பாடுபொருள் என்று கொண்டால் செசார் வயெஹோவும் ஆல்பர்ட் காம்யுவும் உங்கள் கவிதைப்போக்கைத் தீர்மானித்தவர்கள் என்று கருதலாமா? உங்கள் படைப்புகளில் உள்ளோடியிருக்கும் வாழ்வின்மீதான விசாரணையை உங்களது தனித்துவமாகப் பார்க்கிறேன். இதன் தொடக்கத்தையும் தொடர்ச்சியையும் விளக்க முடியுமா?**

வயெஹோவும் காம்யூவும் என்னைப் பாதித்த பலரில் இருவர். ஒருவேளை அந்தப் பாதிப்பு கூடிய விகிதத்தில் இருக்கலாம். கவிதைப்போக்கை நிர்ணயிக்கும் விதமாக அந்தப் பாதிப்பு இல்லை என்றே நினைக்கிறேன். நான் எழுத வந்த காலத்தில் புதுக்கவிதை இரு பகுப்பாகப் பேசப்பட்டது. அகம் சார்ந்ததாகவும் புறம் சார்ந்ததாகவும். எழுத்து இதழ் மரபில் தொடர்ந்த கவிஞர்கள் அகவயமான கவிதைகளை எழுதியவர்கள்; இடதுசாரி அனுதாபத்துடனும் சமூக நிகழ்வுகளைப் பார்க்கும் பார்வையுடன் எழுதியவர்கள்; புறவயமான கவிதைகளை எழுதியவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டார்கள். இந்தப் பாகுபாடு எனக்குள் பாதிப்பையும் குழப்பத்தையும் ஒரே சமயத்தில் கொடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாகுபாடு எனக்கு உவப்பில்லாததாகவும் இருந்தது. அகம் என்று தனித்து இல்லை; புறம் என்று விலகிய ஒன்று இல்லை என்று தோன்றியது. இரண்டும் ஒன்றுக்கொன்று பாதிப்புச் செலுத்தக்கூடியவைதானே என்பது என் கேள்வியாக இருந்தது. இதற்கான விடையை நான் கண்டது வயெஹோவின் கவிதைகளில். தனி அனுபவம் சமூக அனுபவமாகவும் சமூக அனுபவம் அந்தரங்க அனுபவமாகவும் நிலைபெற்றிருப்பதை அவர் கவிதைகளில் கண்டேன். அது என் கவிதைப்போக்கைத் தேர்ந்தெடுக்க எனக்கு உதவியது. இந்தப் பார்வையைப் பின்னர் தமிழ்க் கவிதைகளிலும் உணர்ந்தேன். பாரி மகளிரின் கையறுநிலை தனி அனுபவம் மட்டுமா? சமூக அனுபவமும் கூடத்தானே? இப்படிப் பார்வையை விசாலப்படுத்திக்கொள்ள முடிந்தது. இது எளிய திருப்பம்தான். இதற்காக லத்தீன் அமெரிக்கக் கவிதையை நாடியது இப்போது யோசித்தால் வெட்கம் தருகிறது. ஆனால், வாசிப்பில் எப்போதாவதுதானே நம்மை உடைத்து வார்க்கும் செயல் நிகழ்கிறது. அது எனக்கு நிகழ்ந்தது வயெஹோவிடம்.

காம்யூ வாழ்க்கை பற்றிய கண்ணோட்டத்தை உருவாக்கிக்கொள்ளத் தூண்டுதலாக இருந்தார். மனிதனையும் மானுட நிலைமையையும் மையமாக வைத்தே அவர் சிந்தித்தார் என்று நான் நம்புகிறேன். மனிதனின் இருப்புப் பற்றிய கவலைகள்தாம் அவரை எனக்கு நெருக்கமானவராக்கியது. எல்லாப் படைப்பாளிகளும் இதைத்தானே பேசுகிறார்கள் என்று நீங்கள் பதில் கேள்வி கேட்கலாம். நான் கற்றுக்கொண்டது இங்கிருந்துதான் என்பது என்னுடைய தனிப்பட்ட அனுபவம் இல்லையா? வாழ்க்கையின் பொருள் என்ன என்ற அநாதி காலக் கேள்விக்குப் பதில் தேட வாழ்வைக் கருவியாக்குவது ஒன்று. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையிலிருந்து அந்தக் கேள்விக்குப் பதிலைக் கண்டடைவது மற்றொன்று. ஆல்பெர் காம்யூ இரண்டாம் வகையினர் என்பது என் எண்ணம். நான் இரண்டாம் வகையினன். இந்த இருவரின் பாதிப்பும் இன்னும் தொடர்வதாகவே நம்புகிறேன். ஆனால் முந்தைய அதே முறையில் அல்ல.

**நீங்கள் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை தமிழ்க் கவிதையியலில் நிகழ்ந்த மாற்றங்கள் அதாவது படிமம், ஒத்திசைவு, வடிவம் இவை அடைந்துள்ள மாற்றங்களைப் பற்றிய உங்களுடைய அவதானத்தைப் பகிர முடியுமா?**

இது ஒரு கவிதை விமர்சகருக்கான கேள்வி அல்லவா? நான் விமர்சகன் அல்லன். கவிதை பயில்பவன். அந்தவகையில் சுயநலமி. என்னுடைய கவிதையை உயிர்ப்பாக வைத்துக் கொள்ளவும் தொடர்ந்து செல்லும் திசையைத் தேர்ந்து கொள்ளவும் மாற்றங்களைக் கவனிப்பவன். அந்த நிலையில்தான் என்னுடைய அவதானங்கள் அமையமுடியும்.

எழுதத் தொடங்கிய காலத்தில் கவிதையியலில் என்னை ஈர்த்த அம்சங்கள், கவிதை என்பது புலமையின் அடையாளம் என்ற நிலை தகர்ந்திருந்ததும் கவிதை தனிப்பட்ட ஒன்றல்ல; பொதுவெளிக்குரியது என்ற ஜனநாயகப் பண்பு நிலவியதும்தாம். கவிதை, செய்யுளின் இறுக்கத்திலிருந்து உரைநடையின் சரளத் தன்மைக்கு வந்திருந்தது. அதன்மூலம் மொழி தெரிந்த எவரும் கவிதை எழுதலாம் என்ற வாய்ப்பு உருவானது. நிறைய



கவிஞர்கள் உருவானார்கள். ஓர் இலக்கிய வடிவம் விரிவான பரப்புக்கு வந்தது சாதகமான அம்சம். அதில் அந்த வடிவம் பற்றிய உணர்வும், பொருள் தேர்வு பற்றிய பிரக்ஞையும் இல்லாமலிருந்தது பாதகமான அம்சம். அதுவரை இருந்த கவிதை வடிவங்களிலிருந்து மாறிய புது வடிவம் மட்டுமல்ல; உணர்வு நிலையில் நேர்ந்த மாற்றத்தைக் கொள்வதுதான் புதிய கவிதையாக்கம் என்பது மறக்கப்பட்டது. புதிய கவிதை என்பது புதிய உணர்வுநிலை என்று கவனம் பெற்றதுதான் முதன்மையான மாற்றம் என்பதும் அது கவிதைக்கான பாடுபொருள் சார்ந்து நுட்பமாகவும் வடிவம் சார்ந்து பருண்மையாகவும் செயல்பட்டது என்பதும் என் எண்ணங்கள். 'எல்லாம் ஈசன் செயல்' என்ற அடைக்கல மனநிலைக்கு மாறாக 'நாம சாமி உபயம்; சாமி நம்ம உபயம்' என்ற மீறல் மனநிலைக்குப் பாடுபொருள் மாறியது கவிதையின் சூக்கும மாற்றம். எழுத்து, அசை, சீர், தளை எண்ணி யாக்கப்பட்ட கட்டுப்பாடான அமைப்பிலிருந்து இயல்பான வரிகளில் சுதந்திரம் பெற்றது பருண்மை மாற்றம். 'ஒருகாலத்தில் புழக்கத்தில் இருக்கும் கவிதை வடிவம் அதன் காலம் கடந்தபின்பு மீண்டும் பயன்படுத்தப்படும்போது அது பழைய பயன்பாட்டைக் கொண்டிருப்பதில்லை; மாறாகப் பகடியாகவோ அங்கதமாகவோ மாறி விடுகிறது' என்ற அர்த்தத்தில் டி.எஸ். எலியட் சொல்லியிருக்கிறார் இல்லையா? அது நமது கவிதைக்கும் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வரலாறு இரண்டாம் முறையாக நிகழும்போது கேலியாக மாறிவிடுகிறது' என்று மார்க்ஸ் சொன்னது கவிதைக்கும் பொருந்தும். ஒருகாலத்தில் மிகக் கடினமானது, மேலானது என்று பாராட்டப்பட்ட வெண்பா என்ற வடிவம் இன்று பகடிக்குரிய வடிவமாகவே மாறியிருக்கிறது. அதற்கு எனக்கு உடனடியாகக் கிடைக்கும் உதாரணம், புதுமைப்பித்தன் கவிதைகள். ஆகச்சிறந்த செய்யுள் வடிவமான வெண்பாவை ஆகக் கேலிக்குரிய ஒன்றாக மாற்றுகிறார். இது மொழியின் இயங்கியல் விதியாக இருக்கலாம். இன்று நாம் கையாளும் புதிய கவிதை வடிவம்கூட மெல்ல மெல்ல அதன் இயல்பிலிருந்து மாறிக் கொண்டுதானே வருகிறது?

பிச்சமூர்த்தி 1934 இல் எழுதிய 'காதல்' என்ற கவிதைதான் இன்றைய கவிதையின் முன்னோடி வடிவம் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் எண்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளில் நிறைய மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்து வந்திருக்கின்றன. முதலில் யாப்பின் தளையில்லாத சுதந்திரமான மொழிதல், பின்னர் உரைநடையின் ஓசையைப் பின்பற்றும் போக்கு, பழைய உருவகங்களின் போதாமையை உணர்ந்து படிமங்கள் பயன்படுத்தப்பட்டமை, ஒரே தொனியிலான கவிதையாக்கம், பின்னர் பல குரல்கள் ஒலிக்கும் பிரதி என்று இவற்றை அடையாளம் காணலாம். 'மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்திக் கொண்டிருக்கிறது' என்ற பிச்சமூர்த்தியின் வரி, கவிதையை எந்தத் தடையும் இல்லாது மொழிகிறது. 'துளசி மகத்துவ இலைகளுடன் தென்றலுக்குக் குலுங்குகிறது' என்ற சுந்தர ராமசாமியின் வரி உரைநடையின் இசைமையைக் கொள்கிறது. இருள் போன்ற முகம் என்ற உவமையையோ முக இருள் என்ற உருவகத்தையோ போதாது என்று நினைக்கும் பிரமிளின் வரி 'இருளின் நிற முகக் கதுப்பில் தணல்கள் சிரித்தன' என்று படிம இயக்கம் பெறுகிறது. 'பூப்பூத்தல் அதன் இஷ்டம்; போய்ப் பார்த்தல் உன் இஷ்டம்' என்ற கல்யாண்ஜியின் ஒற்றைத் தொனிக்கும் 'கிளி என்பது பறவையை, பச்சையை, மூக்கை, பெண்ணை, கூண்டைக் குறிக்கலாம்; சமயங்களில் அது கிளியையும் குறிக்கலாம்' என்ற எம். யுவனின் பலகுரல் தொனிக்கும் கவிதை மாறி வந்திருக்கிறது. கவிதையில் காலங்களாகத் தொடர்ந்து நிகழும் மாற்றங்கள் தனித்தனியானவை அல்ல; மொத்தமானவை என்பது என் பார்வை.

**தமிழ்க் கவிதையின் தற்போதைய போக்கு எப்படி இருக்கிறது? மரபுக் கவிதைத் தெரியாத ஒருவர் கவிதையில் உருவாக்கும் மாற்றங்களில் முதன்மையானது என்று எதைக் குறிப்பிடுவீர்கள்?**

வேறு எந்தக் காலத்தையும்விடச் சிறப்பானதாகவும் விரிவானதாகவும் இருக்கிறது என்று நம்புகிறேன். நிறைய கவிதை முயற்சிகள். நிறைய திசைகள். நிறைய மொழிநடைகள் இன்று சாத்தியமாகி இருப்பதாகப் பார்க்கிறேன். கவிதை மேலும் ஜனநாயகப்படுத்தப்பட்ட வடிவமாக மாறி இருப்பதாகவே நினைக்கிறேன். ஜனநாயகத்தின் மேன்மைகளும் குறைகளும் கவிதைப் பெருக்கத்திலும் இருக்கின்றன. இவற்றில் எவை நிலைக்கும்; எவை காணாமற் போகும் என்பதை என்னால் கணிக்க முடியவில்லை. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்டுகளாகத் தொடரும் மரபைக் கொண்ட ஒரு மொழியில், மிக அதிகமான கவிதை வடிவங்களைக் கொண்டிருந்த ஒரு மொழியில் இது சாத்தியமே. ஆனால் இவற்றில் எது தொடர்ச்சியும் உயிர்ப்பும் கொண்ட போக்காக நிலைக்கும் என்பதுதான் முக்கியமானது. வெறும் செய்நேர்த்தியும் சமகால வாழ்க்கையுடன் மேம்போக்கான உறவு கொண்டவையும் மோஸ்தருக்கு ஏற்ப தயாரிக்கப்படுபவையும் வெற்று சமூக முழக்கமிடுபவையும் இல்லாமற் போகும் என்பதை இதுவரையிலான இலக்கிய வரலாற்றை வைத்துச் சொல்லலாம். இதை விளக்கமாகக் கூறிப் பலரின் ஆயுட்கால எதிரியாக மாறுவதில் எனக்கு விருப்பமில்லை.

மரபுக் கவிதை என்று நீங்கள் குறிப்பிடுவது யாப்பில் சமைத்த செய்யுள்களை என்றால் அப்படி ஒன்றுக்கு இன்று மதிப்பில்லை என்பதே என் பதில். அப்படியான யாப்பு மரபை ஒட்டி எழுதப்படுபவை எந்த மாற்றத்தையும் உருவாக்காது என்று திடமாக நம்புகிறேன். யாப்பு மரபே தெரியாத ஒருவர் இன்று நல்ல கவிதை எழுதிவிட முடியும். நவீனமான உணர்வுடன் எழுதிவிட முடியும். அதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது. புதிதாக எழுதுபவருக்கு யாப்புத் தெரிய வேண்டியதில்லை. மரபுக் கவிதை தெரியவேண்டிய அவசியமில்லை. ஆனால் கவிதை மரபு தெரிந்திருக்க வேண்டும்.

**வெவ்வேறு வகையான அனுபவங்களைத் தமிழ்க் கவிதையுலகுக்குள் கொண்டுவரும் முனைப்பு உங்களுக்குள் தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருக்கிறது. இந்த முனைப்பு உங்களுக்குள் எப்படி உருவாக்கம் பெற்று கவிதையாக்கமாகிறது?**

முனைப்பு என்பது கொஞ்சம் மிகையாகத் தெரிகிறது கீதா. ஒரு பழைய விளம்பரப் படத்தை உங்களிடம் நினைவுகூர்கிறேன். ஊட்டச்சத்து பானம் ஒன்றுக்கான விளம்பரம். பள்ளியைவிட்டு வீடு திரும்பும் சிறுவன் குறுகிய சந்துகளிலும் ஆள் நடமாடாத வழிகளிலும் வருவான். பின்னணிக் குரல் 'ராஜு ஒவ்வொருநாளும் வீடு திரும்ப புதுப்புது வழிகளைக் கண்டுபிடிக்கிறான்' என்று ஒலிக்கும். நான் ராஜு மாதிரி என் வீட்டுக்குத் திரும்ப, புதுப்புது வழிகளைக் கண்டுபிடிக்கிறேன். அவ்வளவுதான். இது முனைப்பல்ல; இயல்பு. சரியாகச் சொன்னால் பயம்; எனக்குள்ளேயே தேங்கி விடுவேனோ என்ற பயம். என்னையே நகலெடுத்துக் காலட்சேபம் செய்துவிடக் கூடாது என்ற சுய எச்சரிக்கை.

இந்த இயல்புதான் என்னைத் தொடர்ந்து எழுத வைக்கிறது. அனுபவங்களை வேடிக்கை பார்ப்பவனாகவும் அனுபவங்களில் பங்காளியாகவும் இருக்கப் பிடித்திருக்கிறது. அது புதிய மொழியை, புதிய பார்வையை அளிக்கிறது. கவிதையும் இலக்கியமும் எப்போதும் வேறுபட்டவற்றை, புதியவற்றை அவாவுபவை என்று நம்புவதும் காரணமாக இருக்கலாம். நான் முன்னோடிகளாக மதிக்கும் பெரும் படைப்பாளிகள் அப்படித்தான் இருந்தார்கள் என்ற எண்ணம் இந்த இயல்பை வலுப்படுத்தியிருக்கலாம்; பகுத்துச் சொல்லத் தெரியவில்லை.

**பெருமாள் முருகனுடனான நேர்காணலில் 'பின்நவீனத்துவம் என்பது சொந்த மரபை நோக்கித் திரும்புவது' என்ற உங்கள் கூற்றுக்குத் தந்த விளக்கத்தில் "நம்முடைய மொழி, நம்முடைய வாழ்க்கை, நம்முடைய வாழ்க்கையில் தட்டுப்படும் உவமைகள், உருவகங்கள், நாம் அன்றாடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயன்படுத்தும் புழங்கு மொழி ஆகிய எல்லாம் சேர்ந்துதான் புதிய நவீனத்துவம் என்று உருவாகும்." என்று கூறியிருக்கிறீர்கள். டீ.பி. Auden கவிதைப் பற்றி குறிப்பிடுகையில் கலைகளில் பிராந்தியத் தன்மை மிகுந்திருப்பது கவிதையில்தான் என்றார். சமகாலத் தமிழ் இலக்கியச் சூழலில் புலம்பெயர் நாடுகளிலிருந்து வெளிவரும் கவிதைகள் முன்வைக்கும் அனுபவங்களை மொழியை எந்த நிலம் சார்ந்து நாம் கொள்ள இயலும்? இதைச் சொல்லும்போது ஆத்மாநாமின் கவிதையைப் பற்றி 'ஒரு தமிழ் நகரத்தில் வாழ்ந்த தமிழனின் நவீன கவிதை' என்று சொன்னது நினைவுக்கு வருகிறது. தமிழ் நிலம், தமிழனுபவம், புழங்குமொழி போன்ற சொற்களை எப்படி வரையறுக்கிறீர்கள்?**

90 களின் ஆரம்பத்தில் நவீனத் தமிழ் இலக்கியத்தில் 'பின்நவீனத்துவம்' என்ற பிரயோகம் புழங்கியது. அதற்கான பொருட்களும் செய்முறை விளக்கங்களும் சொல்லப்பட்டன. பின்நவீனத்துவத்தைச் சமைத்தவர்கள் என்று பலருடைய பெயர்கள் உச்சரிக்கப்பட்டன; பலருடைய கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன. அந்தக் கருத்துக்களை, கோட்பாட்டை ஒட்டித் தமிழ் இலக்கியமும் பண்பாடும் அளவிடப்பட்டன. பழைய இலக்கியங்கள்கூட இந்தப் புதிய கருத்துக்களின் பின்னணியில் மதிப்பிடப்பட்டன. இவை ஒரு கட்டத்தில் அதீதமாகவும் பொருத்தப்பாடு இல்லாமலும் ஆயின. இலக்கியத்தையும் பண்பாட்டையும் அணுகுவதற்கான புதிய கருவி என்ற நிலையில் இவை முக்கியமானவையாக இருந்தாலும் இந்த அதீதப் போக்கால் தொந்தரவு அளிப்பவையுமாயின. உடம்புக்குப் பொருத்தமான சட்டை என்பதைக் காட்டிலும் சட்டைக்குப் பொருத்தமான உடம்பு என்று விவாதிக்கப்பட்டது. படைப்பு முதன்மையானது; அதை விளங்கிக் கொள்வதற்கான கருவிகள்தாம் கோட்பாடுகள் என்று ஆழமான நம்பிக்கை கொண்ட என் மனதுக்கு இந்த விவாதங்கள் உறுத்தலாகத் தென்பட்டன. விவாதங்களில் குறிப்பிடப்பட்ட சில ஆசிரியர்களை நானும் ஊன்றி வாசித்தேன். அவை நடைமுறையில் ஆர்ப்பாட்டமாகக் கொண்டாடப்பட்ட விவாதங்களுக்குப் பெரும்பாலும் நேர் எதிரானவையாக இருந்தன. ஏறத்தாழ இதேபோன்ற விவாதம் பிற இந்திய மொழிகளிலும் அன்று நடைபெற்று வந்ததும் கவனத்தில் பதிந்தது. என்னால் நேரடியாக வாசிக்க முடிந்த மலையாளத்திலும் பிற மொழியைச் சார்ந்த நண்பர்கள் வாயிலாக அந்தந்த மொழிகளிலும் இந்தப் போக்கைப் பற்றிய பொதுச் சிந்தனையை அவதானித்தேன். மலையாளத்தில் நவீனத்துவம் 'ஆதுனிகத' என்று அழைக்கப்பட்டது. வங்காளத்தில் ஆதுனிக். இவை இரண்டும் நவீனத்துவத்தைக் கடந்தபோது உத்தரானிகத என்றும் உத்தர் ஆதுனிக் என்றும் மாறின. மாற்றத்தின் இயல்புகளாக நான் பார்த்தவைதாம் நீங்கள் குறிப்பிட்ட அலகுகள். அவற்றைத் தமிழ்க் கவிதைக்கும் பொருத்திப் பார்க்க முயற்சித்தேன். அதன் விளைவுதான் பின்நவீனத்துவம் பற்றிய என் மாற்றுப் பார்வை. கோட்பாடுகளைத் தவிர்த்த ஒன்றாகப் படைப்பைப் பார்ப்பதும் அந்தப் பார்வையிலிருந்து கிடைக்கும் தரவுகளின்மூலம் கருத்துநிலைக்கு எட்டுவதுமே என்னுடைய பின்நவீனத்துவம். இதை யாரும் பொருட்படுத்தவில்லை என்பதில் எனக்குக் குறை இருந்தது. என் பார்வை குறித்து எனக்கு சந்தேகம் இருந்தது. ஆனால் 90 களின் இறுதியிலும் பின்னரும் வெளியான கவிதைகள், பிற இலக்கியப் படைப்புகள் சந்தேகத்தைத் தளர்த்தின. பின்நவீனத்துக்கென்று கையாளப்படும் சூத்திரங்களுக்கு ஏற்ப ஒரு படைப்பை அணுகுவதில் கிடைக்கும் விளைவைவிட படைப்புக்குள்ளிருக்கும் தரவுகள் சார்ந்து அலசும்போது படைப்பின் விரிவு புலப்படுகிறது. புதிய களங்கள் தெளிவாகின்றன. புதிய பார்வைகள் காணக் கிடைக்கின்றன. வகைப்படுத்தலில் எனக்கு முழு உடன்பாடு இல்லை என்ற நிலையிலும்கூட பெண்ணெழுத்து, தலித்திய எழுத்து, புலம்பெயர் எழுத்து என்று அறிமுகமான புதிய போக்குகள் என் கூற்றுக்கு ஆதரவானவை என்றே எடுத்துக் கொள்கிறேன்.

உலக நடவடிக்கைகளும் பண்பாடும் ஒற்றைப் புள்ளியை நோக்கி நகர்த்தப்படும் இன்று அதற்கு எதிராக இலக்கியமும் கலைகளும் தமது மரபை நோக்கித் திரும்புகின்றன. அந்த அடிப்படையில் பார்த்தால் ஆடன் சொன்னது சரிதான். கனடாவிலிருந்து கொண்டு எழுதும் நீங்கள் கனடிய மனநிலையிலிருந்து எழுதவில்லை. மாறாக தமிழ் நிலம், மொழி ஆகியவற்றின் திரண்ட சாரத்திலிருந்துதானே உங்களுடைய கவிமொழியை உருவாக்குகிறீர்கள். இதையே ஆத்மாநாம் கவிதை பற்றிய என்னுடைய பொது அபிப்பிராயத்துக்கும் பொருத்திப் பார்க்கலாம் இல்லையா?

'கனிவு' என்ற என்னுடைய கவிதை இந்தப் பொருத்தப்பாட்டை அல்லது பொருத்தமின்மையை எனக்குத் தெளிவுபடுத்தியது. எழுத்தாளர் ஜெயமோகன் சில ஆண்டுகளுக்கு முன்பு ஊட்டியில் தமிழ், மலையாளக் கவிஞர்களின் சந்திப்பை நடத்தினார். அதில் நானும் கலந்துகொண்டேன். மலையாளக் கவிஞர்களின் வாசிப்புக்காக மேற்கூறிய கவிதையை மலையாளத்தில் மொழிபெயர்க்க முயன்றோம். ஆனால் முயற்சி பலனளிக்கவில்லை. இத்தனைக்கும் அது தமிழ் வாசகனுக்கு எளிதில் புரியக்கூடியதும் அவன் உணரக்கூடியதுமான கவிதை. ஆனால் அது மலையாளக் கவிஞர்களுக்கு முரட்டுக் கவிதையாகத் தென்பட்டது. ஏனெனில் அதன் ஒவ்வொரு வரியிலும் தமிழ் சார்ந்த அடையாளங்கள் பின்னிக் கிடந்தன. மறுதரப்பில் மலையாளக் கவிதைகளைத் தமிழாக்கம் செய்யும்போதும் இதே சிக்கலை உணர்ந்தேன். அது ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தியது. நிலத்தின் இயல்பும் மொழியின் உயிர்ப்பும் பண்பாட்டின் சாரமும் எதில் பிரிக்கவியலாதபடி கலந்திருக்கிறதோ அதுவே கவிதையின் மொழி.

**நீங்கள் மிகுதியான அளவு கவிதை மொழியாக்கம் செய்திருக்கிறீர்கள். ஒரு கவிஞராக மொழியாக்கத்தில் ஈடுபடும்போதும் உங்களால் கவிதைகள் எழுத முடியுமா? அவ்வாறு மொழியாக்கம் செய்யும்போது உங்களுடைய கவிதை மொழியில் மாற்றங்கள் தோன்றுமா? ஏனென்றால் மொழிபெயர்ப்பு எப்போதும் மொழியின் எல்லைகளை விரிவுபடுத்தும், இரு உலகங்களை இணைக்கும் செயல் அல்லவா?**

சொந்தக் கவிதைகளின் எண்ணிக்கையைவிட இரண்டு அல்லது மூன்று மடங்கு கவிதைகளை மொழிபெயர்த்திருக்கிறேன். மூன்று காரணங்களுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவற்றைச் செய்திருக்கிறேன். ஒன்று: என்னுடைய கவிதை மொழியைச் செழுமைப்படுத்திக் கொள்ளவும் புதிய அனுபவங்களுக்கு உட்படவும். இரண்டு: நான் எழுதும் மொழியிலுள்ள கவிதை எங்கே நிற்கிறது என்று அறிந்துகொள்ள. மூன்று: மொழியாக்கங்கள்மூலம் நான் புழங்கும் மொழியிலுள்ள கவிதைகள் மாற்றம் காணும் என்று நம்புவதால். வெ. ஸ்ரீராமின் மொழிபெயர்ப்பில் வெளிவந்த 'சொற்கள்' என்ற ழாக் ப்ரெவர் கவிதைகள்தான் சமீபத்திய நேரடிக் கவிதை முறைக்குத் தூண்டுதல் என்பதை நினைவுகூர்கிறேன்.

மொழியாக்கக் கவிதைகளும் என்னுடைய கவிதைகள்தாம் என்று தயக்கத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் கவிதைகளுடன் எனக்கு ஏற்படும் ஈடுபாடும், அவற்றை மேலும் நெருங்குவதற்கான எத்தனமும்தான் மொழியாக்கத்தைச் சாத்தியப்படுத்துகின்றன. மொழியாக்க வேளைகளிலும் கவிதைகள் எழுதியிருக்கிறேன். அவ்வாறு செய்யும்போது நிச்சயம் என்னுடைய தனிப்பட்ட கவிதை மொழி (personal poetic idiom) மாறத்தான் செய்கிறது. ஒரு சுவாரசியமான சம்பவத்தைச் சொல்லவா? பாப்லோ நெரூதாவின் 'இன்றிரவு என்னால் எழுத முடியும்', 'ஞாபகம்', 'சுற்றி அலைதல்', 'பூமியே, எனக்காகக் காத்திரு' ஆகிய நான்கு கவிதைகளை மொழிபெயர்த்தேன். அவை 'கொல்லிப்பாவை' சிற்றிதழில் வெளிவந்தன. இந்த மொழிபெயர்ப்புகள் வெளிவந்த இதழில் என்னுடைய சொந்தக் கவிதைகள் சிலவும் வெளியாயின. இலக்கிய நண்பர் ஒருவர் சக நண்பரிடம் அவரும் எழுதுபவர் என்னுடைய கவிதை ஒன்றைப் பெயர் சொல்லாமல் வாசித்துக் காண்பித்திருக்கிறார். வாசிப்பு முடிந்ததும், கேட்டுக் கொண்டிருந்த நண்பர் 'நெரூதாவின் கவிதைதான்' என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறார். அது என் கவிதை. அதில் நெரூதாவின் சாயலை நண்பரால் காணமுடிந்தது. மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மொழிபெயர்ப்பு மொழியின் எல்லைகளை மட்டுமல்ல; சிந்தனையின் வரையறைகளையும் கடக்கும், விரிவாக்கும் என்பவை என் சொந்த அனுபவத்தில் உணர்ந்தவைதாம்.

**ஈழத்திலிருந்து தோன்றும் கவிதைகளும் புலம்பெயர் ஈழக் கவிதைகளும் தமிழ் இலக்கிய உலகுக்கு புதிய பார்வைகளை, பன்முகத் தன்மையை உருவாக்கியிருக்கின்றன என்பது பலரும் ஒப்புக் கொள்வார்கள். ஆனால் தற்போது ஈழக் கவிதைகள் குறித்தும் இலக்கியம் குறித்தும் தமிழக இலக்கிய உலகில் மீண்டும் மீண்டும் போரைப் பற்றியே அமைவதாக ஒரு கருத்து நிலவுகிறது. Holocaust முடிந்து எழுபது ஆண்டுகள் கழித்தும், ஆர்மேனிய இனப் படுகொலைகள் நடந்து நூறு ஆண்டுகள் கழித்தும் இப்போதும் அவற்றைப் பற்றிய இலக்கியங்கள் உருவாகும் வேளையில் இந்தப் போக்கை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்? இது சமூக அரசியல் சார்ந்த பார்வையில் கேட்கிறேன். இதுதவிர ஐரோப்பிய இலக்கியம் இரண்டாம் உலகப் போருக்குப் பின் தோன்றிய கவிதைப் படைப்புகளால் புதிய அனுபவங்களையும் மொழியையும் போக்குகளையும் Cezelaw Milosz, Nelly Sachs உள்ளிட்ட படைப்பாளிகளின் மூலம் அளித்துள்ளது. ஈழ இலக்கியமும் போரிலிருந்து தோன்றினாலும் அச்சூழலை மீறிய பல இழைகளையும் அனுபவங்களையும் முன்வைக்கிறது என்று நீங்கள் அண்மையில் குறிப்பிட்டீர்கள். ஆனால் இவையெல்லாம் முறையான கவனிப்புப் பெறாமல் இருக்கின்றன எனத் தோன்றுகிறதே...**

கேள்விக்குப் பின்புலமாக நீங்கள் சொல்லும் எல்லாவற்றையும் நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஈழத்தின் மானுடச் சிக்கல் பேசப்படத் தொடங்கி முப்பது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. போருக்கு முந்தைய தடுமாற்றக் காலம், போர் நிகழ்ந்த கொந்தளிப்பான காலம், போருக்குப் பிந்தைய கையறுநிலைக் காலம் என்று இவற்றை மூன்றாகப் பகுத்துப் பார்க்கலாமா? ஏனெனில் 80கள் தொடங்கி இன்றுவரை மூன்று தலைமுறையைச் சேர்ந்தவர்கள் இந்த அவலத்தை இலக்கியத்தில் பதிவு செய்திருக்கிறார்கள். அவை மீண்டும் மீண்டும் போரைப் பற்றிச் சொன்னாலும் ஒரே மாதிரியாகச் சொல்லவில்லை என்று எண்ணுகிறேன். சேரனும் பா.அகிலனும் தீபச்செல்வனும் ஒரே நிலத்தின் ஒரே போரின் விளைவைச் சொன்னாலும் ஒரே மாதிரியாகச் சொல்லவில்லை என்பதுதான் என் கருத்து.

யூதர்களை அழித்தொழித்ததும் ஆர்மீனியர்களைப் பூண்டோடு பிடுங்கியதும் போன்ற இன அழிப்புத்தான் ஈழத்திலும் நடைபெற்றது என்பது உறுதி. ஆனால் முன்னவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் பதிவு பெற்றதுபோல இந்த இனப் படுகொலை பதிவு பெற்றிருக்கிறதா என்று சந்தேகப்படுகிறேன். அவ்வாறு பதிய வைக்கும் முயற்சியில்தான் விரிவான அனுபவங்கள் இடம் பெறும். ஈழப் படுகொலை பற்றி இன்னும் எழுதப்படும்; எழுதப்பட வேண்டும். இன்றுவரை எழுதப்பட்டிருப்பவை போரை, அதன் விளைவுகளைப் புறவயமாகப் பார்த்து எழுதப்பட்டவை என்றும் இனி அவை அகவயமாக எழுதப்பட வேண்டிய தேவை இருப்பதாகவும் எண்ணுகிறேன்.

'என்னால் காட்டில் பெர்ரிப் பழங்களைப் பறிக்க முடிவது எவ்வளவு அதிர்ஷ்டம்? ஏனெனில் காடு இருக்காது பெர்ரிகளும் இராது என்றே நினைத்திருந்தேன்

என்னால் ஒரு மரநிழலில் கிடக்க முடிவது எவ்வளவு அதிர்ஷ்டம்? ஏனெனில் மரங்கள் இனி நிழல் தராது என்றே நினைத்திருந்தேன்

என் இதயத் துடிப்பை உணர்ந்தபடி உன்னுடன் இருக்க முடிவது எவ்வளவு அதிர்ஷ்டம்? ஏனெனில்

மனிதனுக்கு இதயமில்லை என்றே நினைத்திருந்தேன்' என்ற ரோஸ்விக்ஸின் கவிதை மனநிலை வெளிப்படுத்தப்பட வேண்டும். ஒருவேளை அந்த மனநிலையை வெளிப்படுத்தும் வகையிலான கவிதைகள் முறையான கவனிப்புப் பெறுமோ என்னவோ?

**கவிஞராகவும் கவிதை விமர்சகராகவும் இருப்பதால் இதைக் கேட்கிறேன் ஒரு கவிதை தோன்றுவதற்கான புறச்சூழல் அல்லது பின்புலத்துக்கும் அந்தக் கவிதைக்கும் அந்தக் கவிதையை வாசிக்கும் முறைக்குமான உறவு எப்படி இருக்கவேண்டும் என நினைக்கிறீர்கள்? குறிப்பாக நாம் தற்போது கவிதையை அணுகும் முறை...**

முதலில் ஒரு மறுப்பைச் சொல்லி விடுகிறேன். நான் விமர்சகன் அல்லன். விமர்சகனுக்கு உரிய எந்த முஸ்தீபுகளும் கருவிகளும் என்னிடம் இல்லை. கவிதை தொடர்பாக எழுதியவை அனைத்தும் கவிதையைப் புரிந்துகொள்வதற்கான முயற்சிகள் மட்டுமே. நீண்ட கவிதை மரபு கொண்ட மொழியில் அதன் இடத்தைப் பொருத்திப் பார்ப்பதற்கான ஆசை மட்டுமே. விமர்சகனுக்குரிய தற்சார்பற்ற மனநிலை எனக்கில்லை. அப்படித் தகுதிப்படுத்திக் கொள்ளும்படியான வாசிப்பல்ல என்னுடையது.

கவிதையின் தோற்றச் சூழல், பின்புலம், கவிதை வாசிப்பு மூன்றும் வெவ்வேறானவைதானே? அவை வாசிப்பு முறைக்கு எந்த வகையிலும் தொடர்பில்லாதது என்றுதான் நினைக்கிறேன். இந்த அளவீடுகளை வாசிப்பில் முதன்மையாகக் கருதினால் கவிதை நழுவிப் போய்விடும் அபாயம் இருப்பதாகக் கருதுகிறேன். சங்க இலக்கியப் பாடல்கள் முதல் இன்றைய கவிதைகள் வரையும், பிற அயல்மொழிக் கவிதைகளையும் அவற்றின் கவி இயல்பு சார்ந்துதானே புரிந்துகொள்கிறோம். கவிஞன் சொல்வதை நமது அனுபவமாக ஏற்றுக்கொள்ளும் நிலையில்தான் கவிதையுடன் நமக்குப் பிணைப்பு ஏற்படுகிறது. கவிதைக்குள் பொதிந்திருக்கும் அனுபவத்தை என்னுடையதாக மாற்றிக் கொள்ளும்போதே உறவு உருவாகிறது. மாறாக என்னுடைய அனுபவத்தை அதில் புகுத்திப் பார்க்கும்போது கவிதை நழுவுகிறது. இன்னொரு நிலையில் கவிதைக்குள் சொல்லப்படும் அனுபவம் நானும் உணர்ந்த ஒன்றாக இருக்கும்போது அந்த உறவு வலுவாகிறது. கவிதைக்குள் சொல்லப்படும் அனுபவத்தை என்னுடையதுமாக மாற்றிக்கொள்வதே நல்லுறவு என்று நான் நம்புகிறேன். பிக்காஸோவின் பிரபலமான மேற்கோள் ஒன்று உண்டு. ஓவியர்களைப் பற்றிச் சொன்னது. 'இரண்டு வகையான ஓவியக் கலைஞர்கள் இருக்கிறார்கள். சிலர் சூரியனை ஒரு மஞ்சள் புள்ளியாக மாற்றுகிறார்கள். வேறு சிலர் மஞ்சள் புள்ளி ஒன்றை வைத்துவிட்டு அதைச் சூரியனாகக் கற்பனை செய்துகொள்ளத் தூண்டுகிறார்கள்.' சூரியனை மஞ்சள் புள்ளியாக மாற்றுவதையே சரியான அணுகுமுறையாக நான் எடுத்துக் கொள்கிறேன். நமது தற்போதைய அணுகுமுறை மஞ்சள் புள்ளியைச் சூரியனாகச் சித்திரிப்பது. அது எனக்கு உகந்ததாக இல்லை.

**நீங்கள் பயன்படுத்திய "ஆதுனிகத/ உத்தரானிகத" என்ற மலையாளச் சொற்களிலிருந்தே இக்கேள்வி. நவீனத்துவம்/ பின்நவீனத்துவம் எனும் தொடர்களிலிருந்து இவை எவ்வாறு மாறுபடுகின்றன? மலையாள இலக்கியத்தைத் தொடர்ந்து வாசிப்பதால் இன்னொரு கேள்வியும் தோன்றுகிறது. நவீனத்துவம்/ பின்நவீனத்துவத்தைப் பற்றிய புரிதலும் உரையாடலும் மலையாள இலக்கியப் பரப்பில் எவ்வாறு உருக்கொண்டுள்ளன? தமிழ் இலக்கியச் சூழலிலிருந்து அது வேறுபடுகிறதா?**

இந்த இரு சொற்கள் அல்லது வகைப்பாடு ஆங்கிலம் வழியாகவே உலக இலக்கிய அரங்கிலிருந்து நமது சூழலுக்கு வந்தவை. பொதுப்படையாக ஐரோப்பிய மையவாதத்தை ஆதாரமாகக் கொண்டவை என்று சொல்லலாம். முன்னரே குறிப்பிட்டதுபோல இவற்றை நான் புரிந்துகொள்வது படைப்பை அணுகுவதற்கான உபாயங்களாகவேயன்றி அவற்றை மதிப்பிடும் அளவுகோல்களாக அல்ல. நிலவுடைமைச் சமூகங்கள் தொழிற் சமுதாயங்களாக மாறியபோது எழுந்த நெருக்கடிகளும் வாழ்க்கை பற்றிய பதற்ற உணர்வுகளும் நவீனத்துவத்தின் அடிப்படையாக இருந்தது. சமூகச் சார்பைவிடத் தனிமனித நிலையே கலை இலக்கியப் பார்வையை வகுத்தது. அதையொட்டியே இந்திய இலக்கியச் சூழலிலும் விவாதங்கள் நிகழ்ந்தன. படைப்புகளிலும் அது பிரதிபலித்தது. கச்சிதமான, சரியாகச் சொன்னால் இறுக்கமான மொழி, பொதுத்தன்மையுள்ள குறிப்பீடுகள், தரப்படுத்தப்பட்ட நடை இவையெல்லாம் பொதுவான அம்சங்களாக இருந்தன. உதாரணமாக இதைச் சொல்லலாம். பெரும்பாலான இந்தியக் கவிஞர்களை டி.எஸ்.எலியட்டின் 'பாழ் நிலம்' பாதித்தது. அந்தப் பாதிப்பில் அநேகமாக எல்லா மொழிகளிலும் அதுபோன்ற நீள்கவிதை எழுதப்பட்டது. தமிழில் சி.மணியின் நரகம், மலையாளத்தில் அய்யப்பப் பணிக்கரின் குருக்ஷேத்திரம், ஹிந்தியில் ஸ்ரீகாந்த் வர்மாவின் மகதா ஆகியவற்றில் பாழ்நிலத்தின் சாயலைப் பார்க்கலாம். 'நகரம்' கவிதை தமிழ்நாட்டு நகரத்தைப் பின்புலமாகக் கொண்டது. குருக்ஷேத்திரம் மகாபாரதப் பின்னணியில் எழுதப்பட்டது. மகதா வட இந்திய வரலாற்று நகரங்களைக் களமாகக் கொண்டது. அந்தவகையில் இவை நவீனத்துவத்தை விட்டு விலகியவை. ஆனால் படைப்புக்கான ஊக்கம் நவீனத்துவம் சார்ந்தது. எழுபதுகளின் இறுதியிலேயே இந்தப் போக்கில் மாற்றமும் நிகழ்ந்தது. நவீனத்துவம் வலியுறுத்திய அம்சங்களுக்குப் பதிலான புதிய கூறுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கப்பட்டன. அதையொட்டியே பின்நவீனத்துவம் எழுந்தது. என் பார்வையில் அதன் இயல்புகளை என்னவாகக் காண்கிறேன் என்பதையே முந்தைய கேள்விக்கான பதிலில் சொல்லியிருக்கிறேன்.

மலையாளத்தில் நவீனத்துவம் விவாதிக்கப்பட்டதுபோல பின்நவீனத்துவம் பற்றிய உரையாடல் அதிகம் இல்லை. எல்லா மொழிகளிலும் நவீனத்துவக் காலகட்டத்துக்குப் பின்னர் கோட்பாட்டு ரீதியிலான விமர்சனம் தொய்வடைந்தது காரணமாக இருக்கலாம். ஆசிரியனைவிட அவனால் உருவாக்கப்பட்ட பிரதியே முக்கியமானது என்ற சிந்தனை எல்லா மொழி இலக்கியங்களிலும் வலுப்பெற்றது என்று நினைக்கிறேன். மலையாளத்திலும் அதுவே நிகழ்ந்தது என்பது என் வாசிப்பில் உணர்ந்த உண்மை.

**புலம்பெயர் தமிழ் இலக்கியத்தில் ஈழத் தமிழரின் பங்கு கணிசமாக இருக்கும் நிலையில், அவை முன்னிறுத்தும் அனுபவங்களும் போர், இழப்பு, புகலனுபவம் போன்றவை புலம்பெயர்ந்த தமிழகப் படைப்பாளிகளிலிருந்து மிகவும் வேறுபட்ட தளத்திலிருந்து ஒலிக்கின்றன. ஏனென்றால் தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்தவர் அனுபவம் மாறுபட்ட ஒன்று, பொருளாதாரத் தேவையினால் உருவான ஒன்று. இந்த இருவகைப் புலம்பெயர் அனுபவங்களையும் அதன் பயனாக உருவாகும் படைப்புகளையும் எப்படிப் பார்க்கிறீர்கள்? குறிப்பாக, மலையாள இலக்கியத்திலும் புலம்பெயர் அனுபவம் மிகுதியாக இருக்கிறது என்று நீங்கள் கூறியது நினைவுக்கு வருகிறது?**

தமிழகத்திலிருந்து அயலிடங்களுக்குச் சென்றவர்கள் இங்கே வாழமுடியாத சூழல் காரணமாகச் சென்றவர்கள் அல்லர். திரவியம் தேடித் திரைகடல் கடந்தவர்கள். சொந்த மண்ணில் வாழமுடியாமல் திசை துறந்து வேறு நிலத்தில் வாழும் வாழ்க்கையையே புகலிட வாழ்க்கை என்று சொல்வோமானால், ஈழத்துப் படைப்புகள்தாம் அந்த அனுபவத்தைச் சமகாலத் தமிழிலக்கியத்தில் முன்வைத்தவை. யுத்தம் ஒரு நேரடி அனுபவமாக உணரப்படும் தருணங்களை அவைதான் முன்வைத்தன. அதன் தொடர்ச்சியாகவே புகலிட வாழ்வனுபவம் சார்ந்த படைப்புகள் உருவாயின. இன்று இவை தனித்த இருப்புக் கொண்டவையாகவும் ஆகியிருக்கின்றன.

போரல்லாத காரணங்களுக்காகவும் தமிழ் மண்ணிலிருந்து இடப்பெயர்வுகள் நிகழ்ந்திருக்கின்றன. காலனி ஆதிக்க நாட்களில் கொத்தடிமைகளாகவும் கூலித் தொழிலாளிகளாகவும் ஆசியப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் இருந்திருக்கிறார்கள். பாரதியின் கவிதையிலும் புதுமைப்பித்தன் கதையிலும் பார்க்க முடிந்திருக்கிறது. அவர்கள் வாழ்வனுபவங்கள் மிகக் குறைவாகவே சொல்லப்பட்டிருக்கின்றன. புகலிட வாழ்க்கைச் சித்திரிப்பு தற்காலத்தைப்போலப் பரவலான கவனத்துக்குரியதாக அன்று இல்லாமல் இருந்திருக்கலாம். ப. சிங்காரத்தின் இரு நாவல்களும் வேறு சில படைப்புகளுமே எடுத்துக்காட்டுகளாகக் கிடைத்தவை. கூலித் தொழிலாளர்களாகக் கொண்டு செல்லப்பட்டவர்கள் அன்று சாதியப் படிநிலையிலும் கல்விநிலையிலும் கீழே தள்ளப்பட்டவர்கள் என்பதும் இங்கு நினைவுக்கு வருகிறது.



மலையாள இலக்கியத்தில் வேர் பறிக்கப்பட்ட வாழ்க்கை பற்றிய படைப்புகள் நவீன காலத்தின் தொடக்கத்திலிருந்தே எழுதப்பட்டு வந்திருக்கின்றன. பொதுவாகவே மலையாளிகளில் கணிசமான பகுதியினர் பிறந்த மண்ணைப் பிரிந்து வேற்று நிலத்தில் வாழ்க்கையைத் தேடியவர்கள்தாம். முதலில் சென்னை, பம்பாய், தில்லி என்ற பெருநகரங்களுக்கும் 1960 களை ஒட்டி வளைகுடா நாடுகளுக்கும் பொருள் வயின் பிரிந்தவர்களே அதிகம். இதை மையமாகக் கொண்ட எழுத்துக்களைப் புகலிட இலக்கியம் என்று சொல்ல முடியுமா? என்று சந்தேகமாக இருக்கிறது. ஆரம்பக் காலத்தைச் சேர்ந்தவையாக, மிகக்குறைந்த அளவே புகலிட ஜீவிதம் பற்றிய எழுத்துக்களைக் காணமுடிகிறது. அதுவும் புனைவு எழுத்துக்களில்தாம். அரபிப் பொன் (எம்.டி. வாசுதேவன் நாயரும் என். பி முகம்மதும் இணைந்து எழுதிய நாவல்). ‘எண்ணெய்ப் பாடம்’ ஆகிய குறைவான படைப்புகள்தாம் கிடைத்தன. எண்பதுகளுக்குப் பின்னர்தான் வளைகுடா நாடுகளில் வாழும் மலையாளிகளின் வாழ்க்கை சித்திரிக்கப்பட்ட படைப்புகள் வரத் தொடங்கின. கவிதைகளிலும் அந்த வாழ்க்கை இடம் பெறலாயின. இந்தக் கவிதைகளை மலையாளக் கவிஞரும் விமர்சகருமான சச்சிதானந்தன் ‘மூன்றாம் இடத்தின் இலக்கியம்’ என்று குறிப்பிடுகிறார். இவை ஈழத் தமிழரின் புலம்பெயர் இலக்கியத்துடன் ஒப்பு நோக்கப்படுமா? என்று யோசிக்கிறேன். ஏனெனில் நிலத்தை இழந்த ஒரு பிரிவின் வாழ்க்கையும் எங்கோ பத்திரமான நிலம் இருக்கிறது என்ற நம்பிக்கையில் புலம் பெயர்ந்த பிரிவினரின் வாழ்க்கையும் சமமானதா? என்ற சந்தேகம் யோசனையைத் தூண்டுகிறது.

ஈழத்திலிருந்து பெயர்ந்து கனடா, பிரான்ஸ் போன்ற இடங்களிலிருந்தும் கேரளத்திலிருந்து வெளியேறி வளைகுடா நாடுகளில் குடியமர்ந்தும் எழுதுவதனாலேயே புலம்பெயர் இலக்கியம் சாத்தியமாகுமா? ரொறன்ரோவில் அமர்ந்து யாழ்ப்பாண வாழ்க்கை இழப்பையும் துபாயில் உட்கார்ந்து கோழிக்கோட்டுக் கிராம ஜீவிதத்துக்கு நினைவேக்கம் கொள்வதையும் முன்வைப்பது புலம்பெயர் இலக்கியமாகுமா? முற்றிலும் அந்நியமான மண்ணில், மாறுபட்ட பண்பாட்டுச் சூழலில் ஈழத்தவரும் மலையாளியும் முறையே எப்படி வாழ்க்கையை எதிர்கொள்கிறார்கள் என்பதைப் பற்றியதே புலம்பெயர் எழுத்துக்கான அடையாளமாக இருக்கும் என்று நினைக்கிறேன். பிட்டை எளிதில் செரித்துக் கொள்ளும் குடல் பீட்சாவையும் குப்பூஸையும் ஏற்றுக்கொள்வதில் நிகழும் சிக்கல்தானே புலம்பெயர் அனுபவமாக இருக்கக்கூடும்? அதுபோன்ற அனுபவத்தைச் சொல்லும் படைப்புகள் இரண்டு மொழிகளிலும் இப்போதுதான் எழுந்து வருகின்றன. அது அப்படித்தான் எழும் என்றும் சொல்லலாம்தானே?

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NUAGE ACCOUNTING & TAX SERVICES INC.

# Professional Accounting Services

## for Individual and Businesses




We do Professional Education

- > Personal Tax Service
- > Corporate Tax Service
- > Bookkeeping & Accounting
- > Business Registration
- > Tax Planning
- > Small Business Service

- > Foodhandler Certification
- > Smart Serve Certification
- > Business Accounting & Tax for Entrepreneurs

Call: Ram Sivaharan

Tel: 647-984-6000 Cell: 647-522-1775

110 Ironside Cres. Suite 6, Toronto ON, M1X 1M2

web: nuagegroup.ca    email: info@nuagegroup.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொதி

ஜெயமோகன்

"கொதின்னு கேள்விப்பட்டதுண்டா?" என்று ஃபாதர் சூசைமரியான் கேட்டார்.

நாங்கள் காரில் திருவனந்தபுரம் சென்று கொண்டிருந்தோம். நோயுற்றிருக்கும் வயோதிகரான ஃபாதர் ஞானையாவைப் பார்ப்பதற்காக. அம்பலமுக்கில் வயதான பாதிரியார்களுக்கான ஓய்வில்லத்தில் அவர் இருந்தார். ஆஸ்பத்திரியில் பலமாதங்கள் இருந்தார். அப்போதும் சென்று பார்த்திருக்கிறோம். நேற்று தன்னைத் திரும்ப தன்வீட்டுக்கே கொண்டுசெல்லச் சொல்லியிருந்தார். ஓய்வில்லத்தில் ஓடைக்கரையில் ஒரு பழைய ஓட்டுவீடுதான் அவருடைய வாழ்விடம். இருபதாண்டுகளாக அங்கேதான் தனிமையில் இருந்தார்.

டிரைவர் இருக்கையின் அருகே ஏசுதாஸ் அமர்ந்திருந்தான். ஃபாதர் சூசைமரியான் பின்னிருக்கையில் அமர்ந்திருந்தார். அவர் அருகே நான். வசதியான கார்தான். மீன் ஏற்றுமதிக்காரர் ஜானிஃபெர்னாண்டோவிடமிருந்து நான் இரவல் வாங்கியது. ஃபாதர் சூசைமரியானுக்கு முதுகுவலி கொஞ்சம் உண்டு. ஆகவே தலையணையை வைத்து நன்றாகச் சாய்ந்து அமர்ந்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கொதிப்புன்னு கேட்டிருக்கிறேன்! தண்ணிகொதிக்கிறது!” என்றேன்

“டேய் ஏசுதாஸ், சொல்லுடா. கொதின்னா என்ன?” என்றார் ஃபாதர் சூசைமரியான்.

“வேற தெரியல்ல ஃபாதர்” என்றான் ஏசுதாஸ்.

“செரி, உங்க ஏரியாவிலே கொதிக்கு ஓதுறது உண்டா?”

“புரியல்ல ஃபாதர்”

“சர்ச்சிலே எங்கியாவது கொதிக்கு ஓதுற சடங்கைப் பாத்திருக்கியா?”

“நம்ம சர்ச்சுகளிலேயா?”

“பின்ன என்ன பெந்தேகோஸ்துகாரன் ஓதுற சர்ச்சையா சொன்னேன்?”

“இல்ல ஃபாதர், கேள்விப்பட்டதே இல்லை”

“நீ இந்த ஊருதானே?”

“ஆமா ஃபாதர், மலையடிவாரம். களியல். அம்மை அங்கதான் இருக்கா”

“அதைப்பத்திக் கேள்விப்பட்டதே இல்லியா?”

“இல்ல ஃபாதர்”

ஃபாதர் சூசைமரியான் “கர்த்தருக்குத் துதி” என்று சொல்லி சிலுவை போட்டுக்கொண்டார்.

“என்ன ஃபாதர் அது?” என்றேன்.

“கொதின்னா சரியான தமிழிலே தண்ணியோ வேற திரவமோ குமிழியிட்டுக் கொப்பளிக்கிறது. இப்ப சூடுபண்ணி கொப்பளிக்க வைக்கிறதை மட்டும்தான் கொதின்னு சொல்றோம். மற்ற அர்த்தம்லாம் பின்னாடி வந்துசேர்ந்தது. ஆனா இங்க கன்யாகுமரி மாவட்டத்திலே பேசுற தமிழ் ஒரு ஐநூறுவருசம் பழசு! சில வார்த்தைகள் அதோட அசல் அர்த்தத்திலேயே இங்கே இருக்கும். சில வார்த்தைகளுக்கு காலப்போக்கிலே புதிய அர்த்தம் வந்திருக்கும். அதிலே ஒண்ணுதான் இந்தக் கொதி”

"கேள்விப்பட்டதில்லை" என்று நான் சொன்னேன்.

“மலையாளத்திலே இதே அர்த்தத்திலே புழக்கத்திலே இருக்கு!” என்றார் ஃபாதர் சூசைமரியான். “நான் இங்கே தொண்டுக்கு வந்தது எழுவத்தொண்ணிலே. அப்ப இருபத்தாறு வயசு எனக்கு. நல்ல துடிப்பான பிராயம். அப்ப விடுதலை இறையியல் எங்க பாத்தாலும் கேட்டுக்கிட்டிருந்தது. நான் ஒரு சின்ன கையெழுத்துப் பத்திரிகையெல்லாம் நடத்தி ஃபிடல் காஸ்ட்ரோவையும் ஏசுவையும் ஒப்பிட்டு கவிதையெல்லாம் எழுதிட்டிருந்தேன். நேரா போனது மலையடிவாரத்திலே நெட்டாங்கிற ஊரிலே. அங்கஒருசர்ச். நூறு வருசம் முன்னாடி கட்டினது. அதிலே நான் பொறுப்பு”

ஃபாதர் சூசைமரியான் சொன்னார். நூறுவருசம் முன்னாடி அங்க மலைவாழ் மக்களுக்காக ஒரு கஞ்சித்தொட்டியும் ஆஸ்பத்திரியும் கட்டியிருக்காங்க. அப்ப அங்க இருந்தவங்களுக்காகக் கட்டின சின்ன சர்ச் அது. பின்னாடி கொஞ்சம் பெரிசாக்கி கல்லாலே கட்டியிருக்காங்க. ஆஸ்பத்திரி இப்ப பெரிய நிறுவனமாகியிருக்கு. ஆஸ்பத்திரியோட இணைஞ்சு இப்ப அந்த சர்ச் இருக்கு. அப்ப அந்த சர்ச்சுதான் பெரிசு. ஆஸ்பத்திரிக்கு வாரம் ரெண்டுநாள் நெடுமங்காட்டிலே இருந்து டாக்டர் ஒருத்தர் வந்திட்டுப் போவார். அதைக் கட்டினப்ப அங்க கொஞ்சம் வெள்ளைக்காரங்க இருந்திருக்காங்க. கொஞ்சம் ஆதிவாசிகளும் வந்திட்டிருந்திருக்காங்க. அப்ப ரொம்ப சின்ன ஊரு. ஊரே இல்லை, ஒரு மலையடிவாரத்து பாதைச் சந்திப்பு.

நான் போனப்ப குடியேற்றக்காரங்க நெறையபேர் வர ஆரம்பிச்சாச்சு. ஞாயித்துக்கிழமை மாஸுக்கு ரோட்டிலே ஆள் நிக்கும். எல்லாம் மலைக்கூலிக்காரங்க. பரம ஏழைங்க. பொழைக்க வழியில்லாம புள்ளைக்குட்டிகளோட மலையேறி காட்டுவேலைக்கு வந்தவங்க. காட்டிலே புறம்போக்கு மண்ணை ஆக்ரமிச்சு குடிசைகட்டி மலைக்குளிரிலே மழையிலே பாம்பு யானை பண்ணின்னு சகல தொந்தரவுகளோடே வாழுற ஜனங்க. அப்ப மலேரியா பெரிய பிரச்சினை. துள்ளப்பனின்னு சொல்லுவாங்க அங்கெல்லாம். சாயங்காலமானா உடம்பு துள்ளஆரம்பிச்சிடறதனாலே. அறுபதுகளிலே ஏராளமான ரப்பர் எஸ்டேட் வந்தாச்சு. அதெல்லாம் கோட்டயம் பாலா பகுதி கத்தோலிக்கர்கள். அவங்கள்லாம் வேற சர்ச்.

நான் போனதுமே முடிவுபண்ணினது என்னோட விடுதலை இறையியலுக்கு வேலை வந்தாச்சுன்னுதான். உடைவாளை உருவுடா ரெட்சணிய வீரனேன்னு நினைச்சுக்கிட்டேன். ஏழை சனங்க. மூர்க்கமானவங்க. படிப்பறிவே கிடையாது. குடிப்பழக்கமும் கஞ்சாப்பழக்கமும் உண்டு. அவங்களுக்கும் மலைச்சாதி மக்களுக்கும் அடிதடிகள் நடக்கும். அப்ப அங்க சர்க்கார் பள்ளிக்கூடம்லாம் வந்தாச்சு. ஆனா புள்ளைங்களை படிக்க அனுப்பமாட்டாங்க. மலையிலே எருமைமேய்க்க அனுப்பிருவாங்க. அங்க கடுமையா வேலைசெஞ்சேன். நினைச்ச ஒண்ணுமே நடக்கலை. ஆனா ரொம்ப வெறியோட இருந்தேன். நம்ம கடமையைச் செய்வோம், பயனை கர்த்தர் பாத்துக்கிடுவாருன்னு சொல்லிட்டே இருந்தேன். ஆனா உள்ளுக்குள்ள ஏமாற்றமும் கசப்பும் நிறைஞ்சுட்டுது. அது ஒருநாள் சட்டுன்னு வெடிச்சுட்டுது

அங்க நான் சர்ச்சுக்குப் பின்னாடி தனியா ரெண்டு ரூமுள்ள சின்னவீட்டிலே தங்கியிருந்தேன். ஓட்டுவீடு. சர்ச்சோட இணைஞ்ச ஒற்றை அறையிலே கோயில்குட்டி நல்லபண்டாரம் தங்கியிருந்தாரு. மலைசாதி ஆளு. நாங்க ரெண்டுபேருதான்அங்க. நல்லபண்டாரம் இல்லேன்னா ஒண்ணும் நடக்காது. அவருக்குத்தான் ஊருதெரியும். அவரு அங்கெயே இருபத்தஞ்சு வருசமா இருக்கிறவரு. பக்கத்திலே கிறிஸ்டோ காலனியிலே அவருக்கு வீடு. கோயில்குட்டி வேலை ஒரு மக்கள்தொடர்புக்காகத்தான். அவருக்கு மலைச்சரக்கு வாங்கி விக்கிறது மாடு வாங்கிக்கொண்டு வந்து விக்கிறதுன்னு பல தொழிலு. எங்களுக்குள்ள பேச்சுவார்த்தை ஜாஸ்தி கிடையாது. என்னை அவருக்கு அவ்வளவா பிடிக்காது, பிடிக்காதுங்கிறதைவிட மரியாதை இல்லை

ஒருநாள் என்னோட நல்லபண்டாரம் இல்லை. நான் மட்டும்தான் இருக்கேன். ஒரு பொம்புளை சின்னக் குழந்தையோட வந்திட்டா. பாத்தாலே தெரியும் மலைக்கூலிப் பொம்புளை. “சாமி, எனக்க பிள்ளைக்கு கொதிக்கு ஓதிக்கெட்டுங்க”ன்னு சொல்றா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அகலமான பாத்திரத்திலே தண்ணியவிட்டு அதுமுன்னாலே குழந்தையை உக்காரவைச்சு மறுபக்கத்திலே அவரு உக்காந்திட்டிருக்கார். குழந்தை நெத்தியிலே சிலுவை போட்டுட்டு என்னமோ முணுமுணுன்னு சொல்றார். பைபிள் வசனமா இல்லை ஏதாவது மலைதெய்வத்தோட மந்திரமான்னு தெரியல்லை. குழந்தைகிட்டே அந்த தண்ணியிலே துப்பச்சொன்னார்

எனக்கு என்னன்னே புரியலை. "என்னது?"ன்னு கேட்டேன்.

"புள்ளைக்கு கொதிவிளுந்து போட்டுது! வயித்திலே மாந்தம். கஞ்சித்தண்ணி குடிக்காம கெடக்கு! ஓதுங்க"ன்னு சொன்னா.

"ஓதுறதா? இது சர்ச்சு. ஆண்டவரோட எடம்! எல்லா துக்கத்துக்கும் நோய்க்கும்ஆண்டவரிட்டே மன்றாடினா போரும். வா ஜெபம் செய்யுதேன்"ன்னு சொன்னேன்.

"ஜெபம் வேண்டாம், ஓதிக்கெட்டினா போரும்"னு அவ சொல்லுதா.

"இங்க அதெல்லாம் செய்யுறதில்லை! வேணுமான மருந்து தாறேன். நாளைக்கு வா. டாக்டர் இருப்பார்"னு நான் சொன்னேன்.

"இல்ல, ஓதிக்கெட்டினாத்தான் செரியாகும்! சின்ன சாமியாரு ஓதிக்கெட்டுவாரு. அவரு எங்கே?"ன்னு கேட்டா.

அப்பதான் எனக்கு விஷயம் புரிய ஆரம்பிச்சுது. "இதுக்கு முன்னாடி ஓதிக் கெட்டியிருக்கியா?"ன்னு கேட்டேன்.

"ஆமா, நாலஞ்சுதடவை மூத்தவளுக்குக் கெட்டியிருக்கேன்! இங்கதான் எல்லாரு ம்ஓதுறாங்க"

"எதுக்காக ஓதுறாங்க?"

"சாமி இந்த மலையிலே எனக்க புருசன் கொஞ்சம் கையிலே காசுள்ள ஆளு. மலையெஸ்டேட்டிலே வாச்சுமேனாக்கும். அங்கே பைசா வரும்படி உண்டு. இங்க திங்கிறதுக்கு சோறும் கறியுமுள்ளவீடு நாங்கதான். ஆனா வீட்டைச் சுத்தி சோத்துக்குச் செத்த கூட்டம். வேற எடம் போலாம்னா இந்த வீட்டை என்ன செய்ய? ஒருவாய் நிறைஞ்சு சோறுதிங்க முடியாது. நாக்க ஊறவைச்சுகிட்டு வந்திடுங்க. அதுகளுக்க பார்வை இருக்கே, எரந்து திரியுத தெருநாய்க்க பார்வை. எனக்க பிள்ளை நல்லது என்னமாம் தின்னா உடனே நாக்குநுணைச்சு கொதிபோட்டுதுக! அந்தாலே வயிறு உப்பி இப்டி சடைஞ்சுகிடந்திருது"

என் கையெல்லாம் நடுங்க ஆரம்பிச்சுது. "சொல்லு, கொதிக்கு ஓதினா என்ன ஆகும்?"

அவ உற்சாகமா "கொதிக்கு ஓதினாகொதி போட்டவங்களுக்கு இந்த சீக்கு திரும்பிப் போயிரும்லா? அதுக வயிறு வலிச்சு பாடுபடும்லா? பிறவு கொஞ்சநாள் நம்மளைப் பாத்து எச்சி இறக்காதுல்லா?"ன்னு சொன்னா.

"சின்னச்சாமியாரு செய்யுதாரா? சி எவ்வளவு குடுப்பே?"

"எட்டணா குடுப்பேன்!"ன்னு சொல்லி "உங்களுக்கானா ஒரு ரூவா குடுக்கேன்"ன்னு குரலைத் தாழ்த்தினா.

"செரி நீ இங்கே இரு! அவரு வந்தா ஓதிட்டுப் போ"ன்னு சொன்னேன். "நான் பள்ளிக்கூடம்வரை போகணும். வர தாமதமாகும்"னு சொல்லி உடனே கிளம்பிட்டேன்.

ஒருமணி நேரத்திலே நல்லபண்டாரம் வந்திட்டார். நான் அவர் வர்றதைப் பாத்தேன். உடனே திரும்பிவந்தேன். நல்லபண்டாரம் உள்ளே ஓதிட்டிருக்கார். சர்ச் ஜன்னல் வழியா எட்டிப்பாத்தேன். என்ன பண்ணிட்டிருக்காருன்னு.

ஒரு அகலமான பாத்திரத்திலே தண்ணியவிட்டு அதுமுன்னாலே குழந்தையை உக்காரவைச்சு மறுபக்கத்திலே அவரு உக்காந்திட்டிருக்கார். குழந்தை நெத்தியிலே சிலுவை போட்டுட்டு என்னமோ முணுமுணுன்னு சொல்றார். பைபிள் வசனமா இல்லை ஏதாவது மலைதெய்வத்தோட மந்திரமான்னு தெரியல்லை. குழந்தைகிட்டே அந்த தண்ணியிலே துப்பச்சொன்னார். குழந்தை மூணுமுறை துப்பிச்சு. அந்தத் தண்ணி நடுவிலே ஒரு சின்ன மரக்கட்டையை வைச்சு அதிலே ஒரு மெழுகுவத்தியைக் கொளுத்தி வைச்சார். மறுபடி மந்திரம். பிறகு ஒரு செம்பை எடுத்து அந்த மெழுகுவத்தியை அப்டியே மூடினார். அதைத் தொட்டுட்டு மந்திரம் சொன்னார். "ஏசுவே கர்த்தரே!"ன்னு கூவிக்கிட்டே செம்பை மெல்லத் தூக்கினார். தண்ணி செம்புக்குள்ள இழுபட்டுது. பாதிதண்ணி செம்புக்குள்ளே மேலே ஏறிட்டுது.

நல்லபண்டாரம் குழந்தையைத் தொட்டு, "சுத்தமா எடுத்தாச்சும்மா! பிதாசுதன் பரிசுத்த ஆவிக்குத் தோத்திரம்"னார்.

"இவ்வளவு கொதி இருந்திருக்கு! நாசமாப் போறவங்க, செத்தொளிஞ்சு போகணும் சனியனுங்க"ன்னு அவ சொன்னா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏசு உடனிருப்பார்"னு நல்லபண்டாரம் சொன்னார். "பிதாசுதன் ஆவியின் நாமத்தாலே ஆமேன்"

அவ கும்பிட்டு காசுகுடுக்கிறப்ப நான் ஆவேசமா பாய்ஞ்சு உள்ளே போய்ட்டேன். காலாலே உதைச்சு அந்தத் தாம்பாளத்தைத் தெறிக்கவிட்டேன். "வெளியே போடா நாயே! இது ஆண்டவரோட எடம். இங்க என்னடா உனக்கு வேலை? பிசாசுக்க மந்திரத்தை இங்க கொண்டுவாறியா? போடா வெளியே"ன்னு கத்தினேன்.

அவரு திருப்பி கத்தினாரு. "நீரு போவும்வேய். வெள்ளைக்காரன் காலம்முதல் இங்க இதெல்லாம் நடந்திட்டிருக்கு! நீரு இப்ப புதிசாட்டு வந்து நொட்டுவீரா? போவும்வே!"ன்னு என்னையப் பாத்து கைய நீட்டினாரு.

நான் அவரை அடிக்கப்போனேன். அந்தப் பொம்புளை தடுத்தா. பெரிய வாய்ச்சண்டை ஆயிடுச்சு. அவரு வெளியே போயி சட்டுன்னு சர்ச்சைப் பூட்டி சாவியை எடுத்துக்கிட்டார். "இது எனக்கு பெரியசாமி குடுத்த சாவி. நான் அவருகிட்டே குடுக்கேன்ஞ் நீரு போவும்வே"ன்னு சொல்லிட்டே போய்ட்டார்.

நான் எரிஞ்சுட்டிருந்தேன். சுங்கக்காரங்களையும் பரிசேயக்காரங்களையும் எத்தனைதடவைதான் தேவாலயத்திலே இருந்து வெரட்டுறது? நேரா குலசேகரம் போனேன். அங்கே அப்ப பொறுப்பிலே இருந்தவரு ஃபாதர்ஞானையா. நான் அவரை அதுக்குமுன்னாலே நாலைஞ்சுதடவை சடங்குகளிலே பாத்ததோடசரி. நேர்ல சந்திக்கிறது அப்பதான்.

தீயோட போய் அவர்முன்னாடி நின்னேன். கத்துகத்துன்னு கத்தினேன். இப்பவே நல்லபண்டாரத்தை அனுப்பிடணும். இனி அவன் சர்ச்சுப் பக்கம் வரப்பிடாது. என்னென்னமோ சொன்னேன்.

ஃபாதர்ஞானையா நிதானமா கேட்டார். "சரி, சாவியத் தந்திடறேன். சிங்க மலையிலே போயி இன்னொரு கோயில்குட்டியை கண்டுபிடிக்கணும்"

"நூறுபேரு கிடைப்பாங்க"ன்னு நான் சொன்னேன்.

"ஒருத்தர்கூட கிடைக்கமாட்டாங்க"ன்னு ஃபாதர் ஞானையா சொன்னார். "அவரு வெளியேபோய் ஒரு சர்ச்சு தொடங்கினா நம்ம சர்ச்சுலே நாம மட்டும்தான் இருப்போம்"

"அதுக்காக இந்த ஷாமனிஸத்தை எல்லாம் அனுமதிக்கணுமா? பிறகு எதுக்கு சிலுவை?"

"சிலுவை சண்டை போடுறதுக்கில்லை"

"சிலுவைப்போர் நடந்திருக்கு"

"ஆமா, ஆனாஅது இந்தமாதிரி ஏழைங்ககூட இல்லை"

"அப்ப இதெல்லாம் நடக்கட்டும்னு சொல்றீங்களா?"

"நடந்தா என்ன? நம்மவேலை அவங்களுக்கு எதையாவது முடிஞ்சதைச் செஞ்சுகுடுக்கிறது. கர்த்தரோட வார்த்தையை அவங்களுக்குக் குடுக்கிறது. அவ்வளவுதான்"

"என்னாலே முடியாது, நான் வேற எங்கயாவது போறேன்"

"சரி!"ன்னு அவர் அலட்டாம சொல்லிட்டார்.

"ஃபாதர் இதை நீங்க செய்வீங்களா?"ன்னு கண்ணீரோட கேட்டேன்.

"நெறைய செஞ்சிருக்கேன்!"

நான்அப்படியே திகைச்சுப்போய் பாத்தேன். அவர் ரொம்ப ஒழுக்கமான ஃபாதர்னு தெரியும். செயிண்டுன்னே அவரை கொஞ்சம் கிண்டலா கூப்பிடுவாங்க.

"ஏன்னா எனக்கு ஃபாதர் ப்ரென்னன் அதை செஞ் சிருக்கார்"

"ஃபாதர் பிரென்னென்னா?"

"ஃப்ரெடெரிக் பிரென்னென். ஐரிஷ்காரர். அவருதான் அந்த சர்ச்சையும் ஸ்தாபிச்சவர். இந்த மலைப்பகுதிகளிலே அம்பதுவருசம் செர்வீஸ் பண்ணியிருக்கார்"

என்னாலே பேசவே முடியலை.

"என்னோட ஊர் பக்கத்திலே வலியகுந்நுதான். தெரியுமா?"

"இல்லை"

"அது ஒரு மலையடிவார ஊர். நான் பிறந்தப்ப அங்க எஸ்டேட் கூலிங்கதான் அதிகமும். நான் ஆயிரத்தி தொளாயிரத்தி இருபத்தொன்பதிலே பிறந்தேன். அப்பல்லாம் பஞ்சம், பட்டினி, சீக்கு. அதான இங்க வாழ்க்கை. மலைக்கிழங்கும் வேட்டை எறச்சியும் கிடைச்சதாலே சாகாம கிடந்தோம். ஆனாஅதுக்கே சண்டைஅடிதடி! மண்ணிலே ஒரு நரகம்னா அதுதான்னு நான் நினைச்சுக்கிடறது உண்டு"ன்னு ஃபாதர் ஞானையா சொன்னார்.

அவரு என்ன சொல்லவாறாருன்னு எனக்குப் புரியல்லை.

"எனக்கு சின்னவயசிலே கொதியன்கோரன்னு பேரு தெரியுமா?"ன்னு ஃபாதர் ஞானையா கேட்டார்.

"கோரன்னா?"

"நான் கன்வெர்ட் ஆனப்ப ஃபாதர் பிரென்னன் போட்ட பேருதான் ஞானையா. அவரோட ஆசிரியரோட பேரு ரேமார்ட். அதுக்கு தமிழ் அர்த்தம் ஞானையா" ஃபாதர் ஞானையா சொன்னார். "நான் அவரைப் பாக்கிறப்ப எனக்கு ஏழுவயசு. அப்பா மலைக்கூலி. அம்மாவும் ஊரிலே காட்டுலே சுள்ளி பொறுக்குவா. ஒரு மாடு உண்டு. எட்டுபிள்ளைங்களிலே நான் கடைசி. எங்கம்மா பெத்தது பதினேழு பிள்ளைங்க. மிஞ்சினது எட்டு. நான் கடைசிக்கு முந்தினவன். னுங்க வீட்டிலே அப்பல்லாம் ராத்திரி எதையாவது சமைச்சா உண்டு. மத்தபடி பிள்ளைகளுக்கு வேளைக்கு சாப்பாடு குடுக்கிற வழக்கமே இல்லை. எங்கம்மா காலையிலே கௌம்பிப்போனா சாயங்காலம்தான் வருவா. அப்பா வாரம் ஒருநாள் வருவார். பகல்முழுக்க நாங்க கோழிகள்மாதிரி கொத்திக் கொத்தி தீனிக்கு அலைவோம். னுந்த முட்டையானாலும் குடிச்சிருவோம்! பாம்பு முட்டையைக்கூட"

நான் திடுக்கிட்டதிலே கைரெண்டும் நடுங்கிட்டுது.

ஃபாதர் ஞானையா புன்னகைச்சு "பாம்பு முட்டைய குடிக்கலாம்! ரொம்ப சின்னதா இருக்கும். ஆனா நஞ்சு கிடையாது!"ன்னு சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு குமட்டல் வந்திட்டுது

"அப்பல்லாம் காட்டிலே நிறைய கிடைக்கிறது பாம்பு முட்டைதான். ஒருநாளைக்கு அம்பது முட்டைகூட குடிச்சிருக்கோம். ஆனா முட்டைய தொட்டுப்பாக்கணும். அதுக்குள்ள குஞ்சுபாம்புக்கு உடம்பு வந்திருக்கக்கூடாது. கருவாத்தான் இருக்கணும்! அது தொட்டுப்பாத்தா தெரிஞ்சிரும். பாம்புமுட்டை தோல்மாதிரித்தான் இருக்கும்! ஓடைக்கரையிலே முதலைமுட்டை கிடைக்கும். அது கொஞ்சம் வயிறார' கிடைக்கும். அதையும் குடிப்போம். சின்ன பாம்புகளைப் பிடிச்சு தலையை வெட்டிப் போட்டுட்டு உரிச்சு சுட்டுத் திம்போம். முதலைக்குட்டிகளைப் பிடிச்சு' கொன்னு உரிச்சுத் திம்போம். ஓணான்கூட திம்போம். எல்லா காய்களும் பழங்களும் திம்போம். அன்னாசிச் செடியோட குருத்து இருக்கே அதைப்பிடுங்கித் திம்போம்! இன்னதுதான்னு இல்லை. தின்னா சாகக்கூடாது, அவ்வளவுதான். அப்பப்ப தின்னது பிடிக்காம வாந்திவரும். பாம்பு கடிச்சு, முதலை பிடிச்சு, நஞ்சு உள்ளபோய் செத்துக்கிட்டே இருப்பாங்க. என் அண்ணன் ஒருத்தனை மலைப்பாம்பு புடிச்சு விழுங்கிட்டுது. அந்த மலைப்பாம்பைப் புடிச்சுக் கிழிச்சப்ப அண்ணன் உள்ளே ஒடிஞ்சு சுருண்டு கூழா இருந்தான். அந்தப் பாம்பை வெட்டி' கறியா பங்குபோடுறதுக்கு ஊரிலே அடிதடி சண்டை"

ஃபாதர் ஞானையா ஒருமாதிரி சிரிப்போடே சொல்லிட்டிருந்தார். எனக்கு என்ன முகபாவனை காட்டுறதுன்னே தெரியலை.

"அப்டி ஒரு வாழ்க்கை. பசிவாழ்க்கைன்னு நான் ஒரு கவிதை எழுதியிருக்கேன். தாறேன், படிச்சுப் பாருங்க. அந்த வாழ்க்கையிலே எல்லாருமே தீனிவெறியனுங்கதான். அதிலே எனக்கு கொதியன்னு பேருன்னா நான் எப்படி இருந்திருப்பேன்? தீனிப்பைத்தியம். னுங்க எவரும் எதைத் தின்னுட்டிருந்தாலும் போயி வாய்ப்பாப்பேன். கேப்பேன். அவங்க கீழேபோட்டதை எடுத்து சப்பிப் பாப்பேன். துரத்தினாக்கூட போகமாட்டேன். என்னோட கொதிப்பார்வை ரொம்ப சக்தியானதுன்னு ஊர்லே பேச்சு. நான் சும்மா பாத்தாலே போரும், சாப்பிட்டவங்களுக்கு வயிறு உப்பிரும். அதுவும் நல்லதுதான். எனக்கு ஒரு துண்டாவது வீசி எறிஞ்சிருவாங்க"

"அப்ப எங்கூர்லே ஃபாதர் பிரென்னன் வருவார். ஒரு சைக்கிள் வச்சிருந்தார். ரொம்ப சின்ன சைக்கிள். அதை ஓடையிலே எல்லாம் தூக்கி அந்தப்பக்கம் போவார். தென்னைமரப் பாலம் வழியா சைக்கிளைத் தூக்கி தலைமேலே வைச்சுகிட்டு நடப்பார். நல்ல வளத்தியான ஆள். அவ்வளவு பெரிய மூக்கு. அதிலே சின்னச்சின்னச் சிவப்புப் பருவா இருக்கும். பச்சைக்கண், உதடே கிடையாது. பல்லு கூழாங்கல்லு நெறம். எப்பவுமே சிரிச்சுட்டே இருப்பார். ஆனாஅவரை ரெத்தபூதம்னு ஊர்லே சொல்லுவாங்க. அவரைப் பாத்ததுமே பாதிப்பேர் ஓடிருவாங்க. தொப்புளை கூர்ந்துபாத்து கண்ணாலே ரெத்தத்தை உறிஞ்சிருவாருன்னு பயம்"

"ஆனா கொஞ்சம் கொஞ்சமாட்டு அவரு ஊரிலே பழகிட்டாரு. ஜெபம் பண்ணுவாரு, மருந்து குடுப்பாரு, கூடவே மந்திரமும் போடுவாரு. பேய் பிசாசுக்கு ஓதிக்கெட்டுதது, ஊதிவிடுறது எல்லாம் செய்வாரு. அப்படித்தான் ஜனங்க அவருகிட்டே நெருங்கினாங்க. நாங்கள்லாம் தூரத்திலே இருந்து பாத்து 'ரெத்தபூதமே!'ன்னு சத்தம் போட்டுட்டு ஓடிருவோம்!"னு ஃபாதர் ஞானையா சொன்னார். நான் அவர் பேசுறத பிரமைபுடிச்சு கேட்டுட்டு இருந்தேன்.

இப்ப அவரோட அந்த முகத்தை நேரிலெ பாக்கிறமாதிரி இருக்கு. அப்ப வேறமாதிரி இருப்பார். கட்டுமஸ்தான உடம்பு. சிரிப்புமாறாத ஆளு. நல்ல கறுப்புநெறம். நீளமுகம். பெரிய கண்ணும் பெரிய பல்லுவரிசையும் கருப்பு முகத்திலே பளிச்சுன்னு தெரியும். ஒரு மழைநாளிலே அவர் கல்லுமலை சர்ச்சிலே பிரேயர் பண்ணினது ஞாபகம் வருது. மழை இருட்டு. அவரோட பல்லும் கண்ணும் மட்டும்தான் தெரியுது! ஒரு மனுசனோட புன்னகையை அவன் உடம்பிலே இருந்து பிரிச்சு எடுத்து தனியா வைச்சதுமாதிரி.

ஃபாதர் சூசைமரியான் சொன்னார். ஃபாதர் ஞானையாவுக்கு அருமையான கனக்குரல். சில கருப்புஜாஸ் பாடகர்களுக்கு அப்படிக் குரல் உண்டு. பேசினா குரல் நம்மை அப்படியே சூழ்ந்துக்கிடும். குகைக்குள்ள நாம நிக்கிறமாதிரி இருக்கும். பாடினா கார்வை நம்ம வயித்திலே வந்து நிறையும். அன்னிக்கு அவரு ஒரு சம்பவம் சொன்னாரு. அதை இப்ப நினைச்சு'கிட்டேன்.

*"ஆனா கொஞ்சம் கொஞ்சமாட்டு அவரு ஊரிலே பழகிட்டாரு. ஜெபம் பண்ணுவாரு, மருந்து குடுப்பாரு, கூடவே மந்திரமும் போடுவாரு. பேய் பிசாசுக்கு ஓதிக்கெட்டுதது, ஊதிவிடுறது எல்லாம் செய்வாரு. அப்படித்தான் ஜனங்க அவருகிட்டே நெருங்கினாங்க. நாங்கள்லாம் தூரத்திலே இருந்து பாத்து 'ரெத்தபூதமே!'ன்னு சத்தம் போட்டுட்டு ஓடிருவோம்!"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாவப்பெட்ட சனங்க. பசிதான் அவங்களுக்கு எல்லாமே. அது வெறும் சோத்துப்பசி இல்லை. ஒண்ணுமே போய்விழாத அவ்வளவு பெரிய சூனியம் உள்ள இருக்கு. அதை நிறைக்கிறதுக்குண்டான வெறியைத்தான் பசின்னு நினைச்சுக்கிடுறானுக. கொண்டா கொண்டான்னு உடம்பும் மனசும் ஆத்மாவும் சத்தம் போடுது. அது அதலபாதாளம், ஆனா அள்ளிப்போடுதது அஞ்சுவிரல் கைப்பிடி!"

ஃபாதர் ஞானையா எங்கிட்ட சொன்ன சம்பவம் இது. ஒருநாள் பிரென்னன் துரை ஊருக்குள்ள வாரப்ப நாலஞ்சுபேர் ஃபாதர் ஞானையாவை காட்டுக்கொடிகளாலே கையையும் காலையும் கட்டித் தூக்கிட்டுப் போறாங்க. அவரு சின்னப்பையன் அப்ப. நல்லா அடிச்சிருக்காங்க. மயங்கிக் கிடக்கான். "எங்க தூக்கிட்டுப் போறீங்க?"ன்னு பிரென்னன் துரை கேட்டிருக்காரு.

"சாமி, இவன் உடம்பிலே மலைக்கூளிப்பேயி இருக்கு. இவனுக்க ஆத்மாவை அது தின்னுட்டுது. இப்ப உள்ள அதுதான் இருக்குது. அதனாலேதான் இவனுக்கு என்ன தின்னாலும் கொதி கூடிட்டே இருக்கு. ஊரிலே ஒரு குழந்தையும் ஒருவாய் சோறு திங்கமுடியல்லை. நேத்து சவுண்டனுக்க எளைய மக சுட்ட சீனிக்கிளங்கு திங்கிறப்ப இவன்அவ கீளே போட்ட தோலை எடுத்துத் தின்னிருக்கான். கொதி விளுந்து போட்டு. குட்டிக்கு ராத்திரிக்கு கொடலு குத்து வந்து துடிச்சா! காலம்பற செத்துட்டா! இனி இவனை விடமுடியாது. காட்டிலே கொண்டுபோயி போடுததுக்குப் போறோம்'னு சொல்லுறாங்க.

"இந்தக் கூளியை இங்கே காட்டிலேவிட்டா இவன் செத்ததும் அது திரும்பி இன்னொருத்தன்மேலே ஏறிடுமே"ன்னு பிரென்னன் துரை சொன்னாரு.

அவனுக பயந்துட்டானுக. என்ன செய்யுறதுன்னு தெரியாம நின்னு தடுமாறினாங்க

'எங்கிட்ட குடுங்க. நான் கூட்டிட்டுப்போயி பெரியசாமியை வைச்சு கூளிய ஓட்டுறேன்! கூளி இங்க திரும்பிவராது"ன்னு பிரென்னன் துரை சொன்னாரு. அப்படியே பையனைக் குடுத்திட்டாங்க. சைக்கிளிலே வைச்சுக் கூட்டிட்டு வந்திட்டாரு.

ஃபாதர் ஞானையா அதுக்குப்பிறகு பதினெட்டுவருசம் பிரென்னன் துரைகூடத்தான் இருந்தாரு. சிலுவையை ஏத்துக்கிட்டு ஞானையாவா ஆனாரு. பிரென்னன் துரை அவரைப் படிக்கவைச்சாரு.

வளந்ததும் இவரே ஃபாதர் ஆகணும்னு பிரென்னன் துரைகிட்டே சொன்னாரு. "இல்லே, நீ வாழ்க்கையை வாழ்ந்துபாரு! நீயும் உன் ஏழு தலைமுறையும் தின்னு குடிச்சு சந்தோசமா இருந்தவங்க கிடையாது. சி அப்படி இரு. அதாக்கும் கர்தருக்க சித்தம்'னு பிரென்னன் துரை சொன்னாரு. "நான் துறந்துட்டு வந்தேன்னா எனக்கும் சேத்து என் அப்பா தாத்தா தலைமுறை அனுபவிச்சாச்சு"

"இல்லே எனக்கு எதிலேயும் நிறைவு தோணல்லை. நான் இந்த வழியைத்தான் தேர்ந்தெடுக்கமுடியும்"னு இவரு சொன்னாரு. பிரென்னன் துரை இவரை செமினாரியிலே சேத்துவிட்டாரு.

ஃபாதர் சூசை மரியான்சொன்னார். இதான் ஃபாதர் ஞானையாவோட கதை. அவரு எங்கிட்ட சொன்னாரு "என்னை ஏன் பிரென்னன் துரை காப்பாத்தினாருன்னு ஒருதடவை சொன்னாரு. பசியுள்ளவனுக்குத்தான் ருசியிருக்கும். கொடும்பசியிருந்தா உலகமே இனிக்கும். நீ பசியுள்ளவன். நீதான் கர்த்தரோட கனியை ருசிப்பேன்னு தோணிச்சு"ன்னு. அது உண்மைதான். பசியா இருக்கேன். நானறிஞ்ச உணர்ச்சின்னா பசி மட்டும்தான்"

நான் என்ன சொல்லுறதுன்னு தெரியாம உக்காந்திட்டிருந்தேன். ஃபாதர் ஞானையா சொன்னாரு "பாவப்பெட்ட சனங்க. பசிதான் அவங்களுக்கு எல்லாமே. அது வெறும் சோத்துப்பசி இல்லை. ஒண்ணுமே போய்விழாத அவ்வளவு பெரிய சூனியம் உள்ள இருக்கு. அதை நிறைக்கிறதுக்குண்டான வெறியைத்தான் பசின்னு நினைச்சுக்கிடுறானுக. கொண்டா கொண்டான்னு உடம்பும் மனசும் ஆத்மாவும் சத்தம் போடுது. அது அதலபாதாளம், ஆனா அள்ளிப்போடுதது அஞ்சுவிரல் கைப்பிடி!"

ஃபாதர் ஞானையா பேசிக்கிட்டே போனாரு. சிலசமயம் நாம நமக்கு முன்னாடி இருக்கிறவங்களை சாமின்னே நினைச்சுப் பேசுவோம் இல்ல, அப்படி. "நல்ல பசி வேணும்டேன்னு பிரென்னன் துரை சொன்னாரு. அதை நான் பிடிச்சுக்கிட்டேன். படிப்பிலே பசியோட இருந்தேன். அந்தப் பசிதான் இங்க கொண்டுவந்து சேத்துது. இங்க உக்காந்து இந்த சனங்களைப் பாக்குதேன். எறும்புக்கூட்டத்தைப் பாக்கிறமாதிரி இருக்கு. பசிவெறியிலே தீனி இல்லேன்னா அப்பவே செத்துடுவோம்கிற மாதிரி எறும்புகள்அலையுதத பாத்திருக்கேல்ல, அதுமாதிரித்தான். பாவப்பட்ட ஜனங்க. பாவப்பட்டஜனங்க, ரொம்பப் பாவப்பட்ட ஜனங்க. அதைமட்டும் சொல்லிட்டே இருங்க. நல்லவங்களா கெட்டவங்களான்னு பாக்காதீங்க. அறிவுண்டா இல்லியான்னு பாக்காதீங்க. ரெட்சிக்கப்பட்டவங்களா இல்லையான்னு பாக்காதீங்க. பாவப்பட்ட ஜனங்க, பசிச்ச ஜனங்க. அதைமட்டும் பாருங்க. அவங்களை மேய்க்க நீங்க வரலை. அவங்களுக்கு குடுக்கமட்டும்தான் வந்திருக்கீங்க"

நான்அழுதிட்டேன். ஃபாதர் ஞானையா எந்திரிச்சுவந்து என்தோளைத் தொட்டாரு. "சரி விடுங்க. உள்ள நல்ல போர்க் வறுக்குத மணம் வருது. வாருங்க ஒரு பிடிபிடிப்போம்"னு சொல்லி கூட்டிட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனாரு. "நமக்கு அப்பமுதல் இப்பவரை வயித்துப்பசியும் ஜாஸ்தியாக்கும். பிரென்னன் துரைகூட வந்தநாள்முதல் இன்னைக்குவரை ஒருநாள் ஒருவேளைகூட இறைச்சி இல்லாம சோறுதின்னதில்லை பாத்துக்கிடுங்க. கோழியெல்லாம் நமக்குப் பத்தாது. நல்ல போர்க் இல்லேன்னா பீஃப் வேணும். நல்லா கடிச்சு சவைச்சுத் தின்னாத்தான் தின்னமாதிரி இருக்கும். சொன்னா நம்பமாட்டீங்க, ராத்திரி பத்துமணிக்கு முட்ட தின்னுட்டுப் போயி படுப்பேன். நடுராத்திரியிலே முழிப்பு வரும். அய்யோ, சாப்பிடாம படுத்திட்டோமேன்னுதான் முதல் நினைப்பு. சமையலறையிலே சாப்பாடு இல்லியோன்னு மனசு பதைக்கும். அந்தாலே ஓடிப்போயி சட்டிபானைகளை உருட்டி அள்ளிப்போட்டுத் தின்னாத்தான் நிறைவு. ஒவ்வொருநாளும் காலையிலே கண்முழிக்கிறப்ப முதல்நினைவு கர்த்தாவுன்னா அடுத்த நினைவு தீனிதான்!" அவரோட முகம் அப்படிச் சிவந்து பழுத்தமாதிரி இருந்தது

நான் பாத்திட்டே இருந்தேன். ஃபாதர் ஞானையா சிரிச்சுக்கிட்டே சொன்னார், "நான் அப்படி ஆயிட்டேன் என்னத்தச் சொல்ல? நம்மளைப் பத்திக் கேட்டுப்பாருங்க. னுந்த விருந்திலேயும் முதல் பந்திதான். அடிச்சுப் புரண்டுபோயி உக்காந்திருவேன். சோத்தப் பாத்தா பிறகு கட்டுப்படுத்திக்கிட முடியாது. நாகர்கோயிலுகாரனுக சிரிப்பானுக. கொதியன் ஞானையான்னு இப்பமும் சிலர் சொல்லுறது உண்டு. சொல்லிட்டுப் போறானுக. நமக்கு கொதி இருக்கிறது வாயிலேயோ வயித்திலேயோ இல்ல, ஆத்மாவிலேயாக்கும்".

நாங்க ரெண்டுபேரும் போய் உக்காந்து போர்க் எறைச்சியும் சப்பாத்தியும் சாப்பிட்டோம். ஃபாதர் ஞானையா சாப்பிடுறதைப் பாத்தா நிஜம்மாவே பயந்திருவோம். அப்படி அள்ளி அள்ளிச் சாப்பிடுவார். பூதங்கள் சாப்பிடுததுபோல. அவருக்குத் தீனிப்பூதம்னே பேரு உண்டு. "எனக்கும் கொதி விழுறதுண்டு. அப்பப்ப வாயு ஏறிடும். புளிச்ச ஏப்பம் வந்திடும்! கொதிக்குன்னு ஒரு ஜெபம் வச்சிருக்கேன், செரியாயிடும்! நீங்க பாத்தியளே அந்த மந்திரவித்தையைக்கூட செய்யுறது உண்டு!. தண்ணியிலேன்னா பாதி தண்ணி உள்ள போகும். ஒயினிலேன்னாமுழுசாட்டு உள்ளே போயிடும்". அவர் சிரிச்சப்ப நானும் சிரிச்சேன்.



நான் கிளம்புறப்ப என் தோளிலே தட்டிச் சொன்னாரு. "பகிர்ந்து சாப்பிடணும்னு வேதம் சொல்லுது. ஆனா பத்துபிள்ளை பெத்து ஒத்த கைப்பிடிச் சோறு வைச்சிருக்கிற அம்மைகிட்ட அதைச் சொல்லமுடியாது. இல்லாத கூட்டம், குடுத்துத் தின்னா எல்லாரும் சாவணும்னு இருக்கு வாழ்க்கை. அப்படித்தான் இருப்பாங்க. அம்மைகள் அப்படித்தான் இருந்தாகணும். அவங்க பிள்ளைகளை சாகாம காப்பாத்தணும்ல?" நான் அவர் முகத்தைப் பாக்கலை. நான் வெளியே போறப்ப அவர் பின்னாடியே வந்து நின்னாரு. "நல்லபண்டாரம் நல்லவன். அவன்கிட்டே சொல்லிடுறேன்! மனசைப் பழக்கிக்கிடுங்க. தீனி திங்கிறவன் குற்றவுணர்ச்சி இல்லாம நிறைஞ்சு தின்னு சந்தோசப்படுற ஒரு காலம் வரும். அன்னிக்கு எல்லாருக்கும் கொஞ்சம் திங்கிறதுக்கு இருக்கும். அப்ப இதெல்லாம் மறைஞ் சிரும். பிதாசுதன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே"ன்னு சொல்லி ஆசீர்வாதம் பண்ணினார்

"அதுக்குப்பிறகு நான் பலமுறை ஃபாதர் ஞானையாவைச் சந்திச்சதுண்டு. நாங்க சேந்து நிறைய பயணம் செஞ்சிருக்கோம். அவரோட ஞானபுத்திரன்னு என்னையச் சொல்லுவாங்க. அந்த முதல்நாளுக்குப் பிறகு அவரைப்பத்தி புதிசாட்டு தெரிஞ்சுக்கிடுறதுக்கு எனக்கு ஒண்ணுமே இல்லை!." என்று ஃபாதர் சூசைமரியான் சொன்னார். புன்னகைத்து "மத்தவங்களுக்குத் தமாஷா இருக்கும். திருவனந்தபுரம் பிஷப் ஹவுஸிலே பெரிய விருந்து. சாப்பிட்டுட்டு அப்படியே நாகர்கோயில் வாறோம். கோவளம் பக்கத்திலே ஒரு சின்ன ஓட்டலிலே வீட்டுச்சாப்பாடுன்னு போட்டிருந்தான். சாக்பீஸிலே பீஃப் பிரைன்னு எழுதியிருந்தான். நல்லாயிருக்கும்போல, சாப்பிட்டுப் போலாம்டான்னு சொல்றார். என்ன சொல்ல? விடமாட்டார். இறங்கிப்போயி மறுபடியும் சாப்பிட்டோம். அவரோட மனசும் வயிறும் எலாஸ்டிக்காலேன்னு சொல்லுவாங்க"

ஃபாதர் சூசைமரியான் தனக்கே என சொல்லிக்கொண்டே போனார். "இங்க நோன்பிருந்து பட்டினியாலே மெலிஞ்ச பலபேர் உண்டு. ஆனா சாமானிய ஜனங்கள் ஃபாதர் ஞானையாகிட்டதான் வருவாங்க. அவருதான் அவங்களுக்கு நெறைஞ்ச சாமி. அவரு தொட்டா நோய் குணமாகும், ஜெபிச்சா ஆண்டவருக்குக் கேட்கும். அப்படி ஒரு நம்பிக்கை. அவரும் அவங்களுக்க ஆளு. அம்பதாண்டுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் உடல் முதுமையால் மிகவும் வற்றியிருந்தது. ரத்தக்குறைவால் உடலின் கருமை வெளிறியிருந்ததாகத் தோன்றியது. சுருங்கிய தோல் எலும்புகள்மேல் தளர்வாகப் படிந்த கைகள் தசைகள் வற்றி இழுபட்டமையால் விப்புபோல இழுபட்டு வளைந்திருந்தன. நகங்கள் நீண்ட விரல்களும் கோணலாகி ஒன்றோடொன்று பின்னியிருந்தன. முகத்திலிருந்து தசையும் தோலுமாக உருகிவழிந்து தாடையிலிருந்து தொங்கிக்கிடப்பதுபோல, எக்கணமும் பிய்ந்து விழுந்துவிடும் என்பதுபோலத் தோன்றியது.

அவங்களுக்க எல்லா சுக துக்கங்களிலேயும் கூட இருந்தவர். அவர் இந்த சனங்களுக்குச் செய்த அளவுக்கு செய்தவங்க யாருமில்லை"

அதன்பின் அவர் பேசாமல் வெளியே பார்க்க ஆரம்பித்துவிட்டார். ஏசுதாசன் செல்போனை நோண்ட ஆரம்பித்தான். நான் அவர் சொன்னதைத் தொகுத்துக் கொள்பவன்போல யோசிக்க ஆரம்பித்து வேறெங்கோ சென்றுவிட்டேன்

அம்பலமுக்கு சென்று சேர்ந்தபோது வெயில் ஏறியிருந்தது. நேராக சாப்பிடத்தான் சென்றோம். ஃபாதர் ஞானையா தூங்கிக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர் விழித்துக்கொண்டதும் அவர் வீட்டுக்குச் சென்றோம்

ஓட்டுவீடு. வெளியே தெரிந்ததைவிட அதிக இடம் உள்ளே இருந்தது. உள்ளே தாழ்வான கட்டிலில் படுத்திருந்தார். அருகே ஓர் உதவியாளன் நின்றிருந்தான். கம்பவுண்டர் பையன். நாங்கள் வருவதைச் சொல்லியிருந்தார்கள். அவர் விழித்திருந்தார். அவர் உடல் முதுமையால் மிகவும் வற்றியிருந்தது. ரத்தக்குறைவால் உடலின் கருமை வெளிறியிருந்ததாகத் தோன்றியது. சுருங்கிய தோல் எலும்புகள்மேல் தளர்வாகப் படிந்த கைகள் தசைகள் வற்றி இழுபட்டமையால் விப்புபோல இழுபட்டு வளைந்திருந்தன. நகங்கள் நீண்ட விரல்களும் கோணலாகி ஒன்றோடொன்று பின்னியிருந்தன. முகத்திலிருந்து தசையும் தோலுமாக உருகிவழிந்து தாடையிலிருந்து தொங்கிக்கிடப்பதுபோல, எக்கணமும் பிய்ந்து விழுந்துவிடும் என்பதுபோலத் தோன்றியது. மூக்கு புடைத்து பளபளவென்றிருந்தது. தசைவளையங்கள் தொங்கும் கண்கள் பழுத்து நிறமிழந்திருந்தன. மூக்கினுள் இருந்த அடர்த்தியான நரைத்தமுடி அவர் தலையை சற்றுத் தூக்கியிருந்தமையால் தெளிவாகத் தெரிந்தது.

"ம்ம்" என்றார். "வரேல்லியேன்னு நினைச்சேன்" என்றார்.

"கொஞ்சம் வேலை!" "இப்ப நல்லா இருக்குதியளா?" என்றார் ஃபாதர் சூசைமரியான்.

"என்னத்த நல்லா? இனி ஆஸ்பத்திரியாலே பிரயோசன மில்லை. போற நேரம். இங்கேருந்து போனா வழி கொஞ்சம் பக்கம்!" புன்னகைத்து, "அங்க பைசாவுக்க சத்தம்டே. பிரார்த்தனைகள் ஏசுவுக்குக் கேட்காது" என்றார்.

ஃபாதர் ஞானையா "இது நல்ல எடம்" என்றார்.

"போறதுக்குண்டான எடம்! ஆனா காம்பு இன்னும் அறமாட்டேங்குது. கனிவிழாம நின்னுட்டிருக்கு! பாப்போம்" என்றார். "சாப்பிட்டியளா?"

"சாப்பிட்டாச்சு" என்றார் ஃபாதர் சூசைமரியான்.

ஃபாதர் ஞானையா என்னைப் பார்த்து புன்னகைத்தார். வைப்புப் பற்களுடன் அவருடைய சிரிப்பு மிக அழகாக இருந்தது. சின்னக்குழந்தைபோல.

"இவரு நம்ம அசிஸ்டெண்டு! சிறில் ஐசக்னு பேரு!" என்றார் ஃபாதர் ஞானையா.

"கடப்பொறம் ஆளாடே?" என்றார்.

"ஆமா" என்றேன்.

"அந்த ஏரியாப்பக்கம் போகாதே. சண்டையிலே உன்னையும் இளுத்துவிட்டிருவானுக! மலைப்பக்கமா போ"

"செரி"

"மலையிலே இப்ப எவ்வளவோ முன்னேற்றம்! ரப்பர் வந்து நல்லது பண்ணியிருக்கு. ஆனா இன்னும் நெறைய செய்யணும்" என்றார்.

"நாங்க வாறப்ப மலயை பத்தித்தான் பேசிட்டு வந்தோம்" என்றார்.

"மலையிலே அந்தக் காலத்திலே ஒரு பழக்கம் இருந்ததே, கொதிக்கு ஓதுறது.."

"ஆமா, நம்மளை கொதியன் ஞானையன்னு சொல்லுறதுண்டு! இப்ப அதெல்லாம் ஆரும் ஓதுறதில்லை"

"ஆமா"

"இப்ப ஒரு கொதிக்கு ஓதிப்பாத்தா என்ன?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாருக்கு?" என்றார் ஃபாதர் ஞானையா.

''எனக்குதான்டே! கொதியிலே ரெண்டுவகை உண்டு. வருகொதி, போக்கொதி. இன்னொருத்தன் நம்மளைப் பாத்து கொதிபோடுறது வருகொதி. நாம கொதிவிட்டுட்டு இருக்கிறது போக்கொதி! நம்ம மனசிலே நிறையாம இருக்குதது! கொதிபோட்டுட்டே இருக்கிறவன் மெலிஞ்சு வெளுத்திருவான். வயிறு உப்பிக்கிட்டே வரும்! அவனுக்கு கொதிஒழிச்சு ஓதுறது போக்கொதி. வருகொதி தண்ணியிலேயோ பாலிலேயோ வைப்பாங்க. போக்கொதி குருதியிலே வைக்கணும்"

"குருதியா?"

"இந்த காணிக்காரங்க வைப்பாங்களே. மஞ்சத்தூளையும் சுண்ணாம்பையும் கலந்து செங்குருதி! அதிலே"

"அது இப்ப..."

"பாப்பம்டே. சும்மா ஒ ருஇதுதானே!"

ஃபாதர் ஞானையா என்னைப் பார்த்தார். நானும் ஏசுதாசனும் சமையலறைக்குச் சென்று ஒரு அகன்ற பாத்திரத்தையும் செம்பையும் எடுத்துவந்தோம். நான் ஒரு பாக்கெட் மஞ்சள்தூளும் நாலைந்து சாக்குக்கட்டிகளும் எடுத்துக்கொண்டேன்.

அவற்றை ஃபாதர் ஞானையாவின் அறையில்வைத்து கொதி ஓதும் குருதியைத் தயார் செய்தோம். மஞ் சள்தூள் கரைத்த நீரில் சாக்பீஸ் பொடியைக் கலந்ததுமே ரத்தம்போல ஆகியது.

"ஏசுகிறிஸ்துவோட ரத்தம்" என்று ஃபாதர் ஞானையா சொன்னார். "நம்ம சர்ச்சிலே இந்த ரத்ததைக் காட்டியிருந்தா இன்னும் கொஞ்சம் காணிக்காரனுக வந்திருப்பானுக!"

ஃபாதர் சூசைமரியான் ஒருவகையான சங்கடத்துடன் இருந்தார். அந்தப் பேச்சை ஏன் எடுத்தோம் என அவர் எண்ணுவது தெரிந்தது.

"செய்டே" என்றா ர்ஃபாதர் ஞானையா.

ஃபாதர் சூசைமரியான் மேலும் தயங்கினார்.

"நீ கொதிக்கு ஓதுறது நெறைய செஞ்சிருக்கே இல்ல?"

"ஆமா, அந்தக் காலத்திலே!"

"என்ன மந்திரம் சொல்வே?"

"பைபிள்தான்!"

"செய் பாப்பம்"

ஃபாதர் சூசைமரியான் என்னை சங்கடமாகப் பார்த்தார். நான் புன்னகை செய்தேன்.

"இனி எனக்கு நிறையவேண்டியது என்னன்னு பாருடே!" என்றார் ஃபாதர் ஞானையா.

ஃபாதர் சூசைமரியான் வேறுவழியில்லை என்பதுபோல தலையை அசைத்தபின் தாம்பாளத்தின் அருகே அமர்ந்தார். தாம்பாளத்தின் செந்நீரைத் தொட்டபடி கண்களைமூடி ஜெபம் செய்தார். அவர் உதடுகள் அசைந்துகொண்டிருந்தன.

பின்னர் தாம்பாளத்தைத் தூக்கி ஃபாதர் ஞானையா அருகே கொண்டுசென்றார். "தொடுங்க" என்றார்.

ஃபாதர் ஞானையா அதை சுட்டுவிரலால் தொட்டார்.

மீண்டும் ஜெபம் செய்தபடி தாம்பாளத்தில் இருந்த சிவந்தநீரின் நடுவே மரக்கட்டியில் மெழுகுவத்தி ஏற்றிவைத்தார். கனமான பெரிய மெழுகுவர்த்தி, ஃபாதர் பிரார்த்தனைக்கு ஏற்றுவது. சுடர் பந்தம்போல பெரிதாக எழுந்து ஆடியது.

ஃபாதர் சூசைமரியான், "பிதாசுதன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே" என்று சொன்னபடி செம்பை எடுத்து அதன்மேல் கவிழ்த்தார். சிவந்தநீர் உள்ளே சென்றது. உரத்த உறிஞ்சும் ஒலி கேட்டது. மொத்த நீரும் உள்ளே போய்விட்டது. ஒரு சொட்டுகூட தாம்பாளத்தில் இல்லை.

"அதாக்கும்டே, ரெத்தம். தூய ரெத்தம்" என்றார் ஃபாதர் ஞானையா.

ஃபாதர் சூசைமரியான் செம்பை அந்ததாலத்தில் வைத்துவிட்டு எழுந்தார். கைகளை கட்டிக்கொண்டு நின்றார்.

"அவ்வளவுதான்!" என்றார் ஃபாதர் ஞானையா, "நாளைக்கு இல்லேன்னா நாளைக்களிஞ்சு! அதுக்குமேலே இல்லை"

ஃபாதர் சூசைமரியான் ஒன்றும் சொல்லாமல் பார்த்து நின்றார்.

"தொண்ணூத்தொண்ணு வருசமாச்சு! அறிஞ்சது எல்லாம் பசிதான். பசி அடங்கணும்! கடேசிப்பசி"

அவ ர்கண்களை மூடிக்கொண்டார். சுருக்கம் விழுந்து மடிந்த இமைகளுக்குள் கருவிழிகள் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டேன்

"ரெஸ்ட் எடுங்க ஃபாதர்" என்றார் ஃபாதர் சூசைமரியான்.

ஃபாதர் ஞானையா தலையை அசைத்தார்.

காலடியோசை கேட்காமல் வெளியே வந்தோம். ஃபாதர் சூசைமரியான் விடுவிடுவென முன்னால் சென்றுவிட்டார். நானும் ஏசுதாசனும் பின்னால் சென்றோம். ஏசுதாசன் கையில் அந்தத் தாம்பாளம் இருந்தது. அதில் நீர்நிறைந்த செம்பு அழுத்தமாக ஒட்டியிருந்தது. பிடுங்கித்தான் எடுக்கவேண்டும்.

"இதை என்ன செய்ய?" என்றான்.

"கொண்டுபோயி சர்ச்சிலே வையி" என்றேன்.

"அது ஒரு திருஇருதயமாக்கும்".

⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CGA

NIMAL VINAYAGAMOORTHY

CERTIFIED GENERAL ACCOUNTANT

THE NAME YOU NEED FOR YOUR BUSINESS



**Nimal Vinayagamoorthy, CGA**

**Tel: 416-494-4777**

Cell: 416-888-1128

Fax: 416-613-2739

Email: nimal@nlraccounting.com

2525 Pharmacy Ave, Toronto, ON M1W 2K2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மிஷ்கின்



### சந்திரபாபு

அவன் பரபரப்பானவன்

இரு எல்லைகள்
ஒன்று சுட்டது
ஒன்று உப்புக்கரித்தது.

சலிப்பில்
கண்டம் தாவினான்
அங்கே புகழ் விற்கப்பட்டது
அகங்காரமும் அறியாமையும் கொண்டாடப்பட்டன

இவன் விலாசம் தேடி
வெறுங்காலில் நடந்தான்.

LICகட்டிட டிக்கெட் கிடைக்க
அதன் இருண்ட படிகளை அடைந்தான்.

வாசல் காப்பவன்
அடையாளம் கேட்க
மூக்கைக் காட்டினான்
பின்னால் எக்காளம் எதிரொலிக்க
நான்கு கால்களில் படி ஏறினான்
ஏறுகிறவர்கள் வழிவிட
இறங்கியவர்கள் எச்சரித்தார்கள்
'மின்மினிகள் சூரியனுக்கருகில் போகக் கூடாது'
உள்ளடுப்பு ஓங்கியெரிய
கடைசியாக அந்த மரத்தை அடைந்தான்.
காக்கைகளின் பேரிரைச்சல்
சிவந்த கொரில்லாக்களுக்கிடையில்
ஒரு அன்னமாய்
றெக்கைகளால் இவன் ஏற
கால்கள் கத்தரிக்கப்பட்டன
ஒவ்வொரு அங்குல உயர்வுக்கும்
ஒரு இறகிழப்பு

உச்சி ஏறி
மரண நடனமாடினான்
ஈரப்பாடல்களைப் பாடினான்.

வறண்ட குரல்வளையை
சிங்கிள் மால்ட்டால் ஈரப்படுத்தினான்
உறைந்த ஆன்மாவை
சிகரெட்டுகளால் சுட்டெரித்தான்
ஒருநாள்
உயரப்பறந்து
காற்றில் குட்டிக்கரணமடித்து
இலங்கையில் குதித்தான்

இந்துமா சமுத்திரத்தின் அலைகள்
இன்றும்
அவன் பாடல்களை
முணுமுணுக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசை



### குட்டிச்சுவர்

எனக்கென்று ஒரு குட்டிச்சுவர் இருந்தது.
அதில்
நண்பர்களோடு அமர்ந்து கொண்டு
நாளெல்லாம் அரட்டையடிப்பேன்.
எதையும் கூர்ந்து நோக்காமல்
எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு அமர்ந்திருப்போம்.
ஆம்புலன்ஸின் நாசகார ஊளைகளின் ஊடே
பெருக்கெடுத்து ஓடியது உலகு.
ஒரு நத்தை
ஊர்ந்து வருவதை
அங்குதான்
முதன்முதலில் பார்த்தேன்.
குட்டிச்சுவர்
கொஞ்சமாக இடிந்தது
கொஞ்சமாகப் பறப்பது.
எவனோ ஒரு சீர்திருத்தவாதி
ஒழித்துக் கட்டினான்
எல்லாக் குட்டிச்சுவர்களையும்.
என் மகனுக்கு இல்லை
அந்தக் குட்டிச்சுவர்.
வேண்டுமானால் பாருங்கள்
அவன் உருப்படாமல்தான் போகப் போகிறான்.

### மொட்டைமாடி தரிசனம்

ஒரு ஜிலேபி
என்னை இன்னொரு ஜிலேபியை நோக்கி
இழுத்துப் போய்க் கொண்டிருந்த போது
கீழே
ஒரு சம்பாஷணை கேட்டுக் குனிந்தேன்.
அது ஒரு பால்காரியின் வீடு
அவளுடைய நாய்
அவள் உண்ணச் சொன்னால் உண்டது
அமரச்சொன்னால் அமர்ந்தது
போகச் சொன்னால் போனது.
வரச் சொன்னால் வந்தது
அடடா...
இந்த பாஷை..!
இந்த பாஷை...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழியாள்

**2020ன் நாளொன்று**

இன்றைய நாள்;
நல்ல நாள்
வசந்தம் தொடங்கி
வாரங்கள் இரண்டு

நாதக் குரலியின்
மோனக் கூவல் தித்திக்கும்
அருள் நிறைந்த நாள்

அரைக்கோளப் பெருவான்
அமைதியின் மிதவையாய்
முதுகைக் கதிர்வெயில்
நீவும் திருநாளிது

வீதிகளெங்கும்
பூம்பொற் பஞ்சுகள்
உப்பிப் பருத்திருக்க
பிறப்பின் தகிப்பில்
பூச்சிக் கருக்கள்
உயிர்த்தசையும்

அத்திகளும், பேரிகளும்
பிஞ்சுகளாய்ப் பொலியும் இந்நாள்
ஒரு பொன் நாள்

கண்ணாடிப் பட்டு இழை போல்
காற்றின் பந்தலைப் பற்றியாடுகிறாள்
நளின மலர்ச்சிலந்தி

மரங்களில்
தைலக்கோந்து வடியும்
கோமேதகத் துளிகளாலாகிய
இந்நாள்
ஆசிர்வதிக்கப்பட்ட நாளேதான்



இது
இறப்பதற்கும்
ஏற்ற நாள்தான்

எந்தவிதச் சந்தேகமுமில்லை

என்றாலும் நாம்
நாளைய நாளை
எங்ஙனம் காண்போம்
தேனுறிஞ்சிகளே!!

இந்த நாளை வாழ்த்துவோம்
நாளையும் நாம் வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழியாள்



**ஸ்ரோபெரிகளை ஆய்தல்**

இந்த நாளை
என்ன செய்யலாம்
எழும்போது யோசனை!

மெதுவாய் உருட்டி விடலாமா

தூக்கிப் போட்டு
உடைத்து விடலாமா

அல்லது

பழையதொரு நாளொன்றைப் போல்
புத்தகத்தின் நடுவே அதுவாய்ச்
சப்பளிந்து காய்ந்து
இற்றுப் பறக்கட்டுமா

காதுகளை நிமிர்த்தி வரும்
இந்நாள் எனைக்
கையொடு கூட்டிப் போகச் சொல்கிறது
இன்றதற்குக்
கால்கள் நான்கு

வெளியே
வைக்கோல் பரப்பிய பாத்திகளில்
ஸ்ரோபெரிகள் பழுத்திருக்கின்றன
பக்கத்தில் நிரப்பு கூடை காத்திருக்கிறது

பழங்களைப் பறிக்கத் தொடங்குகிறேன்
மடக்கிய முழந்தாள்
குனிந்த முதுகு
முகுள முத்திரை
மண்ணோக்கிய கண்களுடன்

கூடை
மெதுவாக நிறைகிறது
சூரியனும்
மேல்நோக்கி அசைகிறது

அதற்குள்
நடுப்பகலா

இரவு சொரிவதற்குள்
இந்தக் கூடையை
நிரப்பிடுவேனா

நானும், நாளும்
ஆளையாள் அர்த்தபுஷ்டியுடன்
பார்த்துக் கொள்கிறோம்

கோபக்காரியின் நடையைப் போல்
தோட்டம் நீண்டுகொண்டே போகிறது
கூடையோ மேலும் ஆழமாகிறது

வேகமாய்ப் பழங்களை ஆய்ந்து
போடுகிறேன்
அவசரமாய்ப் போகவிழைகிறது நாள்
எங்களுக்குள் முளைக்கின்றன
ஆளுக்கு ஆறாறு கால்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தப்ரசாத்



## இறுதிப்பதின்மம்

ஒற்றைப் பனைமரத்தின் கீழ் அமர்ந்து
விரிகுடாக்கடலின் அலைவுகளை அளந்தபடிக்கு...
கரையேறும் எத்தனங்கள்
அகதி அலைகளை ஆக்கிரமித்திருந்தன
சித்தப்பாவும் நானும்
சுட்டெரிக்கும் வெயில் நாளொன்றில்
பார்த்துக்கொண்டே இருந்தோம்
ஒவ்வொரு அலையெழுச்சியிலும்
ஒவ்வொரு சூரியன் திசைக்கொன்றாய்... கண்கள் கூசின
“முடியாது... போய்த்தானாகவேண்டும்... வா”
நீச்சல் இல்லாதே போய்விடுமோ?
எனது அடம் தாங்கமுடியாது போனதில்
காக்கைத் தீவை நோக்கி நீந்தினோம்
எல்லாமும் பக்கத்திலேதான்
கடற்பறவைகள் அலைகளின் மீதமர்ந்து
எழுந்தும் தாழ்ந்தும் பறந்ததில்
நம்பிக்கை வந்தது
கரைமணலின் ஸ்திரத்தன்மை
கடல் பாவியதும் கரைந்தது
எதிர்த்து வந்த சில அலைகள்
மீள் இழுவைகளில் என்னை அமிழ்த்தின
திணறிப்போனேன்... சிறிய போதில்
கடல்மடித்தாவரங்கள்... வர்ணமயமான மீன்குஞ்சுகள்
முருகைக் கற்களினூடே ஊடுபாவி
நிறப்பிரிகைகளின் அற்புதங்களை நிகழ்த்திக்காட்டின...
மூச்சுத் திணறித்தான் போனது
ஆயினும் ஒரு குமிழிக்குள்ளே
வாழ்வு இருக்கத்தான் இருந்தது
இரு வலிய கரங்கள்
தீவை நோக்கி என்னை எத்தித்தள்ளின
பாறைகளைப் பற்றியெழுந்து சித்தப்பாவைத் தேடினால்...
காணவில்லை... காலங்கள் கடந்தன
மீண்டும் அரித்துக்கொண்டிருந்த மணல்
இன்னுமொரு மணற்பரப்பிற்கு
என்னை அனுப்பிவைத்தது
வெயில் சுடாத வெளிச்ச நாளொன்றில்
தாள்களில் எனது வரலாற்றைப் பதிந்து
குடிவரவின் நியமங்களை நிரப்பிவிட்டு
இடுப்பளவு விரவிக்கிடந்த பனிக்குவியலை
ஊடறுத்துச் செல்லும் நடைபாதையில்
தளர்நடையில் எனது இலக்கை நோக்கி
வெயிலின் பூமிசாஸ்திரம்
சுட்டதும் சுடாததுமாக என்னை நகர்த்தியது
நகரங்களின் பாரிய கரங்கள்
என்னை அரவணைத்துக்கொண்டன
ஒவ்வொரு கட்டிடங்களின் உச்சியில்
புகைபோக்கிகள்
இரண்டாம் உலகப்போரின் எச்சங்கள்
ஸ்வாசித்தாகவேண்டுமே... முகமூடியோடும்
ஆறடிக்குள் அடங்கிப்போய்விடக்கூடியவர்களோடு
இடைவெளி விட்டுக்கொண்டும்...
கைகழுவிவிட்டேன்
வாழ்வோடு சமரசம் செய்துகொண்டு வாழ்வது விஞ்
ஞானத்தை மீறியது
எஞ்சிய எனது மரபணுக்களைக் காத்துக்கொள்ள
ஊசிகளை நிராகரித்தேன்
அன்னை பிண்டமாக என்னைச் சுமந்தபோதில்
மூதாதையர்களின் தகவல்கள்
என்னை மனிதனாக்கிப் பிதுக்கியது
ஒரு பயற்றம் விதையிலிருந்து
பழ ஈக்களில் தொடர்ந்து
தவளை... எலி... பன்றி... குரங்கெனத் தாவி
ஆய்வுகள் இன்று இறுதியில் மானுடத்தில்...
நான் அன்றே சித்தப்பாவோடு
இல்லாதே போயிருந்திருக்க வேண்டும்
கடல் மடியில் சில சுகிர்தங்கள் இருந்திருக்கும்
வணக்கம்...
பூமியும், வாழ்வும் உங்களை வரவேற்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாகரன்



## உற்றுப் பார்க்கும் வெயில்

நெடுங்காலமாக வெயில்
உற்றுப் பார்த்துக் கொண்டேயிருக்கிறது
இந்த வெளியை.

வெளியை நிறைத்து
ஆக்காட்டியின் குரல் ஓயாதொலித்துக் கொண்டிருக்கும்
நடு மதியத்தில்
மதியத்தையும் ஆட்காட்டியின் குரலையும்
ஊடறுத்துச் செல்கிறார் பாம்பாட்டியொருவர்.
எங்கள் தலைமுறையின்
இந்த நூற்றாண்டின்
ஏன், வரலாற்றின் கடைசிப்பாம்பாட்டியாகவே
அவர் இருக்கக் கூடும்.

இசையும் கூட்டமும் களித்துப் பெருகும்
நுரைப் பொழுதுகளில்
பாம்புகளின் சரித்திரத்தில்
தானே கடைசியான சதுராட்டக்காரியாக இருக்கக் கூடும்
என்று எண்ணிச் சிரிக்கிறது பாம்பு

பாம்போடு தோளணைந்து போய்கொண்டேயிருக்கும்
அவரும் அப்படியே அசைந்தசைந்து
தானுமொரு பாம்பாகிக் கொண்டேயிருந்தார்
அந்த வெளியில்.

காலையில் பார்த்தேன்
கிராஃபிக்ஸில் ஒரு தொகை பாம்புகளோடு
ஆடி
விளையாடிக் கொண்டிருக்கிறான் மகன்

இந்த நூற்றாண்டு இப்படித்தான் புதிய பாம்பாட்டியோடு
தொடங்கிப் பயணிக்கிறது

## ஆச்சரியமான இன்று

விழித்திருக்கும் பனித்துளிக்கருகில்
காத்துக் கொண்டிருக்கிறேன்
எதற்கென்றும் யாருக்கென்றும் தெரியாமல்
காத்திருப்பின் மீது வந்தமர்கிறது ஒளி.
அந்த ஒளியிலிருந்து விலகி
நிழலின் அருகில் அமர்கிறேன்
பனித்துளியின் மீதேறி
ஆடிக் களிக்கிறது ஒளி.

சதுரப் பின்னல்கள்
அலையாக எழுகின்றன
விரிவட்டங்களும் வரிகளும் இல்லாது நகரும்
ஆற்று வெள்ளத்தில்
நெடுங்காலமாக அங்கே இருப்பதைப்போல
அசையாதிருக்கிறது நிழல்

கருமையான உடலொன்று நினைவிலெழுகிறது

ஏழாண்டுகளுக்கு முன்பு, இறுதியாக
பேச்சேதுமற்று விடைபெற்றபோது
இப்படித்தான் தன் கறுப்பில் அழகேற்றினாள்
பனித்துளி ஒன்றின் மீது அவளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாகரன்

## மலை

கால்களில் வழுக்கும் மலைமுகட்டை
ஒரு முறை குனிந்து வருடினேன்
காலுக்கடியில் விரிந்து பெருகிக் கிடந்தது
பூமியின் பெரு விரிப்பாய் மலை.

மேலும் கீழும் உள்ளும்
ஆயிரமாயிரம் ரகசிய அடுக்கள்
ஏறவும் இறங்கவும் உடலெங்கும் பல்லாயிரம் படிகள்
விரிய விரிய வெளி
வெளி நிறையச் சிறகுகள்
சிறகுகள் எங்கும் வழிகள்

ஏதென்று தெரியவில்லை
சரேலென்றேறியது காலொன்றில் முள்
கணமே சிறுத்து, முள்ளாய் மாறியது மலை

கோபித்துக் கொள்வதற்கு என்னவுண்டு
தவிர, நேரமுமில்லை
சரசரவென அடிவாரம் நோக்கி இறங்க
சரசரவென வளர்ந்து கொண்டிருந்தது மலை

படிகள்
வெளிகள்
சிறகுகள்
வழிகள்
எல்லாமாகத் தன்னை நெகிழ்த்திக்
கொண்டேயிருக்கிறது மலை

ஏதொரு போது முள்ளாகவும்.







## ஆச்சரியமான பகல்

வார்த்தைகளையும் பார்வைகளையும்
பரிமாறிக் கொள்வதற்கு
இனியும் இடமுண்டா என்று தெரியவில்லை

நெடுங்காலமாக வாசிக்கப்படாமலேயிருக்கும் கடிதம்
எப்படி இந்தக் கணத்தில் தன்னைத் திறக்கச் சொல்கிறது
என்றும் தெரியவில்லை.

கீழே நான்
மேலே நீ

ஏறுவதற்கும் இறங்குவதற்கும்
இல்லாத படிக்கட்டிப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததே
நாம்தான் என்றால் அதை ஏற்றுக் கொள்வாயா
என்றும் தெரியவில்லை.

எதையும் தொட முடியாத விரல்கள்
தாளமிடுகின்றன காற்றில்

களைப்பு மேலிடச் சரிகிறேன்
நாம் விட்டும் விலகியும் சென்ற மரத்தில்

என்னவோ ஏதோ அவசரமென்று
சொல்லிச் சென்றதும் சொல்லாமலே சென்றதும்
ஒன்றென்றுதான் தோன்றுகிறது

தூறிக் கொண்டிருக்கும் மழையில்
இந்தப் பகலோ
வெதுவெதுப்பாகத் தன்னை ஆக்கிக் கொண்டிருக்கிறது

நெடுங்காலமாகவே
எரிந்து கொண்டேயிருக்கிறோம்
அங்குமிங்குமாகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**T. Jegatheesan**

Barrister, Solicitor & Notary Public (ont)




2620 Eglinton Ave. E
Suite 201
Scarborough
On MLK 2S3

Tel: 416 - 266 6154 Fax : 416 - 266 4677

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈச்ச மரம்

மாஜிதா

எமது நீதிமன்றத்தின் மேடையை நோக்கி நான் நடந்து கொண்டிருக்கையில் முதலி எனது வருகையை முன்னறிவுப்புச் செய்து கொண்டிருந்தான். அந்த நொடிகள்தான் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை நரம்புகள் மின்சாரம் பாய்ச்சியதுபோல் புடைத்தெழுந்து எல்லா சக்திகளையும் உள்ளேயிழுத்துக் கொண்ட எனது உடல் நீதியின் கண்களைத் திறந்து கொள்கின்ற தருணம். இந்த மேடைக்கும் எனக்கும் இடையிலான நட்பின் வயது இரண்டு வாரங்கள் என்றாலும் இங்கே இருக்கின்ற மேசையும் கதிரையும் பழகிவிட்ட சேவகர்கள்போல் என்னை எதிர்பார்த்து நிமிர்ந்து நின்றன. விசாலமாகவும் வெளிச்சமாகவும் இருக்கின்ற இந்த மண்டபம் குண்டூசி கீழே விழும் சத்தத்தினைக்கூட உள்ளே நுழையவிடாது அமைதியினை அணைத்துக் கொண்டு என் முன்னே பணிந்து நின்றது. என்னைவிட வயதில் மூத்தவர்கள், வெவ்வேறான பதவிகளில் இருப்பவர்கள், குற்றவாளிகள், பாதிக்கப்பட்டவர்கள் என ஆண்களும் பெண்களும் சேர்ந்த கலவையான மனிதர்கள் அரசியின் வருகையை எதிர்பார்த்து நிற்பதுபோல் எனது வருகைக்காக எழுந்து நின்றார்கள். தங்களுக்கென முன்னால் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த மேசைகளைச் சுற்றியிருந்த கதிரைகளில் இருந்த சட்டத்தரணிகள் வெருண்ட கண்களுடன் நின்று கொண்டிருக்க மண்டபத்தின் இடது ஓரத்தில் நின்ற பொலிஸ் மேலதிகாரியும் அவரது காவலர்களும் என்னை நோக்கி சலூட் அடித்துக் கொண்டார்கள். சாம்பல் நிறமும் கருப்பும் கலந்து அணிந்திருந்த எனது கைத்தறிப் புடவையின் மடிப்புக்களை நீவிவிட்டுக் கொண்டு எனது மேலங்கியை சரிசெய்து கொண்டு தலையை மிடுக்காகத் தூக்கி சபையின்மீது பார்வையை மேயவிட்டவாறே கதிரையில் அமர்ந்து கொண்டேன். பரபரப்பும் நுட்பமும் கலந்து தீவிரத்தன்மையுடன் இருந்த எனது முகத்தினை மீண்டும் சீராக்கினேன். கருணை என்பது எனது ஆன்மாவிற்குள் ஒளிர்ந்து கொண்டிருக்கும் அணையாச் சுடர். அதனை ஒருபொழுதும் இந்த மனிதர்கள் முன்னால் நான் பகிரங்கமாக காட்சிப்படுத்துவதில்லை. தயவு, தாட்சண்யம் இத்யாதிகளை எனது நியாயசபைக்குள் நுழைவதற்கு நான் ஒருபொழுதும் இடமளிப்பதில்லை.

முதலி, வழக்குகளின் கோப்புகளை எடுத்துவரத் தொடங்கினான். மனிதர்களின் தலைவிதிகளை தீர்மானிக்கும் அந்தக் கோப்புகள் சுவர்க்கத்திற்கும் நரகத்திற்குமான கதவுகளைத் திறப்பதற்கான சாவிக் கொத்துக்களைப்போல் எனது மேசையில் அமர்ந்து கொண்டன. இனி நான் ஒவ்வொரு கோப்புகளையும் திறந்து ஆராய்ந்து கொள்ள வேண்டும். நல்லவர்கள், கெட்டவர்கள் யார் என்பதை பரிசீலித்து அறிய வேண்டும் . எனது மூளை நீதித் தராசின் படிக்கல்லைப்போல் வேகமாக இயங்கத் தொடங்கியது. கையில் இருக்கின்ற பேனா தீர்ப்பின் சொற்களை தீட்டிக்கொள்ள ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. "வழக்கிலக்கம் பீ ஆயிரத்து நூற்றிருவது" முதலியின் குரல் உயர்ந்தது. அம்பாறை சந்துல்கலவில் நடைபெற்ற பாலியல் வல்லுறவின் சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தனது பக்க விவாதத்தினை ஆரம்பித்து வாதாடிக் கொண்டிருந்தார். அவர் தனது கட்சிக்காரரிடம் வாங்கிய பணத்திற்காக போலி ஆதாரங்களோடு நிரூபிக்கப் போராடுவதைப் பார்க்கையில் எனக்குள் எழுந்த சிரிப்பு தொண்டை வரையிலும் எழுந்துவர மீண்டும் விழுங்கிக் கொண்டேன். பின்னர் வழமையைப்போல் இடையிடையே எனது கண்கள் அங்குமிங்குமாக கண்காணிப்பு வேலைகளில் ஈடுபட ஆரம்பித்தது. அப்பொழுது மண்டபத்தினுள் நுழைவதற்கான வாசற்கதவில் ஒரு முதியவருக்கும் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும் இடையில் மிக தீவிரமான உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருந்ததை எனது கண்கள் ஒளிப்பதிவு செய்துகொண்டன. வழக்குகளின் தவணைகள் வேகமாக என்னிடம் இருந்து விடைபெற்றுச் செல்ல நான் மீண்டும் மண்டபத்தின் நுழைவாயிலை நோக்கினேன். அந்த முதியவர் ஏதோவொரு கோரிக்கை விடுப்பதுபோல் பணிவுடன் பொலிஸ் கான்ஸ்டபிளை நோக்கி உரையாட அவன் மறுப்பதுபோல் தலையை ஆட்டுவதும் என அந்த உரையாடல் நீடித்துக் கொண்டேயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகல் பன்னிரெண்டு மணியளவில் நீதிமன்றம் இடைவேளைக்காக ஒத்தி வைக்கப்பட்டது. வழக்குகளின் கனதியால் களைப்புற்று உழன்று கொண்டிருக்கும் உடலுக்கும் மனதிற்கும் அந்த இடைவேளை ஒன்றுதான் மருந்து. ஒரு மணி நேரத்திற்குள் மீண்டும் எனது உடல் இயங்கத் தொடங்கிவிடும். பசியோடு சேர்ந்த தாகம் வயிற்றினைக் கிள்ளியெடுத்தது. உதடுகள் வறண்டு முகம் வற்றிப் போயிருந்தது. எனது காரியாலய அறையினை நோக்கி வேகமாக நடந்து கொண்டிருந்தேன். அறையின் முன்னால் மீண்டும் அந்த முதியவர் நின்றிருக்க அங்கேயிருந்த எனது பாதுகாவலன் "மேடத்தினை அப்படிக் காரியாலயத்தில் சந்திக்க முடியாது, அவ அனுமதிக்க மாட்டா, போய் விடு" என அந்த முதியவரை அதட்டிக் கொண்டிருந்தான். நான் அறையினை நெருங்கியதும் "என்ன விடுங்க சேர், நான் மேடத்திடம் நீதிகேட்டு வந்திருக்கன், என்ன விடுங்க சேர்" முதியவரின் குரல் உயரத் தொடங்கியது. எனது முகத்தினைத் திருப்பி அந்த முதியவரை கூர்ந்து உற்றுப் பார்த்தேன். கூன்கொண்ட ஒல்லியான உடம்பு. மிக மெலிந்த உடல். ஒட்டிய கன்னங்கள். சற்றே பரந்த வாயும், பரந்த மூக்கும் கொண்ட முகம். நீண்ட நரைத்த தாடி, கண்களின் இமைகளும் நரைத்திருந்தன. வெள்ளை சேர்ட்டும் சாரனும் உடுத்து தலையில் வெள்ளைத் தொப்பி அணிந்திருந்தார். "மேடம், பள்ளிவாசலின் வேப்பிலை மரத்தை தறிச்சுப்போட்டு புதுசா ஈச்ச மரங்கள் நாட்டப் போறாங்களாம். காகங்களெல்லாம் பாவம் மேடம். நான் பிள்ளைகளை வளர்த்து வார மாதிரி வேப்பிலை மரத்தினை வளர்த்திருக்கன். எப்படியாவது நீதி வேண்டும் மேடம்" முதியவரின் கண்கள் ஈரமாகியிருந்தன. வேண்டிக் கொண்டேயிருந்தார். எனக்கு எதுவுமே புரியவில்லை. எனது மூன்று வருட சேவையில் இப்படியொரு மன்றாட்டத்தினை நான் எதிர்கொள்ளவில்லை. மனிதர்களுக்கிடையிலான பிரச்சனைகளைத்தான் எனது தராசில் ஏந்தியிருக்கின்றேன். இப்பொழுதுதான் முதன்முறையாக மரங்கள் என் முன்னால் நிற்கின்றன. தொடர்புபடுத்திப் புரிந்துகொள்ள ஓரிரு நிமிடங்கள் தேவைப்பட்டன. "உங்களுடைய பெயர் என்ன? எந்த ஊர்?" என்று மிகவும் தாமதமாகக் கேட்டேன். எல்லாவற்றினையும் கடிதத்தில் எழுதிக்கொண்டு நாளைக்கு வாங்க எனக் கூறிக்கொண்டு அலுவலக அறையினுள் நுழைந்தேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை, வழமையைப்போல் அதிகாலையிலேயே எனக்கு முழிப்பு வந்துவிட்டது. நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்த அந்தப் பணிமனை நகரத்தின் மையத்தில் இருந்தது. எனது பணிமனையைத் தாண்டி இருந்த இடதுபக்க வீதியில் பள்ளிவாசலும் வலதுபக்கமாக இருந்த வீதியில் கோவிலும் அமைந்திருந்தன. சுபஹூ தொழுகைக்கான அதானும், சுப்ரபாதமும் ஒன்றுசேர்ந்து இருளையும் நிலவின் வெளிச்சத்தினையும் கோர்க்கும் இசையைப்போல் ஒலித்துக் கொண்டிருந்தன. அருகில் தூங்கிக் கொண்டிருந்த எனது ஒரு வயது மகள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். இந்த ஊருக்கு வந்ததிலிருந்து அவளது தூக்கம் நிறைவானதாக இல்லை. இன்னும் இந்தச் சூழலுக்கு அவள் பழக்கப்படவில்லை. இரவின் நடுச்சாமத்தில் எழுவதும் அழுவதுமாக அவள் இருந்தாள். அதிகாலை நேரத்தில்தான் அவள் ஆழ்ந்து உறங்குவாள். இந்த வாரத்தின் இறுதி நாட்களில் கணவரும் நானும் எனது ஊருக்குப் போய் வருவதாகத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் கணவர் மருத்துவராக வேலை செய்யும் இந்நகரத்தின் அரசினர் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் நோயாளிகள் வருகை கூடிவிட மருத்துவர் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது. எனவே சனி, ஞாயிறு தினங்களில் அவர் கட்டாயம் அங்கே வேலையில் இருக்க வேண்டும். எனக்கும்கூட இன்று முக்கியமான வேலை இருக்கின்றது. நேற்று அந்த முதியவர் என்னிடம் சமர்ப்பித்த அந்தக் கடிதத்தினை இரண்டு தடவை வாசித்துப் பார்த்தேன். அவருடைய பெயர் சரீப், அந்தப் பள்ளிவாசலின் மோதினார். அவர் கூறிய குறிப்பிட்ட சம்பவம் இங்கேயிருந்து பத்து கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்ற நெல்லிச்சேனையில் நடைபெறப்போகின்றது. அந்த முதியவரின் கருத்தின்படி ஈச்சமரங்கள் வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்பட உள்ளன. வேப்பமரம் குறித்த அவருடைய கரிசனத்தினை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் ஈச்சமரம்? எண்ணங்கள் அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருந்தன. எனது மூன்று வருட அனுபவத்தில் எனது மன்றத்தில் எந்தவொரு குற்றவாளியும் இதுவரை தப்பித்துப் போனதாக சரித்திரமில்லை. ஒரு வேட்டைக்காரி காட்டில் நுழைவதுபோல் வழக்குகளின் சம்பவத்திற்குள் மனம் ஒன்றித்துப் போய்விடும். மரத்தின் கிளைகளிலும் புதர்களின் அடியிலும் ஒளிந்தும் பதுங்கியும் தேடுவதைப்போல் சந்தேக நபர்களின்மீது எனது மூளை ஆராய்ச்சி வேலைகளை செய்யத் தொடங்கும். சரியான நேரத்தில் சமயம் பார்த்து சாட்சிகள் பொருந்தி வருகையில் குறிவைத்து அம்பினைத் தொடுப்பேன். ஆனால் ஈச்சமரம் சற்று சர்ச்சைக்குரிய விடயமாக எனக்குப் புலப்பட்டது. நிறைய விடயங்களை ஆழமாக ஆராய வேண்டும் என யோசனை தோன்றியது. தோராயமான சந்தேகங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைக்கத் தொடங்கின.

காலையில் ஒன்பது மணி பத்து நிமிடங்கள் தாண்டி எனது வாகன ஓட்டுநர் ரஹீம் வீட்டு வாசலில் வந்து நின்றான். நான் அவனை ஒன்பது மணிக்கு வரச் சொல்லியிருந்தேன். "ஏன் பத்து நிமிடங்கள் லேட்?" என அவனைப் பார்த்து அழுத்தமாகக் கேட்டேன். "வரும் வழியில் கொஞ்சம் தாமதமாகிவிட்டது, சொரி மேடம்" என பதற்றம் நிறைந்த குரலில் கூறினான். நேரம் என்பது எனது சட்டப்புத்தகத்தில் முதலாவது அத்தியாயம். அதனைத் தவறவிட்டால் முழுப்புத்தகத்தினையும் நிறைவாக வாசிக்கமுடியாது போய்விடும். நான் மீண்டும் ரஹீமை நோக்கி இறுகிய முகத்துடன் "இதுதான் கடைசித் தடவை" என எச்சரித்தேன். எனது உரத்த குரல் அவனைப் பணிய வைத்தது. "நெல்லிச்சேனைக்குப் போகணும், போய் காரை ஸ்டார்ட் பண்ணு" என நான் ரஹீமிடம் கூற பதறியபடி விரைந்தான். எனது இடுப்பில் அமர்ந்திருந்த எனது மகளை சுபைதாவிடம் கைமாற்றிக் கொடுக்க அவள் மறுத்து அடம்பிடித்தாள். பின்னர் சுபைதா அவளுக்குப் பிடித்த மரத்தினாலான யானைப் பொம்மையை அசைத்துக் காட்ட குழந்தை ஒரே பாய்ச்சலில் சுபைதாவிடம் தொற்றிக் கொண்டது. கார் வீட்டு வாசலில் வந்து நிற்க முன்னால் எனது பொலிஸ் பாதுகாப்பு உத்தியோகத்தரான லியனகே அமர்ந்திருந்திருக்க நான் பின் இருக்கையின் கதவினைத் திறந்து அமர்ந்து கொண்டேன்.

கார் நகரின் பிரதான வீதியில் அசைவின்றி சென்று கொண்டிருந்தது. பின்னர் வீதி இடதும் வலதும் இருபக்கங்கள் பிரியும் சந்தியில் கார் வலப்பக்கமாகத் திரும்பியது. நான் வீதியில் அமைந்திருக்கும் கட்டடங்களைப் பார்த்தவாறு என் கண்களைப் பதியவிட்டிருந்தேன். ஒரு பத்து நிமிடப் பயணத்தின் பின்னர் நெல்லிச்சேனை உங்களை அன்புடன் வரவேற்கிறது என்ற பெரிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சுவரொட்டியைத் தாங்கியிருந்த பெரிய மினார் போன்ற இரண்டு தூண்களுக்கிடையில் கார் புகுந்து கொண்டது. ஏதோவொரு கோட்டையின் வாசலில் நுழைந்ததைப்போல் நான் உணர்ந்து கொண்டேன். தூண்களைத் தாண்டி உள்ளே சென்றதும் கார்ப்பட் நெடுஞ்சாலை இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சாலையின் இரு பக்கங்களிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் வியாபாரக் கடைகள் அமைக்கப்பட்டிருந்தன. இடையில் நெல்லிச்சேனை மாநகராட்சி சபை என்ற பெயர் பொறிக்கப்பட்ட அரச கட்டிடம். ஆனால் வழமையாக இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள ஏனைய அரச கட்டிடங்கள் போலல்லாது அக்கட்டிடத்தினைச் சுற்றி நீண்ட வளைவான தூண்கள் எழுந்து நின்றன. வெளிச் சுவர்களினைச் சுற்றி பல வர்ணங்களாலான வேலைப்பாடுகள். கண்களைக் கூசவைக்கும் பச்சை நிறச் சாயம் பூசியிருந்தார்கள். நெடுஞ்சாலையின் மத்தியில் மீண்டும் மினார் போன்ற வடிவத்தில் பிரம்மாண்டமான பெரியதொரு தூண் உருளை வடிவில் வளைந்து கூர்மையான உச்சியினைக் கொண்டு எழுப்பப்பட்டிருந்தது. சுவரில் வெள்ளியும் நீலமும் கலந்த பெயிண்ட் பூசப்பட்டிருந்தது. தூணின் சுவரினைச் சுற்றி பல வடிவங்களிலுமான மின்சாரக் குமிழ்கள் பதிக்கப்பட்டிருந்தன. நான் வாயைப் பிளக்கும் அளவுக்கு அதிசயமாக அந்தத் தூணை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்படியொரு வடிவமைப்பினை நான் எங்குமே கண்டதேயில்லை. கார் ஓட்டிக் கொண்டிருக்கும் ரஹீம் இந்த ஊரினைச் சேர்ந்தவன்தான். அவனை நான் வீட்டில் வைத்து எச்சரிக்கை செய்ததிலிருந்து ஒரு வார்த்தைகூட இன்னும் பேசவில்லை. எந்தவித உணர்ச்சிகளையும் அவன் வெளிக்காட்டாது காரினை ஓட்டிக் கொண்டிருந்தான். காரினுள் இருந்த மூவரும் அவரவர் சிந்தனைகளில் மூழ்கியிருந்தோம். நான் முகத்தினைத் தளர்த்தி, "இந்தக் கட்டிடங்களையெல்லாம் யார் அமைத்தார்கள், வித்தியாசமாக இருக்கே" என அப்பாவித்தனமாக ரஹீமிடம் கேட்டேன். அவனுக்கு எனது கேள்வி உற்சாகத்தினை அளித்து விட்டிருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மலையொன்றின் முகடொன்றினைப் போல் பள்ளிவாசலின் பக்கத்தில் வேப்ப மரம் நின்றிருந்தது. பள்ளிவாசலினை நெருங்க நெருங்க வேப்ப மரத்தின் அடர்த்தியும் பெரிதாகிக் கொண்டு வந்தது. அதன் உச்சி வானில் சுழன்று சுழன்று அலைவதுபோல் இருந்தது. எனது வாழ்நாளில் இவ்வளவு பெரிய வேப்ப மரத்தினை பார்த்ததேயில்லை. இன்னொரு வகையில் வாகை மரம் அல்லது ஆலமரம் அளவிற்கு அது சடைத்திருந்தது. நான் என்னையே மறந்து வேப்ப மரத்தினைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.*

வேண்டும். அவனது முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்திருந்தது. "எல்லாம் இந்த ஊரினைச் சேர்ந்த அமைச்சரின் அபிவிருத்தி வேலைகள் மேடம். நல்ல மனிதர் அவர். அவர் அரசியலுக்கு வந்தபிறகுதான் இந்த ஊர் முன்னேற்றம் அடைந்திருக்கு" ரஹீம் சுறுசுறுப்பான குரலில் அமைச்சரின் அருமை, பெருமைகளை அடுக்கிக்கொண்டு போனான். என்னால் சகிக்க முடியவில்லை. அந்த உரையாடலை திசைதிருப்புவதற்காக, "ஜூம்மாப் பள்ளிவாசல் எங்கே இருக்கு, அங்கேதான் நான் போகணும்" என்றேன். "இதோ பக்கத்தில்தான் மேடம்" என்றவாறே வீதியின் இடதுபக்கமாகக் காரைத் திருப்பினான். "அதோ இருக்குதே வேப்ப மரம், அது பள்ளிவாசலின் காணிதான்" என காரினை ஓட்டியவாறே ரஹீம் கூறினான். நான் காரின் முன்பக்கமாக தலையைக் குனிந்து வேப்ப மரத்தினை நோக்கினேன். மலையொன்றின் முகடொன்றினைப் போல் பள்ளிவாசலின் பக்கத்தில் வேப்ப மரம் நின்றிருந்தது. பள்ளிவாசலினை நெருங்க நெருங்க வேப்ப மரத்தின் அடர்த்தியும் பெரிதாகிக் கொண்டு வந்தது. அதன் உச்சி, வானில் சுழன்று சுழன்று அலைவதுபோல் இருந்தது. எனது வாழ்நாளில் இவ்வளவு பெரிய வேப்ப மரத்தினை பார்த்ததேயில்லை. இன்னொரு வகையில் வாகை மரம் அல்லது ஆலமரம் அளவிற்கு அது சடைத்திருந்தது. நான் என்னையே மறந்து வேப்ப மரத்தினைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கார் பள்ளிவாசலினை நெருங்கியதும் ரஹீம் வீதியின் ஓரமாக நிறுத்தினான். காரிற்குள் இருந்து வெளியே இறங்கியதும் பள்ளிவாசலின் கேட்டில் நின்று மீண்டும் வேப்ப மரத்தினையே பார்த்துக் கொண்டிருந்தேன். பள்ளிவாசலின் முன் முற்றத்தில் இருந்த வேப்ப மரத்தின் கிளைகள் வீதிவரை நீண்டு கொண்டிருந்தன. அந்த இடத்தில் வேறு எந்தவித மரங்களும் இல்லை. வெயில் உச்சநிலையை அடைந்து கொண்டிருந்தது. வேப்ப மரத்தின் நிழல் ஒன்றே அவ்விடத்தினை பசுமையானதாக மாற்றியிருந்தது. அதன் நிழல் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தந்தன. காகங்களும் குயில்களும் எழுந்தெழுந்து வேப்ப மரத்தினைச் சுற்றி சிறகடித்துக் கொண்டிருந்தன. சரீப் மோதினார் தனது கையில் இருந்த விளக்குமாற்றினால் வேப்ப மரத்தின் கீழே விழுந்திருந்த அதன் சருகுகளையும் பறவைகளின் எச்சங்களையும் கூட்டி துப்பரவு செய்து கொண்டிருந்தார். அவருக்குப் பின்புறமாக நான் நின்றிருந்ததால் என்னை அவருக்குத் தெரியவில்லை. அவரது அந்த வேலையை மிகவும் நிதானமாகவும் அமைதியாகவும் செய்து கொண்டிருந்தார். இடையிடையே அவர் வேப்ப மரத்தினை அண்ணாந்து பார்க்கும்பொழுது அதனுடன் ஏதோ ரகசியமாக கதைப்பதுபோல் இருந்தது. மரத்தில் இருந்த பறவைகளை நோக்கி, "சூ.....சூ....அங்கால போங்க" என குழந்தைகளை உபசரிப்பதுபோல் உரையாடிக் கொண்டிருந்தார். சரீப் மோதினாரின் வார்த்தைகளுக்குக் கட்டுண்டதுபோல் பறவைகள் அங்குமிங்குமாக கிளை விட்டு தாவிக் கொண்டிருந்தன. வேப்ப மரம் ஏகாந்தமான தியானத்தில் நின்றிருப்பதுபோல் அமைதியாக நின்றிருந்தது. அந்தக் காட்சியிலிருந்து என்னை விடுவிக்க முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

உண்மையில் சரீப் மோதினாரின் கருத்தின்படி வேப்பமரம் அந்தப் பள்ளிவாசலின் மிகப்பெரிய ஆகிருதி. அவருக்கும் வேப்ப மரத்திற்குமிடையிலிருந்த நெருக்கத்தினை என்னால் உணர முடிந்தது. ஒருசில நிமிடங்களில் சரீப் மோதினார் என்னைப் பார்த்துவிட்டார். "மேடம்" என்றவாறே அவர் என்னை நோக்கி அனிச்சையாக நடந்து வந்து கொண்டிருந்தார். அதற்குள் பள்ளிவாசலிற்குள் இருந்த சிலர் என்னைச் சூழ்ந்து கொண்டனர். சரீப் மோதினார் அந்தக் கூட்டத்திற்குள் மறைந்து கொண்டார். எல்லோரும் என்னை நோக்கி ஸலாம் கூற, நான் அமைதியாக பதில் ஸலாம் கூறினேன். அந்த இடத்தில் ஏதோவொரு பரபரப்புடன் கூடிய அமைதி சூழ்ந்துவிட்டது. எனது வருகைக்கான காரணத்தினை அவர்கள் அனைவரும் எதிர்பார்த்து நிற்பதையும் நான் புரிந்துகொண்டேன். அவற்றிற்கு அப்பால் அவர்களது முகங்களின் சிந்தனை ரேகைகள் நான் உடுத்திருந்த சுடிதாரின்மேல் படர்ந்திருப்பதையும் என்னால் ஊகிக்க முடிந்தது. நான் எதையுமே பொருட்படுத்தாமல் என்னை இலகுவாக்கிக் கொண்டு, "பள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினர் யாராவது இங்கே இருக்கீங்களா?" என ஆரம்பித்தேன். "ஓம் மேடம்" என்றவாரு ஒரு நடுத்தர வயதுடைய ஒருவர் மெலிதாக நெளிவதுபோல் பாவனை செய்துகொண்டு "நான்தான் இந்தப் பள்ளிவாசலின் தலைவர்" எனக் கூறினார். "இவர் செயலாளர், இவர் நிர்வாக சபை உறுப்பினர்" என அங்கே நின்றிருந்த சிலரை அறிமுகப்படுத்தினார். நான் புன்னகையுடன் அனைவரையும் நோக்கினேன். நேரடியாக விடயத்திற்கு வராமல் சில ஆரம்பக் கேள்விகளைக் கேட்பதே சரியானதாகப்பட்டது. வேப்ப மரத்திற்கு எத்தனை வயது? அதனை யார் நட்டார்கள்? அதன் பலன்கள்? போன்ற அடிப்படைக் கேள்விகளை அவர்களிடம் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டேன். சரீப் மோதினார் கூறியிருந்த விடயங்களும் அங்கேயிருந்தவர்களும் கூறும் விடயங்களும் ஒன்றுடன் ஒன்று பொருந்திப் போயின. "அப்ப இந்த மரத்தினை வெட்ட முடிவெடுத்திருப்பது உண்மையா?" இப்பொழுது எனது குரலின் விசை சற்று உயர ஆரம்பித்தது. தலைவர் சற்று பதற்றத்துடன், "ஓம் மேடம்" என்றார். "ஏன் வெட்டப்போகிறீர்கள்?" "இல்லை மேடம், எங்களுக்கு சவூதியிலிருந்து ஈச்சமரக் கன்றுகள் அனுப்பி வைக்கப் போறாங்க , அதான்... இந்த மரத்தினை வெட்டிப்போட்டு ஈச்சமரக் கன்றுகளை நாட்டப் போறோம், நகர சபையிடமும் கதைத்து கடிதம் வாங்கியிருக்கோம்". நான் ஊகித்திருந்த பதில்தான் இது. அவர்கள் எதையுமே ஒளிப்பதுபோல தெரியவில்லை... ஆனால் மூளையில் ஏதோவொரு பொறி தட்டியது. அந்த உரையாடலை நீட்டிக்கொண்டு பள்ளிவாசலின் பக்கமாக பார்வையைத் திருப்பினேன். வானைத் தொடும் அளவிற்கு ஓங்கி உயர்ந்த மினார், கூரையைச் சுற்றி கோபுரங்கள் வடிவிலான தூண்கள், பல வண்ண நிறங்களிலான கண்ணாடிகளைப் பொருத்திய பிரமாண்டமான ஜன்னல்கள். பளிச்சென்ற பொன்னிற நிறத்தில் மிகப்பெரியதொரு அரண்மனையைப்போல் பள்ளிவாசல் காட்சியளித்தது. சாவகாசமாக மீண்டும் பள்ளிவாசலினை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். என்னைச் சுற்றி இருந்தவர்களும் என்னுடன் வந்து கொண்டிருந்தார்கள். "இந்தப் பள்ளிவாசல் புதிதாக நிர்மாணிக்கப்பட்டதா?" என்ற கேள்வியுடனேயே முன்னால் இருந்த கதவின் வழியாக பள்ளிவாசலின் மண்டபத்தினை எட்டிப்பார்த்தேன். என்ன அதிசயம் என்பதுபோல் எனது முகம் திகைப்பில் ஆழ்ந்திருந்தது. தரையில் பளிங்கு போன்ற மார்பிள் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. சுவர்களில் பல வர்ணங்களால் அரபு எழுத்துக்கள் வரையப்பட்டிருந்தன. கூரையில் விலை மதிப்புமிக்க மின்விசிறிகள் தொங்கின. கண்களை நிறைக்கும் வெண்ணிற ஒளி கொண்ட மின் குமிழ்கள். மண்டபத்தின் முன்னால் இருந்த பிரசங்க மேடையான மிம்பர் பலவித வேலைப்பாடுகளிலான ஓவியங்களுடன் அலங்கரிக்கப்பட்டிருந்தன. என்னால் நம்ப முடியவில்லை. நான் வாய் பிளந்தவண்ணம் நின்றிருப்பதை பார்த்த தலைவர் "எல்லாம் சவூதி அரசாங்கத்தின் நிதிதான் மேடம். அவங்கதான் பழசாக இருந்த பள்ளிவாசலினைத் திருத்தி புனர்நிர்மாணம் செய்ய உதவி செய்தாங்க. பார்த்தீங்களா? எவ்வளவு அழகாயிருக்கு. சவூதியிலிருக்கும் பள்ளிவாசல் மாதிரியே இருக்கு". என்றார். "அப்ப இன்னும் கொஞ் சநாளில் நீங்க எல்லோரும் அரபில்தான் கதைப்பீங்க போல" கண்கள் இடுங்கிய கோணல் சிரிப்புடன் தலைவரினைப் பார்த்தேன். மீண்டும் கோர்ட்டின் திசையினை நோக்கித் திரும்பினேன். இனியும் நான் பொறுமையாக இருக்க முடியாது. அதற்கிடையில் பள்ளிவாசலின் தலைவர், "மேடம் நீங்க பக்கத்து மாவட்டம்தானே? உங்களுடைய வாப்பாவினை எனக்குத் தெரியும். அவர் நல்ல திறமையான டீச்சர். ஆரம்பத்தில் பக்கத்து ஊரில் படிப்பித்திருக்கிறார்" எனது தனிப்பட்ட வாழ்க்கைக்குள் புகுந்து என்னுடன் நட்பு பாராட்ட ஆரம்பித்தார். நான் அவரது கருத்துக்களை கேட்டும் கேளாததும்போல் பாதிப் புன்னகையை உதிர்த்தேன். தொண்டையைச் செருமிக்கொண்டு எனது தீர்மானத்தினைக் கூற ஆரம்பித்தேன். "நீங்க எல்லோரும் சொல்றதைப் பார்த்தா இந்த வேப்ப மரம் முக்கியமானதொன்றாக எனக்கு விளங்குது. இந்த மரத்தினை தறிப்பது நியாயமானதாக இல்லை. இங்கே பாருங்க, எவ்வளவு செழிப்பா நிழலைத் தருகுது. மரங்கள் மிக முக்கியமானதொரு சொத்து. இப்படியொரு மரத்தினை வளர்த்து எடுக்க எத்தனை வருடங்கள் செல்லும்? சூழலை சுத்தமாக வைத்திருக்க மரங்கள் மிக முக்கியமானது. இதெல்லாம் உங்களுக்கு புரியாமலில்ல" நான் கூறிக்கொண்டிருக்கையில் அங்கே நின்றவர்களினை அவதானித்தேன். அனைவரினதும் முகங்கள் இருண்டிருந்தன. ஏதோவொன்றினை இழந்தவர்கள்போல் ஆளுக்கு ஆள் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பதற்றத்தைக் காண எனக்கு வேடிக்கையாக இருந்தது. தலைவர் பொறுமையிழந்தவராக, "மேடம் ஈச்சமரமும் நல்ல மரம்தான், நான் என்ன சொல்ல வாரேனென்றால் ஈச்சமரம் பள்ளிவாசலிற்கு அழகு சேர்க்கும், சவூதியில் இருக்கும் எல்லாப் பள்ளிவாசல்களிலும் ஈச்சமரங்கள்தான் நாட்டியிருக்காங்க..." "நீங்க எதுவுமே இங்கே கூற வேண்டாம், இதுதான் எனது முடிவு, இதற்குமேல் உங்களுக்கு ஏதாவது கூற வேண்டுமானால் நீதிமன்றத்தில் வந்து கூறுங்கள்" நான் குரலைத் தூக்கி உரக்கச் சொன்னேன். பின்னர் அவசரமாக காரினை நோக்கி நடந்தேன். பின்னால் நின்றிருந்தவர்களுக்கிடையில் பெரியதொரு ஆர்ப்பாட்டம்போல் ஏதோ சலசலப்பு கேட்டது. ரஹீம் காரினை இயக்கினான். நான் கதவினைத் திறந்து உள்ளே அமர்ந்து கொண்டு வேப்ப மரத்தினை பார்த்தேன். சரீப் மோதினார் அத்தனை மகிழ்ச்சியாகவும் அத்தனை மலர்வாகவும் வேப்ப மரத்தின் கீழே தனியாக நின்றிருந்தார். கார் சீறியபடி விரைந்தது.

வேப்பமரம் தொடர்பிலான விவாதம் நீதிமன்றத்தில் நடைபெறப்போகின்றதை எனது நாட்குறிப்பு உணர்த்தி நின்றது. வேப்பமரத்தினை வெட்டுவதைத் தடுக்கும் வகையில் நான் தற்காலிக தடையுத்தரவினைப் பிறப்பித்து வேப்பமரத்தினை வெட்டுவதற்காக நகரசபையின் பக்கத்தில் இருக்கின்ற காரணங்களினை சமர்ப்பிக்குமாறு நான் நீதிமன்ற அழைப்பாணை விடுத்திருந்தேன். பள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரும் அங்கே பிரசன்னமாகியிருந்தார்கள். எல்லோரினதும் முகங்களும் இறுக்கமானதாக மாறியிருந்தது. என்னையே கூர்ந்து அவதானித்துக் கொண்டிருந்தார்கள். நகரசபைத் தலைவர் முன்னால் அமர்ந்து தனது அதிகாரத்தினைக் காட்டுவதாக நினைத்து மீசையை முறுக்கிக் கொண்டிருந்தார். அவரின் மன ஓட்டத்தினை என்னால் ஊகிக்க முடிந்தது. முதலி வழக்கிலக்கத்தினைக் கூப்பிட்டான். சட்டத்தரணி என் முன்னால் எழுந்து நின்று தலையைத் தாழ்த்தி மரியாதை செய்தார். பின்னர் வேப்பமரம் வெட்டப்படுவதற்கான காரணங்களினை விவரித்து நிரூபிக்கத் தொடங்கினார். அதுமட்டுமன்றி இலங்கைச் சட்டப்படி பாதுகாக்கப்பட வேண்டிய மரங்களின் பட்டியலில் வேப்பமரம் அடங்காது என்ற சட்ட விளக்கத்தினையும் எடுத்துரைத்தார். வேப்பமரத்தில் அமர்ந்திருக்கும் பறவைகளின் எச்சங்களால் பள்ளிவாசலிற்கு வரும் பொதுமக்களுக்குத் தொல்லையாக உள்ளதாம். அந்த மரத்திற்குப் பதிலாக ஈச்சமரத்தினை நாட்டினால் பள்ளிவாசலிற்கு அழகு சேர்க்குமாம்... வேப்ப மரத்தினை தறித்துவிட்டால் அந்தப் பறவைகள் எங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும்? சூழலை சமநிலையாக வைத்திருப்பதற்கு பறவைகள் எவ்வளவு பங்களிப்பினை வழங்குகின்றன. சட்டத்தொழில் என்பது மாபெரும் வலை. வெறுமனே சட்ட அறிவு மட்டும் போதாது. உலக அறிவும் சமூக நுண்ணுணர்வும் இத்தொழிலின் முக்கியக் கட்டுமானங்கள். இல்லாவிட்டால் சரிந்து வீழ்ந்துவிடும். மன்றத்தில் வாதாடிக் கொண்டிருந்த சட்டத்தரணி தனது உரையை முடித்துக்கொண்டு மிகவும் களைப்புடன் தனது கதிரையில் அமர்ந்து கொண்டார். அவரது ஓரக்கண் கட்சிக்காரர்களைத் திரும்பிப் பார்த்து 'நமக்குத்தான் வெற்றி' என்பதுபோல் புன்னகைத்துக் கொண்டார். இனியும் இந்த வழக்கினை ஒத்திவைத்து நீட்டிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை என உள்மனம் முடிவெடுத்திருந்தது. எனது மனச்சாட்சியையும் சட்டத்தின் கருவறையையும் திறந்து கொண்டேன். தராசினை உயர்த்திப் பிடித்தேன். ஈச்சமரத்தினை நாட்ட வேண்டாம் என்று என்னால் கூற முடியாது, அதேநேரத்தில் அந்த வேப்பமரத்தினை வெட்டுவதற்கும் என்னால் அனுமதி அளிக்க முடியாது. ஏனெனில், அதன் பச்சை நிழல், வெண்ணிற நுரைபோன்ற அதன் பூக்கள், சூரிய ஒளியில் துள்ளும் இலைகள், குளிர்மையும் சுத்தமும் நிறைந்த சுவாசம், பறவைகளின் குரலோசை அனைத்தும் தராசில் அமர்ந்து கொண்டன. இனியும் நான் ஏன் அமைதி காக்க வேண்டும். எல்லாவற்றினையும் எனது குறிப்பேட்டில் எழுதிக் கொண்டேன். அனைத்தையும் மீண்டும் ஒருமுறை சரிபார்த்தேன். சபையை நோக்கிய பார்வையை சீராக்கினேன். வேப்ப மரம் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தினை எனது உரையில் வலியுறுத்தினேன். “இறுதியாக வழங்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையிலும் இலங்கை நீதித்துறைச் சட்டத்திற்கிணங்க வேப்பமரத்தினை வெட்டுவதற்கான நிரந்தரத் தடையுத்தரவினை இந்நீதிமன்றம் பிறப்பிக்கின்றது” எனது குரல் எல்லாவற்றினையும் முடித்துக்கொண்டது.

சபையில் இருந்தவர்கள் முகங்களை சுளித்துக் கொண்டார்கள். அவர்களுடைய உள்ளக்குமுறல் அமைதியாக ஊசலாடியது. அந்நேரத்தில் பள்ளிவாசலின் தலைவர் அங்குமிங்குமாக தனது விறைப்பான முகத்தினை திருப்பி தள்ளாடினார். உடல் நடுங்கி அதிர்ந்துகொண்டிருந்தது. அவருக்குள் இருந்த ஆதங்கம் விழித்துக் கொண்டது. உடனே தனது சுட்டுவிரலை உயர்த்தி, “மேடம், இவ்வளவு சொல்லியும் ஏன் ஏற்க மாட்டீங்க?” கதிரையில் அமர்ந்திருந்த அவர் தன்னையறியமாலேயே வெறிகொண்டு எழுந்தார். முதலி அவரை அமருமாறு கூறிக்கொண்டு ஓடினான். முன்னால் இருந்த சட்டத்தரணிகள் எழுந்து நின்றனர். இரண்டு பொலிஸ் காவலர்கள் தலைவரைச் சுற்றிக் கொண்டனர். சபை முழுக்க ஆரவாரம். அவருடைய மரியாதையற்ற நடத்தையைப் பார்த்த நான் திடுக்கிட்டு ஏறிட்டுப் பார்த்தேன். எனது கண்கள் எரிந்தன, சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி, “அவரைக் கைது செய்” என பக்கத்தில் நின்ற பொலிஸாரை நோக்கி உரத்த குரலில் உத்தரவிட்டேன். சபை மீண்டும் அமைதியானது. அனைவரும் அசைவற்று அப்படியே நின்றார்கள். நீதிமன்ற அவமதிப்பிற்காக பள்ளிவாசல் தலைவருக்கு மூன்றுநாள் சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்தேன்.

தலைவரின் கைது பரபரப்பிற்குள்ளாகியது... அன்றிரவு எனது பணிமனையில் கணினியின் முன் அமர்ந்திருந்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சில தகவல்களை மின்னஞ்சல் செய்து கொண்டிருந்தேன். எனது நண்பர்கள் சிலரிடம் இருந்து மாறிமாறி மின்னஞ்சல்கள் எனக்காக வந்து கொண்டிருந்தன. அவற்றினைத் திறந்து பார்த்தபொழுது 'நீதியின் குரல்' என்றதொரு மின்னிதழில் 'ஈச்சமரத்தினை நாட்டுவதை தடுத்த நீதிபதி' என்ற பெரியதொரு தலைப்பில் செய்தி வெளியாகியிருந்தது. உள்ளே சென்று செய்தியை வாசித்தபொழுது தலை சுற்றுவதுபோல் இருந்தது. இரண்டு பத்திகளுக்கு மேல் வாசிக்க முடியவில்லை. ஏனெனில் வேப்பமரம் வெட்டப்படுவது தொடர்பில் எந்தவிதச் செய்தியும் இல்லை. எனது தீர்ப்பினைப் பற்றி பொய்யான தகவல்களை உள்ளடக்கிய செய்தி வெளியாகியிருந்தது. மின்னிதழை மூடிவிட்டு முகநூலைத் திறந்தேன். அங்கேயும் சடசடவென்று நிறைய குறுஞ்செய்திகள். முகநூலில் போலிப் பெயர்களில் உலாவருபவர்கள் எனது புகைப்படத்தினை பதிவுசெய்து தனிப்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டிருந்தார்கள். உடல் ஓய்ந்ததுபோல் அசதியில் நிறைந்திருந்தது. கணினியை மூடிவிட்டு கதிரையில் அமைதியாக அமர்ந்திருந்தேன். அப்பொழுது பணிமனையின் தொலைபேசியும் எனது கையடக்கத் தொலைபேசியும் விதம்விதமாக ஓசையிட்டுக் கொண்டேயிருந்தன. கையடக்கத் தொலைபேசியை அழுத்தியபொழுது, “மேடம் நான் நெல்லிச்சேனையிலிருந்து அமைச்சர் பேசுகின்றேன். நெல்லிச்சேனையில் எனக்குத் தெரிந்தவங்க நிறையப்பேர் போன் பண்ணியிருந்தாங்க. அந்தப் பள்ளிவாசலின் தலைவரினை சிறைச்சாலைக்கு அனுப்பிட்டீங்களாமே? இதெல்லாம் அநியாயம். அல்லாஹ் எல்லாவற்றினையும் பார்த்துக் கொண்டிருக்கான். இப்பதான் செய்தியையும் டி.வி.யில் பார்த்தன். நீங்க ஏன் இப்படியொரு தீர்ப்பினை வழங்கினீங்க? அது ஒரு சாதாரண வேப்பமரம்தானே? அதுவும் இல்லாமல் ஈச்சமரம் நமது கலாச்சாரச் சின்னம். அதனை நாட்டுவது நமது கடமை. சமூகத்தினைப் பகைத்துக் கொண்டு உங்களால் வாழ முடியுமா? அமைச்சரின் அநாகரிகமான குரல் தொலைபேசியில் குமுறிக் கொண்டிருந்தது. அரசியல்வாதி என்ற அந்தஸ்தினையும் நீதவான் என்ற பொறுப்பான பதவியையும் ஒன்றாகப் போட்டு குழப்பிக்கொள்ளும் அந்த சர்வாதிகார அமைச்சரின் அதிகாரக் குரலை நான் வெறுத்தேன். “இப்படி போன் பண்ணி என்னுடன் தனிப்பட்ட முறையில் உரையாடுவது மிகப்பெரிய தவறு. உங்களுடைய வேலையை மட்டும் பாருங்க. நான் என்ன செய்யவேண்டும் என்பது எனக்குத் தெரியும்” அலைபேசிக் கற்றை வழியாக வீறிட்டு தொலைபேசியை துண்டித்தேன். எனது சத்தம் கேட்டு உள்ளேயிருந்த எனது கணவர் ஓடிவந்தார். அவரது முகம் கோபத்தில் மினுங்கிக் கொண்டிருந்தது. “ஏன் இவ்வளவு கோபப்படுகிறாய்? இதெல்லாம் பெரிய பிரச்சனையா? இந்தச் சமூகத்தினைத் திருத்துவது கஷ்டம். தேவையில்லாமல் ஏன் எல்லோருடனும் சண்டை பிடிக்கிறாய். உனக்கு வழங்கப்பட்ட வேலையை மட்டும் செய். புருஷ புத்தியை பளபளப்புடன் தீட்டிக்கொண்டு அறிவுரை வழங்கினார். “மனித நோய்க்கு மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எதிர்பார்த்திருந்ததன்படி வேப்பமரத்தினை வெட்டுவதற்காக நான் வழங்கியிருந்த நிரந்தரத் தடையுத்தரவிற்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்கின்றார்கள் என்பதை அடுத்த வாரமே அறிந்து கொண்டேன்.*



மருத்துவம் பார்த்துப் பழகிட்டீங்க. அப்போ சமூக நோய்க்கு மருந்து இல்லையா?" என்று அசட்டையான சிரிப்புடன் கேட்டேன். தலையை அசைத்துக்கொண்டு எரிச்சலுடன் உள்ளே சென்றார். என்னால் நிலைகொள்ள முடியவில்லை. வீட்டிற்கு வெளியே வந்து முன்னால் இருந்த மாமரத்தின் கீழே நின்றிருந்தேன். நிலவின் ஒளி மாமரத்தின் இலைகளில் கசிந்து மினுங்கிக் கொண்டிருந்தது. உயிரசைவே நிகழாமல் விரிந்து கிடக்கும் நிலம். உள்ளேயிருந்த உணர்வுக் குமுறல்களை பெருமூச்சால் வெளியேற்றினேன். சிறிது சிறிதாக மனது தெளிவுற்றது.

எதிர்பார்த்திருந்ததன்படி வேப்பமரத்தினை வெட்டுவதற்காக நான் வழங்கியிருந்த நிரந்தரத் தடையுத்தரவிற்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்கின்றார்கள் என்பதை அடுத்த வாரமே அறிந்து கொண்டேன். வழமையைப்போல் பின் மதியத்தில் மன்றத்தின் வழக்குகளை முடித்துவிட்டு எனது காரியாலய அறையில் அமர்ந்து ஏனைய வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். நீதிமன்ற நேரம் முடிந்துவிட்டதால் ஊழியர்கள் ஒவ்வொருவராக வேலை முடிந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். நீதிமன்ற வளாகம் ஆழ்ந்த அமைதியில் உறங்கிக் கொண்டிருந்தது. அறையின் சுவரில் தொங்கிக் கொண்டிருக்கும் கடிகாரத்தினைப் பார்த்தேன். நேரம் ஐந்தரை மணியாகிவிட்டிருந்தது. இன்னும் சில நிமிடங்கள் அமர்ந்துவிட்டுச் செல்லலாம் என்ற எண்ணத்துடன் மேசையில் இருந்த புதிதாக பதியப்பட்ட வழக்குக் கோப்புகளை ஆராய்ந்து கொண்டிருக்கையில் சாத்தியிருந்த அறையின் கதவு மெல்லியதாக தட்டப்பட்டது. நான், "உள்ளே வாங்க" எனக் குரல் கொடுத்தேன். அது மெல்ல விரிசலிட்டது. பொலிஸ் பாதுகாப்பு உத்தியோகத்தர் லியனகே அமைதியாக நின்றிருந்தான். நான் 'என்ன விடயம்' என்பதுபோல் அவனை அண்ணார்ந்து பார்க்க, "மேடம் அந்த நெல்லிச்சேனைப் பள்ளிவாசலின் முதியவர் வந்திருக்கிறார். உங்களை சந்திக்க வேண்டுமாம்" என தாழ்மையான குரலில் கூறினான். வேப்பமரம் தொடர்பில் சரீப் மோதினாரின் பாதுகாப்பும் முக்கியம் என்பதால் என்னை அடிக்கடி சந்திக்க வரவேண்டாம் என்று அவருக்கு அறிவுறுத்தியிருந்தேன். 'இப்பொழுது ஏன் வந்தார்?' என ஒரு கணம் ஆழ்ந்து யோசித்துவிட்டு, "சரி வரச் சொல்லு" என லியனகேயிடம் கூறினேன். அவன் தலையை அசைத்துவிட்டுச் சென்றான். ஒருசில நிமிடங்களில் கதவினைப் பிடித்தபடி சரீப் மோதினார் நின்றிருந்தார். அவரது முகம் வாடியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோவொன்றினை இழந்ததுபோல் அவரது கண்கள் அங்குமிங்குமாகச் சுழன்று கொண்டிருந்தன. "வாங்க" என்றபடியே கதிரையில் அமருமாறு சைகை காட்டினேன். தள்ளாடித் தள்ளாடி மெதுவாக நடந்து வந்து "யா அல்லாஹ்" என்றவாறே கதிரையில் அமர்ந்து கொண்டார். தனது ஜூப்பாவின் தோல்பட்டையில் இருந்த சால்வையை எடுத்து முகத்தினை துடைத்துக் கொண்டார். பின்னர் உடைந்த குரலில், "நான்தான் உங்களுக்குக்கிட்ட வேப்பமரமும் ஈச்சமரமும் பற்றி தகவல் சொல்லி விட்டதாகக் கண்டுபிடிச்சுட்டாங்க. நேற்றிலிருந்து மோதினார் வேலையிலிருந்து நிப்பாட்டிட்டாங்க மேடம், எப்படியும் அந்த வேப்பமரத்தினை தறிச்சுப்போட்டு ஈச்சமரம் நாட்டிருவாங்கபோல இருக்கு, அப்படி நடந்தா என்ட ரூஹ் போயிரும் மேடம்" தழுதழுத்த குரலில் கூறி முடித்தார். அவரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. "நீங்க தைரியமா இருங்க. மேல் நீதிமன்றத் தீர்ப்பு நியாயமானதாக இருக்கும். எதற்கும் கவலைப்படாமல் போய் வாங்க" என மோதினாரிடம் கூறினேன். அவர் மெல்ல மூக்கினை உறிஞ்சுக்கொண்டு சால்வையால் ஈரமாகியிருந்த முகத்தினை ஒற்றிக்கொண்டு பெருமூச்சு விட்டார். பிறகு கதிரையிலிருந்து எழுந்து ஒருசில கணங்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். குழந்தைத்தனமான அவரது முகம் என்னைப் பார்த்து ஆசிர்வதிப்பது போல் இருந்தது. "நான் போயிட்டு வாரன் மேடம்" என்றபடியே அறையிலிருந்து வெளியேறிச் சென்றார். நான் கண் இமைக்காமல் மோதினார் போவதை பார்த்துக் கொண்டிருந்தேன்.

"மேடம், வேப்பமரத்தினை தறிக்கச் சொல்லி மேல்நீதிமன்றத்தில் அனுமதி வழங்கிட்டாங்களாம்" அரச சட்டத்தரணி மகேஷ் தொலைபேசியில் கூவி அழைத்துச் சொன்னான். எனது மறு கையிலிருந்த பேனா தானாகவே வழுகிச் சென்று தரையில் விழுந்தது. கைகளில் ஒருவித மெல்லிய நடுக்கத்தினை உணர்ந்தேன். இப்படியொரு தீர்ப்பினை நான் எதிர்பார்த்திருக்கவில்லையே... மனதிற்குள் பல தடவை சொல்லிக் கொண்டேன். இருந்தாலும் எனது பதற்றத்தினை மறைத்துக்கொண்டு "ஏன்? என்ன காரணமாம்?" மகேஷிடம் இயல்பாகக் கேட்டேன். "இல்லை மேடம், குடியியல் சட்டக் கோவையின் அத்தியாய ம் படி வேப்பமரம் பாதுகாக்கப்பட வேண்டிய மரமில்லையாம்." "ஓ, அப்படியா?" என்று கூறி தொலைபேசியைத் துண்டித்தேன். சட்டத்தின் எழுத்துக்களை எந்தவித பொருள்கோடலுமின்றி வாசிப்பதால் ஏற்பட்ட விபத்து இது. மனது மிக உக்கிரமான கற்பனைகளால் விசிறிக் கொண்டிருந்தது. நெருங்கிப் போகப் போக அந்தக் காட்சி மிகுந்த விரிவுடன் என்னை நோக்கி வந்தது. முன்னால் இருந்த வெள்ளைச் சுவரினை வெறித்தபடி அமர்ந்திருந்தேன். வேப்பமரம் தனது உடலை அசைத்துக்கொண்டு நடனமாடிக் கொண்டிருக்கும் ஒரு காலையில் பளபளப்பான கூர்மையான பெரிய கத்திகளுடன் அங்கே மனிதர்கள் மரத்திற்கு முன்னால் நின்றிருந்தார்கள். பின்னர் மரத்தின் கிளைகளில் ஏறிக்கொண்டார்கள். ஏதுமறியா அந்த அப்பாவி மரம் அவர்களை தனது உடலோடு அணைத்துக் கொண்டது. அவர்களில் ஒருவன் உச்சிக்கொப்பில் அமர்ந்து கொண்டான். தனது இடுப்பில் சொருகியிருந்த

கூரிய முட்கம்பிகள் போன்ற
அதன் இலைகள் ஒவ்வொருவரின்
உடலையும் குத்திக்
கிழிக்கின்றன. ஏன்? என்னுடைய
அரியாசனத்திலும்கூட அந்த
ஈச்சம முட்கள்.

கத்தியை எடுத்து மரத்தின் கழுத்தில் வைத்தான். தனது வலிமையை ஒன்றுதிரட்டி ஓங்கி வெட்டினான். பிசுபிசப்பான இளஞ்சிவப்பு குருதி பீறிட்டுத் தெறித்தது. அப்பொழுது காகங்களும் குயில்களும் சிறகடித்துப் பறந்தன. அங்குமிங்குமாக மரத்தில் அமர்ந்திருந்த மற்றவர்களும் கை கால்களை வெட்டுவதுபோல் மரத்தின் கிளைகளை வெட்டிச் சாய்த்தார்கள். எல்லாவற்றினையும் பார்த்துக் கொண்டிருந்த மோதினார் தனது நெஞ்சில் கை வைத்தபடி தரையில் சாய்ந்துகொண்டு தனது கண்களை மூடிக் கொள்கிறார். அவருடைய ரூஹின் ஒலி வேகமாக வானலோகத்தினை நோக்கி பறந்து கொண்டிருக்கிறது. பின்னர் அந்த இராட்சத வாகனம் முன்னால் வந்து வேப்பமரத்தின் முழு உடலையும் அடியோடு வெட்டிச் சாய்த்தது. பின்னர் முட்கள் நிறைந்த ஈச்சமரக் கிளைகள் அந்த மண்ணில் வேரூன்றி வளருகின்றன. அதன் இராட்சதக் கிளைகள் வேகமாகப் பரந்து விரிகின்றன. காற்று வீசுகையில் அந்தக் கிளைகள் சீறுவதுபோல் இருக்கின்றன. விடுபட முடியாத கவர்ச்சியால் எல்லோரும் ஈச்சமரத்தினைச் சுற்றி நிற்கின்றார்கள். அப்பொழுது கூரிய முட்கம்பிகள் போன்ற அதன் இலைகள் ஒவ்வொருவரின் உடலையும் குத்திக் கிழிக்கின்றன. ஏன்? என்னுடைய அரியாசனத்திலும்கூட அந்த ஈச்சம் முட்கள். என்னால் அமர்ந்துகொள்ள முடியாது நான் வலியில் உழல்கின்றேன். ஆனால் மீண்டும் மீண்டும் அவர்கள் எனது நியாயசபையின் கதவினைத் தட்டுகிறார்கள். "மேடம்" கதிரையிலிருந்த நான் திடுக்கிட்டு எழுந்தேன். நெல்லிச்சேனைப் பள்ளிவாசலில் ஜமாத் இயக்கங்களுக்கிடையில் அடிபாடு நடந்திருக்காம். இரண்டுபேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்காங்க. சந்தேக நபர்களை தடுப்புக்காவலில் வைக்க உங்களின் முன் ஆஜராக்க வேண்டும். பொலிஸ் அத்தியட்சகரின் குரல் திடுதிடுத்தது. என்ன இது? இப்பொழுதுதானே நான் ஏதோவொன்றினை நினைத்துக் கொண்டிருந்தேன். இவ்வளவு விரைவிலா? இதோ நான் சீக்கிரம் நீதிமன்றத்திற்குக் கிளம்பிச் செல்கிறேன். எனது தர்பாரின் கதவுகளைத் திறந்துகொண்டு அரியாசனத்தில் அமர்ந்து கொள்கிறேன். அவர்கள் வரட்டும் வரட்டும்.

⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனியாளாட்சிக்குள் அள்ளுண்டு செல்லும் இந்தியா

அமர்த்தியா சென்

இன்றைய உலகு தனியாளாட்சி என்னும் கொள்ளை நோயையும் எதிர்கொண்டுள்ளது.

இந்தியா தனியாளாட்சிக்குள் அள்ளுண்டு செல்வதை எதிர்த்துப் போராட ஏந்தவேண்டிய மிக வலிய ஆயுதம் அகிம்சையே.

### இந்து தேசியவாதம்

இந்து தேசியவாத அரசு சமயப் பகையை மேம்படுத்தியுள்ளது; இந்தியாவின் சமயச்சார்பற்ற மரபுகளை அது கருவறுத்துள்ளது.

மெய்யியலாளர் இமானுவேல் காந் கூறியவாறு, "ஒருவர் பகிரங்கமாக எல்லா விடயங்களிலும் தனது நியாயத் திறனைக் கையாள்வதைவிட வேறெதுவும் முக்கியமாகாது." காந் மேலும் குறிப்பிட்டவாறு, விவாதிக்கும் வாய்ப்பை சமூகம் தடுத்து நிறுத்துவது, சில வேளைகளில் மிகவும் கடுமையான முறையில் தடுத்து நிறுத்துவது, ஓர் அவப்பேறாகும்.

ஆசிய, ஐரோப்பிய, இலத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் எதேச்சாதிகாரப் போக்குகள் முனைப்பான முறையில் ஓங்கிவருவது எம்மைத் துணுக்குற வைக்கிறது. இந்த அவப்பேறான நாடுகள் திரண்ட கூடைக்குள் எனது தாயகமான இந்தியாவையும் சேர்க்க வேண்டியுள்ளது குறித்து நான் கலவரம் அடைகிறேன்.

### சமயச்சார்பற்ற இந்தியக் குடியாட்சி

கட்டியாண்ட பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றபின்னர், பல தசாப்தங்களாக தனிமனித சுதந்திரத்துடன் கூடிய, சமயச்சார்பற்ற குடியாட்சி நாடாக விளங்கி நல்வரலாறு படைத்த நாடு இந்தியா. சுதந்திரம் காக்க உறுதிபூண்ட இந்திய மக்கள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்து, எதேச்சாதிகார ஆட்சியை அகற்றவும் திடசித்தம் பூண்டவர்கள். எடுத்துக்காட்டாக "அவசரநிலை" என்ற போர்வையில் புகுத்தப்பட்ட சர்வாதிகார ஒழுங்குவிதிகளை 1977ல் நிகழ்ந்த தேர்தலில் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி திட்டவட்டமாக நிராகரித்தார்கள். அதற்கு கையோடு அரசாங்கம் அடிபணிந்தது.

### தலையெடுக்கும் எதேச்சாதிகாரம்

எனினும், குடியாட்சிமீது பலருக்கும் இருந்த ஈர்ப்பு அண்மைக்காலத்தில் தணியத் துவங்கியுள்ளது. வேறொரு வகையான சமூகத்தை மேம்படுத்தும் போக்கு இன்றைய அரசாங்கத்தில் ஓங்கியுள்ளதற்கான சான்று துலக்கமாகப் புலப்படுகின்றது. எதிர்த்தரப்புத் தலைவர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதுசெய்வதற்கும், சிறைவைப்பதற்கும் ஏதுவாக, அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கு "கலகம்" என்று முத்திரைகுத்தி, வன்முறை கொண்டு அடக்க முயன்ற விபரீதங்களும் இடம்பெற்றுள்ளன. இத்தகைய அணுகுமுறையில் சர்வாதிகாரப் போக்கு பொதிந்துள்ளது. இதில் திண்ணிய சிந்தனைக் குழப்பமும் புலப்படுகிறது. ஒரு தரப்பு அரசாங்கத்துடன் கொண்ட பிணக்கினை எவரும் அரசைக் கவிழ்ப்பதற்கான அல்லது நாட்டைக் கருவறுப்பதற்கான கலகமாகக் கொள்ள வேண்டியதில்லையே! நாட்டைக் கருவறுக்கும் செயலல்லவா கலகம் என்பது!



பிரித்தானியர் கட்டியாண்ட இந்தியாவில் நான் கல்விகற்ற காலத்தில் இந்தியாவின் சுதந்திரத்துக்காக (காந்தி அடிகளாலும் மற்றும் பிற சுதந்திர சிற்பிகளாலும் உந்தப்பெற்று) அகிம்சைவழியில் போராடிய என் உறவினர்களுள் பலரை, வன்முறை எதிலும் ஈடுபடாவாறு தடுக்கும் சாக்கில், "தடுப்புக் கைது" எனப்பட்ட நடவடிக்கைக்கு அமைய, சிறையில் அடைத்திருந்தார்கள். இந்தியா சுதந்திரம் பெற்றபின்னர் சிறைவாச உருவிலமைந்த மேற்படி தடுப்புக் கைது நிறுத்தப்பட்டது. ஆனாலும் பிறகு அது மீளவும் புகுத்தப்பட்டது. முதலில் காங்கிரஸ் அரசாங்கத்தால் சற்று மென்மையான சிறைவாச உருவில் அது மீளவும் புகுத்தப்பட்டது. அது அடுக்காத செயல்தான்! அதேவேளை இந்துத்துவ நோக்குடைய தற்போதைய பாரதிய ஜனதா ஆட்சியில் தடுப்புக் கைது என்பது மாபெரும் பங்கு வகிக்கிறது. எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளை எளிதில் கைதுசெய்து, விசாரணையின்றி, சிறையிலடைக்க அது வழிவகுக்கிறது.

சென்ற ஆண்டு புதுக்க இயற்றப்பட்ட சட்டவிரோதச் செயல்கள் (தடுப்புச்) சட்டத்தின்படி ஒருதலைப்பட்சமாக எவரையும் ஒரு பயங்கரவாதி என அரசாங்கத்தால் விளம்ப முடியும்; பயங்கரவாதி எனப்படுபவரைக் கைதுசெய்து, விசாரணையின்றி, சிறையிலடைக்க முடியும். ஏற்கெனவே மனித உரிமை வினைஞர்கள் பலர் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

## "தேசிய விரோதம்"

வெளியுலகில் ஒருவர் "தேசிய விரோதி" என்று கூறப்படும்பொழுது, அவரது சிந்தனை கண்டனத்துக்கு உள்ளாகிறது என்ற பொருளில் அதை நாம் புரிந்துகொள்ளலாம். ஆனால் இன்றைய இந்தியாவிலோ ஆளும் அரசாங்கத்தை அவர் கண்டித்துள்ளார் என்று மாத்திரமே அது புரிந்துகொள்ளப்படக் கூடும். தனியாளாட்சியில் "தேசிய விரோதமும்", அரசாங்க விரோதமும்" குழப்பியடிக்கப்படுவது வழக்கம். அத்தகைய முறைமீறல்களை சில வேளைகளில் நீதிமன்றுகளால் நிறுத்த முடிந்ததுண்டு. ஆனால் இந்திய நீதிமன்றுகள் சுணங்கி இயங்கி வருபவை. இந்தியாவின் பாரிய உச்ச நீதிமன்றினுள் கருத்து வேறுபாடுகள் வேறு நிலவுகின்றன. ஆதலால் எல்லா வேளைகளிலும் அங்கு திட்பமான பரிகாரம் கிடைப்பதில்லை. மனித உரிமை காப்பதில் உலகில் மிகவும் பேர்போன சர்வதேய மன்னிப்பகமே அரசாங்கத்தின் தலையீட்டினால் இந்தியாவைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டது!

## தலித்துகள்

பொதுவாக எதேச்சாதிகாரம் என்பது சிலவேளைகளில் நாட்டின் ஒரு தனிப்பிரிவினரை (பெரிதும் இந்தியாவைப் பொறுத்தவரை) ஒரு சாதியினரை அல்லது சமயத்தவரை கொடுமைப்படுத்துவதுடன் இரண்டறக் கலந்தது. முன்பு "தீண்டத்தகாதவர்கள்" எனப்பட்ட தாழ்ந்த சாதியினர் இன்று "தலித்துகள்" எனப்படுகின்றனர். இந்தியா சுதந்திரம் பெற்றபோது புகுத்தப்பட்ட "பாரபட்சத்தை ஈடுசெய்யும் நடவடிக்கை" மூலம் அவர்கள் (வேலைவாய்ப்பு, கல்வித் துறைகளில்) தொடர்ந்தும் பயனடைந்து வருகின்றனர். ஆனாலும் அவர்கள் பெரிதும் கொடூரமாகவே நடத்தப்பட்டு வருகிறார்கள். தலித்துக்களை உயர்சாதி ஆண்கள் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கிக் கொல்லும் நிகழ்வுகள் பரந்துபட்டு இடம்பெறுவது அதிர்ச்சி அளிக்கிறது. அதையிட்டு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து நெருக்குதல் கொடுத்தாலொழிய, அவற்றை அரசாங்கம் பெரிதும் புறக்கணித்து, மூடிமறைத்து விடுகிறது.

## முஸ்லீங்கள்

முஸ்லீங்களின் உரிமைகளைப் பொறுத்தவரை இந்திய ஆட்சியாளர் மிகவும் கடூரமாகச் செயற்பட்டு வந்துள்ளார்கள். அவர்களின் குடியுரிமைகள் சிலவற்றைக் கட்டுப்படுத்தும் அளவுக்குக்கூட சென்றுள்ளார்கள். இந்துக்களும் முஸ்லீங்களும் பல நூற்றாண்டுகளாக இங்கு சமாதான சகவாழ்வு வாழ்ந்தவர்கள். எனினும் அண்மைக்காலத்தில் தீவிர இந்து அரசியல் அமைப்புகள், தாயக முஸ்லீங்களை ஏதோ வெளிநாட்டவர்கள் போன்று நடத்தவும், நாட்டுக்குக் கேடு விளைவிப்பவர்கள் என்று குற்றஞ்சாட்டவும் முயன்றமை முனைப்பாகத் தெரிகின்றது. வேகமாய் ஓங்கிவரும் தீவிர இந்து அரசியல் வலுவினைக் கொண்டு சமயங்களிடையே ஆப்புவைக்கப்பட்டு வருகிறது. பகை மூட்டப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### இந்தியப் பண்பாடு

ஓர் இந்துக் குடும்பத்தில் பிறந்து, உலகப்புகழ்பெற்ற கவிஞர் தாகூர் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய ஓர் உரையில் (Hibbert Lectures, 1930), "நான் இந்து, இஸ்லாம், மேல்நாட்டுத் தாக்கம் ஆகிய பண்பாட்டு ஆறுகளின் முக்கூடலிலிருந்து எழுந்தவன்" என்று தம்மை அறிமுகப்படுத்தியதில் எதுவித முரண்பாடும் இல்லை. வெவ்வேறு சமய நம்பிக்கைகள் கொண்டவர்களின் கூட்டுத் தயாரிப்பே இந்தியப் பண்பாடு. அது இசை, இலக்கியம், ஓவியம், கட்டுமானம் போன்ற பல்வேறு துறைகளில் காணப்படுகிறது. இந்தியாவுக்கு வெளியே பயன்படுத்தப்படுவதற்காக முதன்முதல் மொழிபெயர்க்கப்பட்டு, பரப்பப்பட்ட இந்து மெய்யியல் நூலாகிய உபநிடதம்கூட ஒரு முகலாய இளவரசனின் முன்முயற்சியைப் பறைசாற்றுகிறது. (இளவரசன் தாரா சிக்கோ, மும்தாஜின் மூத்தமகன். மாமன்னன் ஷா ஜஹான் அவன் தந்தை. அவன் மும்தாஜின் நினைவாகக் கட்டியதே தாஜ்மஹால்).

இந்திய அரசாங்கம் தற்போது முதன்மைப்படுத்தும் கருத்தியலே தேசிய கல்வித்துறையை இட்டுச்செல்கிறது. வரலாற்றை அறவே மீட்டியமைக்கும் விதமாக, முஸ்லீம் மக்களின் தொண்டுகளை அடக்கி வாசிக்கும் விதமாக அல்லது முற்றிலும் புறக்கணிக்கும் விதமாக இந்தியாவில் இப்பொழுது பாடநூல்கள் எழுதப்பட்டு வருகின்றன.

சட்டவிரோத செயல்கள் (தடுப்புச்) சட்டத்தை ஆயுதமாய் ஏந்திய அரசாங்கத்தால் எவரையுமே ஒரு பயங்கரவாதி என்று விளம்ப முடியும். எனினும் பயங்கரவாதிகள் என்று குற்றஞ்சாட்டப்படுவோர் காந்தி அடிகள் முழங்கிய அகிம்சை வழியில் ஆர்ப்பாட்டம் செய்ய உறுதிபூண்பதே வழக்கம். இந்தியாவில் புதிதாக மாணவர் தலைமையில் சமயச்சார்பின்றி மேலோங்கும் எதிர்ப்பு அகிம்சை வழியில் அமைவது குறிப்பிடத்தக்கது.

### உமார் காலிட்

எடுத்துக்காட்டாக மேற்படி சமயச்சார்பற்ற எதிர்ப் பியக்கம் அமைதிகாத்து ஆர்ப்பாட்டம் செய்ய உறுதிபூண்டதை ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக முஸ்லீம் புலமையாளர் உமார் காலிட் நாவன்மையுடன் எடுத்துரைத்தார்: "அவர்கள் எங்கள்மீது தடியடி நடத்தினால், இந்திய தேசிய மூவண்ணக் கொடியை நாங்கள் உயர்த்திப் பிடிப்போம். அவர்கள் துவக்குச்சூடு நடத்தினால், அரசியல்யாப்பை ஏந்தியபடி கைகளை உயர்த்துவோம்." அன்னார் சட்டவிரோத செயல்கள் (தடுப்புச்) சட்டத்தின்படி "பயங்கரவாதி" என்று குற்றஞ்சாட்டப்பட்டு, கைதுசெய்யப்பட்டு, சிறைவைக்கப்பட்டுள்ளார்!

இந்தியாவில் மேலோங்கும் எதேச்சாதிகாரத்தை திடமாக எதிர்த்துநிற்க வேண்டியுள்ளது. அதேவேளை இன்றைய உலகு தனியாளாட்சி என்னும் கொள்ளைநோயையும் எதிர்கொண்டுள்ளது. ஆதலால் இந்தியாவில் முற்றிலும் வழமைக்கு மாறாக இழைக்கப்படும் இசகுபிசகுகள் ஓரளவுக்கே வழமைக்கு மாறான இசகுபிசகுகளாகத் தென்படுகின்றன!

### கற்பிக்கப்படும் நியாயம்

கொடுங்கோன்மையை நிலைநிறுத்த கற்பிக்கப்படும் நியாயம் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. பிலிப்பைன்சில் போதைமருந்துக் கடத்தலைக் குறைக்க என்றும், அங்கேரியில் குடிவருவோரின் படையெடுப்பைத் தடுக்க என்றும், போலந்தில் ஒரேபாற்சேர்க்கை வாழ்க்கைப் பாங்கினை ஒடுக்க என்றும், பிரேசிலில் படைபலம் கொண்டு ஊழலை ஒழிக்க என்றும் நியாயம் கற்பிக்கப்படுகின்றது. உலகில் சுதந்திரத்தின்மீது எத்தனை தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றனவோ, அத்தனை வழிவகைகள் சுதந்திரத்தைக் காப்பதற்குத் தேவைப்படுகின்றன.

### மார்ட்டின் லூதர் கிங்

*1963ல்* மார்ட்டின் லூதர் கிங் பேர்மிங்காம் மாநகர சிறையிலிருந்து எழுதிய மடலில் "எங்கேனும் இழைக்கப் படும் அநீதி எங்கெங்கும் நீதிக்கு ஆபத்து விளைவிக்கும்" என்று குறிப்பிட்டார். அநீதிக்கு எதிரான இயக்கம் முற்றிலும் அகிம்சை வழியில் இடம்பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இன்றைய இந்தியாவில் இளம் மாணவ இயக்கத் தலைவர்களும் அதையே வலியுறுத்து கிறார்கள். தனியாளாட்சி எவ்வளவு தூரம் துலக்கமாகவும் பரந்துபட்டும் புலப்படுகின்றதோ, அவ்வளவு தூரம் அதை எதிர்த்து நிற்பதற்கான நியாயங்களும் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும்.

Amartya Sen, London Guardian, 2020-10-26, translated by Mani Velupillai, 2020-10-28.

https://www.theguardian.com/commentisfree/2020/oct/26/india-autocracy-nonviolent-protest-resistance.

⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வம் அருளானந்தத்தின் ‘சொற்களில் சுழலும் உலகம்’

டிசே தமிழன்

செல்வம் ஏற்கனவே வெளிவந்த ‘எழுதித்தீராப் பக்கங்களில்’ பிரான்சில் அவர் பெற்ற அனுபவங்களைப் புனைவாக எழுதிப் பார்த்திருக்கின்றார். அதன் ஓர் தொடர்ச்சியாக வந்திருக்கும் ‘சொற்களில் சுழலும் உலகத்தில்’ அவரது எழுத்துகள் மீண்டும் தாயகம் நோக்கித் திரும்புகின்றது. ஒன்றிரண்டு கதைகள் கனடாவைப் பின்புலமாக கொண்டிருந்தாலும் ஏனைய அனைத்தும் இலங்கையின் பின்னணியில் முக்கியமாக போர் முடிந்தபின் நிகழ்கின்ற கதைக்களன்களாக இருக்கின்றது.

செல்வம், இலங்கையில் இனப்படுகொலை *1983* இல் நிகழுமுன்னர் புலம்பெயர்ந்தவர். நமது இயக்கங்களில் அரசியலோடு நேரடியாக அவ்வளவாகத் தொடர்புபடாதவர். எனவே அவர் சொல்லும் கதைகளிலும், நம்மில் பலரைப் பாதிக்கும் நேரடி அரசியலுக்கு வெளியே நின்று, மூன்றாம் நபராக இருந்து நடந்த நிகழ்வுகளை, அதனோடு சம்பந்தப்பட்ட மனிதர்களை, தாயக புலம்பெயர் வேறுபாடுகளைப் பார்க்கின்றார். அதனால் அவர் ஒவ்வொரு கதைகளைச் சொல்லும்போதும் எவர் பக்கமும் அதிகம் சாய்ந்து நிற்காது அவற்றை எழுதிச் செல்ல முடிகின்றது. எல்லா அரசியல் நிலைப்பாடுகளைத் தாண்டியும் மானுட நேசிப்பே முக்கியமானது என்பது ‘சொற்களில் சுழலும் உலகத்தின்’ கதைகளின் அடிநாதமாக இருக்கின்றது.

‘இம்மானுவேல்’ கதையை இதற்குரிய மிகச் சிறந்த உதாரணமாகச் சொல்லமுடியும். பண்டிதர் என்பவர் ஊரில் தமிழ்க் கூட்டணியின் முன்னணிப் பேச்சாளர். பல்கலைக்கழகத்தில் படித்து வேலை செய்த அவரின் மூத்தமகன் பூவரசங்குளத்தில் பஸ்சிலிருந்து இறக்கப்பட்டு இலங்கை இராணுவத்தால் கொல்லப்படுகின்றார். இந்தச் சம்பவத்தின் நீட்சியில் பண்டிதரின் இரண்டாவது மகன் இயக்கத்துக்குப் போகின்றார். அவரும் போரில் கொல்லப்படுகின்றார். பண்டிதரின் மூன்றாவது மகன் இம்மானுவேல் ஒருமாதிரி போரிலிருந்து தப்பி வெளிநாட்டுக்கு வந்துவிடுகின்றார். எனினும் எப்படியேனும் ஈழத்துக்குப் போய் போராடவேண்டும் என்ற ஓர்மத்தோடு இருக்கும் அவரை இயக்கம், போரின் இறுதிக்காலத்தில் தங்களுக்குத் தேவையான பொருட்களை அனுப்ப தென்கிழக்காசியாவுக்கு அனுப்புகின்றது. இம்மானுவேல் அங்கிருக்கும் வறியமனிதர்கள் வாழும் சேரியினூடாக இயக்கத்துக்குத் தேவையான ‘பொருட்களை’ அனுப்பி வைக்கின்றார். அப்படிக் கொண்டுபோகின்றவர்களின் படகு இலங்கை இராணுவத்திடம் அடிவாங்கி, சென்றவர்கள் அனைவரும் கொல்லப்படுகின்றார்கள். இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட ஒரு இளைஞனின் மனைவியின் முகமும், அந்தப் பெண்ணின் குழந்தையின் நினைவும் இவரை விட்டு அகலாதிருக்கின்றது. இம்மானுவேல் மீண்டும் ஐரோப்பாவுக்குத் திரும்பினாலும், தன் பொருட்டு கொல்லப்பட்டவனின் மனைவியினதும் குழந்தையினதும் நினைவுகள் உறுத்த, திரும்ப அவர்களைச் சந்தித்து உதவி செய்யப்போகின்றான். ஆனால் அந்தப் பெண் மறுக்கின்றாள். இவன் அவளைத் திருமணம் செய்து, அவளையும் குழந்தையையும் ஐரோப்பாவுக்குக் கூட்டிவருகின்றான். ஒரு பூனைக்கண் பெண்ணோடும், குழந்தையோடும் திரிகின்றான் என்று நம் புலம்பெயர் சமூகம் இம்மானுவேலின் கதை தெரியாது கேலி செய்கின்றது. அதைப் பொருட்படுத்தாது தான் அந்தப் பெண்ணோடும், அவளின் குழந்தையோடும் மகிழ்வோடு இருக்கின்றேன் என்கின்றான் இம்மானுவேல். இப்படி ஒரு சம்பவத்தை அறியும் இம்மானுவேலின் தந்தையான பண்டிதர், என் மூத்தமகன்கள் செய்த தியாகத்தைவிடவும் இது இன்னும் உன்னதமானது எனச் சொல்வதோடு இம்மானுவேலின் கதை முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் நடந்த போர் தனியே அந்த மக்களை மட்டும் பாதிக்கவில்லை. நம் கண்களுக்கு வெளியே புலப்படாத எத்தனையோ மனிதர்களையும் பாதித்திருக்கின்றது. தனது தாய்மண்ணில் சுதந்திரமாக மக்கள் இருக்கவேண்டும் என்று நினைத்து ஆயுதப்போராட்டத்தை ஆதரிக்கின்ற ஒரு மனதுதான், அதன் பொருட்டு தம் வாழ்வைக் கொடுத்த வேற்றின மக்களையும் அரவணைத்துக் கொள்கின்றது. இவ்வாறு கவனிக்கப்படாத கதைகளின்மீது வெளிச்சத்தைப் படரவிடச் செய்வதைத்தான் அசலான இலக்கியம் செய்யும்.

'நுப்பதும், முப்பத்தேழு டிரக்கும்' கனடாவில் இளைய வயதில் குழப்பபடிக்காரனாக வரும் ஒருவன் எப்படி இந்த நாட்டில் தன்னை நிலைநிறுத்திக் கொள்கின்றான் என்பதைச் சொல்லும் கதையாகும். அவனுக்கு ஒழுங்காய் முப்பது என்பதை உச்சரிக்க முடியாது. எப்போதும் நுப்பது என்றே சொல்வதால் அவனுக்கு நுப்பது என்பதே பட்டப்பெயராக வந்துவிட்டது. கடன் வாங்கி கனடாவுக்கு வரும் நுப்பது எப்படி முப்பத்தேழு டிரக்குகளை வைத்து ஓடும் ஒருவனாக மாறுகின்றான் என இதில் சொல்லப்படுவது சுவாரசியமானது. இவ்வாறே இன்னொரு பதிவான 'சடங்கு'ம் எப்படி புதியதலைமுறைகள் புலம்பெயர் சூழலில் மாறிக்கொண்டிருக்கின்றன என்பதற்கு ஒரு அருமையான உதாரணமாக இருக்கின்றது. சாமத்திய வீட்டை ஒரு பெருநிகழ்வாக நினைக்கும்/கொண்டாடும் ஒரு சமூகத்தில் அதை எடுத்தெறிந்து பேசி தனது 'சடங்காகும்' நிகழ்வைக் கொண்டாட மறுக்கின்ற தெளிவான ஒரு பதின்மப் பெண்ணின் சித்திரத்தை 'சடங்கில்' நாம் காணமுடியும்.

'காளான நிலமகளைக் கைவிட்டுப் போனானை'யும், 'மண் கடனும்' நீண்ட கதைகளாகச் சொல்லப்படுகின்றன. மண் கடன் ஒரு அனுபவப் பதிவாக இருக்கின்றபோதும் அதை ஒரு குறுநாவலாக வைத்துக்கூட வாசிக்கலாம். ஈழம்புலம்பெயர்ந்த தேசம், மீண்டும் இலங்கை என பல்வேறு பின்னணியில் அலைகின்ற கதையாகும். இந்தக் கதையிலும் தன்னைத் தத்தெடுத்த பிரெஞ்சுப் பெற்றோருக்குப் 'திசை தவறிப்போன பிள்ளையாகிப்போனவன்', கடந்தகாலத்தை நினைத்து ஏங்கி ஒருவகையான அறத்தைப் பேசுகின்றான். 'பங்கிராஸ் அண்ணரில்' வரும் பங்கிராஸும், 'பொய்யும் பழங்கதையுமில்' வரும் சண்முகநாதனும் இருவேறு குணங்களுடைய மனிதர்களாக நமக்கு அறிமுகமாகின்றனர். எனினும் அவர்களின் எள்ளல்களோடும், குறைகளோடும் நாம் அவர்களை அறிகின்றபோதும் நேசிக்கத் தொடங்கிவிடுகின்றோம்.

'சொற்களில் சுழலும் உலகம்' அனுபவங்களைப் புனைவாக்கித் தருகின்ற ஒரு தொகுப்பெனச் சொல்லலாம். முன்னர் தி. ஜானகிராமன், இடையில் ஜெயகாந்தன், இப்போது இமையம் போன்றவர்கள் தமது கதைகளைப் பெரும்பாலும் உரையாடல்களாகவே கொண்டு செல்கின்றவர்கள். செல்வம் இவற்றைக் கதைகள் என்று சொல்லாது தமது அனுபவப் பதிவுகள் என்றே கூறுகின்றார். இதிலும் உரையாடல்களே முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தாலும், சிறுகதைகளாகக்கூட வாசிக்கலாம். முக்கியமாக இம்மானுவேல், பங்கிராஸ் அண்ணர், மண் கடன் என்பவை அனுபவப் பதிவுகளிலிருந்து கதைகளாகத் தனித்துப் பரிணாமித்து நிற்கின்றன.

எழுதி தீராப் பக்கங்கள்', 'சொற்களில் சுழலும் உலகம்' என்பவை தனிப்பட்ட அனுபவப் பதிவுகளாக இருந்தாலும் இவற்றை வேறு இலக்கிய வகைமாதிரிகளிலும் வைத்து வாசிக்க முடியுமளவுக்கு செல்வம் எழுதியிருப்பதுதான் கவனத்தில் கொள்ளவேண்டியதாகும். அவரினி இதன் தொடர்ச்சியாக சிறுகதைகளையும், குறுநாவல்களையும் எழுதிப்பார்க்கலாம். கதை சொல்லும் முறை அருமையாக கைவரப்பெற்ற அவருக்கு இவை ஒரு கடினமான விடயமாக இருக்கப்போவதுமில்லை.

***


அன்பு நண்பர்களுக்கு வணக்கம்.

ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளிலிருந்தும் நூலகத்திற்கு நிதியுதவி வழங்க, கீழே உள்ள இணைப்பினைப் பயன்படுத்தலாம்.

மாதாமாதம் ஒரு குறித்த தொகைப்பணத்தினை, குறித்த நாளில் வழங்க Standing Order set-up பண்ணலாம். Euros, British Pounds, Canadian Dollars, US Dollars, Singapore Dollars எனத் தெரிவுசெய்து பயன்படுத்தலாம்.

பணம் எமது Noolaham UK Accountஐ வந்தடையும். தயவுசெய்து விரைவில் இதன்வழி நூலகத்திற்குப் பங்களிப்புச் செய்யுங்கள்.

மேலும், உங்கள் நண்பர் வட்டத்திலும் இதனை அறிமுகப்படுத்தி, நூலகத்திற்குப் பங்களிப்புச் செய்யும்படி கோருங்கள்.

பங்களிப்புச் செய்பவரது பெயர், email விபரங்கள் எம்மை வந்தடையும். உடன் மின்னஞ்சல் அனுப்புவோம்.

https://donorbox.o rg/noolaham- foundation

அன்புடன்

பத்மநாப ஐயர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தோசம்

**மயூ மனோ**

அவள் அவனை காரில் ஏற்றிக் கொள்வதற்குப் போன போது வெளியில் மழை தூறிக் கொண்டிருந்தது. லேசான இளவேனில் மழை. அவன் வீட்டு வாசல்படிகள் தொடங்கும் இடத்தில் குந்தியிருந்தான். கைகளின் ஒரு பொலித்தீன் பையுக்குள் ஒன்றிரண்டு உடுப்புகளும் போத்தில்களும் இருந்தன. மறு கையில் போன் இருந்தது. இவளது கார் டிரைவ் வேயில் வந்தும் அவன் எழும்பி வரவில்லை. இன்னொருவர் வந்து அவனுக்கு உபெர் (Uber) வந்துவிட்டதாய் சொன்ன பின் அவன் காரை நோக்கி வந்தான்.

“நீங்கள் தான் கிறிஸ் பார்க்கர்?” அவள் வழமை போல கேட்டாள்.

“இல்லை, நான் ஜெரோனி”

“ஓ”

அவன் பின் கார் கதவைத் திறந்து ஏறி அமர்ந்து கொண்டான். அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவள் திரும்பி அவனிடம் பேச முயன்ற போது மற்றவன் இவளின் பக்கமாக வந்தான்.

“நான் கிறிஸ், இவர் என் நண்பன் ஜெரோனி. இவருக்காக நான் தான் உபேர் அழைத்தேன். நான் வரவில்லை”

“சரி, அப்படியானால் நான் விடைபெறுகிறேன்” இவள் பொதுப் படையாக சொல்லி விட்டு திரும்பி ஜெரோனியைப் பார்த்துப் புன்னகைத்தாள். ஜெரோனி நாற்பதுகளின் ஆரம்பத்தில் இருக்கலாம் என்று தோன்றியது. நல்ல உயரமாக உடற்கட்டுடன் இருந்தான். பேச விருப்பப்படுபவனாக தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் காரில் ஏறும்போது அவனுடன் ஏறிய சிகரெட்டும் மழையும் கலந்த மணம் இவளுக்கு ஒத்துவருமாய் போல் இல்லை. அவனும் பதிலுக்குப் புன்னகைத்தான். இவளுடைய போனில் இன்னும் போக இருக்கும் தூரம் அறுபத்தாறு கிலோமீற்றர்களாக இருந்தது. இன்னும் கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் இந்த மனிதனுடன் பயணிக்கவேண்டும். இவளுக்கு யோசனையாக இருந்தது. இந்த உபேர் அழைப்பை அவள் ஏற்றுக் கொள்ளும்போது அவளுக்குத் தோன்றியதெல்லாம் ஒன்று தான், இதை முடித்தால் இன்றைய நாளின் இலக்காக நூறு டொலர்கள் வந்துவிடும். நேரத்துடன் வீட்டுக்குப் போகலாம், போகும் போது மகனுக்கு மக் டொனல்ட்ஸ் சிக்கின் நக்கெட்ஸ் வாங்கிப் போனால் இரவு சாப்பாடு பற்றிக் கவலைப் படத்தேவையில்லை என்பது மட்டும் தான். இப்போது இந்த மனிதனுடன் தூறும் மழையில் ஒரு மணித்தியாலம் பயணம் என்னும் போது அவளுக்கு என்ன நினைப்பதென்று தெரியவில்லை. இறக்கி விட்டுப் போனாலும் கஸ்டமர் சர்வீஸில் முறைப்பாடு செய்துவிடுவார்கள். அது வேறு சிரமமாக இருக்கும். வருவது வரட்டும் என்று தோன்றியது அவளுக்கு. காரை மித வேகத்தில் ஓட்டி நெடுஞ்சாலையில் ஏற்றினாள்.

நெடுஞ்சாலை அவ்வளவு இறுக்கமாக இல்லை. கோரோனாவின் விதிகள் மக்களை கட்டிப்போட்டிருந்தன. இவள் சற்று வேகமாகவே ஓட்டிக் கொண்டிருந்தாள்.

“உங்களுக்கு ரேடியோ வைக்கட்டுமா? எந்த சேனல்?”

“தேவையில்லை, நான் கேட்பதில்லை.”

“ஓகே.”

அந்தக் காரின் அளவு சிறுத்துக் கொண்டு வருவது போல இருந்தது. மழைத் துளிகள் விழும் சத்தமும், வைப்பரின் சர சரவும் தவிர காருக்குள் வேறு ஓசைகளும் இல்லை. அவனின் மூச்சு சற்று பலமாக வந்து கொண்டிருந்தது. இவளுக்கு அந்த அமைதியின் அடர்த்தியைத் தாங்க முடியாது போல தோன்றியது.

“ஜெரோனி, நீங்கள் இப்போது போகும் இடத்தில் தான் இருக்கிறீர்களா?”

“யா, ஒருவருடம் ஆகிறது. இங்கு என் அம்மா இறந்துவிட்டார், அதனால்தான் வந்தேன்.”

“ஓ, ஐ ஆம் சாரி”

“பரவாயில்லை, அவர் முதியோர் இல்லத்தில் இருந்தார். கொரோனா என்று சொன்னார்கள். அவரைப் பார்க்கக் கூடவில்லை. எல்லாம் முடிந்து விட்டது.”

“மிகவும் கடினமான காலம் தான்.”

“நான் இதை எதிர்பார்க்கவில்லை. அவரை இந்த மாதம் முழுதும் சந்திக்கவில்லை. ஒன்றிரண்டு தடவைகள் வீடியோ காலில் பார்த்தது தான். அவர் சந்தோசமான வாழ்க்கையை வாழ்ந்தார். அதனால் என் மனதுக்கு சமாதானமாக இருக்கிறது. அவரது இறுதிக் கிரியையை நான் எங்களது இடத்தில் செய்யவேண்டும் என்று விரும்பினேன். இப்படியாகிவிட்டது.”

“எது உங்களது சொந்த இடம்?”

“ஹா ஹா, கனடா முழுவதும் எங்களது சொந்த இடந்தான். ஆனால் நாங்கள் அந்த வாழ்க்கையை இழந்துவிட்டோம். நான் இந்த நாட்டின் பூர்வீகக் குடியை சேர்ந்தவன், மனிடோபா மாநிலந்தான் எங்களது பிறந்த இடம். இப்போது இங்கு வந்துவிட்டோம்“

“ஓ,” இவளுக்கு இப்போது என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவனைக் காயப்படுத்திவிட்டோமோ என்று தோன்றியது. “எனக்குத் தெரியவில்லை, சொந்த இடத்தைத் தொலைத்த வலியை நானும் அறிவேன். உன் நிலையை நான் உணர்ந்து கொள்கிறேன்”

“இட்ஸ் ஓகே. எனக்குப் பழகிவிட்டது. நீ எந்த நாட்டைச் சேர்ந்தவள்? இந்தியாவா?”

“இல்லை, ஸ்ரீ லங்கா”

“எனக்கு இந்தியாவை சேர்ந்த காதலி ஒருத்தி இருந்தாள். அவளும் உன் சாயல் தான். அதனால் தான் கேட்டேன்”

“இட்ஸ் ஓகே”

“அவளது பெயர் சிவாங்கி, அவள் ஒரு நர்ஸ். அவளை நான் மெடிக்கல் கேம்ப் ஒன்றில் சந்தித்தேன். இருபது வருடங்கள் இருக்கும். அவள் மனிடோபா வந்திருந்தாள். அவளை மறக்கவில்லை நான்”

“இப்போதும் தொடர்பில் இருக்கிறீர்களா?”

“இல்லை, அவள் எங்கிருக்கிறாள் என்று தெரியவில்லை. ஐந்து வருடங்கள் அவளுடன் உறவில் இருந்தேன். பிறகு என்னால் முடியவில்லை.”

“நல்லது.”

“நீ இந்துவா? சிவு ஒரு இந்து. அவளுக்கு கடவுள் நம்பிக்கை அதிகம். அவள் குடும்பத்துக்கு மிகவும் பயந்தவளாக இருந்தாள். என்னால் அதை எதிர்க்கவும் முடியவில்லை, ஒத்துக் கொள்ளவும் முடியவில்லை. அதனால் நான் விலக வேண்டியதாகப் போனது.”

“புரியவில்லை”

“ம்ம், அவளால் சேர்ந்து வாழ வர முடியவில்லை. அவளது குடும்பம் என்னை வெறுத்தது. இருந்தும் அவள் திருமணத்தை வலியுறுத்தினாள். திருமணம் செய்தால் மட்டும் தான் அவளுடன் வாழ முடியும் என்று சொன்னாள். என்னை மனிடோபாவில் இருந்து ஒண்டாரியோ வர சொல்லி வற்புறுத்தினாள்.”

“நீங்கள் திருமணம் செய்ய விரும்பவில்லையா?”

“ம்ம், எனக்கு அப்போது இருபத்தைந்து வயதளவு தான் இருக்கும். எனக்கும் நிறைய பொறுப்புகள் இருந்தன. நான் இந்த உலகத்தை சுற்றிப் பார்க்க ஆசைப்பட்டேன். சேர்ந்து வாழ்வதற்கே திருமணம் என்பது எனக்குப் புதிதாக இருந்தது. எல்லாம் அவள் கர்ப்பமானதுடன் முடிந்து போனது.”

“ஓ, குழந்தை என்னவானது?”

“அதை அவர்கள் குடும்பத்தினர் கலைத்து விட்டனர்.”

அவன் மௌனமானான். அவன் முகத்தில் ஒருவித இறுக்கம் பரவியது இவளுக்கு கண்ணாடியில் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> என் முதல் காதல் தொலை தூரத்தில் இருந்தது. அவனால் இந்த தொலை தூரக் காதலை சமாளிக்க முடியவில்லை. இன்னொரு பெண்ணைத் தேடிப் போய்விட்டான்.

இருபது வருடங்களுக்கு முதல் கலைந்து போன குழந்தையின் சாயலை மனது யோசித்தது. இவளது மகன் போல இருக்கலாம். கொஞ்சம் கூட வெள்ளையாக இருந்திருக்கும்.

"அவள் என்னை மிகவும் விரும்பினாள். வீட்டை விட்டு வர அவளுக்கு முடியவில்லை. அவளது அறை யன்னல் ஏறித்தான் அவளை சந்திக்க வேண்டும். அப்போதெல்லாம் வீட்டில் தான் தொலைபேசி இருக்கும். நான் அவளது அறை பக்க தெருவில் காத்திருப்பேன். என்னை அவள் கண்டதும் சுவரேறி அவளறைக்குள் செல்வேன். பிறகு அப்படியே இறங்கி வீட்டுக்குப் போவேன். நான் அவளைத் தொலைத்துவிட்டேன் "

"நல்ல காதல் கதை தான் வைத்திருக்கிறீர்கள்" இவளுக்கு என்னவோ போலிருந்தது. யார்தான் காதலைத் தொலைக்கவில்லை. எல்லோரும்தான் தொலைக்கிறார்கள். தொலைத்தது தெரியாமலே தொலைக்கிறார்கள்.

"நீ காதலித்திருக்கிறாயா?"

"ஆம்,"

"அவனையே மணந்து கொண்டாயா?"

"என் முதற் காதலை மணக்கவில்லை"

"ஓ, உன்னை இரண்டு மூன்று தடவைகள் காதலிக்க அனுமதிக்கிறார்களா என்ன? காலம் மாறிவிட்டது தான்." அவனுக்கு அது ஆச்சரியமாக இருந்தது இவளுக்கு கோபம் வந்தது.

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?"

"சிவு திருமணம் செய்திருப்பாளா என்று நான் யோசித்திருக்கிறேன். அதனால் தான் கேட்டேன். நீயும் திருமணம் செய்த பிறகா சேர்ந்து வாழத் தொடங்கினாய்?"

"அப்படித்தான் விதிகள் எழுதப்பட்டிருக்கிறது, உங்கள் சிவு போல என்னால் என் காதலனை அறைக்குள் யன்னல் வழியாகக் கொண்டுவர முடியவில்லை."

அவன் புன்னகைக்கும் போது இன்னும் இளமையாகத் தெரிந்தான்.

"என் சிவு" அவன் திரும்ப சொல்லிக் கொண்டான். "உனக்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் நீ அதை செய்திருப்பாயா?"

"இல்லை என்று பொய் சொல்ல மாட்டேன். அது மட்டுமில்லை, என் முதல் காதல் தொலை தூரத்தில் இருந்தது. அவனால் இந்த தொலை தூரக் காதலை சமாளிக்க முடியவில்லை. இன்னொரு பெண்ணைத் தேடிப் போய்விட்டான்"

"நீ திருமணம் செய்து கொண்டதற்காக வருத்தப் பட்டிருக்கிறாயா?"

"அப்படியில்லை, கொஞ்சம் சேர்ந்து பழகி அதன் பிறகு குடும்பம் என்று ஆரம்பித்திருந்தால் நல்லது என்று தோன்றி இருக்கிறது."

"அதை இப்போது உணர்கிறாயா?"

"அப்படி யார் தான் உணரவில்லை என்கிறீர்கள்? எனக்குத் தெரிந்து அதிகமானவர்கள் அப்படித்தான் உணர்கிறார்கள். யாரேனும் இல்லை நான் ஒரு போதும் மண வாழ்க்கை சலித்ததாய் காணவில்லை என்று சொன்னால் அதை நான் பொய் என்பேன்."

அவளுக்கு இந்த வாழ்க்கை பிடிக்கவில்லையென்று அவனுக்கு சொல்லவேண்டும் என்று தோன்றியது. அவன் தன்னை மதிக்க மாட்டானோ என்று சந்தேகம் வந்தது. அவளுக்கு தன் வாழ்வில் ஆணின் தேவை குறைந்து கொண்டே வருவது போல இருந்தது. அப்படி இருப்பதை மறைத்துக் கொண்டு திரியப் பழகி இருந்தாள். திருமணம் செய்தது தப்போ என்றுகூட அவள் யோசித்திருக்கிறாள். அவளுக்கு அப்போது தேவைப்பட்ட ஆண் துணையை அவளால் சாதாரணமாக அடைய நேர்ந்திருந்தால் அவள் திருமணம் செய்திருப்பாளா என்று தோன்றியது. அவன் தனக்குள் துளைத்து மனதில் கேள்விகளை உருவாக்குவதை அவள் விரும்பவில்லை. அந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல அவளுக்கு பிடிக்கவில்லை.

"எனக்கு உன்னை பிடித்திருக்கிறது, நீ இயல்பாக பேசுகிறாய். நீ என்னை மதிப்பிட முயற்சிக்கவில்லை" அவன் புன்னகை மாறாமல் பதில் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நீங்கள் இப்போது யாருடன் இருக்கிறீர்கள்?”

“என் வாழ்க்கை முழுவதும் நான் திருமணம் செய்து கொள்ளவேயில்லை. இப்போது எனது தோழியுடன் ட்ரைலர் ஒன்றில் வசிக்கிறேன். எனது வீடு, வாகனங்கள் எல்லாவற்றையும் விற்று விட்டேன். ஒரு சின்ன டிரக் வைத்திருக்கிறேன். நினைத்தவுடன் அதில் என் ட்ரெய்லரை கொழுவிக் கொண்டு பயணப்படுவேன். உனக்குத் தெரியுமா, என் வாழ்க்கையில் குறைந்தது இருபது பெண்களை சந்தித்திருக்கிறேன். ஒவொரு பெண்களும் ஒவ்வொரு நாட்டை சேர்ந்தவர்கள். நான் யாரையும் ஏமாற்றவில்லை. என்னைப் பற்றி சொல்லித்தான் பழகி இருக்கிறேன். அவர்களுடன் பழகிய நாட்கள் செக்ஸ் என்பது தாண்டி நாங்கள் மகிழ்வாகவே இருந்தோம். பிரியும் போதும் அப்படியே, அனைத்து கலாச்சாரங்களையும் நான் மதிக்கிறேன். என் மனத்துக்குப் பிடித்த சிலவற்றைப் பின்பற்றுகிறேன். இப்படி உன்னால் ஒத்துக்கொள்ள முடியுமா?”

“என் வாழ்க்கை ஒரு காதல் தோல்வியிலும் மற்ற காதல் திருமணத்திலும் முடிந்ததையொட்டி நான் கவலைப் படவில்லை. ஏனென்றால் கவலைப்பட அவகாசம் கிடைக்கவில்லை. நான் ஓடிக்கொண்டேயிருக்கிறேன். எனக்கு காதல் அன்பு செக்ஸ் என்பது தாண்டிய வாழ்க்கை தேவைப்படுகிறது. நான் நாடோடியாகவே இருக்க ஆசைப்படுகிறேன். என் கவலையெல்லாம் ஏன் நான் நாடோடியாக இருக்க முடியாதிருக்கிறதென்பது தானேயல்லாது இருபது நாட்டு ஆண்களுடன் வாழ முடியாமல் போனதில்லை”

“உன் ஆசைகளை நீதான் நிறைவேற்ற வேண்டும், மற்றவர்கள் அல்ல. நீ எப்படி உபேர் ஓடுகிறாய்? நான் உபேர் எடுப்பதில்லை. ஆனால் நான் நினைக்கிறேன் பெண்கள் இந்த வேலை செய்ய விருப்பப் படுவதில்லை.”

“என் கணவரது வேலை கொரோனாவால் நின்று போனது. அரசாங்கம் தரும் பணம் போதுமாக இல்லை. என்னால் வேறு வேலை இப்போது தேட முடியாது. அதனால் நான் உபேர் ஓடுகிறேன். மற்ற நேரங்களில் சாப்பாடு டெலிவெரி செய்கிறேன்” இவளுக்கு கண் கலங்கியது. குடும்பத்தின் சுமை அவள் தோள்களில் அப்படி அழுத்தியது. இன்னும் என்னென்ன வரப்போகிறதோ தெரியவில்லை.

“ஓ, உன்னை நினைத்து நான் வருத்தப்படுகிறேன். உன்னால் முடிந்தால் இப்போது என்ன செய்ய விரும்புகிறாய்?”

“என் மகனுடைய உரிமைகள் பாதிக்கப்படாத ஒரு வாழ்க்கையை அவனுக்கு கொடுக்க வேண்டும். அதை முன்னிறுத்தி எதுவும் செய்வேன்”

“ஓ” ஒற்றை சொல்லோடு அவன் மௌனமானான்.

இவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. பேசவே மாட்டான் போல இருந்த அவனது கேள்விகள் அவளுக்குள் இறங்கி வேலை செய்யத் தொடங்கின. அவளால் முடிந்திருந்தால் எத்தனையோ செய்திருப்பாள். ஏன் முடியவில்லை என்று தான் தெரியவில்லை. தெரிந்துகொள்ளவும் அவள் முயற்சிக்கவில்லை. அவளுக்கான கோடுகளை யார் யாரோ

கார் நெடுஞ்சாலைகளில் இருந்து இறங்கி சாதாரண வீதிகள் தாண்டி இரு பக்கமும் வயல்கள் சூழ்ந்த குறுந்தெருக்களுக்குள் நுழைந்தது. குதிரைகளும் மாடுகளும் மேய்ந்து கொண்டு நின்றன. இவளுக்கு ஊர் நினைவு வந்தது. எப்போதிருந்து தான் இப்படி விலங்குகளைக் காண முடியும்.

போட்டுக் கொடுத்தார்கள். அவளது வேலை அதில் பிசகாமல் நடப்பது மட்டுமாகத் தானிருந்தது. அவள் அதில் சிறந்திருந்தாள்.

கார் நெடுஞ்சாலைகளில் இருந்து இறங்கி சாதாரண வீதிகள் தாண்டி இரு பக்கமும் வயல்கள் சூழ்ந்த குறுந் தெருக்களுக்குள் நுழைந்தது. குதிரைகளும் மாடுகளும் மேய்ந்து கொண்டு நின்றன. இவளுக்கு ஊர் நினைவு வந்தது. எப்போதிருந்து தான் இப்படி விலங்குகளைக் காண முடியும். அவள் அமைதியாகப் பார்த்துக் கொண்டு வந்தாள். மனம் கொஞ்சம் யோசனையில் இருந்தது. அவனுந்தான். அவள் மௌனம் அவனைக் காயப்படுத்தியிருக்கலாம்; இல்லை அவனும் சிவுவை யோசித்திருக்கலாம். அப்படியே கண்களும்.

“நீ சந்தோசமாகவிருக்கிறாயா?”

“என்ன?” அவளுக்கு அப்படி ஒரு கேள்வி இருக்கிறதா என்று தெரியாதது போலத் தோன்றியது. அந்தக் கேள்வி எந்த மொழியிலும் கேட்கப்பட்டாலும் அதற்கு என்ன பதில் சொல்வதென்று அவளுக்கு தெரிந்திருக்கவில்லை. அவளிடம் யாரும் அந்தக் கேள்வியைக் கேட்டதுமில்லை. சந்தோசம் எப்படியிருக்கும் என்பது அவளுக்கு மறந்துவிட்டது போலத் தோன்றியது. அவளுக்கு சடுதியாக அவனது அம்மாவின் சாவு நினைவுக்கு வந்தது. இந்த மரணம் எப்படியிருக்கும்? எந்த வகையான ஆறுதலை அது தரக்கூடும். திரும்பி அந்த விலங்குகளைப் பார்த்தாள். மழை பெலுக்குமாய்ப் போல இருந்தது. அவை தங்கள் குடிலுக்குள் புகுந்து கொண்டிருந்தன. அவள் அவனை இறக்கிவிட்டு இன்னும் ஒரு மணித்தியாலத்தில் செய்யப் போவதைப் போல. இந்த ஆயுளைக் கடந்தே ஆகவேண்டுமென்ற தீவிரம் அவளுக்குள் பொங்கி வழிந்தது. அவள் காரை நிறுத்திவிட்டு மழைக்குள் ஓடத் தொடங்கினாள்.

⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேக்காளி

சாம்ராஜ்

மானேஜர் வேணுகோபால் சார்லஸின் ரிப்போர்ட்டை துருவிப் பார்த்து தூக்கி போட்டார். சார்லஸ் பிரபல வாரப்பத்திரிக்கை செம்பருத்தியில் விற்பனை பிரதிநிதி. ஒவ்வொரு மாதத்தின் இறுதி சனிக்கிழமையில் ஏரியா மானேஜர் வேணுகோபாலிடம் சேல்ஸ் ரிப்போர்ட்டையும் டிராவல் பில்லையும் கொடுக்க வேண்டும்.

"என்னய்யா டிராவல் பில்லுக்கு பாதிக்குமேல டிக்கெட்ட காணோம்". ஒரு கணம் யோசித்த சார்லஸ் "டிக்கெட்ட பூரா பின் பண்ணி வச்சிருந்தேன். அத வீட்ல வச்சிட்டு வந்துட்டேன் போய் எடுத்துட்டு வந்தர்றேன் சார்" என்று வெளியேறியவன், அவன் வீட்டிற்கு நேர் எதிர்திசையில் இருக்கும் மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்டில் வந்து நின்றான்.

பஸ் ஸடாண்டில் பஸ்சிலிருந்து இறங்கும் ஆட்களை பார்த்த வண்ணம் நின்றிருந்தான். பஸ்கள் உள்ளே நுழைவதும் வெளியேறுவதுமாய் இருந்தன. டீக்கடையில் இருந்து கிளாஸ்கள் கழுவிய தண்ணீரை கடைக்காரப் பையன் நடு பஸ் ஸ்டாண்டில் கொண்டு வந்து ஊற்றினான். அந்தத் தண்ணீர் மெல்ல ஊர்ந்து ஜூஸ் கடைக்காரர் கொட்டியிருக்கும் ஆரஞ்சு தோல்களை நலம் விசாரித்தது.

கடைகளில் குவித்து வைக்கப்பட்ட மிச்சர் காராச்சேவு மலைகள், பூரி குன்றுகள், சாயங்கால புரோட்டா கடையின் தோசைக்கல்லின் மீது உறங்கும் நாய், சிஎஃப்சி பல்புகளுக்குக் கீழே அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் சிடிக்கள். ஸ்பீக்கரில் இரண்டு நிமிடங்களுக்கு ஒரு முறை மாறும் பாடல்கள் என மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்ட் ரகளையாய் இருந்தது. பெரும்பாலான கடைகளிலிருந்து சிறிய சாக்கடை ஓடைகள் புறப்பட்டு பஸ் டயர் அருகே வந்து தயங்கி நின்றன.

விருது நகர், சாத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில் என எழுதியிருக்கும் பெயர்ப் பலகையை பார்த்த வண்ணம் அலட்சியத்துடன் சார்லஸ் நின்றுகொண்டிருந்தான். மூன்று மணிக்கெல்லாம் ஏரியா மானேஜர் வேணுகோபாலிடம் அந்த மாதத்திற்கான மாதாந்திர சேல்ஸ் ரிப்போர்ட்டையும் கொடுத்து விட்டு புறப்படும் திட்டத்தில் இருந்தான்.

சங்கரபாண்டி கறாராக சொல்லியிருந்தான் " நாலு மணிக்கெல்லாம் மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்டுக்கு வந்து சேர்ந்துரனும். நாலரைக்கு புறப்பட்டா காரைக்குடி போக ஏழு மணி ஆகும், அங்க மண்டபத்துக்கு பக்கத்துல கிருபா எங்கயோ ரூம் போட்ருக்கானாம் நம்ம ஒரு எட்டு எட்டரைக்கு சரக்கு போட தொடங்கிரனும். முக்கியமான விசயம் டவாலி சுந்தரும் பாலமுருகனும் கூப்பிட்டா யாரும் போன எடுத்துறாதீங்க அவங்கிளுக்கு மட்டும் தெரிஞ்சிச்சு அப்றம் அவ்ளோதான். சார்லஸ் கல்யானத்துல என்ன நடந்துச்சுனு ஞாபகம் இருக்குல்ல?"

சார்லஸ் மொபைலில் மௌன ராகம் பி ஜி எம் ஒலித்தது. கோர்ட் ஏஜெண்ட் என எழுத்து தோன்றியது. ரோஸ்லி அடிக்கடி கேட்பாள் " உங்களுக்கு அடிக்கடி இந்த கோர்ட் ஏஜெண்ட் நம்பர்லருந்து கால் வருதே" ஆமா அவர் முக்கியமான ஏஜெண்ட்' என்பான் அவள் முகத்தை பார்க்காமல்.

டவாலி சுந்தர், பாலமுருகன் இரண்டு பேரையும் கல்யாணத்தன்றே ரோஸ்லியின் மொத்த குடும்பத்திற்கும் பிடிக்காமல் போனது. கல்யாணத்தன்றே டவாலி சுந்தர் நம்பரை கோர்ட் ஏஜெண்ட் என மாற்றி விட்டான்... '

மற்றவர்கள் என்ன சொன்னாலும் சார்லஸுக்கு டவாலி சுந்தரையும் பாலமுருகனையும் பிடிக்கும்.

டவாலி சுந்தரும், பாலமுருகனும் இவர்களோடு ஜவகர் வித்யா சாலையில் ஆறாவதில் இருந்து ஒன்றாகப் படித்தவர்கள். சார்லஸ்,சுரேஷ், சங்கரபாண்டி, டவாலி சுந்தர், பால முருகன், காமேஷ், பாருக் என ஒரே செட்டாய் அலைவார்கள். பன்னிரண்டாவதுக்கு மேல் சுரேஷ், சங்கரபாண்டி கல்லூரிக்கு போக, காமேஷ், சார்லஸ் பால்டெக்னிக் போனார்கள். சுந்தரின் அப்பா இறந்து போக அவரின் டவாலி உத்யோகம் சுந்தருக்குக் கிடைத்தது. சுந்தரும் பாலமுருகனும் சென்ட்ரல் மார்க்கெட் அருகே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எப்பொழுதும் திரிவார்கள். மார்க்கெட் பழக்கவழக்கம், சுந்தரை ஜட்ஜ் வீட்டிலிருந்து ஒரு வெள்ளி டம்ளரை திருட வைக்க ஜட்ஜ் சுந்தரை வேலையிலிருந்து போக வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்தார். பேர் மாத்திரம் டவாலி சுந்தராய் நிலைக்க. அவனும், பாலமுருகனுமாய் மார்க்கெட் டீமோடு சேர்ந்து அடிதடி, திருட்டு, கொலைமுயற்சி என வளர்ந்துகொண்டிருந்தார்கள். டவாலி சுந்தருக்கும், பாலமுருகனுக்கும் சார்லஸ், சங்கரபாண்டி குரூப்போடு சேர்ந்து குடிப்பதில் பெரிய சந்தோசம்.

ஒவ்வொரு முறையும் டவாலி சுந்தரும், பால முருகனும் ஏதாவது ஒரு வம்பை இழுத்து விடுவார்கள். லோக்கல் போலீசின் பரிச்சயமும், ரவுடிகளின் சங்கிலித் தொடர்பும் அவர்களை பயமில்லாதவர்களாக்கியது. சார்லஸ் குருப் அவர்களோடு போய் மயிரிழையில் பிரச்சனையிலிருந்து தப்பினார்கள். சங்கரபாண்டி தீர்மானமாய் சொல்லியிருந்தான். “அவிங்கள இனிமேல் சேர்க்க வேணாம்”

சார்லஸ் தன் கல்யாணத்திற்கு பத்திரிக்கை கொடுக்கத் துவங்கும் பொழுதே சங்கர பாண்டி அவனிடம் கேட்டான் ‘டே அவய்ங்க ரெண்டு பேருக்கும் கொடுக்க போறியா’

‘ஆமா கொடுக்க போறேன். அவய்ங்க இல்லாம என்ன கல்யாணம்?’

‘சரி பார்த்துக்கப்பா. உன் இஷ்டம். எங்கயாவது வைச்சு சரக்க வாங்கிக் கொடுத்து கணக்க முடிப்பியா? அத விட்டுட்டு. அவங்ய்க வந்தா பிரச்சனைதான்’

சார்லஸ் பதிலொன்றும் சொல்லவில்லை. இந்த குழுவிற்குள் சார்லஸ் சுந்தர், பாலமுருகன் கூடுதல் நெருக்கம்.சேட்டைகள்தான் மூவரையும் கூடுதலாக நெருக்கமாக்கின. குடித்துவிட்டு மூவரும் ஒரே வண்டியில் ஏறிக் கொண்டு தெரிந்த நண்பர்கள் வீட்டுக்கு முன் போய் நடு இரவில் அவர்கள் பெயரைச் சொல்லி கூப்பிடுவது இவர்களின் வழமை. நண்பனின் வீட்டில் விளக்கு எரிந்ததும் அங்கிருந்து புறப்பட்டுவிடுவார்கள். விளக்கு எரியும்வரை கூப்பிட்டுக் கொண்டேயிருப்பார்கள். சமயங்களில் பக்கத்துவீட்டுக் காரர்கள் எழுந்து “ஏம்பா இப்படி சத்தம் போடுறீங்க” என்று கேட்டால் கூப்பிடும் நண்பனின் பெயரைச் சொல்லி “அவங்க பெரியப்பா செத்துப் போயிட்டாருங்க அதச் சொல்லத்தாங்க வந்தோம்” என்பார்கள். முனிஸ்வரன் வீட்டில் ரொம்ப நேரம் கூப்பிட்டு பக்கத்துவீட்டில் ஆட்கள் வந்து கேட்கையில் உள்ளேயிருந்து முனிஸ்வரனின் குரல் கதறலாய் வந்தது “எனக்கு அப்படி ஒரு பெரியப்பாவே இல்ல” தப்பித்தவறி எவனாவது வெளியே வந்து மாட்டிவிட்டால் அவனையும் கூட்டிக் கொண்டு அடுத்த வீட்டிற்கு போவார்கள். விடியும் வரை இப்படி அலைவார்கள். சங்கரபாண்டி முடிந்தவரை விசேசங்களில் சுந்தரையும், பாலமுருகனையும் தவிர்க்கவே பார்ப்பான்.

சார்லஸ் கல்யாணத்திற்கு முதல் நாள் இரவே இருவரும் மண்டபத்திற்கு வந்துவிட்டார்கள். கல்யாணம் வாடிப்பட்டியிலிருந்து அலங்க நல்லூர் போகும் பாதையில் சக்கம்பட்டி விளக்கில் ரோஸ்லின் அப்பா தேவசகாயம் புதிதாக சேர்ந்திருந்த தேவன் நம்மோடு இருக்கிறார் சபையின் சர்ச்சும், கல்யாண மண்டபமும் இருந்தது. மண்டபத்தின் முகப்பில் பெரிய எழுத்துக்களில் “இயேசுவே உண்மையானவர், நித்தியமானவர் என்று சிகப்பு நிறத்தில் எழுதப்பட்டிருந்தது. காலையும், மாலையும் அங்கு வந்து விட்டு ஃபாதர் மதுரைக்கு திரும்பி விடுவார். ஞாயிறு மாத்திரம் முழு நாளும் இருப்பார்.

வேனிலிருந்து இறங்கியவுடன் சுந்தர் சார்லஸை கூப்பிட்டு சத்தமாக மேலேயிருக்கும் எழுத்துக்களைக் காட்டி ”ஏன்டா இயேசு மட்டும்தான் சத்தியமானவரா? நாங்கலாம் இல்லையாடா ? நாங்களாம் போலீஸ்ட்ட மாட்டினா சத்தியம் மட்டும் தான் பேசுவோம். என்னடா பாலா?” என்று பாலமுருகனை பார்த்துக் கேட்க அவன் ஆமாம் என்று தலையாட்ட பக்கத்தில் நின்ற ரோஸ்லியின் மொத்த குடும்பமும் இந்தப் பேச்சை வெறுப்போடு கேட்டது. ரோஸ்லியின் தந்தை தேவசகாயம், சார்லஸ் தாய்மாமா அம்புரோஸிடம் சுந்தரையும், பாலமுருகனையும் காட்டி யாரென விசாரித்தார்.

சார்லஸ் அதே ஊரில் இருக்கும் தன் அத்தை பிரிசிலா வீட்டில் இரவு தங்கிவிட்டு காலை சர்ச்சுக்கு வருவதாய் திட்டம். சார்லஸ் போகும் போது சங்கரபாண்டியிடம் சொல்லிவிட்டு போனான். “ரெண்டு பேரையும் பாத்துக்கடா என்று சொல்ல “ நான் என்னத்த அவிங்கள பாக்க அவிங்க என்ன பாத்துக்கிட்டா சரி” பாருக்கை கூப்பிட்டுக் கொண்டு சுந்தரும், பாலமுருகனும் சார்லஸ்க்காக கொடுத்திருந்த ஃப்ளக்ஸ் போர்டை வாங்க புறப்பட்டார்கள்.

சங்கரபாண்டி, காமேஷ், கிருபா நான்காவது ரவுண்டில் இருக்கும் போது அறைக் கதவை யாரோ தொம் தொம் என்று தட்டினார்கள். சுந்தர், பாலமுருகன், பாருக் மூவரும் நல்ல போதையில் வெளியே நின்றார்கள். சார்லஸூம், ரோஸ்லியும் நிற்கும் பேனரை சர்ச்சின் கூம்பில் கட்டியிருந்தார்கள். அதற்கு கீழ் தான் சிலுவையே இருந்தது. “டேய் மாப்ள இந்த பேனர டாப் ஆங்கிள் இருந்து பார்த்தா எப்படி இருக்குனு பார்க்கனும்டா ஏதாவது ஒரு மாடியிலருந்து பார்க்கனும். நீங்க பர்ஸ்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ளோர்ல இருக்கிங்க சரி வராது ரெண்டாவது மாடி இல்ல மூணாவது மாடி வேணும் வாங்க கண்டுபிடிப்போம்". சங்கரபாண்டி, காமேஷ், கிருபா வேறுவழியில்லாமல் பின்னால் போனார்கள். போகவில்லை எனில் இன்னும் தகராறு செய்வார்கள். இரண்டு மாடிகள் கொண்ட வீட்டின் கதவை சுந்தர் தட்டினான். சுந்தருக்கு பயமே கிடையாது. கொஞ்ச நேரம் அந்த வீட்டில் அரவமேயில்லை. சுந்தர் மறுபடியும் மறுபடியும் தட்டினான். சங்கரபாண்டி 'போயிரலாம்டா' என்றான். உள்ளேயிருந்து யாரோ கதவை திறக்கும் சத்தம் கேட்டது. கம்பிக்கிராதிக்கு அந்தப் புறம் ஓர் ஆஜானுபாகுவான உருவம் தென்பட்டது. கூட்டத்தைப் பார்த்ததும் அதன் வாடையில் சற்று பின் வாங்கி "என்னப்பா நடுராத்திரில" என்று எரிச்சலுடன் கேட்டார். சுந்தர் "சார் நாளைக்கு கல்யாணம் நடக்குற சார்லஸோட ப்ரண்ட்ஸ் நாங்க பேனர் ஒன்னு அவன் கல்யாணத்துக்காக அடிச்சிருக்கோம் அத டாப் ஆங்கிள்ல இருந்து பாக்கனும் உங்க வீட்டு மாடிலருந்து பார்த்தா சரியா இருக்கும். கதவ தொறந்து விட்டீங்கனா மாடிலருந்து பார்ப்போம் ஒரு வேள உங்களுக்கு அது பிடிக்கலனா பேனர கொண்டு வந்து இங்க வச்சிட்டு அங்கிருந்து பாக்குறோம். உங்க வசதி எப்படி" ஆஜானுபாகு முகத்தில் கதவை சாத்தினார். அந்தத் தெருவிலிருக்கும் எல்லா இரண்டு மாடி வீட்டையும் சுந்தர் தட்டினான். அந்த ஊர் முழுக்க ரோஸ்லின் உறவினர்கள் தான். இடைஇடையிடையே சுந்தர் திரும்பி பாருக்கிடம் 'பத்திரமா வச்சிருக்கியா" என்று கேட்க பாருக் மஞ்சள் பையை தூக்கிக் காட்டினான் அதில் பெயிண்ட் டப்பா ஒன்று இருந்தது.

இரவோடு இரவாக சார்லஸுன் மாமனார் தேவசகாயத்திற்கு போன் போயிருந்தது. காலை வேனிலிருந்து ரோஸ்லின் குடும்பம் இறங்கும் பொழுது எல்லோரும் சர்ச்சின் முகப்பையே பார்த்துக் கொண்டிருந்தனர். "இயேசுவே சத்தியமானவர்" என்ற வாசகம் திருத்தப்பட்டு இயேசுவும் சத்தியமானவர் என்று சிவப்பு பெயிண்டில் எழுதியிருந்தார்கள். தேவசகாயத்திற்கு ஊரில் செல்வாக்கு இருப்பதால் யாரும் பெரிய பிரச்சனை செய்யவில்லை. கூம்பில் ஆடிக் கொண்டிருந்தது சார்லஸ் ரோஸ்லின் பேனர். திருப்பூட்டுக்கு முன்பே ரோஸ்லி சார்லஸிடம் கறாராக தன் வெள்ளை முக்காட்டை உயர்த்தி சொல்லிவிட்டாள். "இனிமேல் அவங்க உங்களுக்கு ப்ரண்ட்ஸ் இல்ல" பாதர் முன் நிற்கும் பொழுது சங்கரபாண்டியனிடம் கண்ணிலே கேட்டான் "எங்கடா அவிங்க" சங்கரபாண்டி "தெரியல" என்று தோளை குலுக்கினான். அங்கிருந்து பத்து கிலோ மீட்டர் தள்ளி மாத்தூர் மாரிச்சாமியின் தென்னந்தோப்பில் தங்களை மறந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள் டவாலி சுந்தரும், பாலமுருகனும். அதன் பிறகு சார்லஸ் அவர்களை ரகசியமாக தான் சந்திப்பான். போன் வந்தால் போனை எடுத்துக் கொண்டு வெளியே வந்துவிடுவான்.

சித்திரை பொருட்காட்சிக்கு போயிருந்த பொழுது டெல்லி அப்பளக்கடையில் மூவரும் நின்றிருந்தார்கள். டெல்லி அப்பளத்திற்கு பாம்பே சட்னி கொடு என்று வம்பிழுத்துக் கொண்டிருக்கையில் எதேச்சையாக திரும்பிய சார்லஸ் மனைவியையும், மாமனாரையும் பார்த்தவன் அப்படியே கடைக்குள் பம்மிவிட்டான். கல்யாணமான நாளிலிருந்தே தேவசகாயம் அவனிடம் "உங்க ப்ரண்ட்ஸ் ரொம்ப அசிங்கபடுத்திட்டாங்க மாப்ள பாதர் ரொம்ப புண்பட்டுட்டார்' என்று புலம்புவார்.

மறுபடியும் கோர்ட் ஏஜெண்ட் என போன் வர சார்லஸ் எடுக்காமல் அதையே பார்த்துக் கொண்டிருந்தான். எங்காவது பாரிலிருந்து சுந்தர் கூப்பிடுவான்.

வேணுகோபாலுக்கு சார்லஸை அறவே பிடிக்காது. சார்லஸ் பணி எல்லைப்பகுதி விருது நகர் தொடங்கி அருப்புக்கோட்டை,காரியாப்பட்டி, சாத்தூர், சிவகாசி, நாலாட்டின்புதூர்,விளாத்திக்குளம் என நீண்டு கோவில்பட்டியில் முடியும். தினமும் ஓர் ஊருக்குப் போய் அந்த ஏரியா செம்பருத்தி ஏஜெண்டை பார்க்கவேண்டும். பத்திரிகை விற்கும் ஐம்பது கடைகளையாவது பார்க்க வேண்டும் என்பது கட்டாயம். இதற்கிடையே புது ஏஜெண்டுகளை உருவாக்க வேண்டும் செம்பருத்தியின் விற்பனையைக் கூட்ட வேண்டும். இவையெல்லாம் சார்லஸின் பணிகள். சார்லஸ் வாரத்திற்கு மூன்று நாட்களுக்கு மேல் ஏரியாவிற்கு போக மாட்டான். ஒரே நாளில் நான்கு ஊருக்கு போய் அதை வேறு வேறு தேதியில் போட்டுக் கொள்வான். மற்ற நாட்களில் எல்லாம் மதுரை நண்பர்களோடு குடி.

செம்பருத்தியின் விற்காத இதழ்களை வீடு வீடாகக் கொண்டு போய் இலவசமாய் விற்பனைப் பிரதிநிதிகள் விநியோகம் செய்ய வேண்டுமென தலைமை அலுவலகத்திலிருந்து அறிவிப்பு வந்திருந்தது. விற்பனைப் பிரதிநிதிகள் குறைந்தபட்சம் ஐநூறு வீடுகளில் இலவசமாய் இதழ்களை விநியோகிக்க வேண்டும். சார்லஸ் மிக உற்சாகமாக அந்த இலவச விநியோகத்தில் ஈடுபட்டான். வேணுகோபாலுக்கே ஆச்சர்யம். ஏஜெண்டுகள் போன் பண்ணி சொன்னார்கள். "காலைல அஞ்சு மணிக்கே வந்திர்றாரு சார். வாங்கிட்டு போய் தூரதூரமா இருக்கிற கிராமத்திலே கொடுக்கிறார் சார்."

எதற்கும் ஆகட்டும் என கோவில்பட்டியில் பஜாரிலிருந்து செண்பகவல்லி கோவிலுக்கு போகும் வழியில் ஜில் விலாஸ் சர்பத் கடைக்கு மாடியில் சார்லஸ் ஓர் அறையை பிடித்துப் போட்டிருந்தான். ஒரு மாதத்தில் அந்த அறைக்குள் நுழைய முடியாத அளவுக்கு அறை செம்பருத்தி இதழ்களால் நிரம்பிக் கிடந்தது. வீடுகளுக்கு இலவசமாக கொடுத்த ரிப்போர்ட்டுகளை புதூர் வீட்டில் மாடியில் படுத்தவாறே சார்லஸ் எழுதி விடுவான்.

திருநெல்வேலியில் வாழைக்காய் லோடு இறக்கி விட்டு திரும்பி வந்த சுரேஷின் குட்டியானையில் சார்லஸ், சுந்தர், பாலமுருகன் அவ்வளவு செம்பருத்தியையும் அள்ளிக் கொண்டு வந்தார்கள். செக்போஸ்ட்டில் நிறுத்திய போலிசிடம் ஸ்டைலாக சார்லஸ் தன் ஐடி கார்டை காட்டியபடி "பூரா ஹெட் ஆபிசுக்கு போகுது சார்." குட்டி யானை நேரே மதுரை செவ்வாய் கிழமை சந்தைக்கு போனது. மொத்தமாய் ஆயிரத்தி இரு நூற்று முப்பது கிலோ எடை இருந்தது. பன்னிரண்டாயிரம் கொடுத்தார்கள். நால்வரும் விடிய விடிய குடித்தார்கள்.

போதை தாறுமாறாக, சார்லஸ் சுரேஷிடம் இருந்து சாவியை வாங்கி பாலமுருகனை குட்டியானையை எடுக்கச் சொன்னான். மூவருக்கும் செயிண்ட் மேரிஸ் சர்ச் இரண்டாகத் தெரிந்தது. "எங்கடா மாப்பிள்ளை போறோம்?" என்று கேட்க "மானேஜர் வீட்டுக்குடா" என்று சொல்ல. ஆண்டாள் புரம் அஃரினி அப்பார்ட்மெண்ட்டுக்கு பின்பக்கம் உள்ள தெருக்களில் விச்ராந்தியாய் படுத்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்கள் பதறி ஓட பாலமுருகன் தாறுமாறாய் வண்டியை ஓட்டினான். வேணுகோபால் வீடிருக்கும் பூந்தோட்டம் மூன்றாவது தெருவில் வண்டியை நிறுத்தச் சொன்னான். சைகையில் லைட்டை ஆஃப் செய்யச் சொல்லிவிட்டு தெருவை ஒருமுறை திரும்பிப் பார்த்தவன் தீர்க்கமான குரலில் "டேய் வேணுகோபாலு டேய் வேணுகோபாலு" என ஓங்கிக் குரலெடுத்து கூப்பிட ஆரம்பித்தான். கொஞ்ச நேரம் இதை வேடிக்கை பார்த்த சுந்தரும், பாலமுருகனும் அவனுடன் சேர்ந்து கொண்டு "டேய் வேணுகோபாலு டேய் வேணுகோபாலு" என்று கூப்பிட ஆரம்பித்தார்கள்.

வேணுகோபால் வீட்டு துளசி மாடச்செடி 'யார் இந்த நேரத்தில்' எனத் திரும்பிப் பார்த்தது. வீட்டு முகப்பில் போட்டோவில் உட்கார்ந்தபடி பஸ் வருகிறதா என நெற்றியில் கை வைத்து பார்த்துக் கொண்டிருக்கும் மகா பெரியவரும் இதைத் திரும்பி பார்த்தார். வீட்டிற்குள் லைட் எரிந்தது. சுரேஷ் வாயில் கை வைத்து அமைதியாக இருக்கும்படி சைகை செய்தான் சார்லஸ். வெளியே யாரும் வரவில்லை. லைட் கொஞ்ச நேரத்தில் அணைந்தது. மறுபடியும் இவர்கள் ஆரம்பித்தார்கள் "டேய் வேணுகோபாலு டேய் வேணுகோபாலு"

அதிலிருந்து இரண்டு நாட்கள் கழித்து ரிப்போர்ட் கொடுக்க போன சார்லஸை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் வேணுகோபால். சீனிவாசன் பேப்பரில் ஸ்கேல் வைத்து கோடு போட்டு ரிப்போர்ட் எழுதிக் கொண்டிருந்தான். சீனிவாசன் மதுரை ஏரியா பார்ப்பவன். சார்லஸ்க்கு ஜூனியர். சார்லஸ் ரொம்ப நாளாய் மதுரைக்கு மாற்றல் வேண்டுமென வேணுகோபாலிடம் கேட்டுக் கொண்டிருந்தான். மதுரை ஏரியாவை வேணுகோபாலே பார்த்துக் கொண்டிருந்தார். "மதுரைக்கு ஒரு ஆள போடனும்" என வேணுகோபால் சொல்லிக் கொண்டேயிருப்பார். திடீரென ஒரு நாள் சீனிவாசன் திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றலாக வந்தான். சார்லஸ்க்கு கடும் வெறியாகி விட்டது. வேணுகோபாலிடம் கோபமாய் "சார் எவ்வளவு காலமாய் நான் மதுரைக்கு டிரன்ஸ்பர் கேட்டுட்டிருக்கேன். அவர் அலட்சியமாய் அதெல்லாம் "ஹெட் ஆபிஸ் முடிவு பண்றதுப்பா" என்றார். வேணுகோபால் வீட்டு சந்து முனையில் வைத்து சீனிவாசனின் கையை முறுக்கி சார்லஸ் கேட்டான் "யாருடா உன்ன இங்க மாத்தினா?". அவன் "வேணுகோபால் எனக்கு தூரத்து சொந்தம்" என்றான். அதன்பின் சீனிவாசன் சார்லஸ் பக்கமே வருவதில்லை. சார்லஸ் ரிப்போர்ட் கொடுத்துவிட்டு போன அரை மணி நேரம் கழித்துதான் வேணுகோபால் வீட்டிலிருந்து வெளியே வருவான்.

திருநெல்வேலி பஸ் வந்து நிற்க, இறங்கியவர்களிடம் சார்லஸ் தோரணையாக "டிக்கெட்" என்றான். அவன் தோற்றத்திலிருந்த அசாத்திய தன்னம்பிக்கை வந்த ஆட்களை இவன் கையில் டிக்கெட்டை கொடுக்க வைத்தது. எதிரே இருப்பவர்களின் கண்களிலிருந்து தன் பார்வையை அகற்றாமல் பேசினான். நாலைந்து பேருந்துகளில் திரட்டியதில் டிக்கெட் கணிசமாய் சேர்ந்திருந்தது. ஒரு ஜெராக்ஸ் கடையில் பேப்பர் வாங்கி மடமடவென ரிப்போர்ட் எழுதி பில்லை அதற்கேற்றாற்போல வரிசைப்படுத்தி ரிப்போர்ட்டை நேர்த்தியாக உருவாக்கினான்.

வேணுகோபாலின் கண்களில் சார்லஸ் இத்தனை சீக்கிரமாய் வந்து விட்டானே என்ற கேள்வி இருந்தது. சீனிவாசன் ஸ்கேல் வைத்து பேப்பரில் கோடு போட்டுக் கொண்டிருந்தான். பக்கத்தில் பென்சிலும், ரப்பரும் இருந்தது. சார்லஸ் அவனை ஓரக்கண்ணால் பார்த்தான். வேணுகோபால் ஏதாவது தவறு இருக்க வேண்டுமே என்று ரிப்போர்ட்டை ஆராய்ந்து கொண்டிருந்தார். சார்லஸ் மொபைலில் மௌனராகம் பி.ஜி.எம் ஒலித்தது. டவாலி சுந்தர்தான்.

டவாலி சுந்தருக்கு எப்படியோ காரைக்குடி போவது தெரிந்துவிட்டது அதனால் தான் தன்னை கூப்பிடுகிறான் என சார்லஸ் நினைத்தான். போனை எடுக்காமல் சட்டைப் பைக்குள் வைத்தான். வேணுகோபால் டிக்கெட்டுகளை ஆராய்ந்தவாறு "என்னப்பா டிக்கெட்டெல்லாம் புதுசா இருக்கே" மறுபடியும் மௌனராகம் பி.ஜி.எம்ல் கார்த்திக் ரேவதியை துரத்த, கோர்ட் ஏஜெண்ட் என மொபைல் மினுமினுக்க. சடாரென போனை எடுத்த சார்லஸ் "கேனப்புண்ட ஏண்டா கூப்பிட்டுகிட்டே இருக்க?" அந்த பக்கம் சுந்தர் நிதானமாக "அப்ப மாப்ள காரைக்குடி கன்பார்ம் தானே? " என்றான். வேணுகோபால் சார்லஸின் தடித்த வார்த்தையால் ஒரு கணம் அதிர்ந்தவர் திரும்பி தன் வீட்டின் உள்பக்கம் பார்த்தபடி "சரி நீ கிளம்புப்பா நான் பாத்துட்டு கூப்பிடுறேன். சார்லஸ் பவ்யமாக "சரி சார்' என்று சொல்லி வெளியே வந்தான்.

ரோஸ்லியிடம் இருந்து நிறைய மிஸ்டு கால்கள் வந்திருந்தன. ரோஸ்லியை கூப்பிட்டான். "நான் இன்னிக்கு கோவில்பட்டி போறேன் நாளைக்குத்தான் வருவேன் உங்கப்பா சொன்னா வந்துருவாருல" எனக் கேட்க "சொன்னா வந்துருவாரு இப்படிப்பட்ட மருமவன வச்சுக்கிட்டு வராம என்ன பண்ணுவாரு" என்றாள். சார்லஸ் பதிலொன்றும் சொல்லாது கட் செய்தான்.

ரோஸ்லியின் அப்பா தேவசகாயம் தோற்றத்தில் ஞான ஒளி சிவாஜியின் நகல். முறுக்கிய மீசையும், நேர்த்தியான உடையுமாய் ஓய்வுபெற்ற வனத்துறை அதிகாரி. மருமகனின் நடவடிக்கை மீது எப்போதும் சந்தேகம் உண்டு. பெரியார் நிலையம் கட்டபொம்மன் சிலையருகே ஞாயிற்றுக்கிழமை மாலைகளில் சக ஓய்வூதியக்காரர்கள் கூடுவார்கள். மருமகனைப் பற்றி இவர் புலம்பும்போது சாம்சன் ஸ்டீல்ஸ் அண்ட் அலாய்ஸ் துரைராஜ் தான் ஆறுதல்படுத்துவார். "உன் மருமகன ஒரு நாளைக்கு ரெஸ்யூமோட வந்து பார்க்கச் சொல்லு. ஒரு நல்ல வேலைல உட்கார வைப்போம்" என்பார். மருமகன் வேலை மாறிக் கொண்டிருப்பது தேவசகாயத்திற்கு அறவே பிடிக்காது.

எப்படியாவது ரோஸ்லியை தன் மகனுக்கு முடித்துவிட வேண்டும் என்ற மும்மரத்தில் சார்லஸின் அம்மா அன்னபாக்கியம். சார்லஸ் எம்.எஸ்சி முடித்துவிட்டதாய் ஏற்கனவே சொல்லி இருந்தாள். சார்லஸோ தியாகராஜா கல்லூரிமுன் நின்று சிகரெட் மாத்திரமே குடித்திருக்கிறான்.

வாராவாரம் ஞாயிற்றுக்கிழமைகளில் சர்ச்சுக்கு போய்விட்டு ஒரு கிலோ சிக்கனை வாங்கி வந்து கொடுப்பதை ஒரு நியமமாக செய்வார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் துரைராஜை போய் பார்க்க சொல்வார். சார்லஸும் வருடக்கணக்காக சரி சரி என தலையாட்டுவான். அம்மாவை நினைத்தபடி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசவு வார்த்தையை சொல்வான். "எங்கிட்டுருந்து கொண்டு போறது எம்.எஸ்சி சர்டிபிகேட்?" தேவசகாயம் வேறு பேச்சுக்கிடையே "மாப்ள! எம்.எஸ்சி படிச்சவரு எதுக்கு ரெப்பா அலையிறாரு, வரச் சொல்லுங்க நம்ம கம்பெனிலயே ஒரு நல்ல பொசிஷன்ல உட்கார வைக்கலாம்ன்றாரு" அவர் சொல்லி முடிக்க பக்கத்து மாதா கோவில் ஒலிபெருக்கி "மணி பதினொன்று" என பைபிள் வாசகத்தை சொல்லத் தொடங்க. "பாருங்க நான் சொல்றேன் கரெக்டா மணி அடிக்குது" என்பார். "ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை மணி அடிக்கத்தான் செய்யும்" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொள்வான் சார்லஸ்.

மறுபடியும் மாட்டுத்தாவணிக்குள் சார்லஸ் நுழைந்தான். சைக்கிள் ஸ்டேண்டில் டூவிலர்கள் வெயிலில் காய்ந்துக் கொண்டிருக்க டோக்கன் கொடுப்பவன் எரிச்சலோடு வண்டி நம்பர்களை எழுதிக் கொண்டிருந்தான்.

சுரேஷ், சங்கரபாண்டி, காமேஷ், பாருக் நால்வரும் நான்காம் நம்பர் பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். சங்கரபாண்டி "ஏண்டா! எவ்வளவு நேரமா போன் அடிக்கிறேன்? எடுக்க மாட்டியா?" என்றான். "வண்டி ஓட்டிட்டிருந்தேன் மாப்ள" என்று சொன்னபடி சார்லஸ் சங்கரபாண்டியை ஒரமாய் அழைத்துப் போய் "ஏய் மாப்ள டவாலி சுந்தர் கூப்பிட்டுட்டே இருந்தாண்டா. எடுக்க வேண்டியதாப் போச்சு நான் ஒண்ணுமே சொல்லல. ஆனா அவனே காரைக்குடி ப்ரோகிராம் கன்பார்ம் தானேனு கேட்டான்டா" என்றான். சங்கரபாண்டி "என்னையும் பல தடவை கூப்பிட்டான் நான் எடுக்கல சரி அவங்க வர்றதுக்குள்ள கிளம்பிடுவோம். எந்த லாட்ஜ்னு அவங்கிளுக்கு தெரியாதுல அப்றம் எப்படி கண்டுபிடிப்பாய்ங்க" என்று சொன்ன சங்கரபாண்டி "டேய் சார்லஸ் நீ ஏதும் அவ்ய்ங்களுக்கு துப்பு குடுத்திருலியே" எனக்கேட்டான்.

"இல்லடா மாப்ள"

" நீதான் அவ்ய்ங்களோடா சேக்காளி விட்டே கொடுக்கமாட்ட"

"டேய் அவ்ய்ங்க நல்லவிங்கைடா" என்றான் சார்லஸ்.

காரைக்குடி அண்ணாசாலை ஸ்டாப்பில் இறங்கினார்கள். கிருபா போனில் வழி சொல்ல சார்லஸ் அதைக் கேட்டபடி நடக்க மற்றவர்கள் அவர்களை பின்தொடர்ந்தார்கள். ஒரு தெருவில் மொத்தமாக நான்கு வீடுகளே இருந்தன. ஒரு வீட்டு காம்ப்வுண்ட் சுவர் முடியும்போது தெருவில் கால்வாசி முடிந்து விடுகிறது. நான்காவது வீட்டோடு தெரு முடிந்துவிடுகிறது. எல்லா வீட்டு வாசலிலும் நான்கெழுத்து இன்ஷியலில் பெயர் இருந்தன. செம்மண் படிந்த புழுதியோடு வேறோரு காலத்தில் நிற்கும் வீடுகள். மரக்கதவுகள் பெரும்பாலும் காபி நிறத்தில் இருந்தன. படிக்கட்டுகள் மேல் நோக்கி தடித்த தூண்களை நோக்கிப் போயின. வீடுகளில் உள்ளே பித்தளை அண்டாவோடோ நார்கூடையோடோ யாராவது உட்கார்ந்திருந்தார்கள். கூடங்கள் பழைய சதுர சதுர மொசைக் டிசைன்களோடு இருக்க. சட்டமிட்டமிட்ட போட்டோக்களில் அப்புச்சிகளும், ஆச்சிகளும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். கார் ஷெட்டுகளில் கடையோ அல்லது சிறிய குடித்தனமோ இருந்தது.

முடியரசன் சாலையில் இருந்து திரும்பினார்கள். சுப்ரமணியபுரம் ஆறாவது தெருவில் ஒரு கேட்டரிங் இன்ஸ்டிட்டியூட்டிற்கு பின்னால் இருந்தது அந்த பாரம்பரிய விடுதி. செட்டி நாடு ஹெரிடேஜ் ஹவுஸ் என்ற பித்தளை எழுத்துக்கள் நியான் வெளிச்சத்தில் மின்னின. சாலை மிக அமைதியாக இருந்தது. ஒரு பாரம்பரிய வீட்டை விடுதியாக மாற்றியிருந்தார்கள். பித்தளை அண்டாக்கள், தூண்கள், நீண்ட ஹால், மரத்திலான மாடிப் படிக்கட்டுகள், நடுவில் பெரிய முற்றம், முற்றத்திற்கு நடுவே சற்சதுர குளத்தில் நீர் நிறைக்கப்பட்டிருந்தது. வயதானவர் ஒருவர் அவர்களுடன் மேலேறி வந்து பெரிய இரும்புச் சாவியை உள்நுழைத்து தம் பிடித்து ஒரு மரக்கதவை தள்ளித் திறந்தார். வராந்தாவில் ஒவ்வொரு மூலையிலும் ஒரு பெண் சிலை கையில் குடத்தோடு நீரை கீழே இருக்கும் தொட்டியில் ஊற்றிக் கொண்டிருந்தது. சங்கரபாண்டி சார்லஸிடம் "மாப்ள ரொம்ப காஸ்ட்லியான ஹோட்டலா இருக்கும் போலடா" "ஆமாடா கிருபா சொன்னாண்டா கிருபா மாமனாரோட ப்ரண்ட்டோட ஹோட்டலாம். வெள்ளைக்காரங்க, பணக்காரங்கதான் தங்குவாங்க போல. பார்த்து மரியாதையா இருந்துக்குங்க. எதுனாலும் ரூமுக்குள்ளயே வச்சுக்குங்க சத்தம் வெளிய வரக்கூடாது. ஒரு நாளைக்கு வாடகை நாலாயிரம் ரூபாயாம்" பாரூக் நம்பாமல் பார்த்தான். ஒரு ரூமில் பையை வைத்துவிட்டு இன்னொரு ரூமில் வட்டமாய் உட்கார்ந்தார்கள். கிருபா ஏற்கனவே சரக்கு வாங்க பணம் கொடுத்திருந்தான். சங்கரபாண்டியின் மாமா குமரேசன் எக்ஸ் மிலிட்டரிமேன். நான்கு ஃபுல் ரம்மை சங்கரபாண்டி வெளியே எடுத்து வைத்தான். வாழைப்பழம், மிக்சர், தண்ணீர் பாக்கெட், காரபூந்தி, கடலைமிட்டாய், கப் என ஒவ்வொன்றாய் ஒரு குலச்சடங்கை போல எடுத்து வைத்தான். இந்த சமயத்தில் சங்கரபாண்டியின் வேலையில் யாரும் தலையிட மாட்டார்கள். தலையிட்டால் அடிவாங்க வேண்டியிருக்கும். சங்கரபாண்டி துல்லியமாக ஒரே அளவில் எல்லா ப்ளாஸ்டிக் கப்களிலும் சரக்கை ஊற்றினான்.

சரசரவென சரவென முகத்தை சுளித்து, குலுக்கி, ரசித்து, விதவிதமாய்க் குடித்தார்கள்.

மூன்று ரவுண்டுகள் ஓடியிருந்தன. சார்லஸ் மதியம் சாப்பிடாததால் போதை சரக்கென மேலேறியிருந்தது. லேசான குழறலுடன் "பாண்டி ஸ்விகில சிக்கன் ஆர்டர் பண்றா" சங்கரபாண்டியும் போதை படகேறியிருந்தான். "சொல்றேன் மாப்ள சொல்றேன் டேய் காமேஷ் சுகிக்கு போன போட்றா" காமேஷ் மூன்று ரவுண்டுக்கு நடுவில் யாருக்கும் தெரியாமல் இன்னொரு ரவுண்டு குடித்திருந்தான். காமேஷ் சற்று நிதானித்து விலாவரியாக ஸ்விகியில் ஆர்டர் செய்தான். "ஆமா சுப்ரமணியபுரம் ஆறாவது தெரு. செட்டி நாடு ஹெரிடேஜ் ஹவுஸ்"

இன்னும் இரண்டு ரவுண்டு ஆனது.

சார்லஸ் தரையில் படுத்தபடி "என்னடா சிக்கன் வரவேயில்லை" என்று கேட்கையில் அழைப்புமணி அடித்தது. கதவை திறந்த பாரூக் அப்படியே நின்றான். வெளியே டவாலி சுந்தரும், பால குருவும் சிக்கன் பார்சலுடன் ஆடிக் கொண்டிருந்தார்கள். "மாப்ள இதான் சுகி சிக்கன்" காமேஷ் ரூமின் ஓரத்தில் போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்ம, சங்கரபாண்டி அவனை நோக்கி புறப்பட டவாலி சுந்தர் சங்கரபாண்டியை மறித்தான். "டேய் அவன் சுகிக்கு தாண்டா கூப்பிட்டான் சுகிக்கு பதிலா சுந்தர அமுக்கிட்டான். நான் உங்களை எப்படி கண்டுபிடிக்கிறதுனு பஸ் ஸ்டாண்டில நின்னு யோசிச்சிக்கிட்டிருந்தோம் மாப்ள போன் பன்றான்." வட்டத்தை பெரிதாக்கினார்கள். மறுபடியும் அழைப்பு மணி அடிக்க. சுந்தரே போய் கதவை திறக்க ரூம் சர்வீஸ் பெரியவர் கவர்களுடன் நின்றார். சுந்தர் அவரை "ஐய்யா உள்ள வாங்க உள்ள வாங்க" என்றான். கவரில் பெப்சி பாட்டில், சிகரெட் என இருந்தது. சுந்தர் பெரியவரை பார்த்து "ஐய்யா ஒரு ரவுண்ட போட்றது." பெரியவர் "டியூட்டி நேரம் தம்பி" என மறுக்க. பாரூக் " நல்ல சரக்குத்தான் ஒரு வாடையும் வராது" என்ற சொல்லியபடி பெரிதாக ஒரு ஏப்பத்தை விட்டான். பெரியவர் வெளியே தலையை நீட்டி வராண்டாவை ஒரு பார்வை பார்த்து விட்டு கதவை ஒரு கையால் சாத்தியபடி சுந்தர் கையில் இருக்கும் சரக்கை வாங்கி ஒரே மடக்கில் குடித்தார். பாலமுருகன் 'இதையும் குடிங்க' என்று நீட்ட அதையும் ஒரே மடக்கில் குடித்தார். வேட்டியால் வாயை அழுத்தமாக துடைத்தபடி " நல்லபிள்ளையா இருக்கீங்க நல்ல சந்தோசமா இருங்க எதுனாலும் என்னைய கூப்பிடுங்க நான் மட்டும்தான் நைட்டு இங்க". சுந்தர் அவரிடம் "பக்கத்து ரூமில் யாரு இருக்காங்க என்று பவ்யமாக கேட்டான். வெள்ளைக்காரனும் ஒரு வெள்ளைக்காரச்சியும் தங்கியிருக்காங்க ஏதோ போட்டோ எடுக்க வந்திருக்காங்களாம். கடைசி ரூம்ல ஒருத்தன் தங்கியிருக்கான் அவன் எந்த ஊர்னு தெரியல இங்க இருக்கக் கூடிய நெல கதவெல்லாம் வாங்க வந்திருக்கான். என்று சொல்லியபடி கதவை சாத்திவிட்டு போனார். டவாலி சுந்தர் கொண்டு வந்த ரெண்டு ஃபுல்லும் வட்டத்திற்குள் வந்திருந்தது.

எட்டாவது ரவுண்டை தாண்டியிருந்தார்கள். சங்கரபாண்டிக்கு ஏதோ பிரச்சனை வரும் போல தோன்றியது. குடிப்பதை நிறுத்தியிருந்தான். பேருக்கு கையில் கப்பை வைத்திருந்தான். டவாலி சுந்தர் அழுதபடி "ஏண்டா நீங்க என்ன அத்து அத்து விடுறீங்க? ஏன்னா நாங்கலாம் ரவுடி பையலுக ஜெயிலுக்கு போனவங்க சேர்ந்தா பிரச்சனையாயிரும். அதானே? நான் எதுக்கு உங்களத் தேடி வரேன். எனக்கு குடிக்க ஆளு இல்லையா? உங்களோட குடிக்கும்போது ஒரு சந்தோசம். இந்த ஊமக் குசும்பன் சார்லஸ் ஏதாவது செய்வான். அதப் பாக்க சந்தோசம்". காமேஷ்க்கு அந்த பக்கம் உட்கார்ந்திருந்த சார்லஸ் "மாப்ள" என்றபடி தாவி சுந்தரை கட்டியணைத்தான். சங்கரபாண்டி இருவரையும் பார்த்தவாறு "ஆமா இப்ப கட்டிப்பிடிச்சு அழுங்க. போன வருசம் சாமிநாதன் மக முடியிறக்க பழனிக்கு போனப்ப என்னடா செஞ்சீங்க? சார்லஸ் கல்யாணத்துக்கு ஊரே அல்லோகல பட்டுச்சு" சுந்தர் சங்கரபாண்டி சொன்னதை கவனிக்காமல் சார்லஸ் தோளின் மீது சாய்ந்து அழுது கொண்டிருக்க. பாலமுருகன் "ஏய் சங்கரபாண்டி! சாமிநாதன் நமக்கு ஒழுங்கா மரியாதை தரல அதனாலதான் சுந்தர் அப்படி செஞ்சான்" என்றான். சங்கரபாண்டி " நல்லா செஞ்சான்" என முணுமுணுத்தான்.

பழனிக்கு சாமிநாதன் மகளுக்கு முடியிறக்கப் போன இடத்தில் ராத்திரி சரக்கு பத்தாமல் போக சாமி நாதனுக்கு சுந்தர் போன் செய்தான். "டேய் நீங்க ஒவ்வொருத்தனும் ஒட்டகம் மாதிரி குடிப்பீங்க அதுக்கு நான் வாங்கி தரணுமாடா" எனச் சொல்லி போனை வைத்தான்.

மறு நாள் காலை காது குத்தும் சமயத்தில் சாமி நாதன் வந்திருந்த வேனை எடுத்துக் கொண்டு மற்றவர்களையும் வண்டியில் ஏறச் சொல்லி வேன் டிரைவரை மனம் போன போக்கில் ஓட்ட சொன்னான் சுந்தர். வேன் டிரைவர் மறுக்க கழுத்தில் கத்தியை வைத்தான். கொஞ்ச நேரத்தில் சாமிநாதனிடமிருந்து சங்கரபாண்டியனுக்கு போன் வந்தது. சங்கரபாண்டி போன் எடுக்க "எங்கடா இருக்கீங்க" என கோபத்தில் கத்தினான் சாமிநாதன். "எங்கயோ சுந்தர் கூட்டிட்டு போறான்டா " "டேய் பின் சீட்டில் பார்டா" என சாமிநாதன் கத்த முடியிறக்கவேண்டிய பிள்ளை பின்னால் தூங்கிக் கொண்டிருந்தது. "அத பாத்துட்டு தாண்டா சுந்தர் வண்டிய எடுத்துட்டு போறான் அவன உடனே வரசொல்லு இங்க எல்லாரும் காத்திருக்காங்க" சுந்தர் திரும்பி "டேய் ஸ்பீக்கர்ல போடுறா" என்று சொல்ல சங்கரபாண்டி ஸ்பீக்கரில் போட "நேத்து ராத்திரி என்னடா சொன்ன? ஒட்டகமா ? ஒட்டகம் மெதுவாத்தான் வரும்." முதல் நாள் சாமி நாதன் சொல்வதை சுந்தர் ஸ்பீக்கரில் போட்டதால் எல்லோரும் கேட்டிருந்தார்கள். சாமிநாதன் மீது எல்லோருக்கும் கடுப்பு இருந்தது. என்றாலும் சுந்தரிடம் எல்லோரும் கெஞ்சினார்கள். சுந்தரோ வண்டியை மண்டபத்துக்கு திருப்பவே முடியாது என்றான்.

சார்லஸ் மாத்திரம் சுந்தரை ஆதரித்தான். மறுமுனையில் சாமிநாதன் கதற. சாமிநாதனின் மச்சான் குழந்தையின் தாய்மாமன் அவன் மடியில் வைத்துதான் முடி இறக்க வேண்டும் அவனும் கோபித்துக் கொண்டு போய்விட்டான். உறவினர்கள் பாதி பேர் மண்டபத்திலிருந்து கோபித்துக் கொண்டு போக மூன்று மணி நேரம் கழித்து மண்டபத்தில் வந்து வண்டியை நிறுத்தினான் சுந்தர். சாமிநாதனின் அப்பா"யாரும் மண்டபத்திற்குள் உள்ளே வரக்கூடாது" என்றார். சாமிநாதனும் அவனின் பொண்டாட்டியும் அழுது வீங்கிய முகத்தோடு குழந்தையை தூக்கிக் கொண்டு மண்டபத்தின் உள்ளே ஓடினார்கள். சுந்தர் அலட்டிக் கொள்ளாமல் "வண்டியை பஸ் ஸ்டாண்டிற்கு விடு" என சொல்ல சாமி நாதனின் அப்பா " மரியாதையா வண்டிய விட்டு கீழ இறங்குங்கடா " என சொல்ல டிரைவர் கம்மிய குரலில் "சார் வண்டிலருந்து அவங்க கீழ இறங்குனா என் வண்டி ஊர் போய் சேராதுனு அண்ணே சொன்னாரு" என்று டவாலி சுந்தரை காண்பிக்க வண்டி அவர்களோடு பஸ் ஸ்டாண்டிற்கு புறப்பட்டது. வண்டியின் பின்புறம் கண்ணாடி வழியாக டவாலி சுந்தரும், சார்லஸும் பார்த்தார்கள். மற்றவர்களை "டேய் இங்க பாருங்கடா" என கத்தி கூப்பிட எல்லோரும் திரும்பி பார்த்தார்கள். சாமிநாதனை அவனது அப்பா "பளார் பளார்" என அறைந்து கொண்டிருந்தார். டிரைவர் வண்டியின் கண்ணாடியை சரி செய்தவாறே "அழகுண்ணே அழகுண்ணே என்னய மதுரை டு பழனி மாத்திரம் தான் சொல்லி கூட்டிட்டு வந்துட்டு எங்கெங்கேயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறாய்ங்கண்ணே உங்களோட வந்தப்ப தானேன்னே ரொம்ப சந்தோசமா இருந்துச்சு"

கொஞ்ச நாட்கள் கழித்து, வீடருகே சாமிநாதனின் அப்பா டவாலி சுந்தரைப் பார்த்தபோது காறித் துப்பிவிட்டு போனார். ஒரு மாதத்தில் சாமிநாதன் வீட்டை காலி செய்து கோரிப்பாளையம் போய்விட்டான்.

"டேய் சங்கரு சுந்தர கொற சொல்லாத அவன் எல்லாத்துக்கும் சேர்த்துதான் செஞ்சான் " என்று பாலமுருகன் சொல்ல சுந்தரை கட்டியணைத்தபடி அவன் மீது சரிந்திருந்த சார்லஸ் சங்கரபாண்டியை ஒரு கணம் பார்த்தவன் கோழியின் தலை போல படக்கென கீழே விழ "மாப்பிள அவன அப்படி சொல்லாத அவன அப்படி சொல்லாத" என்று தரையைப் பார்த்தபடி மறுபடியும் மறுபடியும் சொல்லிக் கொண்டிருக்கையில் படக்கென எழுந்த பாலமுருகன் லேசான தள்ளாட்டத்துடன் வேட்டியை மடித்துக் கட்டியபடி ஆவேசமாய் "என்னடா எப்பப் பாத்தாலும் எங்களையே குறை சொல்ற ஏன் சுந்தரு எந்திரி வா போவோம் இது என்ன மானங்கெட்டத்தனமா இருக்கு" என்றபடி கதவை நோக்கி போக சார்லஸ் அவன் காலில் விழுந்தான். பாருக்கும், காமேஷும் ஒருவரை ஒருவர் பார்க்க சங்கரபாண்டி "தொடங்கிட்டாய்ங்க" என்றான். பாலமுருகன் கதவைத் திறக்க முயல சார்லஸ் அவனை தள்ளிக் கொண்டிருந்தான். சங்கரபாண்டி வெறுப்பாய் "வெண்ணைகளா எதுனாலும் ரூமுக்குள்ளேயே பண்ணுங்கடா கிருபா படிச்சு படிச்சு சொல்லியிருக்கான்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே பாலமுருகன் எகிறி "போடா மயிரு அவனெல்லாம் எங்கள ஒரு ஆளுனு மதிச்சு கூப்பிடவே இல்ல" என்றபடி கதவைத் திறக்க லாட்ஜ் ரூம் சர்வீஸ் பெரியவர் வெளியே நின்றார். "என்ன தம்பி ஏதாச்சும் வேணுமா" என்று ஓரக்கண்ணால் உள்ளே இருக்கும் சரக்கை பார்த்தபடி கேட்க அதை பொருட்படுத்தாமல் அந்த தளத்தில் இருக்கும் எல்லா அறை கதவையும் தட்டியபடி ஓடினான் பாலமுருகன். பெரியவரை உள்ளுக்குள் இழுத்த சுந்தர் ஏறக்குறைய அவருக்கு ஒரு குழந்தையை போல சரக்கை புகட்டினான். வராந்தாவின் கடைசி அறையிலிருந்து வெறும் டவுசர் மாத்திரம் அணிந்தவனாய் வெள்ளைக்காரன் 'வாட்ஸ் ஹேப்பனிங் ஹியர்' என்று கேட்டபடி வெளியே வர பாலமுருகன் தாவி அவன் முன்னால் போய் நின்று "பஞ்சுமிட்டாய் விக்கிறவன் மாதிரி இருக்க! சுதந்திரம் வாங்கி இவ்ளோ நாளாச்சு. நீ ஏன்டா இன்னும் உன் ஊருக்கு போகாம இருக்க" வெள்ளைக்காரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ரூம் சர்விஸ் பெரியவர் வாயை துடைத்துக் கொண்டு அவர்களை நோக்கி ஓடினார். பின்னாடியே ஒருவரை ஒருவர் அணைத்தபடி சிரித்துக் கொண்டே சார்லஸும், டவாலி சுந்தரும் போனார்கள். போகிற வழியில் டவாலி சுந்தர் 108 நம்பர் அறையின் கதவை ஓங்கி உதைத்தான். பெரியவர் பாலமுருகனை பிடித்து இழுக்க பாலமுருகன் அலங்காரத்துக்கு தொங்கவிடப்பட்டிருக்கும் திரைச்சீலையில் தொங்கி ஆட ஆரம்பித்திருந்தான். வெள்ளைக்காரன் தோளை குலுக்கியபடி இந்த விளையாட்டை பார்த்துக் கொண்டிருக்க அவனது அறையிலிருந்து "ஹேரி! கம் இன்சைட்" என்று குரல் கேட்க "ஓ! நத்திங். ஜஸ்ட் ஃபன்" என்று சொல்லியபடி தன் அறைக்கதவை வெளிப்பக்கமாய் சாத்தினான். 108 ன் கதவு ஆவேசமாய் திறந்து "எந்தாடா இவிட ஒச்சே" என்று தாட்டியமாய் மலையாளி வெளியே வந்தார். ரூம் சர்வீஸ் பெரியவர் "ஒன்னுமில்ல ஒன்னுமில்ல நீங்க போய்ப் படுங்க" என்று சொல்ல "எந்தாடா படுக்க இவிட ஒச்சையும் பெகளமாயிட்டுண்டு எவ்விட உறங்கானு" சார்லஸும், சுந்தரும் மலையாளி முன்னால் போய் " நீதான் மரம் வாங்க வந்திருக்கவனா? இங்க இருக்க எல்லா மரத்தையும் கொண்டு போயிருவியா? அப்ப தமிழ்நாட்டுல மழையே பெய்யாது.. சொல்றா நாயரே" என வம்பிழுக்க,

"நான் நாயரு இல்லா"

"அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது" என்று இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் சங்கர பாண்டி தடுக்க தடுக்க பாலமுருகன் வராந்தாவின் ஓரத்தில் இருக்கும் பெரிய பெண்ணின் சிலையை பீடத்திலிருந்து அசைத்து அசைத்து பெயர்க்க ஆரம்பித்திருந்தான். சார்லஸும் சுந்தரும் அவனோடு போய் சேர்ந்து கொண்டார்கள். மலையாளி தன் அறைக்குள் போய் படாரென கதவை சாத்திக் கொண்டார். பெரியவரும், சங்கரபாண்டியும் தடுக்க சார்லஸ், சுந்தர், பாலமுருகன் சிலையை பெயர்த்தெடுத்தார்கள். அலங்கார திரைச்சீலை அனைத்தையும் பிய்த்தெடுத்து சிலையின் மீது சுற்றினார்கள். வெள்ளைக்காரன் கண்களில் ஆர்வம் பொங்க இந்த விளையாட்டை பார்த்துக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாசலில் காய்கறி வண்டி வந்து நிற்க ரோஸ்லி எழுந்து வெளியே போனாள். ஒரு சட்டை பேண்ட்டை எடுத்து பிளாஸ்டிக் கவருக்குள் வைத்தான். மாமனாரைப் பார்த்தான். தி ஹிந்துவில் ஆழ்ந்திருந்தார். வீட்டு பின்பக்கம் வந்த சார்லஸ் படக்கென காம்பவுண்ட் சுவர் ஏறிக் குதித்தவன் அந்த இடத்திலேயே நின்று உடையை மாற்றினான். பின்பக்கம் இருக்கும் திரவியபாண்டியனின் வீட்டிலிருந்து அவர் மனைவி வினோதமாய் சார்லஸை பார்த்தார்.*

சிலையை மூவரும் தங்கள் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு படிக்கட்டில் கீழே இறங்க ஆரம்பித்தார்கள். மற்றொரு படிக்கட்டு வழியாக ஓடி வந்த சங்கரபாண்டி இரண்டு கைகளையும் நீட்டி மறித்தான். அவனை தள்ளிவிட்டு ரிசப்சனில் கொண்டு வந்து சிலையை வைத்தார்கள்.

பாருக்கும், காமேஷும் மேலே இருந்து இறங்கி கீழே வந்தார்கள். சுந்தர், சார்லஸையும், பாலமுருகனையும் பார்த்து "என்னடா செய்வோம் இந்த கிருபா நம்ம ரெண்டு பேரையும் கல்யாணத்துக்குக் கூப்பிடாம அவமானப்படுத்திட்டான். அவனுக்கு நாளைக்கு கல்யாணம். நம்ம இந்த பொம்பளைய கூட்டிட்டு போய் அங்க முக்குல ஒருத்தர் சிலையா உட்கார்ந்து படிச்சிட்டிருக்காரே அவருக்கு கல்யாணம் பண்ணி வச்சிருவோம்" என்று சொல்ல, சார்லஸ், பாலமுருகனும் "அதுதான் சரி அதுதான் சரி" என்று ஒரே குரலில் குழறினார்கள். ஒரு ஊர்வலம் போல அந்த சிலையை தூக்கிக் கொண்டு அவர்கள் நடக்க பின்னால் சங்கரபாண்டியனும், பாருக்கும், காமேஷுக் கெஞ்சியபடி போனார்கள். ஒரு பத்தடி இடைவெளி விட்டு வெள்ளைக்காரனும் அவர்களை பின்தொடர்ந்தான். ரூம் சர்வீஸ் பெரியவர், டைரியில் ஓனர் நம்பரை தேடத் தொடங்கினார்.

இருட்டில் சம்மணமிட்டு தீர்க்கமாய் எதையோ படித்துக் கொண்டிருந்தார் சிலையாக அவர். அந்த சிலையின் முன்னால் கொண்டுபோய் பெண்ணின் சிலையை இறக்கினார்கள். சுந்தர் அவரைப் பார்த்து "அய்யா ரொம்ப காலமா பார்த்துட்டிருக்கேன் தனியாவே இருக்கீங்க அதான் உங்களுக்கு ஒரு துணையா இருக்கட்டுமேன்னு" அவர் அதை பொருட்படுத்தாமல் படித்துக் கொண்டிருந்தார். நாய் ஒன்று நிமிர்ந்து பார்த்து பிறகு தரையோடு தலையை தாழ்த்தி ஊளையிட்டது. சுந்தர், பாலமுருகன் "ஏய்" என்றவுடன் அமைதியானது. சிலைக்கு மேலே கிளையில் அமர்ந்திருக்கும் பறவைகள். என்னது இந்த இரவில் தொந்தரவு என்பது போல் சடசடத்தன. சங்கரபாண்டியும் பாருக்கும் காமேஷும் எப்பொழுதும் வேண்டுமானாலும் போலிஸ் வரலாம் ஓட வேண்டி வருமென இருட்டில் ஓரத்தில் மறைந்திருந்தார்கள்.

பாலமுருகன் தான் அந்த யோசனையை சொன்னான். "அய்யாக்கு இருட்டுல இந்த புள்ள மூஞ்சு சரியா தெரியல போல தூக்கி காமிப்போமா" "ஹா அது நல்ல யோசனை" என்றான் சார்லஸ். மூவரும் சேர்ந்து சிலையை அப்படியே தலைக்கு மேல் தூக்கினார்கள். வெள்ளைக்காரன் "இண்ட்ரஸ்டிங்" என்றபடி அடைத்து இருக்கும் டிசோட்டா பேக்கரி வாசலில் நின்றான். இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் நின்று இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்க சுந்தர் திரும்பாமலே "போயிட்டேயிரு போயிட்டேயிரு" என்று சொல்ல குரலும் தோரணையும் அவர்களை உடனே புறப்படச் செய்தது. தூரத்தில் ஒரு வாகனத்தின் வெளிச்சம் இவர்களை நோக்கி வர அனுபவத்தில் பாலமுருகன் தான் சொன்னான் "டேய் பேட்ரோல் வண்டிடா" மூவரும் சிலையை அப்படியே போட்டுவிட்டு அரசமர இலைகள் விரவி கிடக்கும் இருட்டுச் சந்துக்குள் ஓடினார்கள். அந்தச் சிலை மல்லாந்து மேலே இருப்பவரைப் பார்த்துக்கொண்டிருக்க, அவர் அப்பொழுதும் தீவிரமாய்ப் படித்துக்கொண்டிருந்தார்.

வழக்கமான ஞாயிற்றுக்கிழமை நியமமாக தேவசகாயம் ஒரு கிலோ சிக்கனுடன் தீர்மானத்துடனும் அன்று வந்திருந்தார். ரோஸ்லி அப்பாவிற்கு டீ கொண்டு வந்து கொடுத்தாள். உள்ளறையிலேயே சார்லஸ் நடமாடினான். வெளியே போனால் வழக்கம் போல நண்பர் சாம்சன் ஸ்டீல்ஸ் அண்ட் அலாய்ஸ் துரைராஜை பார்க்க ரெஸ்யூம், சர்டிபிகேட்டுமாய் போகச் சொல்வார். தலை நிறைய நல்லெண்ணெய் எடுத்துத் தேய்த்தான். எண்ணெய் தேய்த்து குளிக்கும் பழக்கம் எல்லாம் தன் கணவனுக்கு கிடையாதே என்று ரோஸ்லி விசித்திரமாய் பார்த்தவள் எரிச்சலாய் "அப்பாவ போய் வாங்கன்னு கேளுங்க" என்றாள். தோளில் துண்டோடு ஹாலுக்கு போன சார்லஸ் "வாங்க மாமா" என்றான். "ம்ம்" என்றவர் "மாப்பிள்ளை இப்ப என்ன பண்ண போறீங்க" சார்லஸ் தடுமாற்றத்தோடு எண்ணெய் தேய்ச்சிருக்கேன் குளிக்க போறேன்" "சரி நீங்க குளிச்சிட்டு வெரசா வாங்க நம்ம போய் என் ப்ரண்டு துரைராஜை பாத்துருவோம் உங்கள கையோட கூட்டிட்டு வரேனு சொல்லியிருக்கேன்" சலனமில்லாத முகத்தோடு சார்லஸ் "சரி மாமா" என்றபடி உள்ளே திரும்பி நடக்க "மாப்பிள்ளை அந்த சர்டிபிகேட் ஃபைலை எடுத்துக் கொடுங்க நான் அத அரேஞ்ச் பண்ணி வைக்கிறேன் நீங்க குளிச்சிட்டு வர்றதுக்கு சரியா இருக்கும்." கம்மிய குரலில் "சரி மாமா" என்றபடி சார்லஸ் தன் அலமாரியை நோக்கிப் போனான். அவனுடைய சர்டிபிகேட் பையில் முடிக்காத பால்டெக்னிக் மார்க்ஷீட்தான் இருக்கிறது. வெறுமனே அலமாரியை உருட்டினான். ஓரக்கண்ணால் மனைவியை பார்த்தான். காய் நறுக்கிக் கொண்டிருந்த ரோஸ்லி அவன் பக்கமாய் திரும்பி "எடுத்துக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் கொடுங்க! அப்பா கேக்குறாருல" என்றாள். "ம்ம்ம்" என்றபடி அலமாரியை கலைத்துக் கொண்டிருந்தான்.

வாசலில் காய்கறி வண்டி வந்து நிற்க ரோஸ்லி எழுந்து வெளியே போனாள். ஒரு சட்டை பேண்ட்டை எடுத்து பிளாஸ்டிக் கவருக்குள் வைத்தான். மாமனாரைப் பார்த்தான். தி ஹிந்துவில் ஆழ்ந்திருந்தார். வீட்டு பின்பக்கம் வந்த சார்லஸ் படக்கென காம்பவுண்ட் சுவர் ஏறிக் குதித்தவன் அந்த இடத்திலேயே நின்று உடையை மாற்றினான். பின்பக்கம் இருக்கும் திரவியபாண்டியனின் வீட்டிலிருந்து அவர் மனைவி வினோதமாய் சார்லஸை பார்த்தாள். சார்லஸ் மொபைலை சட்டை பாக்கெட்டில் வைத்தவன் பர்ஸை தேட பர்ஸ் வீட்டிற்குள்ளே விட்டுவிட்டு வந்தது அப்போது தான் தெரிந்தது. ரோஸ்லி பாத்ரூம் கதவை "ஏங்க ஏங்க" என்று தட்டும் சத்தம் கேட்டது. திரவியபாண்டியனின் மனைவி சைகையில் அவளிடம் ஏதோ சொல்ல முயற்சிக்க மடமடவென சார்லஸ் மெயின்ரோட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

பன்னிரண்டு மணி வெயில் சுரீரென்று அடித்தது. சார்லஸ்க்கு கையில் காசில்லாமல் எங்கு போவது என்று தெரியவில்லை வீட்டில் எம்.எஸ்சி முடிக்காதது பெரிய பிரச்சனையாகும் என சார்லஸ்க்கு தோன்றியது ஆறு மாதத்திற்கு ஒருமுறை சார்லஸை பற்றி இப்படி அதிர்ச்சிகரமான உண்மையை கண்டுபிடிப்பது தேவசகாயத்திற்கு வழக்கமாயிருந்தது. வேலை, சம்பளம், நிறுவனம் சார்ந்த அவன் பொய்யை தேவசகாயம் கண்டுபிடிப்பார். எப்படியோ அதையெல்லாம் சார்லஸ் சமாளித்து வந்தான். எம்.எஸ்சி பிரச்சனை அவ்வளவு சாதாரணமாக முடியாது தேவசகாயம் பஞ்சாயத்து பண்ணாமல் விடமாட்டார். அவன் எம்.எஸ்சி முடித்திருக்கிறான் என்று சொன்ன அம்மா அன்னபாக்கியம் கர்த்தர்ருக்குள் நித்திரை அடைந்து இரண்டு வருடமாயிருந்தது. செத்து போன அம்மாவை திட்டக்கூடாது என்று நினைத்தான். திட்டவும் செய்தான். சிக்கன் கடைகளிலும், கறிக்கடைகளிலும் ஆட்கள் கூட்டம் கூட்டமாய் நின்றார்கள். புழுதிக் காற்று வாயில் மண்ணை அப்பிவிட்டு போனது. இலக்கில்லாமல் நடந்தான். மெஜூரா காலேஜ் பாலத்தை தாண்டி நடந்தான். பெரியார் நிலையம் களையில்லாமல் கிடந்தது. கட்டபொம்மன் சிலைக்கு எதிரே இருக்கும் சர்ச்சிலிருந்து பிரார்த்தனை முடிந்து ஆட்கள் வெளியே வந்துக் கொண்டிருந்தார்கள். ரயில் நிலையத்திலிருந்து கூட்டமாய் வடநாட்டுக்காரர்கள் தார்ப்பாச்சி வேட்டியும், மூட்டையுமாய் தர்மசாலாவை நோக்கி போனார்கள். சிம்மக்கல் வாழைத்தார் வண்டிகள் திணறித் திணறி போக சார்லஸ் இலக்கில்லாமல் நடந்துகொண்டிருந்தான். ரோஸ்லி போனில் அழைத்துக் கொண்டேயிருந்தாள். பசித்தது. புதூருக்கு போனால் சங்கரபாண்டியைப் பார்க்கலாம். காசு கடன் வாங்கலாம் என்று யோசித்தவனாய் மேம்பாலத்தில் நடக்க ஆரம்பித்தான். அந்த மதியத்திலும் மேம்பாலத்தில் சிலர் சுருண்டு அசந்து உறங்கிக் கொண்டிருந்தனர். ஆற்றில் கீழே வைகையாறு புல் முளைத்துக் கிடந்தது. அழகர் இறங்குவதற்காக கட்டிய தற்காலிக மண்டபம் பிரிக்காமல் கிடந்தது. எதிரே அவனை கடந்துபோகும் இருசக்கர வாகன ஓட்டிகள் எல்லோரும் அவனைப் பார்ப்பது போல் தோன்றியது. கோரிப்பாளையம் தாண்டி தல்லாகுளம் தாண்டி, தாமரைத் தொட்டி தண்ணீர் டேங்கிற்கு கீழ் குழாயில் வயிறு நிரம்ப தண்ணீர் குடித்து நிமிர்ந்தவனை எதிரே டீக்கடையில் யாரோ கை காட்டி அழைத்தார்கள். டவாலி சுந்தரும், பாலமுருகனும்தான். டீ கிளாசோடு அவனை சந்தோசமாக அழைத்தார்கள். காரைக்குடி சம்பவத்திற்கு பிறகு இப்போதுதான் அவர்களைப் பார்க்கிறான்.

சார்லஸ் ரோட்டை கடந்து டீக்கடைக்கு போனான். சுந்தர் அவனை கட்டியணைத்தபடி "என்னடா மாப்ள காலைல சாப்பிடலையா? இவ்ளோ தண்ணிய குடிக்கிற" சுந்தர் படக்கென கேட்டதும் சார்லஸ்க்கு கண்ணீரை அடக்க முடியவில்லை. சுந்தரும், பாலமுருகனும் பயந்துவிட்டார்கள். "என்னடா மாப்ள என்ன பிரச்சனை" "அதாண்டா அந்த எம்.எஸ்சி பிரச்சனை. மாமனார் சர்டிபிகேட் எடுத்துட்டு வான்றாரு பின்னாடி சுவர் ஏறி குதிச்சு வந்துட்டேன். வீட்டுக்கு போகமுடியாது" அப்படியா எங்களோட வர்றீயா ஒரு வாரம் சந்தோசமா இருக்கலாம். நீ இதுவரைக்கும் அங்க போயிருக்கவே மாட்ட பூராம் நம்ம பயலுக தான். ஒரு வாரத்துல வந்தர்லாம். சார்லஸ் கொஞ்சம் புரிந்தும் புரியாமலும் "எங்க மாப்ள" என்றான் "ஜெயிலுக்குதாண்டா மாப்ள ஒரு அடிதடி கேசு ஞாயிற்றுக்கிழமைல அதான் ஜட்ஜு வீட்டுக்கு ரிமாண்ட் பண்ண கூட்டி போறாங்க வர்றயா" ஒரு கணம் கூட யோசிக்காமல் சார்லஸ் தலையாட்டினான். சார்லஸ் தன் போனை கையிலெடுத்தபடி "வீட்டுக்கு மட்டும் தகவல் சொல்லிர்றேன்" என்றபடி போனை எடுத்துக் கொண்டு சற்று தள்ளிப் போனான்.

டயல் செய்துக் கொண்டிருந்த சார்லஸை, சுந்தர் பின்னாலிருந்து கட்டிக் கொண்டான். சுந்தரின் கண் ஈரத்தில் பளபளப்பாய் இருந்தது. அவன் குரல் வேறு மாதிரி இருந்தது.'டே மாப்பிள்ள நாங்க எங்க கூப்பிட்டாலும் நீ வருவேன் தெரியும்.அங்கெல்லாம் நீ வர வேண்டாம்.நீ சொன்னல்ல மாப்ள அது போதும்டா'

போலிஸ்காரர்கள் இருவர் டீக்கடையிலிருந்து வெளியே வந்தனர். அதில் ஒருவர்'போலாமா' என்றார் சிகரெட்டை பற்ற வைத்தபடி.. 'சார் ஒரு நிமிசம் 'என்றபடி தன் சட்டை பைலிருக்கும் பணத்தை எடுத்தவன் அதன் போதாமையை உனர்ந்து பாலமுருகனை பார்த்து 'எவ்வளவு வச்சுருக்க 'என கேட்க அவன் உதட்டை பிதுக்கினான். டீக்கடை பக்கம் திரும்பி 'மகேஷ் அண்ணே இரண்டாயிரம் கொடு அடுத்த வாரம் தரேன்' உள்ளேயிருந்து ஒரு சின்ன பையன் பணத்தை கொண்டு வந்து தர, தன் கையில் உள்ளதையும் சேர்த்து சார்லஸ் சட்டை பையில் திணித்தான். 'மாப்ள கன்னியாகுமரி குற்றாலம் னு எங்கேயாவது சுத்திட்டு, நாலாஞ்சு நாள் கழிச்சு வீட்டுக்கு போ. எல்லாம் சரியா போகும் அப்படி சரியாகலான சொல்லு மாப்ள நான் வேணா உன் மாமனார்ட்ட பேசறேன்' இரண்டு போலிஸ்காரர்களும் முன்னால் நடக்க, சுந்தரும், பாலமுருகனும் பின்னால் போனார்கள். சுந்தர் திரும்பி 'காரைக்குடி போவோமாடா" என்றான் கண்ணை சிமிட்டியபடி. சார்லஸ் சிரித்தபடி தலையாட்டினான்.

⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் எப்போதும் கேள்விப்படாத கயல் பரதவன் என்ற எழுத்தாளனின், ஏறத்தாழ மூவாயிரம் பக்கங்கள் கொண்ட போதிதர்மர் என்ற நாவலை, காலம் இதழின் வாசகர், நண்பர் ஆறுமுகம் என்னிடம் தந்தபோது, அதை வாசிக்கும் திட்டம் எனக்கு இருக்கவில்லை. வீட்டிற்குள் முடங்கியிருக்கும் இக்காலங்களில், அப்புத்தகம் என்ன சொல்கின்றது பார்ப்போம் எனத் தட்டத்தொடங்கி, அதில் மூழ்கிப்போனேன். நீண்ட காலத்திற்குப் பிறகு சாண்டில்லியன், கல்கியை நினைவுபடுத்தும் எழுத்து – கடும் உழைப்பையும் ஆய்வையும் கொண்ட இந்த புனைவு எழுத்தாளரை எங்களில் பலருக்குத் தெரியாது. இவ்வெழுத்தாளரை 'காலம்' வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கில் அந்த நேர்காணலைப் பதிவு செய்கின்றோம்.

- ஆசிரியர்

# கயல் பரதவன்

**நேர்காணல்: ப்ரியாபாலு**

நகைச்சுவை உலகில் நன்கறியப்பட்டவர் ப்ரியாபாலு. இவரது நகைச்சுவைத் துணுக்குகள் குமுதம், விகடன் உட்பட, பல பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. நகைச்சுவை நூல் தொடங்கி பலவேறு தலைப்புகளில் 100க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். சினிமா பத்திரிகைகளில் பணியாற்றியதன் மூலம் பல பிரபல திரைப்பட நட்சத்திரங்களைப் பேட்டி கண்டிருக்கிறார். 'காலம்' இதழுக்காக, சரித்திர நாவலாசிரியர் கயல் பரதவனைப் பேட்டி காண்கிறார் ப்ரியாபாலு.

**போதிதர்மா நாவலின் அனுபவம் பற்றிச் சொல்லுங்களேன்?**

காலம் இதழ் வாசகர்களுக்கு என் இதயம் கனிந்த வணக்கம். என்னுடைய முதல் நாவலான 'பல்லவப் பேரழகி' எழுதியபொழுது கதையை எப்படி நகர்த்துவது, பாத்திரங்களின் சம்பவங்களை எப்படி அமைப்பது என்பதையெல்லாம் யோசித்தே அமைத்திருக்கிறேன். அதற்குப் பிறகான நாவல்களை எழுதியபோதும் மிகவும் சிந்தித்தே எழுதினேன். ஆனால், போதிதர்மாவை எழுதியபொழுது சரித்திரச் சான்றுகளைப் படித்துவிட்டு, பேப்பர் பேனாவோடு உட்கார்வேன். என் எழுதுகோல் எழுதிக்கொண்டே இருக்கும். ஒவ்வொரு காட்சியையும் வெவ்வேறு தருணங்களில் எழுதினேன்.

உதாரணமாகச் சொல்வதானால், முதலில் எழுதிய காட்சியை இரண்டாம் பாகத்திலும், நான்காம் பாகத்திலும் வைத்திருக்கிறேன். இந்த நாவலின் அத்தியாயங்கள் வரிசைக் கிரமமாக எழுதியவை அல்ல. எழுதிய அத்தியாயங்களை நான்காகப் பிரித்து, நான்கு பாகங்களாக ஆக்கினேன்.

**இது 2,856 பக்கங்களைக் கொண்டது. கேட்கும் போதே பிரமிப்பாக இருக்கிறது. அதை எழுதும் பொழுது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம், சவால் ஏதாவது?**

நான் எழுதப்போவது ஒரு பௌத்த சந்நியாசியைப் பற்றியது. அவரோ இதுவரை நாம் கேள்விப்பட்ட துறவிகளிலேயே வித்தியாசமானவர். ஓஷோ அவரைப் பற்றிச் சொல்லும் பொழுது புத்தர் இமயமலை என்றால், போதி தர்மர் எவரெஸ்டாக இருப்பவர் என்று கூறுகிறார். சீனாவின் ஆன்மீக அடையாளமான ஜென் மார்க்கத்தை அறிமுகப்படுத்தியவர்.

ஜென் என்பது பௌத்தமதப் பிரிவின் ஞான மார்க்கத்தைச் சேர்ந்தது. குங்பூ என்று அறியப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனத் தற்காப்புக் கலையை உருவாக்கியவர். அவரைச் சீன நாட்டிற்கு வரவழைத்த சக்கரவர்த்தியிடம் துணிவாகப் பேசியவர். அப்படிப்பட்ட மாபெரும் தத்துவஞானியைப் பற்றி எழுத வேண்டும். எவ்வளவு கடினமான விஷயம். அதனால் மிகவும் கவனமாகவே எழுதினேன்.

பக்கங்கள் அதிகம். கதையை எழுதி, சினிமாபோல தொகுத்தேன். கதையைப் படித்து விட்டு கருத்துக்களைச் சொல்லக்கூட ஒருவரும் இல்லை. காரணம் எனக்கு யாரோடும் அதிகமான பழக்கமும் இல்லை. பிழைதிருத்தம் பெரிய சவாலாக இருந்தது. அதையெல்லாம் முடித்து வெளியிட்டதும்தான் மனதிற்குள் நிம்மதியாயிருந்தது. எல்லாவற்றுக்கும் காரணம் முன்பின் அறிமுகமில்லாத பணியில் இறங்கியதுதான்.

**இப்பொழுதெல்லாம் வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைந்துவிட்டதாக எல்லோரும் கூறுகிறார்கள். நீங்களும் பொதுவெளியில் அதிகம் அறியப்படாத எழுத்தாளராகவே இருக்கிறீர்கள். இந்நிலையில் 2,856 பக்கங்கள் கொண்ட ஒரு நாவலை எழுத எப்படி உங்களுக்குத் துணிவு வந்தது? பதிப்பாளர் கிடைக்க வேண்டும், வாசகர்கள் வாங்க வேண்டும் என்ற கவலைகள் இல்லையா?**



போதிதர்மாவை எழுதத் தொடங்கியபொழுது நீங்கள் சொன்ன எந்தக் கவலையும் எனக்கில்லை. 2012இல் ஒரு சில அத்தியாயங்களை எழுதிவிட்டு, சரித்திர ஆதாரங்களைச் சேகரிக்கத் தொடங்கினேன். வியக்கத்தக்க செய்திகள் கிடைத்தன. அவை பாரதநாட்டின் மக்கள் வாழ்ந்த வாழ்க்கைமுறையை என் மனதிற்குள் கண்ணாடிபோல் எடுத்துக்காட்டின. பழைய பாரதம் ஏழ்மையான நாடல்ல. உலக மக்கள் பொருள் ஈட்டுவதற்காக இங்கே வந்து குவிந்தார்கள். நம் தமிழ் மக்களும் கலிங்க தேசத்து மக்களும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கொட்டிக்கிடந்த இயற்கை வளங்களைத் தேடிச் சென்றார்கள்.

அடேயப்பா! எப்படிப்பட்ட நாட்டில் பிறந்திருக்கிறோம் என்ற எண்ணம் ஏற்பட்டது. மதங்களைப் பற்றியும் வருணங்களைப் பற்றியும் நானறிந்த செய்திகள் என்னிருப்பையே புரட்டிப்போட்டன. எல்லாவற்றையும் நாவலில் சொல்ல எண்ணினேன். பக்கங்கள் விரிந்து கொண்டே சென்றன. நாவலை 2017இல் முடித்தாலும் விற்பனைக்கு 2018 ஜனவரியில்தான் வாய்ப்புக் கிடைத்தது. என்னுடைய நாவல்களை வெளியிடுவதற்கென்றே ஒரு வெளியீட்டு நிறுவனத்தைத் தொடங்கி, வேறு மூன்று நண்பர்களையும் துணைக்கு அழைத்துக் கொண்டேன்.

நண்பர்கள் என்னை நம்பினார்கள். 'போதிதர்மா'வை வெளியிடுவதற்கு முன்பாக 2016ஆம் ஆண்டு 'பல்லவப் பேரழகி'யை வெளியிட்டேன். அப்பொழுதுதான் விற்பனை செய்வதற்கு முடியாமல் இருந்த நிலையை உணர்ந்தேன். நல்ல விற்பனையாளரைத் தேடிக் கொண்டிருந்தபொழுதுதான் நர்மதா பதிப்பக உரிமையாளரைச் சந்தித்தேன். எனக்கு உதவி செய்ய ஒப்புக்கொண்டார். விற்றுவிடலாம் என்ற தைரியத்தைக் கொடுத்து 1,200 பிரதிகள் போட வேண்டும் என்று அன்புக் கட்டளையும் இட்டார். இப்படித்தான் 'போதிதர்மா'வை நான் வெளியிட்டேன். 1,200 பிரதிகளில் ஏறக்குறைய 50 பிரதிகள் இலவசமாகத் தருவது என்று முடிவு செய்து அப்படியே செய்தோம்.

**நாவலை எழுத மிக முக்கியமான சரித்திரச் சான்றுகளாக நீங்கள் எடுத்துக் கொண்டவை பற்றிய குறிப்புக்களைச் சொல்ல முடியுமா?**

நாவல் எழுதத் தேவையான சரித்திரச் சான்றுகள் எவ்வளவோ இருந்தன. அவற்றில் நாவலுக்குப் பொருத்தமான இரண்டு வகைகளாகப் பிரித்துக் கொண்டேன். ஒன்று அடிப்படையான ஆதாரங்கள். மற்றொன்று கட்டுமானத்திற்கானவை. கதைக்காக நான் தேர்ந்தெடுத்த காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு. அப்போதைய மக்களின் வாழ்க்கைமுறையை அறிந்துகொள்ளாமல் கதையை முழுமையாக எழுத முடியாது. 'போதிதர்மா'வைப் பற்றிய செய்திகளை அஸ்திவாரமாக, கர்ப்பக்கிருஹமாக வைத்துக்கொண்டேன்.

பிற சரித்திர ஆதாரங்களைக் கட்டுமானத்திற்கென்று பயன்படுத்திக் கொண்டேன். இந்த சரித்திர நாவல் இத்தனை வீச்சோடு இருக்கிறதென்றால், அதற்குக் காரணம் அந்தக்கால மக்களின் வாழ்க்கைமுறை கதையை நகர்த்திச் செல்கிறது. கி.பி. 6ஆம் நூற்றாண்டு காலத்தில் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மண்ணில் நடந்த நிகழ்ச்சிகளை இந்த நாவல் அழகாகக் காட்சிப் படுத்தியிருக்கிறது.

**இந்த நாவலை எழுத நீங்கள் பயன்படுத்திக் கொண்ட ஈழத்தமிழ் அறிஞர்களின் நூல்களைப் பற்றி சொல்லுங்களேன்?**

ஒரு விஷயத்தை நான் உங்களுக்கு சொல்லியாக வேண்டும். ஈழத்தமிழ் அறிஞரான முனைவர் கைலாசபதி எழுதிய 'பழந்தமிழர் வாழ்வும் வழிபாடும்' என்ற நூல் இந்த நாவலின் கட்டுமானத்திற்குப் பெரிதும் உதவியது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் அரசர்களின் ஆதரவைப் பெறுவதில் வணிகர்களுக்கும், பெரு நிலக்கிழார்களுக்கும் இடையே கடும் போட்டி நிலவியது என்ற கருத்தை ஆறேழு இடங்களில் சொல்லிச் செல்கிறார்.

தமிழக வரலாற்றின் நுட்பமான செய்திகளையும், தமிழக மக்கள் வழிபட்ட வழிபாடுகள் மற்றும் மதம் பற்றிய குறிப்புக்களையும் அளித்த இன்னொரு ஈழத்தமிழ் அறிஞர் ந.சி. கந்தையாபிள்ளை அவர்கள். அவருடைய நூல்களும் எனக்குப் பயன்பட்டன.

**வணிகர்கள் பற்றியும் இந்திய வணிகம் பற்றியும் நாவல் விரிவாகப் பேசுகிறது. எந்த நூலில் இருந்து இதற்கான ஆதாரங்களைத் திரட்டினீர்கள்?**

மோதிச் சந்திரர் எழுதிய Indian Trade and Trade Routes என்ற நூல் எனக்கு மட்டுமல்ல, எல்லா வரலாற்று ஆய்வாளர்களுக்கும் கிடைத்த அருமையான நூல் என்றே சொல்ல வேண்டும். அந்த நூலில் அவர் தமிழ்மொழியில் எழுதப்பட்ட சிலப்பதிகாரத்தை அபாரமாகப் புகழ்ந்துள்ளார். சிலப்பதிகாரக் கதையை நான் வேறு விதத்தில் பயன்படுத்தியிருக்கிறேன். அரசர்களைக் காட்டிலும் வணிகர்கள் செல்வர்களாக இருந்தார்கள் என்பதை மோதிச் சந்திரர் விரிவாகச் சொல்லியிருக்கிறார்.

**உங்கள் நாவலில் யவனர்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றியதாகக் காட்டியிருக்கிறீர்களே. இது உண்மையா?**

பௌத்த மதத்தை மட்டுமல்ல, வைதிக மதத்தைப் பின்பற்றிய யவனர்கள் இருந்தார்கள். ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். சிரியாவில் ஒரு பௌத்த மடம் இருந்தது. பௌத்த துறவிகளும் இருந்தார்கள். உள்ளூர்வாசிகள் கலவரத்தில் ஈடுபட்டபொழுது பௌத்த மடத்தை எரித்துவிட்டார்கள். பழைய சோவியத் ரஷ்யாவில் நடந்த தொல்பொருள் ஆய்வில் பௌத்த விஹாரைகள், மற்றும் மடங்களின் இடிபாடுகள் தென்பட்டன. இவையெல்லாமே நாடுகளைத் தாண்டி, எல்லைகளைக் கடந்து நமது மதங்கள் பரவியிருந்தன என்பதைக் காட்டுகின்றன.

மேற்கிலிருந்து வந்தவர்கள் யவனர்கள் என்று அறியப்பட்டார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படி வந்த யவனர்களில் பலர் நம்முடைய நாட்டவர்களைப் போல் பெயர்களைச் சூட்டிக்கொண்டு நம் மதங்களைப் பின்பற்றி வாழத் தொடங்கினார்கள் என்பது இந்திய சரித்திர ஏடுகளில் காணக் கிடைக்கும் உண்மை.

**போதிதர்மா நாவலில் அனுபவரீதியான செய்திகளைப் பயன்படுத்தியிருக்கிறீர்களா?**

போதிதர்மா முதல் பாகத்தில் மரக்கலத்தை வழிநடத்தக்கூடிய மீகாமனுக்கு இருக்க வேண்டிய அறிவு பற்றி இளந்திரையன் பேசுவதாக ஒரு காட்சியை வைத்திருக்கிறேன். அதில் சொல்லப்பட்டிருக்கும் செய்திகள் உண்மையிலே ஒரு மீகாமனைச் சந்தித்து அறிந்து கொண்டவை. இது போன்று ஒருசில செய்திகள் அங்கங்கே உண்டு.

**போதிதர்மா நாவலை எழுத வேண்டும் என்ற எண்ணம் எப்போது, எப்படி ஏற்பட்டது?**

1976ஆம் ஆண்டு என்று எண்ணுகிறேன். 'என்டர் தி ட்ரகன்' என்றொரு ஆங்கிலப் படம் இந்தியாவில் திரையிடப்பட்டது. அந்தப் படம் மாபெரும் வெற்றிப்படம். புதிய சண்டைக் காட்சிகள். அதில் நடித்த நடிகரைப் பற்றியும், அவர் கற்ற தற்காப்புக் கலையைப் பற்றியும் ஜே.எம்.சாலி என்ற எழுத்தாளர் எழுதிய புத்தகம் வெளிவந்தது. குங்பூ என்ற அவருடைய புத்தகத்தில்தான் போதிதர்மரைப் பற்றிப் படித்து அறிந்துகொண்டேன். அவர் பல்லவ சாம்ராஜ்யத்தின் இளவரசர் என்ற செய்தியை அறிந்ததும் போதிதர்மாவைப் பற்றிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திர நாவலொன்றை எழுத வேண்டும் என்று முடிவு செய்தேன்.

இப்படி 1976இல் எனக்குள் ஏற்பட்ட கனவு, 2017இல்தான் நிறைவுபெற்றது.

**'போதிதர்மா' நாவலை எழுதி முடித்துவிட்டீர்கள். இதில் உங்களுக்குத் திருப்திதானே?**

நான் நாவலை எழுதத் தொடங்கியபோது போதிதர்மா சீன நாட்டிற்குப் போவது, தெற்கு சீனப் பேரரசரான வுடியைச் சந்தித்தது, 9 ஆண்டுகள் குகையின் பாறையைப் பார்த்தபடியே அமர்ந்துவிடுவது, ஷாவோலின் மடத்திற்குப் போய் அங்கு ஜென் மார்க்கத்தையும் குங்பூ தற்காப்புக் கலையைப் பரப்புவது வரை எழுதத் திட்டமிட்டு இருந்தேன். ஆனால், பக்கங்கள் அதிகமாகியதால் நர்மதா பப்ளிகேஷன்ஸ் உரிமையாளர் இதோடு நிறுத்திக்கொள்ளும்படி அறிவுறுத்தியதால் நிறுத்திக்கொண்டேன். அதனால் முழு திருப்தியில்லை என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

**நாவலில் இந்திரவிழா பற்றியும் இந்திரனைப் பற்றியும் விவரிப்பதாக வருகிறது. அந்த இடத்தில் கதை போகிற போக்கில் ஒரு கேள்வியையும் வைத்து விடுகிறீர்கள். இது என்ன மாதிரியான யுக்தி?**

இந்திரா விழா பற்றி சிலப்பதிகாரமும் மணிமேகலையும் விரிவாகப் பேசுகின்றன. ஐவகை நிலங்களில் ஒன்றான மருத நிலத்தின் மக்கள் இந்திரனைத் தங்கள் தெய்வமாக வழிபட்டு வந்ததை சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. ரிக் வேதம் இந்திரனையே போற்றிப் புகழ்கின்றது. மிகப் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் இந்திரன் மருத நிலத்தின் தெய்வமாக குறிப்பிடப்படுகிறான்.

ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு இந்திரன் புறக்கணிக்கப்படுகிறான். என்ன நடந்தது, ஏன் இந்த புறக்கணிப்பு? பாரத நாடெங்கிலும் வைதிக மதத்தைப் பரப்புவதற்காக மன்னர்களும், சக்கரவர்த்திகளும் கட்டிய கோயில்களில் பெயருக்குக் கூட இந்திரனுக்கு என்று ஒரு சிறிய கோயிலைக் கூட காணோம். இதில் ஆச்சரியம் என்னவென்றால் பௌத்த மதமும் சமண சமயமும் இந்திரனைச் சக்கிரன் என்ற பெயரில் தனியிடத்தை அளித்து சிறப்பிக்கின்றன. இது ஆச்சரியத்தை ஏற்படுத்தியதால் படிக்கின்ற வாசகர்களுக்கு அப்படியொரு கேள்வியை வைத்தேன்.

இப்படியொரு செய்தியைச் சொன்னதன் மூலம் வாசகர்களைத் தூண்டி விட்டேன். இது ஆராய்ச்சிக்குரிய விஷயம் என்பதால் எதிர்காலத்தில் அறிவாற்றல் மிக்கவர்கள் இது குறித்து ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**கொங்கு நாட்டிலிருக்கும் நிலச்சுவான்தார்களைப் பாத்திரங்களாக ஆக்கியிருக்கிறீர்களே அது பற்றி சில வார்த்தைகள்?**

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் கங்க அரசரோடு நடந்த சண்டையில் வாணவரையர் என்ற குறுநில மன்னர் இறந்துவிட்டார் என்று ஒரு நடுகல் கூறுகிறது. மோகூர்ப் பழையன் என்பவனைச் சேரன் செங்குட்டுவன் போரில் கொன்றான் என்று வரலாறு கூறுகிறது. அந்தப் பழையன் என்பவனின் வம்சமே பழைய கோட்டை பட்டக்காரர் வம்சமாக இராசசேகர தங்கமணி என்று வரலாற்றாளரால் கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரோடு அதியமானையும் சேர்த்துக் கொண்டேன்.

முனைவர் கைலாசபதி தம்முடைய பழந்தமிழர் வாழ்வும் வழிபாடும் என்ற நூலில் வணிகர்களுக்கும் வேளாளர்களுக்குமிடையே அரசர்களின் செல்வாக்கைப் பெறுவது யார் என்ற போட்டி அன்றைக்கிருந்த தமிழ் மண்ணில் நடந்தது என்று சொல்லியதை நாவலில் அழகாகக் காட்டியிருக்கிறேன். அதோடு சிலப்பதிகாரத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள். இந்த நாவலில் வரும் சம்பவங்கள் வரலாற்று உண்மைகளின் மேல் அமைக்கப்பட்டவை என்பதையும் இந்த நேரத்தில் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

**எழுத வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்குள் எப்படித் தோன்றியது! அதற்குரிய உபகரணங்கள் (சரித்திர நாவல் என்பதால்) உங்களிடம் உள்ளனவா? இல்லையென்றால் அவற்றைச் சேகரம் செய்ய என்ன செய்வீர்கள்?**

கல்லூரியில் படிக்கும் காலத்தில் நண்பர்களோடு பெரும்பாலான நேரத்தைச் செலவிடுவதுண்டு. அப்பொழுது சிலர் அந்தக் காலகட்டத்தில் பத்திரிகைகளில் வந்துகொண்டிருந்த நாவல்களைப் படித்துவிட்டு, சிலாகித்துப் பேசுவர். அவர்களுடைய பேச்சில் கலந்துகொள்வேன். பேச்சோடு பேச்சாக என்றாவது ஒருநாள் நானும் இதுபோன்று எழுதுவேன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என்று சொன்னதுண்டு. வேலைக்குப் போன பிறகு நூலகங்களுக்குச் சென்று சரித்திர நூல்களைப் படித்து, குறிப்பெடுத்து தனியாக ஒரு குறிப்பேட்டில் எழுதி வைத்தேன். அநேகமாக 1983 அல்லது 1984 என்று எண்ணுகிறேன். சில காட்சிகளை எழுதினேன்.

அதைப் படித்துவிட்டு என் ஆசிரிய நண்பர் ஒருவர் பரிகாசமாகப் பேசி, சிரிப்பார். 1990ஆம் ஆண்டு என்னோடு பழகிய நண்பர் ஒருவருடைய கேள்வி என்னைக் கடுமையாகத் தாக்கியது. ஏறக்குறைய நிலைகுலைந்து போயிருந்தேன். கேள்வி இதுதான். 'ஏங்க இளங்கோ சம்பாதிக்குணும்ங்கற ஆசையே உங்க மனசில இல்லையா? டியூசன் எடுக்கலாம். வட்டிக்கு விட்டு சம்பாதிக்கலாம். இப்படியே இருந்தா எப்படி?' அவர் கேள்வி எனக்குள் இருந்த எழுத்தாளனைத் தூண்டிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். பள்ளியில் நூலகத்தின் சார்பாக நிறைய பத்திரிகைகளை வாங்கிப் போடுவார்கள்.

அவற்றில் வந்த இரண்டு அறிவிப்புகள் என் கவனத்தைப் பெற்றன. ஒன்று கல்கி இதழ் வெளியிட்ட நாவல் போட்டி. மற்றொன்று அமுதசுரபி இதழ் வெளியிட்ட நாவல் போட்டி. உடனே ஒரு முடிவு செய்தேன். என்னால் டியூசன் நடத்த முடியாது. வட்டிக்கும் விட்டு சம்பாதிக்க விருப்பமில்லை. இந்த நாவல் போட்டிகளில் கலந்துகொள்ளலாம். சுமார் ஆறு அல்லது ஏழு மாதங்கள் கால அவகாசம் இருந்தது. பள்ளிக்குச் சென்று வந்த பிறகு எங்கும் போகாமல், யாரிடமும் பேசாமல் எழுதத் தொடங்கினேன். ஆறு மாதங்களில் இரண்டு நாவல்களையும் எழுதி முடித்து அனுப்பி வைத்தேன்.

கல்கிக்கு 52 அத்தியாயங்கள் கொண்ட 'பல்லவப் பேரழகியும்', அமுதசுரபிக்கு 250 பக்கங்களைக் கொண்ட 'சந்திரபானுவும்' போட்டி முடிந்ததும் திரும்பி வந்தன. அமுத சுரபியிடமிருந்து திரும்பிவந்த பார்சலைப் பிரித்தேன். உள்ளே முதல் பரிசுக்குரியதாக என்னுடைய நாவலைத் தேர்வு செய்திருந்த நடுவரின் கடிதமும் இருந்தது. மனிதர்களின் தேர்வில் கடவுளரேகூட தடுமாற்றம் அடைந்து கீழே விழுந்துவிடுகின்ற நிகழ்வுகளைப் பார்த்து வந்திருப்பதால் பேசாமல் இருந்துவிட்டேன்.

பல்லவப் பேரழகியைப் படித்தவர்களோ வெகுவாகப் பாராட்டினார்கள். ஆனால், அப்பொழுது வேறொரு தொழிலில் பங்குதாரராக இருந்ததால் எழுத்தில் போதிய கவனத்தைச் செலுத்தவில்லை. நான் எழுத்தை நேசித்ததும் சுவாசித்ததும் இப்படித்தான். பொதுவாக எதற்கும் ஒரு தூண்டுகோல் தேவைப்படுகிறது. அது எங்கிருந்து வேண்டுமானாலும் கிடைக்கலாம்.

சரித்திர நாவல் எழுத, சற்று கூடுதல் கவனம் தேவை. நாம் எழுதவிருக்கும் நாவல் எந்தகாலத்தைச் சேர்ந்ததோ அந்தக் காலத்தோடு பொருந்தி வராத எதையும் நாம் நாவலில் சேர்த்துவிடக் கூடாது. தொடக்கத்தில் வரலாற்றுக் குறிப்புகளுக்காக நூலகத்திற்குப் போனேன். பின்னால் நிறைய வரலாற்று நூல்களை வாங்கி என்னுடைய சொந்த நூலகத்தில் வைத்துக் கொண்டேன். ஓய்வுபெற்ற பின் சென்னைக்குக் குடியேறியதும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், செம்மொழி ஆய்வு நிறுவனம் ஆகியவற்றுக்குப் போனேன். இதில் செம்மொழி ஆய்வு நிறுவனத்தில் உள்ள நூலகம் எனக்கு நன்றாகவே பயன்பட்டது. இன்றும் கூட நல்ல வரலாற்று நூல்களை வாங்கிக் கொண்டிருக்கிறேன்.

**உங்களுக்கு வரலாற்று நூல்களைத்தான் பிடிக்குமா? வேறு எந்த எந்தத் துறைகளில் உங்களுக்கு நாட்டம் உண்டு?**

இந்திய நாட்டின் எந்த ஒரு மூலை முடுக்கில் தேடினாலும் அங்கு ஒரு கோயில் அல்லது விக்கிரகம் தென்படும். எந்த ஒரு கல்லைத் தட்டினாலும் அதிலிருந்து ஆன்மீகக் குரல் கேட்கும். இந்த நாட்டில் பிறந்த என்னால் எப்படி ஆன்மீகத்தைத் தவிர்க்க முடியும்? இளம் வயது முதலே ஆன்மீக நூல்களைத் தேடிப் படிப்பேன். பின்னால் நிறைய ஆன்மீகக் கருத்துக்களைக் கூறக்கூடிய நூல்களை தேடிப் போய் வாங்குவேன். தத்துவம் எனக்குப் பிடித்த விஷயம். சரித்திர நாவலை ஒருவர் சிறந்த வகையில் எழுத வேண்டுமானால் பலவிதமான அறிவு வேண்டும்.

உதாரணத்திற்கு ஒரு விஷயத்தைச் சொல்லலாம். கடலில் பயணம் செல்லுகின்ற மரக்கலத்தைப் பற்றிய ஒரு விஷயத்தை எடுத்துக்கொள்வோம். அதற்கு நம்மிடம் போதுமான செய்திகள் வேண்டும். இதற்காக மட்டுமே என்னுடைய நூலகத்தில் 15இல் இருந்து 20 வரையிலான புத்தகங்களும், கட்டுரைகளின் வடிவிலான நகல்களும் உண்டு. புவியியல் சம்பந்தமான நூல்கள், விண்மீன்கள் பற்றிய தகவல்களைத் தரும் நூல்களையும் படிக்கப் பிடிக்கும்.

இராமாயணம், மகாபாரதம், இலியதம், ஒதிஸியம், 1001 இரவு அரபுக் கதைகளைப் பலமுறை படித்து இருக்கிறேன். சொந்தமாக வாங்கி வைத்திருக்கிறேன். சிறுவயது முதல் விவேகானந்தருடைய நூல்களைப் படித்துவிட்டு என்னையே இழந்திருக்கிறேன். சுவாமி சிவானந்தரின் கருத்துக்களில் மனதைப் பறிகொடுத்திருக்கிறேன். 'உடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலம்' குறித்த நூல்கள் எனது நூலகத்தில் உள்ளன. சுருக்கமாகச் சொல்வதானால் பலதரப்பட்ட நூல்களையும் விரும்பிப் படிப்பவன் நான்.

**எல்லாவற்றையும் படித்தவர் என்று உங்களைச் சொல்ல முடியுமா?**

எல்லாத் துறைகளிலும் உள்ள நூல்களை படித்து அறிவை விசாலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று விரும்புவன். அதேசமயம் 'கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு' என்ற முதுமொழிதான் உண்மை என்று நம்புபவன் நான்.

**நீங்கள் எழுதிய வேறு நாவல்கள் பற்றிச் சொல்லலாமே?**

நான் 1990ஆம் ஆண்டில் எழுதிய 'பல்லவப் பேரழகி'யை 2016இல் வெளியிட்டேன். மகேந்திர பல்லவனுக்கும் இரண்டாம் புலிகேசிக்கும் நடந்த போரைப் பற்றிய நாவல் அது. 'நீலகேசி' அதற்குப் பிறகு வந்தது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்தில் சேரநாட்டின் கடற்கரை நகரமான தொண்டியில் கதை நிகழ்கிறது. கடற் கொள்ளையர் நகரத்தைக் கைப்பற்றுவதும் இளையநம்பியால் எப்படி விடுவிக்கப்படுகிறது என்பதையும் சொல்கிற கதை. 'ராணி நீலவல்லி' 'பழுவூர் இளவரசி சந்திரமதி' என்ற இரண்டு சிறிய நாவல்களும் அதே ஆண்டு வெளிவந்தன.

**நீங்கள் 5 சரித்திர நாவல்களை வெளியிட்டிருக் கிறீர்கள். உங்கள் நாவல்களில் மனதைக் கவர்ந்த பாத்திரம் என்றால் யாரைச் சொல்வீர்கள்?**

இது கொஞ்சம் கடினமான கேள்வி என்பதாகச் சொல்லலாம். உதாரணத்திற்கு பாரதிராஜாவின் '16 வயதினிலே' என்ற படத்தில் வரும் பாத்திரங்களில் எந்தப் பாத்திரம் உங்களுக்குப் பிடித்த பாத்திரம் என்று அவரிடமே கேட்டாலும் அவரால் பதில் சொல்ல முடியாது. காரணம் அந்தப் படத்தில் வரும் எல்லாப் பாத்திரங்களுமே ஜீவனுள்ளவை. அவர்கள் அந்தப் பாத்திரங்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். என்னுடைய நாவல்களில் வரும் பாத்திரங்களும் அப்படித்தான். எல்லாமே தங்கள் தங்கள் வேலையைச் செய்தவர்கள்.

அந்தப் பாத்திரங்களைப் பொறுத்தவரை நாவலின் ஓட்டத்திற்கு மிகவும் தேவையானவர்கள். இருந்தாலும் சில பாத்திரங்கள் மற்ற பாத்திரங்களைக் காட்டிலும் கொஞ்சம் உயர்ந்த இடத்தைப் பிடித்திருக்கின்றன என்று சொல்லலாம். உதாரணமாக, 'நீலகேசி' நாவலில் வரும் இளைய நம்பி, இயக்கன் 'நீலகேசி', 'பல்லவப் பேரழகி'யில் ஆதித்தன், இரண்டாம் புலிகேசி, மன்னர் மகேந்திரவர்மர், 'போதிதர்மா'வில் வரும் இளந்திரையன், அஷ்டவக்கிரன், அஸ்ரப், பறவை மாளிகை எஜமானன், அபராஜீதா போன்றவர்களைச் சொல்லலாம்.

**தற்போது உருவாக்கத்தில் உள்ள நாவல்கள் எவை? எதிர்காலத் திட்டம் என்ன?**

'காஞ்சிப் பாவை', 'கங்கன் மகள்' என்ற இரண்டு நாவல்கள் வெளியிடத் தயாராக உள்ளன. விரைவில் வெளியிடுவேன். 'வனமோகினி', 'கடலரசி', 'மரகதப் பாவை' என்ற மூன்று நாவல்களும் அவற்றையடுத்து வெளிவர இருக்கின்றன. 'மந்திரகுமாரி', 'சந்திரபானு' என்ற இரண்டு நாவல்கள் அடுத்தாற்போல் வரப் போகும் நாவல்கள். இவை ஓரளவிற்கு எழுதிவிட்ட நாவல்கள். அடுத்து என்னுடைய கனவு 'ராணி சுதேவி' என்னும் நாவலை எழுதி வெளியிட வேண்டும் என்பது. ரிக் வேதகால சரித்திரத்தை மையமாகக் கொண்ட நாவல் இது. இன்னொரு ஆசையும் உண்டு. முழுக்க கடலில் ஓடும் மரக்கலத்தில் நிகழும் கதை அது. மரக்கலம் செலுத்தத் தேவையான நுட்பங்களைக் கொண்டதாக அந்தக் கதை திகழும். இவை அல்லாமல் காலம் கைகூடுமானால் நண்பர் திரு. ஆறுமுகம் அவர்களின் விருப்பமான வெடியரசன் கதையை நாவலாக்க வேண்டும் என்ற எண்ணமும் உண்டு.

**அது யார் வெடியரசன்? கொஞ்சம் சொல்லுங் களேன்?**

இலங்கையின் வடமேற்குப் பகுதியில் உள்ள நெடுந்தீவு என்னுமிடத்தில் கோட்டை கொத்தளங்களோடு அரசனாக வாழ்ந்தவன் வெடியரசன். வேடி என்றால் வள்ளம் போன்ற




*பாரதிராஜாவின் '16 வயதினிலே' என்ற படத்தில் வரும பாத்திரங்களில் எந்தப் பாத்திரம் உங்களுக்குப் பிடித்த பாத்திரம் என்று அவரிடமே கேட்டாலும் அவரால் பதில் சொல்ல முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழர்கள் நாகரீகம் பண்பாட்டில் ஆகச் சிறந் தவர்கள். அப்படிப்பட்ட என் சகோதரர்களை காட்டு மிராண்டித்தனமாக யாரோ சிலர் தாக்குகிறார்கள் என்று சொன்னால் எந்தவொரு தமிழனாக இருந்தாலும் கொதிக்கத்தானே செய்யும்.

தொரு பெரிய படகு என்று கொள்ளலாம். பல நூறு வள்ளங்களை வைத்துக்கொண்டு மன்னார் வளைகுடா பகுதியில் முத்துக் குளித்தல் செய்தும், மணிகளை விற்றும் சிறந்த வாழ்வு நடத்தியவன்.

அவனைப் பற்றிய வரலாறு சுவையானது. சிலப்பதிகாரத்தோடு தொடர்பு உடையது. கனடா வாழ் ஈழத்தமிழரான அருமை நண்பர் AGR ஆறுமுகம் அவர்களின் வேண்டுகோளை ஏற்று வெடி யரசனின் சரித்திரத்தை ஒரு நாவலாக எழுத வேண்டும் என்று இருக்கிறேன்.

**மனிதர்களுக்குள் இருக்கும் ஆற்றல்களை வெளிக் கொணரும்படியான தூண்டுதல் எது?**

அவமானம், இதயத்தில் விழும் அடி, வலி, இடி விழுந்தாற்போன்ற பாதிப்பு இவற்றுக்கு இருக்கும் சக்திதான் யாரையும் புரட்டிப்போடுகிறது.

அன்றைக்கு நந்தர்களினால் ஏற்பட்ட அவமானமே கௌடில்யரை அந்த ஆட்சியைக் கவிழ்க்கும்படி செய்தது. என்னைப் பொறுத்த வரையிலும் கூட யாரோ ஒருவரால் ஏற்படுத்தப்படும் அவமானமே நம்முடைய சாதனைகளுக்கு அஸ்திவாரம் என்று சொல்வேன்.

**ஈழத்தமிழரின் வாழ்வு, துன்பம் இவை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

தமிழர்கள் நாகரீகம் பண்பாட்டில் ஆகச் சிறந் தவர்கள். அப்படிப்பட்ட என் சகோதரர்களை காட்டு மிராண்டித்தனமாக யாரோ சிலர் தாக்குகிறார்கள் என்று சொன்னால் எந்தவொரு தமிழனாக இருந்தாலும் கொதிக்கத்தானே செய்யும்.

அப்படி கொதித்துப் போனவர்களில் நானும் ஒருவன். அன்றைக்கு கண்ணகியின் காற்சிலம்பில் வைக்க வேண்டுமென்பதற்காக நெடுந்தீவு அரசனான வெடியரசனுடைய வாழ்வைச் சூறையாடிய அரசியல் போலத்தான் இன்றைய ஈழத்தமிழர்களின் வாழ்வும் சூறையாடப்பட்டுவிட்டது.

எதிர்காலத்திலாவது இதற்கொரு தீர்வு வர வேண்டும் என்பதே என் ஆசை.

**கடைசியாக உங்களைப் பற்றிச் சொல்லலாமே?**

என்னுடைய சொந்த ஊர் சேலம் மாவட்டத்தில் உள்ள இடைப்பாடி. அங்குள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில்தான் பள்ளியிறுதித் தேர்வு வரை படித்தேன். அதற்குப் பிறகு என்ன படிப்பது என்பது பற்றிய எண்ணமோ கனவோ எனக்கு இருந்ததில்லை. நான் சுமாராகப் படிக்கும் மாணவனாக இருந்ததாலோ அல்லது தந்தைக்கிருந்த தமிழார்வத்தின் காரணமாகவோ திருவையாறில் உள்ள அரசர் தமிழ்க் கல்லூரியில் புலவர் படிக்கச் சேர்த்து விட்டார். பிறகு ஆசிரியர் பயிற்சியை குமாரபாளையம் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்து முடித்தேன்.

1974இல் அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணியில் சேர்ந்தேன். ஏறக்குறைய முப்பதாண்டுகள் ஆசிரியர் பணி, பிறகு தலைமையாசிரியர் பணி, மாவட்டக் கல்வி அலுவலர் பணி, முதன்மைக் கல்வி அலுவலர் பணி என்று பல நிலைகளில் பணியாற்றி 30.9.2011இல் ஓய்வு பெற்றேன். தொடக்கத்தில் இடைப்பாடியில் வசித்தாலும், பிறகு சேலம், கோவை, சென்னை, வேலூர் என்று மாறி மாறி வாழ்க்கையை நடத்தியிருக்கிறேன்.

மனைவி அஞ்சல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். மகள் மூத்தவள் M.E. முடித்து தனியார் நிறுவனத்தில் பணியாற்றுகிறார். அவளுடைய கணவர் நண்பரோடு சேர்ந்து சொந்தமாக ஒரு நிறுவனத்தை நடத்தி வருகிறார். மகன் பொறியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்று வெல்லூரில் உள்ள VIT பொறியியல் கல்லூரியில் முதுநிலை உதவிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.

அவனுடைய மனைவியும் பொறியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்று சென்னையில் உள்ள VIT பொறியியல் கல்லூரியில் முதுநிலை உதவிப் பேராசிரியராகப் பணிபுரிகிறார். மகளுக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறாள். சென்னையில் உள்ள ஒரு பள்ளியில் மூன்றாம் வகுப்பு படிக்கிறாள். அவளோடிருப்பதுதான் என்னுடைய ஒரேயொரு பொழுதுபோக்கு.

தொடர்ந்து உங்கள் படைப்புகள் வெளிவந்து சிறந்த சரித்திர நாவலாசிரியராக புகழ் பெற, 'காலம்' இதழ் சார்பாக வாழ்த்தி விடைபெற்றோம்.

⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவாலிற்றி பிறெட் பேக்கறி

# QUALITY BREAD BAKERY

1221 Markham Road, Unit 10 & 11 (Markham & Ellesmere)



**இப்பொழுது உங்கள் ஒன்றுகூடல்களுக்கு தேவையான தோசை, நூடில்ஸ், புட்டு, புரியாணி,இன்னும் பல சுவையான உணவு வகைகளை மலிவாக ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்,**

உங்களுக்கு தேவையான சிற்றுண்டி வகைகளை
எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்

வெல்ல முடியாத மலிவு விலையில்!

**Tel:416 431 9829**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வணக்கம்

**உலகத் தமிழரின் இணைப்புப் பாலம்**

# http://tamilvanakkam.com/

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்!
**- பாரதியார்**

**கனேடிய இலங்கை இந்தியா சர்வதேச செய்திகளை உடனுக்குடன் பார்வையிட...**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org